3082
3/83

தேசிய உயர்கல்விச் சான்றிதழுக்குரியது

MR. SIVA. JOTHI GAM
B. Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS)
ter,
G shepherd Convent,
COLOMBO-13.

# வரலாறு

## இரண்டாம் பகுதி

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

தேசிய உயர்கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குரியது

# வரலாறு

## இரண்டாம் பகுதி


பீ. வீ. ஜே. ஜயசேகர,
B. A. (சிறப்பு) (இலங்கை), Ph. D. (இலண்டன்)

நந்தா ஜயசிங்க,
B. A. (சிறப்பு) (இலங்கை)

கே. தர்மசேன,
B. A. (சிறப்பு) (இலங்கை), Ph. D. (இலண்டன்)

டீ. ஏ. கொத்தலாவல
B. A. (சிறப்பு) (இலங்கை), Ph. D. (இலண்டன்)



MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதற் பதிப்பு, 1977

எல்லா உரிமையும் அரசினர்க்கே

அத்தியாயம்

எழுதியோர் குழு:

கலாநிதி பீ. வீ. ஜே. ஜயசேகர
மூத்த வரலாற்று விரிவுரையாளர்,
பேராதனை வளாகம். ... 8

திரு. நந்தா ஜயசிங்க,
வரலாற்று விரிவுரையாளர்,
வித்தியாலங்கார வளாகம். ... 9,10

கலாநிதி. கே. தர்மசேன,
மூத்த பொருளியல் விரிவுரையாளர்,
வித்தியாலங்கார வளாகம். ... 11

கலாநிதி. டீ. ஏ. கொத்தலாவல,
மூத்த வரலாற்று விரிவுரையாளர்,
வித்தியாலங்கார வளாகம். ... 12

பதிப்பாசிரியர் குழு:

கலாநிதி அமரதாச லியனகமகே,
வரலாற்றுப் பேராசிரியர்,
வித்தியாலங்கார வளாகம்.

கலாநிதி. டீ. ஏ. கொத்தலாவல,
மூத்த வரலாற்று விரிவுரையாளர்,
வித்தியாலங்கார வளாகம்,

கலாநிதி மெண்டிஸ் ரோகணதீர,
மூத்த வரலாற்று விரிவுரையாளர்,
வித்தியோதய வளாகம்.

திரு. பீ. வீரசேகர,
பிரதம பதிப்பாசிரியர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

மொழிபெயர்த்தோர் குழு:

திரு. இ. சிவானந்தன்
திரு. த. ர. இராசலிங்கம்
திரு. வே. பேரம்பலம்

சரவை வாசித்தோர்:

திரு. சி. விஜயபாலசிங்கம்

பதிப்பாசிரியர்:

திரு. வே. பேரம்பலம்

---

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் எயிற்கின் ஸ்பென்ஸ் கம்பனி லிமிற்றெட் அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
77/ஏ/11/ (4,000)

# உள்ளுறை


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 8. | சமய மறுமலர்ச்சியும் தேசிய இயக்கத்தின் ஆரம்பமும் .. .. | 95 |
| 9. | 1931 ஆம் ஆண்டுவரையும் யாப்பு விருத்தி .. | 120 |
| 10. | தேசிய இயக்கத்தின் வளர்ச்சியும் சுதந்திரம் அடைதலும் .. .. | 146 |
| 11. | கைத்தொழிற் புரட்சி .. .. | 177 |
| 12. | 16 ஆம் நூற்றாண்டு தொடங்கி 19 ஆம் நூற்றாண்டு வரையும் ஐரோப்பாவில் விவசாய அபிவிருத்தி .. | 200 |
| | அருஞ்சொல் அகராதி .. .. | 208 |

## 8 ஆம் அத்தியாயம்

# சமய மறுமலர்ச்சியும் தேசிய இயக்கத்தின் ஆரம்பமும்

அந்நியர் ஆதிக்கத்தை ஒழித்தற்காகக் குடியேற்ற நாடுகளின் சமுதாயங்களிலே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக உருவான தேசிய இயக்கங்களில், ஒரு பொது அமிசம் காணப் பட்டது. தேசிய இனங்களுக்கும் சுதேச சமயங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தமையும், இச்சமயங்களின் வளர்ச் சியுடன் இவ்வியக்கங்களும் வளர்ச்சி அடைந்தமையுமே இப் பொது அமிசமாகும். எனினும், ஒவ்வொரு சமுதாயத்தினதும் தனிப்பட்ட இயல்புகளுக்கேற்ப, சமயமானது தேசிய இயக்கத் தின் வளர்ச்சியிலே பல்வேறு வழிகளிலும் பல்வேறு அளவுகளிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இந்தியாவிலே இந்து மதம், இஸ்லாம் மதம் ஆகிய இரண்டு மதங்களும் தேசிய இயக்கத்துடன் தொடர்புற்றிருந்தன; மத அடிப்படையிலே அந்நாடு இரண் டாகப் பிளவுற்றது. பர்மாவிலே, தேசிய இயக்கத்தின் வளர்ச் சியிலே பௌத்த சமயத்தின் செல்வாக்கு வலியதாக இருந் தமையால் அந்நாட்டில் ஒரு பௌத்த அரசாங்கம் தாபிக்கப் பட்டது. இந்தோனேசியா போன்ற இஸ்லாமிய நாடுகளில், மத மானது தேசிய இயக்கத்திற்கு வலுவூட்டியதுமல்லாமல், சுதந் திரத்திற்குப் பின்னர் அந்நாடுகளிலே தாபிக்கப்பட்ட புதிய அர சாங்கங்களுக்கு அடிப்படையாகவும் அமைந்தது.

இந்த அத்தியாயத்திலே, குடியேற்ற ஆட்சியிலிருந்து சுதந்திர மடைவதற்கு இலங்கையர் நடத்திய போராட்டத்திற்கும் சமய மறுமலர்ச்சிக்குமிடையேயுள்ள தொடர்பை ஆராய்வதற்கு முயல் வோம். இது சம்பந்தமாக, பௌத்த மறுமலர்ச்சியின் தாக்கம் மிகவும் பரந்துபட்டதாக இருந்தமையால், பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் விரிவாக ஆராயப்படும். எனினும், பத்தொன்பதாம் நூற்றுண்டின் இரண்டாவது அரைக்கூற்றில், இந்து சமய மறு மலர்ச்சியும், ஓரளவுக்கு இஸ்லாம் மத மறுமலர்ச்சியும் ஏற்பட் டன என்பதை மனத்திலிருத்த வேண்டும்; அத்துடன் இவை அந்நியர் ஆட்சியின் பலத்தைத் தளர்த்துவதற்கும் உதவின என் பதனையும் மறத்தலாகாது.

பௌத்த மறுமலர்ச்சி எனும்போது, அதற்கு முந்திய காலப் பகுதியிலே பௌத்தம் நலிவுற்றிருந்ததென்பது குறிப்பால்

உணர்த்தப்படுகின்றது. இலங்கையின் வரலாற்றிலே, பல்வேறு காலங்களில் பௌத்தம் நலிவுற்றுப் பின்னர் தழைத்தோங்கியது பற்றி நாம் அறிவோம். புராதன இலங்கையிலே அரசுக்கும் மதத்துக்குமிடையே நெருங்கிய தொடர்பிருந்ததால், நாட்டின் அரசாங்கம் வலுவிழந்த காலங்களிலே மதமும் நலிவுறுதலைத் தவிர்க்க முடியவில்லை. முதலாம் விஜயபாகு (1055—1116), மகா பராக்கிரமபாகு (1153—1186), விமலதர்மசூரியன் (1594—1604), கீர்த்தி சிறீ இராசசிங்கன் (1747—1782) போன்ற பண்டைக்கால இலங்கை மன்னர் சாசனத்தைத் தூய்மையாக்கிப் பௌத்த சமயத்திற்குப் புத்துயிரளிப்பதில் முன்னேடிகளாகத் திகழ்ந்தனர். இச்சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் அந்நிய அரசியல் அல்லது மதச் செல்வாக்குத்தான் மதத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது என்று கூறமுடியாது. பல்வேறு காரணங்களால் நாட்டில் அரசியல்நிலை தளர்ச்சியடைந்தபோது, அநேக சந்தர்ப்பங்களில், மதம் நலிவுற்றமையை அவதானிக்க முடிகின்றது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இலங்கையிலே பௌத்தம் புத்துயிர் பெற்ற காலத்தில், ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கம் பின்னணியாக அமைந்தது. 16 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலிருந்து—அதாவது கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேயர் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டதிலிருந்து—பௌத்த சமயத்தை அடக்கி ஒடுக்கி, கிறித்தவ சமயத்தைத் தாபிப்பதற்குச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. பௌத்த கோயில்கள் நிர்மூலமாக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அத்துடன், கோயிற் காணிகளை வல்லந்தமாகத் தமதுடைமையாக்கிக்கொள்வதன் மூலமும் சமயக் கிரியைகள், ஏனைய வைபவங்கள் ஆகியன நிகழ்வதைத் தடுப்பதன் மூலமும் போர்த்துக்கேயர் பௌத்தத்தை அடக்கி ஒடுக்க முயன்றனர். இக்காலப்பகுதியில், கண்டி இராச்சியத்தை ஆண்ட விமலதர்மசூரியன் (1594—1604) பௌத்த மதத்திற்குப் புத்துயிரளிக்க முயன்றான்; எனினும், இம் முயற்சியில் அவன் பெருவெற்றிபெற்றான் என்று சொல்லமுடியாது. கரையோர மாகாணங்களிலே போர்த்துக்கேயர் செலுத்திய ஆதிக்கமும் அதனுல் உருவான பாதகமான அரசியல் நிலையுமே இத்தோல்விக்குப் பெருமளவிற் காரணமாயிருந்தன. போர்த்துக்கேயரின் வீழ்ச்சிக்குப் பின்னர், பௌத்தத்தை அடக்கி ஒடுக்கும் கடும் பூட்கையை ஒல்லாந்தர் பின்பற்றவில்லை. எனினும், சமயச் சகிப்புத்தன்மை கட்டுப்படுத்தப்பட்டிருந்ததால், கரையோர மாகாணங்களிலே பௌத்த நடவடிக்கைகள் பெரும் முன்னேற்றம் எய்தவில்லை. புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்

புவதற்கு ஒல்லாந்தர் தமது அரசியல் அதிகாரத்தைப் பயன் படுத்தினர்.

அக்காலத்திலே, கீர்த்தி சிறீ இராசசிங்கனின் ஆதரவில் வெலி விற்ற சரணங்கர என்ற மகாதேரரின் தலைமையிற் பௌத்த சமயம் கண்டி இராச்சியத்திலே புத்துயிர் பெற்றது. 1753 ஆம் ஆண்டிலே உபாலி என்ற தேரரின் தலைமையில், சீயம் நாட்டி லிருந்து பிக்குகள் இங்குக் கொண்டுவரப்பட்டதன் விளைவாக "உபசம்பதாச் சடங்கு" இலங்கையில் மீண்டும் நிலைநாட்டப்பட் டது. ஆகவே, சரணங்கர தேரரின் பணி காரணமாக, கல்வி அறிவும் ஒழுக்கமும் மிக்க பிக்குக் குழாம் ஒன்றை உருவாக்கி, பௌத்த சாசனத்துக்கும் போதனைமுறைக்கும் புத்துயிரளித்தல் சாத்தியமாயிற்று. இப் பௌத்த மத மறுமலர்ச்சி ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்த கரையோர மாகாணங்களுக்கு உடனடி யாகப் பரவவில்லை. எனினும், கரையோர மாகாணங்களிலே, சரணங்கர மகாதேரருக்குப் பின்வந்த பிக்குமார்—கல்வியறிவிலும் நல்லொழுக்கத்திலும் சிறந்த பிக்குமார்—குறிப்பாகத் தென் பகு தியில், பௌத்த முயற்சிகளுக்குப் புத்தியிரளித்தனர். ஒல்லாந் தரின் அடக்குமுறைகளைப் பொருட்படுத்தாது, முல்கிரிகலைவாசி யான சிட்டினமலவே தம்மரத்தின தேரர் என்பவர் மீண்டும் பொது இடங்களில் பௌத்த விழாக்களைக் கொண்டாட ஆரம் பித்தார். புனித யாத்திரைகளை மேற்கொள்ளுவதற்கும் ஒழுங்கு செய்தார். அவருடைய சீடர்களான வேகல்லே தம்மதிண்ண, கொரதொட்ட தர்மராம போன்றோர் தெற்கிலே பிரிவேணை களைத் தாபித்து, சமயம், கல்வி ஆகியவற்றின் விருத்தியிலும் கல்வி கேள்விகளிற் சிறந்த புதிய பிக்குப் பரம்பரையை உரு வாக்குவதிலும் ஆர்வங்காட்டினுர்கள். 18 ஆம் நூற்றுண்டின் இறுதியில் ஆங்கிலேயர் ஒல்லாந்தரைத் தோற்கடித்துக் கரை யோர மாகாணங்களைக் கைப்பற்றினர். இதனுல், கிறித்தவம் மேலும் பாதுகாக்கப்பட்டது. எனினும், ஆங்கிலேயர் சமயச் சகிப்புப் பூட்கையைப் பின்பற்றியதால், பௌத்தமத ஆசாரங் களை அனுசரிப்பதில் இருந்த இடையூறுகள் நீக்கப்பட்டன. இந் தச் சூழ்நிலையில் தென் மாவட்டங்களிலே தோன்றிய, புதிய தலை முறைக்குரிய பிக்குமார் பொதுவாகத் தாழ் நாட்டு மாவட் டங்கள் எங்கணும் பௌத்த சமய மறுமலர்ச்சியை உருவாக் குவதில் வெற்றி பெற்றனர். புதிதாகத் தாபிக்கப்பட்ட பிரி வேணைகளுக்கும் பழைய மரபைச் சேர்ந்த பிக்குமாருக்குமிடையே உண்டான போட்டி காரணமாக, பௌத்தமதக் கல்வித் துறை யிலே துரிதமான முன்னேற்றம் ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில், கரையோர மாகாணங்களிற் பல்வேறு நிகாயங்கள் தாபிக்கப்பட்டதுடன் இப்

போட்டி மேலும் தீவிரமடைந்தது. இந்த நிகாயங்களுக்கிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள், ஒருபுறம், பிக்கு சங்கத்தின் ஐக்கியத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தன; மறுபுறம், இவை மதமும் கல்வியும் வளர்ச்சியெய்துவதற்குத் துணையாகவிருந்தன. இந்த நிகாயங்கள், பாமரர் சமுதாயத்திலே மரபுவழியாக வந்ததோர் அமிசமான சாதிபேதம் பௌத்த சங்கத்திலும் புகுத்தப் பட்டமைக்கு ஓர் எதிர்ச் செயலாகத் தாபிக்கப்பட்டன. கண்டியிலே சீயம் நிகாயத்தின் தலைமையகம் அமைந்திருந்தது; அத்துடன், 1803 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டுக்குரிய அமரபுர நிகாயம் தாபிக்கப்பட்டது. காலப்போக்கில் அமரபுர நிகாயத்தில் பற்பல உபபிரிவுகள் தோன்றலாயின. மேலும் தாழ்நாட்டுச் சீயம் நிகாயத்தைச் சேர்ந்த பிக்குகளிடையே புதிய குழுக்கள் தோன்றின. இந்நிகாயங்கள் தாபிக்கப்பட்டமையினாலும் புதியதொரு பிக்குமார் பரம்பரை உருவாக்கப்பட்டமையினாலும், பல்வேறு நிகாயங்களுக்கிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றலாயின. இவற்றின் விளைவாக, மதம், கல்வி, ஆகியவற்றின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் பொது மேடைகளிலே விவாதிக்கப்பட்டன. ''சீமா சங்கரவாதய'' அல்லது '' திருத்தமான சீமா பற்றிய விவாதம்'' என்ற பெயரில் உபசம்பதா அளிக்கப்படும் வைபவத்தில் அனுசரிக்கப்படும் சடங்கு முறைகளைக் குறித்து ஒரு நீண்ட விவாதம் நடைபெற்றது. நிகாயத்தைச் சேர்ந்த மல்வத்தை கழகத்திற்கும் பெந்தர வனவாசிக் கழகத்திற்குமிடையே ''அதிமாசவாதம்'' என்ற பெயரில் 1839 ஆம் ஆண்டு முதல் 1863 ஆம் ஆண்டுவரை ஒரு விவாதம் நடைபெற்றது. இதே சமயத்தில் சூரிய மாதம், சந்திர மாதம், சங்கிகதானம் ஆகியன சம்பந்தமாகக் கருத்து வேறுபாடுகள் நிலவின. 1884 ஆம் ஆண்டில் இரமண்ணிய நிகாயம் தாபிக்கப்பட்ட பின்னர், இவ் விவாதங்கள் மிகத் தீவிரமடைந்தன. சீயம் நிகாயத்தையும் அமரபுர நிகாயத்தையும் சேர்ந்த பிக்குமார் ஒழுக்க நெறிப்படாத நடத்தையுடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டிய பிக்குமாரே இந்த நிகாயத்தை நிறுவினர். எனவே, பௌத்த ஆசார முறைகள் பற்றிக் காரசாரமான விவாதங்கள் நிகழ்ந்தன. ''தாகவாதம்'', ''துசீலவாதம்'', ''விஷ்ணுவாதம்'' ஆதியன குறிப்பிடத் தக்க சில விவாதங்களாகும். இந்தப் பொது விவாதங்களின் பயனாகவும் போட்டிகளின் பயனாகவும் பாமரரிடையேயும் பிக்குகளிடையேயும் பௌத்த நடைமுறைகள் குறித்துப் புத்தார்வம் தோன்றுவதாயிற்று. பத்தொன்பதாம் நூற்றுண்டில் உண்டான பௌத்த மறுமலர்ச்சியிலே இந்தப் புத்தார்வம் ஒரு பிரதான அமிசமாயிற்று.

இவை பௌத்த மதத் துறையிலே ஏற்பட்ட சில மாற்றங்களாகும். இதே காலத்தில், கிறித்தவ மிசனரி இயக்கத்திலும் புத்தூக்கம் காணப்பட்டது. 1812 ஆம் ஆண்டில் பப்டிஸ்ட் பிரிவினரும், 1815 ஆம் ஆண்டில் வெஸ்லியன் மிசனரிமாரும், 1816 ஆம் ஆண்டில் அமெரிக்க மிசனைச் சேர்ந்தோரும், 1818ஆம் ஆண்டில் சேச்சு மிசனரிச் சங்கத்தினரும் பிரசார முயற்சிகளை ஆரம்பித்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களிற் போன்று ஆங்கிலேயர் காலத்தில் மக்கள் வலுக்கட்டாயப்படுத்தப்படாதபோதும், கிறித்தவ மிசனரிமார் திட்டமிடப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு நுட்பமான வழிகளிலே கிறித்தவ மதத்தைப் பரப்ப முயன்றனர். 1820 ஆம் ஆண்டிலிருந்து கிறித்தவஞ் சம்பந்தமான ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் பிரசுரிக்கப்பட்டன. 1841 ஆம் ஆண்டு முதல் 1846 ஆம் ஆண்டு வரையிலும் பப்டிஸ்ட் மிசன் 1,40,100 துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது. இதே காலத்தில், வெஸ்லியன் மிசன் 1,09,170 துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது. 1844 ஆம் ஆண்டுக்கும் 1864 ஆம் ஆண்டுக்குமிடையே ஐரோப்பிய மத குருமார் சிங்கள மொழியைக் கற்று, ஆங்கிலத்திலிருந்த சமய நூல்களைச் சிங்களத்திற்கு மொழிபெயர்த்தனர். இவர்கள் நாட்டுப்புறங்களிலே பாடசாலைகளை அமைத்து கல்வித்துறையில் மிகுந்த ஆர்வங் காட்டினார்கள். இம்முயற்சிகள் எல்லாம், பௌத்தமதத்திற்கு ஓர் அறைகூவலாக அமைந்தன. கிறித்தவ மதமாற்ற வீதம் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்காத போதிலும், பௌத்தம் நன்ருக விருத்தியெய்தாத சமயம் என்ற கருத்தையும் அது மிலேச்சரின் மதம் என்ற கருத்தையும் பரப்புவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. பொதுமக்களைக் காட்டிலும், கல்வியறிவுள்ள பணக்கார இலங்கையரே கிறித்தவ மதத்தைத் தழுவுவதற்குத் தயாராகயிருந்தனர்; அரசாங்கச்சேவையில் உத்தியோகம் பெறும் வாய்ப்புப் போன்ற பற்பல சலுகைகளைக் கிறித்தவம் வழங்கியமையே இதற்குக் காரணமாகும். சுதேச உத்தியோக வகுப்பைச் சேர்ந்தோரும். குறிப்பாக, மேலைத்தேயக் கல்வியைப் பயின்ருேரும் கிறித்தவ மதத்தைத் தழுவுவதற்குத் தயங்கவில்லை.

கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்ட மிக வலிய சாதனம், கல்வியேயாகும். போர்த்துக்கேயர் காலந் தொட்டு சமயக்கல்வி மூலம் இலங்கையரை மதம்மாற்றுதல் பொதுவான ஒரு நடைமுறையாக இருந்தது. 19ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்திலிருந்து, பல்வேறு மிசனரிச் சங்கங்களிடையே உண்டான போட்டி காரணமாக, கிறித்தவப் பாடசாலைகளின் எண்ணிக்கை, பன்மடங்கு பெருகியது. இலங்கையர்கள்—பௌத்தர்களும், குறிப்பாக இந்துக்களும்—தமது பிள்

ளைகளுக்குக் கல்வி போதிப்பதில் அதிக ஆர்வங்காட்டினுர்கள்; ஆகவே, கிறித்தவப் பாடசாலைகளுக்கு அனுமதி கோரிய மாணுக்கர் தொகைக்குக் குறைவே இருக்கவில்லை. குறிப்பாக 1832 ஆம் ஆண்டுக்குப் பின்னர்—அதாவது கோல்புரூக் சீர்திருத்தங்களுக்குப் பின்னர்—கல்விப்பணி மிசனரிச் சங்கங்களிடமே ஒப்படைக்கப்பட்டது. கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காக இவை அளித்த உதவி கொஞ்சநஞ்சமன்று. இவ்வாருக, கிறித்தவப் பாடசாலைகளின் தொகை பன்மடங்கு பெருகிற்று. ஆனல், 1880 ஆம் ஆண்டுவரையும் இதற்கு இணையான ஓர் இயக்கம் பௌத்தர்களிடையோ இந்துக்களிடையோ காணப்படவில்லை. பௌத்த கல்விமுறையானது அக்காலத்திலே பிரிவேணைக் கல்வி முறையாகவே இருந்தது. ஆனல், பிரிவேணைகளின் பாடவிதானமோ தோட்டத்துறையின் வளர்ச்சியினுற் பெருமாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த அக்காலச் சமுதாயத்திற்கு உகந்ததாக அமையவில்லை. எனவே, கிறித்தவப் பாடசாலைகளிலே புகட்டப்பட்ட புதிய பாடநெறிகளைத் தமது பிள்ளைகளுக்கு அளித்தற்குப் பௌத்த சமயப் பெற்றோர் ஆர்வங் கொண்டனர்.

19 ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே கிறித்தவத்தைப் பரப்பும் இயக்கம் விரிவடைந்தபோதும், பௌத்த பொதுமக்களிடையேனும் பௌத்த குருமாரிடையேனும் குறிப்பிடத்தக்க எதிர்க்கிளர்ச்சிச் செயல்கள் எதுவும் உருவாகவில்லை. அன்றியும், கிறித்தவப் போதகரின் உபதேசங்களைக் கேட்பதற்குக் குடியானவர்கள் பயபக்தியுடன் கூடினுர்கள். இனி, பௌத்த பிக்குகள், கிறித்தவப் போதகர்கள் தங்குவதற்கு இருப்பிடங்களையும், சமயச் சொற்பொழிவாற்றுவதற்கு மண்டபங்களையும் ஒழுங்கு செய்த சந்தர்ப்பங்களும் உண்டு. விவிலிய நூலைச் சிங்களத்தில் மொழி பெயர்த்தற்கும் பௌத்த பிக்குகள் கிறித்தவக் குருமாருக்கு உதவி புரிந்தனர். இது பௌத்த சமயத்திலும் இந்து சமயத்திலும் ஓர் உள்ளார்ந்த இயல்பாக விளங்கிய சமயச் சகிப்புத்தன்மை, இன்னும் அற்றுப்போய்விடவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. 1860 ஆம் ஆண்டு வரையும், மிசனரிமாரின் முயற்சியினுற் பௌத்தர்கள் அனுபவித்த இன்னல்களைச் சுட்டிக்காட்டுவதற்காக அவ்வப்போது விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டனவே தவிர, பௌத்த மக்களிடையே உருப்படியான எதிர்ப்பு யாதும் தோன்றவில்லை. எனினும், இக்காலப் பகுதிக்குப் பின்னர், சமயப் பூசல்கள் தீவிரமடைந்தன. கிறித்தவக் குருமார் தாம் முன்னர் மேற்கொண்ட முயற்சி பூரண வெற்றியளிக்கவில்லை என்று கருதிப்போலும், புதிய வழிவகைகளைக் கையாளத் தலைப்பட்டனர். அவர்கள் பௌத்தத்தின் பிரதான கோட்பாடுகளிற் சில உண்மைக்கு மாருனவை என்று

நிரூபிக்கவும் பௌத்த பிக்குகளை அவமதிக்கவும் இப்போது முயற்சி செய்வாராயினர். எனவே, பௌத்தத்தைப் பேணிப் பாதுகாத்தற்காகக் கிறித்தவத்துடன் நேரடியான போராட்டத்தை நடாத்துதல் தவிர்க்கமுடியாதென்பதைப் பௌத்தப் பொதுமக்களும் குருமாரும் உணர்ந்தனர்.

ஆகவே, 1860 ஆம் ஆண்டுக்குப் பின்னர், கிறித்தவக் குருமாராயத்தின் போலிப் பிரசாரத்திற்கும் தவறான குற்றச்சாட்டுக்கும் எதிரான ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பௌத்தத்தைப் பாதுகாத்தற்கு உருவான இவ்வியக்கம், பௌத்தர் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது, பொது மேடைகளில் விவாதங்களை நடத்தியது. 1860 ஆம் ஆண்டில் அருட்டிரு கொகேளி என்பார் பௌத்த தத்துவக் கோட்பாடுகள் பொய்யானவை என்று நிரூபிக்குமுகமாக ஒரு கிறித்தவப் பட்டயத்தை வெளியிட்டார். இக்குற்றச்சாட்டுகளை மறுத்தற்காகப் பத்தேகம, காலி போன்ற இடங்களிற் பம்பரந்தை ரேவத்த தேரரும், ஹிக்கடுவைச் சுமங்கல தேரரும் பொது மக்களுக்குச் சமயச் சொற்பொழிவாற்றினர்கள். 1862 ஆம் ஆண்டிலிருந்து மிகெட்டுவத்தைக் குணனந்த தேரர், வாரந்தோறும், ஞாயிற்றுக்கிழமைகளிலே கொழும்பிற் சமயச் சொற்பொழிவாற்றினர். அவர் கொழும்பிலே சர்வக்ஞ சாசனுபிவிருத்தி தம்ம சங்கத்தைத் தாபித்து உவா நாள்களிலே புண்ணிய தர்மங்களும் (பின்கம) ஊர்வலங்களும் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்தார். 1862 ஆம் ஆண்டிலே காலியிலே இலங்கோபகார அச்சகமும், கொட்டாஞ்சேனையிலே மற்றுமொரு அச்சகமும் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறாகப் புத்தகங்களைப் பிரசுரித்தல் மூலம் கிறித்தவரின் குற்றச்சாட்டுகளை மறுக்கும் இயக்கம் விரிவடைந்தது. லக்மினிபஹன என்ற முதல் பௌத்த தினசரி, 1862 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பொது இடங்களில் விவாதங்களை நடத்துவதன் மூலம் கிறித்தவரின் குற்றச்சாட்டுகளையும் எதிர்க்குற்றச்சாட்டுகளையும் மறுத்தற்கு ஒரு வெற்றிகரமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1863 ஆம் ஆண்டில் காலியிலும், கொழும்பிலே காலிமுகத்திடலிலும், 1865 ஆம் ஆண்டிற் பத்தேகமத்திலும், 1866 ஆம் ஆண்டில் உடன்விற்றவிலும், 1873 ஆம் ஆண்டில் பாணந்துறையிலும் பகிரங்க விவாதங்கள் நிகழ்த்தப்பட்டன. ஹிக்கடுவைச் சிறீ சுமங்கல தேரர், மிகெட்டுவத்தைக் குணனந்த தேரர், வஸ்கடுவ சிறீ சுபுத்தி தேரர், கொக்கல சதாத்திச தேரர் தலஹேன அமரமோலி தேரர், முல்லேரியாக் குணரத்தின தேரர் ஆகிய பிக்குமார் இப்பொது விவாதங்களின் முன்னணியில் நின்றோருட் குறிப்பிடத்தக்கோராவர்.

இதே வேளையில், பௌத்த கல்வித் துறையிலும் துரிதமான முன்னேற்றம் காணப்பட்டது. 1855 ஆம் ஆண்டில், ஹிக்கடுவைச் சிறீ சுமங்கல தேரரின் தலைமையிலே கல்வியறிவிற் சிறந்த பிக்குமார் சபரகமுவ மாவட்டத்திற் கூடி, பௌத்த திருமுறை நூல்களைப் பதிப்பித்தனர்; இதனால் புனித மதநூல்களில் மக்களுக்குப் புத்தார்வம் ஏற்பட்டது. இவ்வாறு பதிப்பிக்கப் பட்ட திருமுறை நூல்கள் பல்வேறு இடங்களுக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, மிகுந்த பத்திசிரத்தையோடு அவ்விடங்களில் வைக்கப்பட்டன. இத்தகைய சமயப் பணிகள் பௌத்தப் பொதுமக்களிடையேயும், குருமாரிடையேயும் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியதால், 1874 ஆம் ஆண்டில் வித்தியோதய பிரிவேணையும், 1875 ஆம் ஆண்டில் வித்தியாலங்கார பிரிவேணையும், முறையே கொழும்பிலும் களனியிலும் தாபிக்கப்பட்டன. இந்த இரண்டு பிரிவேணைகளுக்குமிடையே உண்டான போட்டி காரணமாக, பாரம்பரியக் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. சங்கதம், பாளி, சிங்களம் போன்ற கீழைத்தேய மொழிகளையும், பௌத்த இலக்கியம் போன்ற பிற பாடங்களையும் உள்ளடக்கிய பாரம்பரியக் கல்வி முறையானது மீண்டும் தழைத்தோங்கிற்று. இதே வேளையில், கங்காரோகன வர்ணனுவ, சிதத் சங்கராவ போன்ற நூல்களையும் சாதகக் கதைகளையும் ஆதாரமாகக்கொண்ட இலக்கிய விவாதங்கள் காரணமாக, சிங்கள இலக்கியத்துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. கல்வி கேள்விகளிற் சிறந்த பிக்குமாரும் பொதுமக்களும் இந்த இலக்கியப் பணியிலே தலைப்பட்டு நின்றார்கள். இத்தகைய சூழ்நிலையிலேதான் இலங்கையிலே, பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் பலம்வாய்ந்த ஒரு சக்தியாகத் தலைதூக்கியது. 1880 ஆம் ஆண்டிலே கேணல் ஒல்கொட், பிலவட்ஸ்கி அம்மையார் ஆகியோரின் தலைமையில் மேலைத்தேயப் பிரமஞான சங்கத்தினர் இலங்கைக்கு வந்தனர். இவர்கள் வருகையின் பின்னர் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் தெளிவான குறிக்கோள்களை உடையதாய், திட்டமான நெறியிற் சென்றது. அத்துடன், இவ்வியக்கம் திட்டவட்டமான கட்டுக்கோப்பையும் பெற்றது. கேணல் ஒல்கொட்டும் ஏனைய பிரமஞான சங்கத்தினரும் 1880 ஆம் ஆண்டு மே மாதத்திலேயே இலங்கைக்கு வந்தாரெனினும், இவர்களுக்கும் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடிகளான மிகெட்டுவத்தைக் குணனந்த தேரர், ஹிக்கடுவை சிறீ சுமங்கல தேரர், வெலிகம சிறீ சுமங்கல தேரர் ஆகியோருக்குமிடையே கடிதத்தொடர்பு மூலம் கருத்துப் பரிமாற்றம் முன்னமே நடைபெற்றிருந்தது. ஆரம்பத்திலிருந்தே நோக்கங்களும் விழைவுகளும் தாபனமுறையும் பற்றி இருசாராருக்குமிடையே பரஸ்பர நம்பிக்கை உருவாகியிருந்த

தால், அவர்கள் ஒற்றுமையாக ஒத்துழைப்பது சாத்தியமாயிற்று. மேலைத் தேயப் பிரமஞான சங்கத்தினரின் வருகையின்போது பௌத்த சமூகத் தலைவர்கள் காட்டிய ஆர்வமானது பிக்குகள் காட்டிய ஆர்வத்தினும் எட்டுணையுங் குறைந்ததாக இருக்கவில்லை. இதே காலத்தில், இலங்கையிலே, கல்வியறிவுபடைத்த பணக்கார வகுப்பொன்று உருவாகிக்கொண்டிருந்தது. பிரித்தானியர் ஆட்சியிலே தோன்றிய பெருந்தோட்டங்கள், வர்த்தக முயற்சிகள் மேலைத்தேயக் கல்விமுறை ஆகியவற்றினூற் பயனடைந்தவரும் கல்வியறிவு மிக்கவருமான இப்புதுப் பணக்கார வகுப்பாரிற் பெருந்தொகையானோர் கிறித்தவராவர். இவ்வகுப்பினரைத் தவிர, பழைய சீரிய வகுப்பைச் சேர்ந்தோரும்—குறிப்பாக, தாழ்நாட்டு முதலியார்மார்—தமது பட்டம் பதவிகளைப் பாதுகாக்கும்பொருட்டுக் கிறித்தவ மதத்தைத் தழுவியிருந்தனர். இவ்விருவகுப்பாரிடையும் பௌத்தமன்றிக் கிறித்தவமே பிரபலமடைந்திருந்தது. சமுதாயத்தில் உயர் அந்தஸ்தைப் பெறுவதற்கும் அரசாங்க சேவையில் நற்பதவிகளை வகித்தற்கும் கிறித்தவம் உதவியமையே இதற்குக் காரணமாகும். பௌத்தரும் கிறித்தவர்களைப் போலவே கற்றவராயும் தனவந்தராயுமிருந்த போதும், அவர்கள் சமுதாயத்தில் இரண்டாம் இடத்தையே வகித்தனர். அரசாங்க சேவையில் உயர்பதவி பெறுவதற்கு ஒருவர் கட்டாயமாகக் கிறித்தவராய் இருக்கவேண்டும் என்ற நியதி இருக்கவில்லை; ஆனாலும், ஒருவர் கிறித்தவராயிருத்தல் ஒரு மேலதிகத் தகைமையாகப் பெரும்பாலும் கருதப்பட்டது. இந்தச் சூழ்நிலையில், ஒல்கொட்டும் பிலவட்ஸ்கியும் போன்ற மேலைத்தேயச் சிந்தனையாளர் பௌத்தத்தை ஒரு சிறந்த சமயமெனக் கருதி, பௌத்தப் பணிகளிற் பங்குபற்றுவதற்காக இங்கு வந்தமை, கல்வியும் செல்வமும் படைத்த பௌத்தர் சமுதாயத்திலே தமது நிலையை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியாக இருந்தது. ஆகவே, பௌத்த சமூகத் தலைவர்களும் குருமாரும் கேணல் ஒல்கொட்டின் தலைமையில் வந்த பிரமஞான சங்கத்தினரைச் சகல மரியாதைகளுடனும் வரவேற்க ஒழுங்குகள் செய்தனர்.

பிரமஞான சங்கத்தினர் தனியொரு மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர் அல்லர். அன்னூர் ஆசிய மதங்களான பௌத்தத்தையும் இந்து மதத்தையும் பெரிதும் போற்றுபவர். சகல மதங்களின் அடிப்படைப் போதனைகளையும் உள்ளடக்கிய பரந்த ஒரு தத்துவத்தில் அன்னூர் நம்பிக்கை கொண்டவர். அடிப்படையில் இவ்வியக்கம் கிறித்தவ மிசனரி நடவடிக்கைகளுக்கு எதிராகவே நெறிப்படுத்தப்பட்டது. மேனாட்டு நுண்ணறிவாளரின் தலைமையிலே கிறித்தவருக்கு மாறான ஓர் இயக்கம் தோன்றியமை, மிசனரி

மாருக்கு ஒரு பேரிடியாக இருந்தது. அவர்கள் மிகவும் கலக்க மடைந்தனர். இம்மேலைத்தேயச் சிந்தனையாளரின் தலைமையில் இலங்கையிலே பௌத்தத்திற்கு ஒரு சிறந்த இடம் கொடுக்கப் பட்டது; பௌத்த மறுமலர்ச்சிக்கு இது உறுதுணையாயிற்று.

பிரமஞான சங்கத்தாரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தில் பௌத்தப் பொதுமக்களின் தேவைகளிற் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது. எனவே, பௌத்த மாணுக் கருக்கு, பௌத்தச் சூழலிலே, நவீன சமுதாயத்திற்குப் பொருத்த மான கல்வியைப் புகட்டுவதிற் குறிப்பிடத்தக்க ஆர்வங்காட்டப் பட்டது. மேலும், கிறித்தவப் பிரசாரத்தை எதிர்த்தற்கு இதுவே மிகவும் திறமையான முறை என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்திலிருந்து, கிறித்தவத்தைப் பரப்புவதற்குக் கல்வி பயன்படுத்தப்பட்டுவந் தது. பல்வேறு மிசனரிச் சங்கங்களிடையே ஏற்பட்ட போட் டியின் விளைவாக, 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்திலே கிறித்தவப் பாடசாலைகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்தது. இவை அரசாங்க உதவியைப் பெற்றதாலும் 1832 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மிசனரிச் சங்கங்களிடமே கல்விப்பணி ஒப்படைக்கப் பட்டதாலும் இச்சங்கங்களின் பிரசார முயற்சிகள் ஆக்கமும் ஊக்கமும் பெற்றன. ஆகவே, கிறித்தவப் பாடசாலைகள் இவ் வாறு துரிதமாக வளர்ச்சியடைந்த காலத்தில், பௌத்த கல்வி நிலையங்களாகக் கருதக்கூடியவையாக இருந்தவை புராதன பிரி வேணைகளும் கிராமக் கோயில்களில் நடாத்தப்பட்ட பாடசாலை களுமேயாகும். 1880 ஆம் ஆண்டிற்கு முன்னர் இரண்டொரு பௌத்த பாடசாலைகளில் மட்டுமே ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. இவ்வுண்மைகளைக் கருத்திற்கொள்ளும்போது, பௌத்தம், சிங் களம், பாளி, சங்கதம் போன்ற மரபுவழிவந்த பாடங்களுடன் நவீன சமுதாயத்திற்கு அவசியமான ஆங்கிலம், விஞ்ஞானம் கணிதம் போன்ற ஏனைய பாடங்களையும் கற்பித்த பாடசாலைகளை நாடு முழுவதும் தாபித்தமையே பிரமஞான சங்கத்தினர் ஆற்றிய மாபெருஞ் சேவை எனலாம். 1880 ஆம் ஆண்டில் அரசாங்க உதவியைப்பெற்ற பௌத்த பாடசாலைகள் இரண்டு மட்டுமே இருந்தன; 1914 ஆம் ஆண்டுவரையில், இவ்வெண்ணிக்கை 343 ஆக அதிகரித்திருந்தது. ஆனுல், இதே கால எல்லைக்குள், கிறித் தவப் பாடசாலைகளின் எண்ணிக்கை 805 இலிருந்து 1377 ஆக அதிகரித்துவிட்டது. நவீன கல்வி முறையில் இலங்கையில் செலுத் திய பேரார்வம் இதனுற் புலப்படுகின்றது. ஆங்கிலத்தில் உயர் கல்வியைப் புகட்டுவதற்கு ஏறக்குறைய 25 பௌத்த பாட சாலைகள் இக்காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. ஆனுல், உயர் கல்வியைப் போதித்த கிறித்தவப் பாடசாலைகளின் எண்ணிக்

கையோ 160 ஆக இருந்தது. ஆகவே, பௌத்த கல்வி இயக்கம் கிறித்தவ இயக்கத்துடன் போட்டியிடுவதற்குப் போதிய பலமற்றதாகக் காணப்பட்டது. மேலும், இக்காலத்தில் வாழ்ந்த நகர மாந்தர் கிறித்தவப் பாடசாலைகளிற் போதிக்கப்பட்ட கல்வி உயர் தரமானது என்று கருதினர்; இப்பாடசாலைகளிற் புகட்டப்பட்ட ஆங்கில அறிவும், மேனாட்டுப் பழக்க வழக்கங்களில் அளிக்கப்பட்ட பயிற்சியும் மேலானவை என்று அவர்கள் எண்ணினார்கள். கிறித்தவக் கல்வியின் அபிவிருத்திக்கு இத்தகைய மனப்பாங்கும் ஓரளவு காரணமாயிற்று.

மேலே விளக்கப்பட்டவாறு, பௌத்த கல்வி இயக்கம் காலப் போக்கிலே விருத்தியடைந்தது. அத்துடன், பௌத்த சக்திகள் ஒன்றுதிரண்டு கட்டுக்கோப்பாக இயங்கத்தொடங்கின. எனவே, பௌத்த உரிமைகளையும் சலுகைகளையும் மீண்டும் பெறுவதற்கு ஓர் இயக்கம் உருவாயதை அவதானிக்கலாம். கேணல் ஒல்கொட் இலங்கையிற் பல பாகங்களுக்கும் பிரயாணஞ் செய்து, பெருந்தொகையான பௌத்த பிரமஞான சங்கங்களைத் தாபித்தார். இச்சங்கங்கள் கொழும்பிலே இருந்த பௌத்த பிரமஞான சங்கத்தின் தலைமைப் பீடத்துடன் இணைக்கப்பட்டன. பௌத்த சமயப் பணியை நெறிப்படுத்தும் வேலையிற் கேணல் ஒல்கொட் முழுமூச்சாக ஈடுபட்டார். இவ்வாறு அவர் அக்காலப் பௌத்த சமுதாயத்திலிருந்த நிகாயங்களிடையே நிலவிய சாதி பேதங்களை வலிகுன்றச் செய்து, பௌத்த சமுதாயத்திலே ஒற்றுமையை உருவாக்கினார்.

பிரித்தானிய ஆட்சியாளர் பௌத்த உரிமைகளையும் சலுகைகளையும் புறக்கணித்து நடந்ததற்கு எதிராக உருவான கிளர்ச்சியின் விளைவாய் 1884 ஆம் ஆண்டிலே ''பௌத்தரட்சக சங்கம்'' தாபிக்கப்பட்டது. வைகாசி விசாக தினத்தைப் பொது விடுமுறை நாளாகப் பிரகடனஞ் செய்தல், பௌத்த திருமணப் பதிவாளர்களை நியமித்தல் போன்ற சலுகைகளைப் பௌத்தர்களுக்கு வழங்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்திய இச்சங்கம் அக்கோரிக்கையில் வெற்றியும் பெற்றது. கேணல் ஒல்கொட்டின் அறிவுரைப்படிதான் பௌத்தக் கொடி தீட்டப்பட்டது. புத்த காயாவில் ஒரு பௌத்த கோயிலைத் தாபிக்கும் நோக்கத்துடன், 1891 ஆம் ஆண்டில் ''மகாபோதி சங்கம்'' ஆரம்பிக்கப்பட்டது. 1898 ஆம் ஆண்டில் ஆங்கிலக் கல்வி கற்ற நகர்வாழ் பௌத்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பௌத்த இளைஞர் சங்கம் நிறுவப்பட்டது. கேணல் ஒல்கொட்டின் அயராத உழைப்பின் பயனாக, ஒரு கல்வி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இதனாற் பெருந்தொகையான பௌத்த பாடசாலைகள் நிறுவப்பட்டன. அக்காலத்திலே பௌத்த பத்திரிகைகளின் பிரசாரம்

பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பக்கபலமாய் அமைந்தது. இது சம்பந்தமாக ''சரசவி சந்தரச'' போன்ற பௌத்த தினசரிப் பத்திரிகைகள் குறிப்பிடத்தக்கன. பௌத்த தர்மத்தைப் போதித்தல், சமயச் சார்பான திருவிழாக்களை நடத்துதல், புதிய கோயில்கள் தூபிகள் ஆகியனவற்றை நிருமாணித்தல் போன்ற சமயப் பணிகள் பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

மேலே விளக்கப்பட்டவாறு இலங்கையிலே பௌத்த மறுமலர்ச்சிக்காக உழைத்த மேனாட்டுப் பிரமஞான சங்கத்தாரின் முன்னோடியான முயற்சிகள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியுடன் ஒரு முடிவுக்கு வந்தன. அக்காலத்தளவில், ஒல்கொட், லீட்பீட்டர், அன்னி பெசண்ட் அம்மையார் ஆகிய மேலைத்தேய பிரமஞான சங்கத் தலைவர்கள், இந்தியாவின் சமய தேசிய இயக்கங்களிலே தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். அக்காலம் முதலாக அநகாரிக தர்மபால, வாலிசிங்க ஹரிச்சந்திர, பியதாச சிறிசேன, டீ. பீ. ஜயதிலக, டபிள்யூ. ஏ. சில்வா, ஆதர் வி. டயஸ், அமதோரிஸ் மெண்டிஸ், ஆர். ஏ. மிராண்டோ, ஹேவாவிதாரண சகோதரர் ஆதியோரே இலங்கையிற் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் தலைமை தாங்கினர்.

இவர்கள் யாவருள்ளும் தனிப்பெருஞ்சிறப்பு வாய்ந்தவராகக் கருதத் தக்கவர் அநகாரிக தர்மபால அவர்களே. இவர் வைராக்கியத்துடனும் அஞ்சா நெஞ்சத்துடனும் செயலில் ஈடுபட்டார். இவர், முதன்முதலில், இந்தியாவிலே ஆங்கில ஆட்சியாளருடனும் இந்துசமயக் குருமாருடனும் ஒரு நீண்ட போராட்டத்தை நடத்தி, பௌத்தர்களின் புனித நகரான புத்தகாயாவுக்குச் சட்ட அடிப்படையிலான உரிமையை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். இப்போராட்டத்தை நடத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட மகாபோதி சங்கம் இலங்கையிலே அநேக பாடசாலைகளையும் தாபித்தது. மகாபோதி சங்கம் வெளியிட்ட தினசரிப் பத்திரிகை மூலமும் மாத சஞ்சிகை மூலமும், அநகாரிக தர்மபால அவர்கள் பௌத்த மக்களிடையே ஒரு போராட்ட உணர்ச்சியைப் பாய்ச்சினர். பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திலே முன்னொருபோதும் காணப்படாத புதுமை இது. இச்சஞ்சிகைகளிலே தாம் எழுதிவெளியிட்ட கட்டுரைகள் வாயிலாக இவர் சிங்களவரின் சோம்பலையும் மடிமையையும் வன்மையாகக் கண்டித்தார். அத்துடன் பொருளாதாரத்துறையிலே சிங்கள மக்கள் ஈடுபட்டு முன்னேற்றமடைதலை ஊக்குவித்தற்காக அவர் அயராதுழைத்தார். விவசாயம், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, வர்த்தகம், கைத்தொழில், விஞ்ஞானம், அந்நிய மொழிகள் போன்ற வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சிங்

கள சமுதாயம் பூரண வளர்ச்சிபெறவேண்டும் என்றும், இவ் விடயங்களிலே பொதுமக்கள் மட்டுமன்றிப் பௌத்த குருமாரும் ஆர்வங்காட்டவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினர். அவர் தாமாகவே உண்ணுட்டுக் கைப்பணிகள், நெசவு, பெருந்தோட் டப் பயிர்ச்செய்கை, வர்த்தகம் ஆகியவற்றில் ஆர்வங்காட் டியதன்மூலம், இத்துறைகளிற் சிங்களவரின் ஈடுபாட்டை ஊக்கு வித்தற்காகப் பெருமுயற்சி செய்தார். அந்நிய ஆள்வினைஞர் களால் இலங்கையர் சுரண்டப்படுவதுபற்றி அவர் ஆங்கில அர சாங்கத்திற்கு முறைப்பாடுகளுஞ் செய்தார். ஆங்கிலேய அதி காரிகள் இலங்கையிலே கடைப்பிடித்த கொள்கையை அவர் அச்ச மின்றிக் கண்டனஞ் செய்தார். ஒரு சமுதாயப் புரட்சியை உரு வாக்கும் எண்ணத்துடன், அவர், கிராமங் கிராமமாகச் சென்று சிங்களவரின் குறைபாடுகளைச் சாடினர். பௌத்த சிங்களப் பண் பாட்டை அடிப்படையாகக் கொண்ட உறுதிவாய்ந்த ஒரு சிங்களச் சமுதாயத்தை உருவாக்குவதே இந்த இயக்கத்தின் நோக்கமாயிற்று.

அநகாரிக தர்மபால அவர்களின் சீடர்களில் ஒருவரான வாலி சிங்க ஹரிச்சந்திரா என்பவர் இவ்வுயரிய நோக்கத்தைக் கருத் திற்கொண்டு சமுதாயத்திலே நிலவிய தீயொழுக்கங்களுக்கெதி ராகப் பிரசாரஞ் செய்தார். குறிப்பாக, குடிப்பழக்கத்திற்கெதி ராக அவர் கிளர்ச்சி செய்தார். இலங்கையிலே பௌத்தர் பெரும்பாலும் சென்று தரிசிக்கும் வழிபாட்டுத் தலங்களைப் புனித தலங்களாகப் பேணுவதற்கான இயக்கத்திற்கு அவர் தலைமை வகித்தார். 1913 ஆம் ஆண்டில் இவர் இளம் வயதிலே அகால மரணமடைந்தமையால், இவர் நாட்டுக்கு ஆற்றிய அரும்பெருஞ் சேவை குறுகிய காலத்துள் முடிவுற்றது. எனினும், அநகாரிக தர்மபால அவர்களின் மற்றொரு சீடரான பியதாச சிறிசேன என்பவர், தாம் வெளியிட்ட 'சிங்கள ஜாதிய' என்ற பத்திரிகை மூலமும், தமது பிரபலமான நாவல்கள் மூலமும் தாம் ஆற்றிய பொதுச் சொற்பொழிவுகள் மூலமும் பௌத்த இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினர்.

முன்னர்க் கூறியவாறு, இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் நிலவிய பலம் வாய்ந்த சத்தியான பௌத்த மறுமலர்ச்சியின் மூல மாகச் சிங்கள பௌத்த தேசாபிமானம் உதயமாகி வளர்ச்சி யடைந்தது. கிறித்தவ மேலைத்தேயப் பழக்க வழக்கங்களையும் நடை உடை பாவனைகளையும் உதறிவிட்டு, பண்டைய சிங்களப் பண்பாட்டை அடித்தளமாகக் கொண்டு சிங்கள இனத்தை மீண் டும் உறுதிபெற்று உயரச் செய்தல் வேண்டும் என்ற கருத்து நாட்டிற் பரவலாயிற்று. கிறித்தவத்தைத் தழுவுதல் பௌத்த மதத்தை மட்டுமன்றி சிங்கள இனத்தையுமே அவமதிப்பதாகும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பௌத்தமதமும் சிங்கள

இனமும் இணைபிரியாதவை என்றும், கிறித்தவத்தைத் தழுவிக் கொண்டவர்கள் உண்மையான சிங்களவர் அல்லர் என்றுங் கூறப் பட்டது. இலங்கை ஒரு தம்பதீபம் என்ற பொதுக்கருத்துக்குப் புத்துயிரளிக்கப்பட்டது. ஒரு பண்பாட்டு இயக்கமாக உருவான இப்பௌத்த இயக்கம், அரசியற்றுறையில் எந்த அளவிற்குச் சத்திவாய்ந்ததாக இருந்ததென்பதையும், அது எவ்வாறு இலங் கையின் தேசிய இயக்கத்துடன் இணைந்ததென்பதையும் இப் போது ஆராய்தல் அவசியமாகும்.

மேலே கூறிய வினாக்களுக்கு விடைகாணல் எளிதன்று. இரு பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையிலே உருவான தேசிய வாதத்தின் தெளிவற்ற தன்மையே இதற்குக் காரண மாகும். பொதுவாக, தேசிய வாதம் என்பது தெளிவாக நிருண யிக்கப்பட்ட பிரதேச எல்லைக்குள் வாழ்கின்ற சமுதாயமோ, சமு தாயங்களோ பொதுவான சரித்திர பண்பாட்டுப் பாரம்பரியங் களை அடிப்படையாகக்கொண்ட ஐயமற்ற தனித்துவத்தையுடைய தாக விளங்கி, சுதந்திரமாகவும் கூட்டாகவும் வாழ்வதற்குக் காட்டும் விழைவேயாகும். எனினும், மேற்கூறப்பட்ட சில அமி சங்கள் இல்லாமலும் தேசியவாதம் தோன்றக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட பொது விருப் பத்தை நிறைவேற்றும்பொருட்டு இலங்கையிலே ஒரு தேசிய இயக்கம் உதயமாயிற்று எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. வேறு பல நாடுகளிற் போன்று, இலங்கையிலும் சமுதாயத் திலுள்ள பல்வேறு வகுப்புகளும், தேசிய சமயக் குழுக்களும் தேசிய வாதம் வாயிலாக ஒரு பொதுக்குறிக்கோளை எய்துவதைத் தமது நோக்காகக் கொண்டிருக்கவில்லை. ஆகவே, இருபதாம் நூற்றாண்டிலே உதயமான இயக்கத்தை ஒரு தேசிய இயக்கம் என்று கூறுவதைக் காட்டிலும் குடியேற்ற ஆட்சியாளரிடமிருந்து சில அரசியல் உரிமைகளையும் உயர் தொழில்களைப் பெறுதற்கான உரிமைகளையும் அடைதற்கெழுந்த இயக்கம் என்றே கூறுதல் பொருத்தமாகும். சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற் கும் தேசிய இயக்கத்திற்குமிடையே உறுதியான ஒரு தொடர்பை எளிதில் ஏற்படுத்த முடியாமைக்கான காரணத்தை இது விளக்கு கின்றது. ஆகவே, ஆங்கிலக் குடியேற்ற ஆட்சியாளரிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்காக, சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை ஒரு நேரடியான மார்க்கமாக உபயோகித்தல் சுலப மான காரியமாக அமையவில்லை.

இந்த இடர்ப்பாட்டுக்கான காரணங்களை ஆராயும்போது, பொதுவான அரசியற் குறிக்கோள்களை எய்துவதற்காகப் பௌத்த தலைவர்கள் எந்த அளவிற்குச் சிங்கள, பௌத்த தேசிய உணர்ச் சிகளைப் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாயிருந்தனரென்பதைக்

கவனத்திற் கொள்ளல் வேண்டும். கேணல் ஒல்கொட் போன்ற மேலைத்தேய பிரமஞான சங்கத்தினர் அரசியற் குறிக்கோள்களை எய்துவதிற் கவனஞ் செலுத்தவில்லை. பௌத்தரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சட்டசபையில் ஒரு பிரதிநிதி கட்டாயம் இடம்பெற வேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டபோதும், அது சம்பந்தமாக எந்தவொரு கிளர்ச்சியும் நாட்டிலே உருவானதில்லை. இவ்வாறே, அரசாங்கப் பூட்கைகளுக்கெதிரான கிளர்ச்சி—குறிப்பாக, உண்ணுட்டுத்தீர்வை சம்பந்தமான பூட்கைக்கு எதிராகவும் வழிபாட்டுத் தலங்களும் அவற்றின் சொத்துகளும் சம்பந்தமான பூட்கைக் கெதிராகவும் தோன்றிய கிளர்ச்சி—நேரடியாக, ஆங்கிலக் குடியேற்ற ஆட்சிக்கெதிராக நெறிப்படுத்தப்படவில்லை. *1903* ஆம் ஆண்டிலே இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் பௌத்தப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மகாநாட்டின் முடிவுப்படிதான், பௌத்த மாசபை தாபிக்கப்பட்டது. இத்தாபனம், நேரடியாக அரசியல் விவகாரங்களில் ஈடுபடலாகாது என்று, பௌத்த தலைவர்கள் கருதினுர்கள். ஆதலின், ஆரம்பத்திலிருந்தே இவர்கள் அரசியல் முன்னேற்றத்துக்காகச் சமய நிறுவகங்களைப் பயன்படுத்தத் தயங்கினுர்கள். இவ்வாறே, இலங்கையின் அரசியல் இயக்கத்தின் தன்மையும், அரசியல் முயற்சிகளுக்கும் சமய நிறுவகங்களுக்குமிடையே இத்தகைய பிணைப்பு உருவாதற்குத் தடையாகவிருந்தது.

*1840* ஆம் ஆண்டைத் தொடர்ந்த பத்தாண்டுகளில், அரசாங்கத்தின் பொருளாதாரப் பூட்கையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஆங்கில வர்த்தகரும் பெருந்தோட்டச் சொந்தக்காரரும் அரசியற் சீர்திருத்தங்களுக்காக விடுத்த கோரிக்கைகள் பயனளிக்கவில்லை. பின்னர், ஏறக்குறைய *1880* ஆம் ஆண்டிலிருந்து, பல்வேறு இனங்களையும் சமயங்களையும் சேர்ந்த பணக்கார இலங்கைத் தலைவர்கள், அரசியலமைப்பிலே சிறுசிறு சீர்திருத்தங்களைக் கோர ஆரம்பித்தனர். *1888* ஆம் ஆண்டில், இலங்கைத் தேசிய சங்கத்தைத் தாபித்த பின்னர், சட்டசபையிலுள்ள உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்காகவும், அரசாங்க சேவையில் உயர்பதவிகளை அதிக அளவில் இலங்கை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் இவர்கள் காலத்திற்குக் காலம் கிளர்ச்சி செய்தார்கள். இவ்வியக்கத்திற்குத் தலைமை வகித்தவர்கள் ஆங்கிலக் கல்வியறிவைப் பெற்றிருந்தனர்; அத்துடன், மேனுட்டு வழக்கங்களிலும், பண்பாட்டிலும் வாழ்க்கை முறையிலும் பரிச்சயமுள்ளவர்களாகவும் இருந்தனர். இத் தலைவர்களிற் பலர் கிறித்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள், ஆங்கில ஆட்சி இலங்கைக்குப் பெருஞ் சேவையாற்றியதென்றும், அவ்வாட்சி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும்

கருதினர்கள். சுயவாட்சி முறையொன்று செவ்வையாக இயங்குவதற்கு இலங்கையிலே உகந்த சூழ்நிலை உருவாகவில்லை என்பது அவர்கள் கொண்ட திடமான நம்பிக்கையாக இருந்தது. அவர்களுக்கு உண்மையாகவே தேவைப்பட்டவை, அரசாங்க சேவையில் உயர்பதவிகளும், கல்வியறிவு படைத்த புதுப் பணக்கார உயர்குடி மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவமுமே ஆகும். எனவே, அவர்கள் ஆங்கில ஆட்சியாளருக்கெதிராகப் போராடவேண்டிய அவசியமெதுவும் இல்லை என்றே எண்ணினர்கள். பழைய உயர்குடி மக்களும் ஆங்கிலேயருக்கெதிராகப் போராடுவதை வரவேற்கவில்லை. இவ்வாருக, ஏறக்குறைய, 1908 ஆம் ஆண்டு வரையும் இலங்கையரின் அரசியற் கோரிக்கைகள் பரந்த ஒரு தேசிய இயக்கமாக மாறுவதற்குப் போதிய சத்திவாய்ந்தவையாக அமையவில்லை. பொதுத் தேசாபிமான உணர்வு உருவாவதற்கும் இந்தச் சூழ்நிலை உகந்ததாக அமையவில்லை. உண்மையில், மேலே குறிப்பிடப்பட்ட உயர்குடிகளின் தலைவர்கள் பௌத்த மறுமலர்ச்சி மூலம் உதயமான தேசாபிமானத்தை ஆதரிக்கவில்லை. இவர்கள், தேசாபிமானத்தை அரசியல் இயக்கத்திலிருந்து ஒதுக்குவதற்குத் தம்மால் இயன்ற வரையும் முயன்றுர்கள். தேசாபிமானத்தால் அரசியல் இயக்கத்திலே பல்வேறு ஊழல்கள் புகுவதற்கு வழியுண்டாகலாம் என்றும் சில தலைவர்கள் சுட்டிக்காட்டினர்கள். மேனுட்டவரை ஆற்றவும் பின்பற்றிய இவ்வகுப்பினர், இவ்வியக்கங்களிலே பொதுமக்களை ஈடுபடவிடத் தயங்கினர்கள். ஆகவே, பொதுமக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டோ, ஆங்கில ஆட்சிக்கு எதிராக உண்ணுட்டு மக்களின் சமய, பண்பாட்டு விழைவுகளை அடிப்படையாகக் கொண்டோ போராட்டத்தை நடத்துவதற்கு இத்தலைவர்கள் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

எனினும், 1911 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்த நிலைமை ஓரளவிற்கு மாறிற்று. ஏறக்குறைய எல்லா மாகாணங்களிலும் தவறணைகளை மேன்மேலும் திறத்தல் வேண்டும் என்று பிரித்தானிய அரசாங்கம் செய்த முடிவு, குடிப்பழக்கத்துக்கு அடிமையாவதால் ஏற்படக்கூடிய அபாயங் குறித்துச் சிங்களவரிடையே நிலவிய அச்சத்தை மேலுங் கூட்டியது. நீண்டகாலமாக, கிராமப் பகுதிகளிலே படிப்படியாகத் தோன்றிய மதுவிலக்குத் தாபனங்கள் மீண்டும் தொழிற்பட ஆரம்பித்தன. அதே வேளையில், கல்வியறிவுள்ள பணக்கார வகுப்பினரும் அரசாங்கப் பூட்கைக்கெதிராகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். பௌத்த அடிப்படையிலே இப்புதிய மதுவிலக்கு இயக்கத்தை நடத்துவதற்குப் பௌத்த தலைவர்கள் முன்வந்தபோது, இக்கிளர்ச்சி ஒழுங்கு முறையாக நெறிப்படலாயிற்று. எவ். ஆர். சேனநாயக்க, டீ. எஸ். சேனநாயக்க ஆகிய

இரு சகோதரர்களும், எட்மண்ட் ஹேவாவிதாரண, கலாநிதி சி. ஏ. ஹேவாவிதாரண, சேர். டீ. பீ. ஜயதிலக, டபிள்யூ. ஏ சில்வா, அமதோரிஸ் மெண்டிஸ், பியதாச சிறிசேன, பீ. எச். ஏப்ரஹாம் டீ சில்வா, ஆதர் வீ. டயஸ் முதலானவர்களும் இவ்வியக்கத்திலே தீவிரமாக ஈடுபட்ட பௌத்தத் தலைவராவர். இவர்கள் நாடெங்கிலும் இருந்த சங்கங்களை இணைத்து, ஒரு மத்திய தாபனத்தை உருவாக்கினார்கள். மது அருந்துவதினால் ஏற்படும் தீய விளைவுகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக, இம்மத்திய தாபனம் கூட்டங்களை நடத்திப் பொதுமக்களின் தலைவர்களையும் குருமாரையுங் கொண்டு பிரசங்கங்கள் செய்விப்பதன் மூலம் பிரசாரஞ் செய்து வந்தது. இம்மத்திய தாபனம் ஒழுங்குசெய்த மதுவிலக்குக் கூட்டங்களிற் கலந்து கொண்டவர்கள், தவறணைகளை முற்றாகப் பகிஷ்கரிக்கவும் மது அருந்துதலைத் தவிர்க்கவும் வாக்குறுதியளித்தார்கள். ஆகவே, அமைதியான வழிகளில் அரசாங்கப் பூட்கையை எதிர்ப்பதன் மூலம் ஒரு சத்திவாய்ந்த பௌத்த இயக்கம் நாட்டில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு ஆரம்பமான மதுவிலக்கு இயக்கம், பரந்த அடிப்படையில் அரசாங்கப் பூட்கைகளைக் கண்டனஞ் செய்வதற்கும் வழிவகுத்தது. மதுவிலக்கு இயக்கக் கூட்டங்களிலே பிரித்தானியப் பூட்கைகளைக் கடுமையாகக் கண்டித்தவர்களுள் அநகாரிக தர்மபால அவர்களே தனிச் சிறப்புப் பெற்று விளங்கினார்.

மது விலக்கு இயக்கத்தின் வளர்ச்சியால் ஆங்கில ஆட்சியாளர் ஓரளவுக்கு அச்சங்கொண்டனர். அரசாங்க உத்தியோகத்தர் மதுவிலக்குச் சங்கங்களில் உறுப்பினராகச் சேரக்கூடாதென்றும், அவற்றின் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கக்கூடாதென்றும் அரசாங்கம் தடைவிதித்தது. எனினும், இந்தத் தடை உத்தரவுகள் அத்துணைப் பயனளிக்கவில்லை. 1915 ஆம் ஆண்டளவில் இந்த மது விலக்கு இயக்கம் ஒரு சிங்கள பௌத்த தேசிய இயக்கமாக மாறியபோது, இவ்வியக்கத்தை அரசியற்றுறையிற் பயன்படுத்தி அரசியற் சீர்திருத்தங்களை அதன்மூலம் பெறலாமெனப் பௌத்த தலைவர்கள் எண்ணினார்கள். கிறித்தவத் தலைவர்களும், சிங்களவரல்லாத தலைவர்களும் இவ்வியக்கம் அரசியற்றுறையிற் பயன்படுத்தப்படுவதை ஆதரிக்கவில்லை. ஆரம்பத்திலிருந்தே பௌத்த அடிப்படையில் ஓர் அரசியல் இயக்கம் உதயமாவதை எதிர்த்தவர்களின் எதிர்ப்பு, இக்காலகட்டத்தில் மிகக் கடுமையாயிற்று. இவர்களின் எதிர்ப்பைக் காட்டிலும், 1915 ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களிலே மூண்ட சிங்கள-முஸ்லிம் கலகம் பௌத்த இயக்கத்தின் வலு குன்றுவதற்குப் பெரிதும் ஏதுவாயிற்று.

நீண்ட காலமாக இலங்கையர் அனுபவித்த பொருளாதார இன்னல்கள், முதலாம் உலகப் போரின் பயனாக மேலும் மோசமாயின. 1915 ஆம் ஆண்டில் மூண்ட கலகத்திற்கு அவையே பிரதான காரணமாயின. அப்போரின் பயனாகச் சவுளி போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் ஏறின; இலங்கையின் உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தைகள் கிடைக்காததனால் வேலையின்மையும் வருமானக் குறைவும் ஏற்பட்டன. இப்பொருளாதார நெருக்கடியானது சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே படிப்படியாக ஏற்பட்ட பிளவுடன் தொடர்புபடலாயிற்று. இலங்கை எங்கணும் வியாபார முயற்சிகளில் ஈடுபட்டிருந்த பிரதான வர்த்தக வகுப்பினரான முஸ்லிம்கள் பற்றிப் பொதுமக்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருந்தது. வறுமை காரணமாக, சாதாரண மக்கள் சிறு வியாபாரிகளிடம் மேன்மேலும் கடன்பட்டார்கள். படிப்படியாக அதிக அளவில் தமது காணிகளையும் சொத்துகளையும் அவர்களிடம் ஈடு வைத்தார்கள். இந்தச் சூழ்நிலையிலே, குறிப்பாகச் சிங்களப் பத்திரிகைகள் முஸ்லிம்களது வியாபார முயற்சிகளைத் தாக்கியதுடன், சமுதாயப் புல்லுருவிகள் என்ற பட்டத்தையும் அவர்களுக்குச் சூட்டின. இதே காலத்தில், படிப்படியாக வளர்ச்சியடைந்த சிங்கள வர்த்தக வகுப்பினர் வியாபாரத்துறையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த முஸ்லிம் வியாபாரிகளை வெறுக்கத் தொடங்கினர். பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்விரு சாராருக்குமிடையே மோதல்களும் ஏற்பட்டன. குறிப்பாக, சமய விழாக்களிலும் ஊர்வலங்களிலும் இத்தகைய மோதல்கள் ஏற்படுதற்குச் சந்தர்ப்பங்கள் இருந்தன. மதுவிலக்கு இயக்கத்தின் போர்வையிலே சில சிங்கள பௌத்தர்கள், முஸ்லிம் கடைகளைப் பகிஷ்கரிக்கும் இயக்கங்களையும் நாட்டின் பல்வேறு பாகங்களில் ஆரம்பித்தனர். மேலே குறிப்பிட்ட உண்மைகளிலிருந்து, பௌத்த மறுமலர்ச்சிக்கும் சிங்கள-முஸ்லிம் பொருளாதாரப் போட்டிக்குமிடையே இருந்த தொடர்பு புலனாகின்றது. கம்பளையிலுள்ள வல்லகாகொட கோயிலின் வருடாந்த ஊர்வலம் சம்பந்தமான வழக்கு விசாரணையானது சிங்கள, முஸ்லிம் வர்த்தகர்களுக்கிடையே நிலவிய பகைமையை உக்கிரமாக்கியது. ஆகவே, சமயப் பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் இணைந்து, 1915 ஆம் ஆண்டுச் சிங்கள - முஸ்லிம் கலகங்களுக்குக் காரணமாயின. இவ்வாறு பொருளாதாரப் பிரச்சினைகளும் இணைந்தமையாலே, பௌத்தரல்லாத சிங்களவரும் இக்கலகங்களில் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இக்கலகங்கள் ஆங்கில ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தவையல்ல. எனினும், மது விலக்கு இயக்கத்திற்கும் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குமிடையே நிலவிய தொடர்பு இக்கலகங்களுக்கு

அரசியலே பின்னணியாக இருக்கக்கூடும் என்ற ஐயத்தை ஆங்கில ஆட்சியாளரிடையே உண்டாக்கிற்று. எனவே, அரசாங்கம் இக் கலகங்களை அடக்குவதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுத் ததுடன், அநேக பௌத்த தலைவர்களையும் கைது செய்தது. அவர் களுக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இராச துரோகக் குற்றச் சாட்டுகளை நிறுவுவதற்குப் போதிய ஆதாரம் இல்லாமையால், மூன்று மாதங்களுக்குப் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட் டனர். இக்கலகங்கள் ஆரம்பித்தற்கு ஏறக்குறைய ஓராண்டுக் காலத்திற்கு முன்னர் இந்தியாவுக்குச் சென்றிருந்த அநகாரிக தர்மபால அவர்கள், 1920 ஆம் ஆண்டுவரை கல்கத்தா நகரிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. 1920 ஆம் ஆண்டு வரை ''சிங்கள பௌத்தயா'' என்ற சிங்களப் பத்திரிகையை வெளியிடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டது. இக்கலகங்களுக்குப் பொறுப்பானவர்களுள் முதலிடம் வகிப்பவர் அநகாரிக தர்மபால அவர்கள் என்று எண்ணிய ஆங்கில அதிகாரிகள், அவருக்குக் கடு மையான தண்டனை விதிக்க முடிவு செய்தார்கள்.

1915 ஆம் ஆண்டுக் கலகங்களும், அக்கலகங்களை அடக்குவ தற்கு அரசாங்கமெடுத்த கடுமையான நடவடிக்கைகளும் அர சியல் இயக்கத்திற்கும் சமய இயக்கத்திற்குமிடையே தெட்டத் தெளிவான வேறுபாட்டை ஏற்படுத்தின. மதுவிலக்கு இயக் கத்தின் வலு குன்றுவதற்கு அரசாங்கத்தின் அடக்குமுறை முக்கிய காரணமாகவிருந்தது. அதே வேளையில், பௌத்த அடிப்படை யிலும் பொதுமக்கள் ஒத்துழைப்பிலும் தங்கிய ஓர் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தற்கான முயற்சி முடிவெய்தியது. பௌத்த தலைவர் பொதுமக்கள் பங்குபற்றிய மாபெரும் இயக்கங்களில் ஈடுபடத் தயங்கினர். சாதாரண மக்களும் பிரித்தானிய அரசாங் கத்தின் வன்முறைப் பூட்கைக்கு அஞ்சினார்கள். சில தாழ்நாட்டு உயர்குடித் தலைவர்களும் பிற மதத் தலைவர்களும் பௌத்த தலை வர்களுக்கு மாறாகப் பொய்யான தகவல்களைப் பிரித்தானிய அர சாங்கத்திற்கு அந்தரங்கமாக வழங்க முன்வந்தபோது, தேசியத் தலைவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும் பகைமையும் தெளிவாகப் புலப்பட்டன. அநகாரிக தர்மபால போன்ற தேசா பிமானிகள் தலைமை தாங்கிய பௌத்த இயக்கம் அரசியல் அரங் கிலிருந்து அகற்றப்பட்டமை, பௌத்தரல்லாத சில தலைவர்களுக் குப் பெரு மகிழ்ச்சியளித்தது. ஆகவே, 1915 ஆம் ஆண்டிற்குப் பின்னர், பௌத்த மறுமலர்ச்சி இயக்கமும் யாப்புச் சீர்திருத்த இயக்கமும் பிரிவுபடுதல் சாத்தியமாயிற்று. இதன் விளைவாக, இந்நாட்டின் தேசிய இயக்கமானது குறுகிய எல்லைகளுட் கட்டுப் பட்டு, யாப்புச் சீர்திருத்தஞ் சார்ந்த அமைதியான ஓர் இயக்க மாக மாற்றமடைந்தது.

எனினும், 1915 ஆம் ஆண்டுக் கலகங்களை அடக்குமுகமாக ஆங்கில ஆட்சியாளர் கடைப்பிடித்த கண்டிப்பான பூட்கைகள், யாப்புச் சீர்திருத்தங்கள் மூலம் மிகக் கூடிய விரைவில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் எத்துணை அவசியமென்பதை இலங்கைத் தலைவர்களுக்கு உணர்த்தின. இவ்வாருக 1917 ஆம் ஆண்டில் இலங்கைச் சங்கம் தாபிக்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டில் இது இலங்கைத் தேசிய மாசபை என்ற நாமத்தைப் பெற்றது. அமைதியாகக் கிளர்ச்சிசெய்து யாப்புச் சீர்திருத்தங்களைப் பெறுவதற்கு இலங்கைத் தலைவர்கள் இத் தாபனத்தைப் பயன்படுத்தினர்கள். பொதுமக்கள் பங்குபற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தையளிப்பதனுலோ, மறுமலர்ச்சி காரணமாக ஊற்றெடுத்த தேசாபிமான உணர்ச்சிகளைப் பயன்படுத்துவதனுலோ இந்தக் கிளர்ச்சியைப் பயன்படுத்துவதற்கு எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, தேசிய இயக்கமானது உயர்குடி மக்களின் இயக்கமாக மாறியது. அதே வேளையில், சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் அரசியற்றுறையிலிருந்து பிரிந்தது, இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் மீண்டும் அரசியற்றுறையில் ஆதிக்கம் பெறத் தொடங்கிற்று எனலாம்.

## சமய மறுமலர்ச்சியும் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் ஆரம்பமும்

முன்னர்க் கூறியவாறு, பௌத்த மறுமலர்ச்சியானது ஆங்கில ஆட்சிக்கு எதிரான ஒரு பொதுவான தேசிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கவில்லை. எனினும், பண்பாட்டுத் துறையிலே, அந்நியரின் சார்பினின்றும் விடுபட்ட ஒரு சுதந்திரப் போக்கு உருவாதற்கு அது வழிவகுத்தது. கிறித்தவமும் அதனேடிணைந்த மேனுட்டுப் பண்பாடும் வகித்த ஆதிக்க நிலையைப் பௌத்த மறுமலர்ச்சி தகர்த்துவிட்டது. அன்றியும் சுதேச பண்பாட்டைக் குறித்து ஒரு பெருமித உணர்வையும் மதிப்பையும் பேணி வளர்ப்பதிலும் வெற்றியீட்டியது. பிற்காலத்திலே அரசியற் சுதந்திரம் பெறுதற்கு வேண்டிய பண்பாட்டு அடித்தளம் இவ்வாறு இடப்பட்டது. இம்மறுமலர்ச்சி பௌத்தர்களிடையேதான் தோன்றி வளர்ந்தது என நாம் கருதலாகாது. ஏனைய முக்கியமான மதப் பிரிவினர்களிடையேயும் இது போன்ற பண்பாட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டதால், பண்பாட்டுத் துறையிலே நாடெங்கணும் பரந்துபட்ட விழிப்புணர்ச்சி தோன்றியதை நாம் காணலாம்.

தாழ்நாட்டுப் பகுதிகளிலே கிறித்தவ மிசனரிமாரின் முயற்சிகளை நிருவகிக்கவல்ல பலம் வாய்ந்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை உருவாக்குவதிற் பௌத்த குருமார் ஈடுபட்டிருந்த

அதே காலத்தில், யாழ்ப்பாணத்திலே இந்துமதத்திலும் கல்வி முறையிலும் ஒரு மறுமலர்ச்சி இயக்கம் உருவாகி வளர்ந்தது. இலங்கையின் ஏனைய பகுதிகளிற்காட்டிலும் யாழ்ப்பாணத்திலே கிறித்தவ மிசனரிமாரின் செல்வாக்கு மிகு வலி பெற்றிருந்தது. கல்விப் பணிவாயிலாகக் கிறித்தவத்தைப் பரப்பும் திட்டம் இப் பிரதேசத்திலே மிகுந்த வெற்றியீட்டியது. இலங்கையின் ஏனைய பகுதிகளிற் போன்று யாழ்ப்பாணத்திலும் மேனாட்டுக் கல்வி பெரிதும் போற்றப்பட்டமையால், மிசனரிமாருக்கெதிராகப் போராடுதல் கடினமான ஒரு காரியமாயிற்று.

இந்து மதத்துக்கும் இந்துக் கல்விமுறைக்கும் புத்துயிரளித்து ஒரு மறுமலர்ச்சியை உருவாக்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களே (1822—1879). அவர் தமிழ்ப் பண்டிதரிடம் ஆரம்பக் கல்வியைப் பயின்றார். தமிழையும் வடமொழியையும் கசடறக் கற்றார். பின்னர், ஆங்கிலக் கல்வி பயில்வதற்காக அவர் ஒரு மெதடிஸ்த பாடசாலைக்குச் சென்றார். பிறகு அவர் அப்பாடசாலையிலேயே ஓர் ஆசிரியரானார். அக்காலத்தில் அப்பாடசாலையின் அதிபராயிருந்த கிறித்தவ குருவானவர் விவிலிய நூலையும், ஏனைக் கிறித்தவத் திருமுறை நூல்களையும் மொழி பெயர்த்தற்கு நாவலருடைய உதவியைப் பெற்றார். கிறித்தவ சமய அறிவு பெருகிய அதே வேளையில், நாவலருக்கு இந்து சமயத்திலிருந்த பற்றுறுதியும் அதிகரித்தது. நாவலர் பெருமான் இந்து மதத்துக்கும் தொன்று தொட்டு வந்த தமிழ்ப் பண்பாட்டு மரபுக்கும் ஆங்கில ஆட்சியில் உரிய இடம் கொடுக்கப்படாததைக் குறித்து மிகவும் வேதனையடைந்தார். இந்நிலையில், இந்து சமயத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் புத்துயிரளித்தல் எத்துணை அவசியமென்பதை அவர் உணர்ந்தார். கிறித்தவப் பாடசாலைகளிற் கல்வி கற்ற இந்து மாணக்கர் படவேண்டியிருந்த இன்னல்களை அவர் அறிந்திருந்தார். இப்பாடசாலைகளிலே இந்து மதக் கோட்பாடுகளின் அடிப்படையிலே மாணக்கருக்குக் கல்வி கற்பிக்கப்படாமை குறித்து அவர் மிகவும் மனம் வருந்தினார். 1833 ஆம் ஆண்டிலிருந்து, அதாவது அரசாங்க உதவி பெற்ற சுய மொழிப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருந்த காலத்திலிருந்து, இந்நிலை இன்னும் மோசமாயிற்று. இந்நிலைமைக்கு ஒரு தீர்வு காணும் நோக்கத்தோடு அவர் தமது இல்லத்திலேயே இந்து மாணக்கருக்கு வகுப்புகள் நடத்தினர். பின்னர், 1848 ஆம் ஆண்டில் அவர் ஏனைய இந்து ஆதரவாளர்கள் தாராளமாக வழங்கிய உதவியுடன் சைவப்பிரகாச வித்தியாசாலை எனப் பெயரிய ஒரு பாடசாலையை வண்ணார் பண்ணையிலே தாபித்தார். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இருபத்திரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரே, இதற்கு அரசாங்க

உதவி கிடைக்கலாயிற்று. மிசனரிமாரின் எதிர்ப்பே இதற்குக் காரணமெனலாம். எனினும், இப்பாடசாலை தமிழ் மொழிக் கல்விக்கு மட்டுமன்றி, இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்குமே ஒரு நிலைக்களனாகத் திகழ்ந்தது. மதக்கோட்பாடுகளின் அடிப்படையிலே அமையாத கல்வி அர்த்தமற்றதென்றும், சமய மறுமலர்ச்சிக்குக் கல்வி வழிவகுக்க வேண்டுமென்றும் நாவலர் கருதினார். ஆகவே, இந்து மறுமலர்ச்சி இயக்கமானது தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் கற்பதற்கு மக்களிடையே ஆர்வத்தை உண்டாக்கிற்று.

பௌத்த பிரதேசங்களிற் போன்று, இங்கும், சமுதாயத்திலுள்ள பணக்காரரும் உயர்ந்தோரும் மிசனரிக் கல்வி, மேனாட்டுப் பழக்க வழக்கங்கள், குறிக்கோள்கள் ஆதியனவற்றுக்கு மதிப்பளித்தமை, இவ்வியக்கம் விரைவாகப் பரவுவதற்குத் தடையாக இருந்தது. எனினும், இவ்வியக்கத்தின் முன்னோடிகள் ஆங்கிலக் கல்வியை முற்றாக ஒதுக்கிவைக்கவில்லை. ஆங்கிலக் கல்விமூலம் பெறக்கூடிய சகல நலன்களையும் அனுபவிக்கும் அதேவேளையில், தமது சமயத்தையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதே இவர்களது நோக்கமாக இருந்தது. எனவே, நாவலரின் தலைமையில் இந்துத் தமிழ்ப் பாடசாலைகளும், இந்து ஆங்கிலப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1879 ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணையிலே தாபிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலை, பிற்காலத்திலே யாழ்ப்பாணத்தின் அதி சிறந்த இந்துக் கல்லூரியாகத் திகழ்ந்தது. மாணாக்கருக்கு வேண்டிய பாடப் புத்தகங்களை எழுதுதல், தமிழ் இலக்கியங்களையும் வடமொழி இலக்கியங்களையும் திருத்தியும் புதுக்கியும் பிரசுரித்தல் ஆகியன நாவலர் ஆற்றிய சேவையில் முக்கியமான ஓர் அமிசமாகும். அவர் தமக்குச் சொந்தமான ஓர் அச்சகத்தைத் தாபித்து இவ்வாக்கப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். இவ்வாறு, சிறந்த சமயத் தலைவராகவும் கல்விமானாகவும், சமுதாய சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்த நாவலரின் முன்னோடி முயற்சிகள் காரணமாக இந்து மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இந்த மறுமலர்ச்சி இயக்கம், பிரித்தானியருக்கெதிரான அரசியல் இயக்கமாக உருவெடுக்கவில்லை. ஆனாலும், பிற்காலத்தில் நாடெங்கும் தோன்றவிருந்த பொதுவான தேசிய இயக்கங்களின் வருங்காலத் தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பணியை இது நிறைவேற்றியது. நாவலர் ஆங்கில அரசாங்கத்திற்குச் சவால் விடுக்கவில்லை. ஆனால், யாழ்ப்பாணத் தமிழரின் நலனில் பெரும் அக்கறை காட்டினார். வாந்திபேதி நோய், உணவுப் பற்றாக் குறை முதலியன ஏற்பட்ட நெருக்கடியான காலங்களில் அவர் அரசாங்கத்தைக் கண்டனஞ் செய்தார். மேலும், அவர் யாழ்ப்

பாண அரசாங்க அதிபர்களின் நிருவாகத்தையும் அஞ்சாமற் கண்டித்தார். 1876 ஆம் ஆண்டில், பொன்னம்பலம் இராம நாதனைத் தமிழரின் பிரதிநிதியாகச் சட்ட சபைக்கு அனுப்பும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்திற்கு, அவர் தமது முழு ஒத்துழைப்பையும் நல்கினர். தமிழரிடையே இந்துப் பண்பாட்டு மரபிற் பயின்றவர்களும் பற்றுள்ளவர்களுமே தலைமைப் பதவி களை வகிக்கவேண்டுமென்பது அவருடைய பேரவாவாக இருந்தது. சுதேச மக்களின் பொதுநலன் கருதி நடத்தப்பட்ட அரசியற் கிளர்ச்சியின் முன்னணியிலிருந்த பொன்னம்பலம் இராமநாதன் போன்ற இந்துத் தலைவர்கள் இவ்வாறுதான் பயிற்சி பெற்றுர்கள் என்பதை ஈண்டுக் குறிப்பிடல் வேண்டும். ஆங்கிலந்திலே கல்வி கற்று, அரசாங்க சேவையில் அதி உயர் பதவிகளை வகித்த இத் தலைவர்கள் தமது சமயத்திற்கும் பண்பாட்டுக்கும் பெருமதிப் பளித்தார்கள். இவர்கள் தமது பண்பாட்டுக்குக் காட்டிய பெரு மதிப்பு ஏனைய இலங்கைத் தலைவர்களுட் பெரும்பாலானவர் களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது.

சிங்கள, தமிழ் மக்களிடையே மட்டுமன்றி முஸ்லிம் மக்களிடை யேயும் இது போன்ற விழிப்புணர்ச்சிக்குரிய அறிகுறிகள் காணப் பட்டன. கண்டியிலே புகழ்பெற்ற சட்டத்தரணியாக விளங்கிய சித்தி லெப்பை (1832—1898) என்பவரே இவ்வியக்கத்திற்கு முன்னேடியாக இருந்தவர். கிறித்தவ மிசனரிமாராற் பிரபலப் படுத்தப்பட்ட மேனுட்டு உயர் கல்வியில் முஸ்லிம் மக்கள் பேரார்வம் காட்டவில்லை. இதுவரையும் முஸ்லிம்களின் கவனம் வர்த்தக முயற்சிகளிலேயே சென்றது. மேலும், மேலைத்தேயப் பண்பாடு பரவுவதற்கு உதவியாக இருந்தமேனுட்டுக் கல்விமுறை தமது சொந்த வழக்கங்களுக்கும் பண்பாட்டு விழுமியங்களுக்கும் பாதகமானது என்று முஸ்லிம்கள் நம்பினர்கள். முஸ்லிம்களின் இம்மனப்பாங்கை மாற்றி உயர் கல்வியைப் பெறுவதற்கு அவர் களை ஊக்குவதில் சித்தி லெப்பை முக்கியமான பங்கு வகித்தார். மேனுட்டுக் கல்வியிலுள்ள ஆர்வங்காரணமாக முஸ்லிம்கள் தமது சொந்தப் பண்பாட்டு மரபை வேண்டாமென்று ஒதுக்கி வைப் பதைக் காட்டிலும் அதன் மூலம் பண்பாட்டுப் பிணைப்புகளைப் பலமாக்கிக் கொள்ளலாம் என்று சித்தி லெப்பை எடுத்துரைத் தார். அவர் பௌத்தர்களும் இந்துக்களும் செயலாற்றியது போல முஸ்லிம்களும் ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து, தமக்குச் சொந்தமான கல்வித் தாபனங்களையும் பண்பாட்டு நிலை யங்களையும் அமைக்கவேண்டுமென்று விரும்பினர். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அவர் 1882 ஆம் ஆண் டில் ''முஸ்லிம் நேசன்'' என்றழைக்கப்பட்ட வாரப் பத்திரி கையை ஆரம்பித்தார். இப்பத்திரிகையில் அவர் இஸ்லாம் மதத்

தின் சிறப்பைப் புகழ்ந்து தாம் வாழ்ந்த காலத்திலிருந்த முஸ்லிம் மக்களின் சோம்பலேயும் அறியாமையையும் கண்டித்தார். முஸ் லிம்களிடையே மறுமலர்ச்சி ஏற்படுவதைத் தூண்டுவதற்காக அவர் ஆங்கில மொழிப்பயிற்சியையும் அரபுமொழி நூல்களின் உபயோகத்தையும் ஊக்குவித்தார். மேனுட்டுக் கல்வியின் பெரும்பயனைப் பற்றி அவர் வற்புறுத்திக் கூறினர். அராபிய ரிடையேயும் ஏனைய தேசியவினங்களிடையேயும் உருவாகிக் கொண்டிருந்த இஸ்லாமிய மறுமலர்ச்சியின் செல்வாக்கும் முஸ் லிம் தேசிய இயக்கத்தின் செல்வாக்கும் இந்நாட்டு முஸ்லிம் களிடையேயும் பரவ வேண்டுமென்று அவர் விரும்பினர்.

எகிப்தில், ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்கெதிரான புரட்சிக்குத் தலைமை வகித்தவர் அரபி பாஷா என்ற ஓர் அதிகாரியேயாவர். ஏறக்குறைய இதே காலத்தில் அரபி பாஷா எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அவர் ஏறக் குறைய 20 ஆண்டுகளை (1883—1901) இலங்கையிற் கழித்தார். இச்சம்பவம் சித்தி லெப்பையின் இயக்கம் வெற்றி பெறுவதற் குதவியது. அரபி பாஷா இஸ்லாம் மதத்தை விசுவாசத்துடன் பின்பற்றுபவராயிருந்ததுமன்றி தீவிரமான தேசியவாதியாகவும் இருந்தமை இலங்கை வாழ் முஸ்லிம் மக்களிடையே தேசிய உணர்ச்சியைப் பலப்படுத்துவதற்கு உதவியது. அரபி பாஷாவை இஸ்லாம் மதப்பற்றும் நாட்டுப் பற்றும் மிகுந்த ஒரு தலைவராகச் சித்தி லெப்பை கருதினரேயொழிய, அவரை ஒரு புரட்சிக்காரனு கக் கருதவில்லை. அவர் இலங்கையிலுள்ள முஸ்லிம் சமுதாயத் தின் முன்னேற்றத்திற்கு, அரபி பாஷாவின் சேவையைப் பூரண மாகப் பயன்படுத்தினர். மேனுட்டுக் கல்வி தமது சமுதாயத் தவரிடையே பரவுவதை முஸ்லிம்கள் எதிர்த்தனர். அப்போது சித்தி லெப்பை, முஸ்லிம்களின் அம்மனப்பாங்கை மாற்றுவதற் காக அரபி பாஷாவை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்காட்டினர். இஸ்லாம் மதத்தில் மிகுந்த அபிமானமுடையராயிருந்தும், மேனுட் டுக் கல்வியைப் பெறுவதில் எந்தவகையான முரண்பாட்டையும் அரபி பாஷா காணவில்லை. 1875 ஆம் ஆண்டிலே செய்யது அகமத்கான் என்ற இந்திய முஸ்லிம் தலைவர் இந்தியாவிலே அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தைத் தாபித்தார். இச்சம்பவ மும் சித்தி லெப்பை ஈடுபட்டிருந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவியது. 1892 ஆம் ஆண்டில் கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டமையும், வாப்சே மரிக்காரின் ஆதர வில் சகிராக் கல்லூரி தாபிக்கப்பட்டமையும், இந்த இயக்கத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும். இவ்வியக்கத்தின் பூர்வாங்கக் கூட்டத்திற்கு அரபி பாஷா தலைமை தாங்கினர். கொழும்பிலே சகிராக் கல்லூரி தாபிக்கப்பட்டமை முஸ்லிம்

சமுதாயம் கல்வித்துறையில் முன்னேற்றமடைவதற்கு வழிவகுத்த ஒரு பெரும் பணியாகும். அக்காலமுதலாக, மேனுட்டுக் கல்வியை முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கும் மனப்பான்மை படிப்படியாக மறையலாயிற்று. ஏனைய மதப் பிரிவுகள் போன்று முஸ்லிம்களும் தமது சொந்தப் பண்பாட்டு மரபைப் பேணும் அதே வேளையில், மேனுட்டுக் கல்வியின் உதவியுடன் தமது குறிக்கோள்களை எய்துதல் சாத்தியமாகுமென்பதை உணர்ந்தார்கள். எனினும், சித்தி லெப்பையின் சேவை கல்வித்துறையோடு நின்றுவிடவில்லை. அவருடைய தொண்டு சமய மறுமலர்ச்சிக்கும் வழிவகுத்தது. சமூகச் சீர்திருத்தவாதி என்ற முறையிலும் அவர் முஸ்லிம்களுக்குப் பெருந் தொண்டாற்றினர். அவர் வெளியிட்ட 'முஸ்லிம் நேசன்' என்ற பத்திரிகை, முஸ்லிம் மக்கள் பின்பற்றும் திருமண வழக்கங்களும் ஏனைய பரம்பரைப் பழக்க வழக்கங்களும், நாட்டிலே உருவாகிக்கொண்டுவரும் புதிய சமுதாயத்திற்கேற்பப் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று பறைசாற்றியது. மேலும், சட்ட சபைக்கு ஒரு முஸ்லிம் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல் சம்பந்தமான இயக்கத்திற்கும் அவர் தலைமை வகித்தார். இவ்வாறு அரசியற்றுறையிலே முஸ்லிம்களின் தனித்துவம் வெளிப்படுத்தப்பட்டது. எல்லாவற்றையும் கருத்திற் கொள்ளும்போது, முஸ்லிம் மக்களிடையே பண்பாட்டுத் துறையிலும் ஏனைய துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

இதுகாலும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கை வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே சமயத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் உண்டான மறுமலர்ச்சி சுருக்கமாக ஆராயப்பட்டது. இம்மறுமலர்ச்சி இயக்கங்கள் மேனுட்டுப் பண்பாட்டிலே அக்கால மக்களுக்கு இருந்த மோகத்தைத் தகர்த்து, இந்நாட்டுச் சமயங்கள், பண்பாடுகளின் அருமை பெருமைகளை அம்மக்களின் மனத்திற் பதியவைத்தற்கு உதவின. இவ்வாருகச் சுதந்திரப் பாதையிலே இந்நாட்டு மக்கள் அடியெடுத்து வைத்தற்கு இவை உதவின எனலாம். இக்கோட்பாடுகளின் அடிப்படையிலே, ஆங்கிலேயருக்கெதிரான அரசியல் இயக்கம் உடனடியாகத் தொடரவில்லை. எனினும், பிற்காலத்திலே அரசியற்றுறையிலும் பண்பாட்டுத் துறையிலும் வளர்ச்சியுண்டாதற்கு இம்மறுமலர்ச்சி இயக்கம் ஆற்றிய பணி சிறிதன்று என்பதை மறத்தலாகாது.

9 ஆம் அத்தியாயம்

# 1931 ஆம் ஆண்டு வரையும் யாப்பு விருத்தி

ஒல்லாந்தரின் ஆட்சியிலிருந்த கரையோரப் பிரதேசங்கள் 1796 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 இலே பிரித்தானியரின் கைவச மாயின. அப்போது, பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமாயிருந்த சென்னை இராசதானியிடமே இப்பிரதேசங் களின் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. இப்பிரதேசங்களின் நிருவாகத்தைச் சென்னை இராசதானியானது அவ்விராசதானியில் நடைபெற்ற நிருவாகத்தைத் தழுவி மாற்றியமைத்தது. இவ்வழி, பண்டைக்காலந்தொட்டு இலங்கையிலே நிலவிவந்த இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டது. முதலியார்மாரின் அதிகாரங்களும் ஒழிக்கப்பட்டன. இப்பிரதேசங்களை நிருவாகஞ் செய்யும் அதி காரமானது சென்னை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அமில் தார்கள் எனப் பெயரிய அலுவலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயின், இந்தச் சீர்திருத்தங்கள் இலங்கை நாட்டு நிலைமைகளுக்கு இசைவாக இருக்கவில்லை. ஆகவே, சிறிது காலத்துள் இந்நாட் டிலே கலகம் மூண்டது. இக்கலகத்தின் பயனாக, இப்பிரதேசங் களின் நிருவாகத்தைச் சீர்திருத்தியமைத்தல் வேண்டும் எனப் பிரித்தானிய அதிகாரவர்க்கம் விரைவில் முடிவு செய்தது. இவ் வழி, 1798 இல் எடுக்கப்பட்ட புதிய நிருவாக நடவடிக்கை களின்படி, இத்தீவின் ஆட்சியதிகாரம் பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. எல்லா நிரு வாக அதிகாரங்களும் சட்டவாக்க அதிகாரங்களும் ஆளுநரின் கைவசமாயின. ஆயினும், இந்நாட்டுக்குத் தேவைப்பட்ட நிரு வாக அதிகாரிகளைச் சென்னை இராசதானியே நியமித்தது. இவ் வாறாக இந்நாட்டில் ஒருவகை இரட்டையாட்சி நிலவிற்று; எவ் வாறெனின், பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் இந்நாட்டு நிருவாகத்துக்குப் பொறுப்பாக இருக்க, வியாபார முயற்சிகளை நிருவகிக்கும் பொறுப்பு பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பெனியின் கைவசமிருந்தது.

1798 ஒற்றோபரிலே இலங்கைக்கு ஆளுநராக வந்த பிரடெரிக்கு நோத் என்பவரே மேற்கூறிய சீர்திருத்தங்களைச் செயற்படுத்தி னார். ஆயின், இந்தச் சீர்திருத்தங்களிலே உள்ளடங்கியிருந்த இருமைப்பாடு காரணமாக, பிரச்சினைகளையெல்லாம் தீர்க்குமுக மாக, இந்த இரட்டையாட்சிமுறை 1802 இலே ஒழிக்கப்பட்டு, பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்ட இப்பிரதேசங்கள் முடிக்குரிய

குடியேற்ற நாடாகப் பிரகடனஞ் செய்யப்பட்டன. அவ்வழி, சென்னை இராசதானியின் அதிகாரத்திலிருந்து இந்நாடு விடுவிக்கப்பட்டது. இத்தீவிற்குத் தனிப்பட்ட ஒரு நிருவாக முறையை நிறுவுதற்குப் பிரித்தானிய அரசாங்கம் முடிவு செய்தது.

இப்புதிய ஆட்சிமுறை முடிக்குரிய குடியேற்றநாட்டு ஆட்சி முறை எனப்பட்டது. அது 1802 சனவரி முதலாந் தேதியன்று நிறுவப்பட்டது. அதன்படி, பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களை ஆட்சிசெய்யும் அதிகாரம் முழுவதும் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. அரசியல், நிதி, நீதி ஆகிய மூன்று துறைகளிலும் அவரே பூரண அதிகாரம் பெற்றார். அவருடைய நிருவாகப் பணிகளிலும் சட்டவாக்கப் பணிகளிலும் அவருக்கு உதவி செய்யும் பொருட்டு, அறிவுரைக் கழகமொன்று நிறுவப்பட்டது. நிருவாகஞ் சம்பந்தமான முக்கியமான விடயங்கள் பற்றி ஆளுநர் இக்கழகத்தின் அறிவுரை பெறுதல் வேண்டும். ஆயினும், 1812 இலே பிரித்தானியர்வசமான கண்டி இராச்சியஞ் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிக் கழகத்தைக் கலந்தாலோசிக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை. இவ்வாருக, கோல்புரூக் — கமரன் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட காலம் வரையும், இலங்கை நாட்டிற் பிரித்தானியப் பிரதேசங்கள்; அறிவுரைக் கழகத்தின் உதவியோடு, ஆளுநரால் ஆட்சி செய்யப்படலாயின.

பின்னர் 1832 — 33 வரையான காலப் பகுதியிலே கோல்புரூக் - கமரன் ஆணைக் குழுவின் சீர்திருத்தங்கள் இந் நாட்டிற் புகுத்தப்பட்டன. இவ்வாணைக் குழுவின் விதந்துரைப்படி. தாபிக்கப்பட்ட சட்டவாக்கக் கழகமானது உத்தியோக உறுப்பினர் 9 பேரையும், உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் 6 பேரையும் கொண்டதாயிற்று. உத்தியோகச் சார்பற்ற 6 உறுப்பினரில் மூவர், ஐரோப்பிய இனத்தவர்க்குப் பிரதிநிதிகளாக விளங்கினர்; எஞ்சிய மூவரும் முறையே சிங்களவர், தமிழர், பறங்கியர் ஆகிய இனத்தவரின் பிரதிநிதிகள். இவ்வுறுப்பினர் யாவரையும் ஆளுநரே நியமித்தார். காலத்துக்குக் காலம் இச்சட்டவாக்கக் கழகத்திலே சிறுச்சிறு மாற்றங்கள் செய்யப்பட்ட போதிலும், அதனுடைய அமைப்பிலோ அதிகாரங்களிலோ 1907 வரையும் முக்கியமான மாற்றம் யாதும் நிகழவில்லை. எனினும், 1848 ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்களின்படி, அரசாங்க அலுவலாளரின் சம்பளங்கள் பற்றிய மதிப்பீடுகளை விவாதிக்கும் உரிமை சட்டவாக்கக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டது. இம் மதிப்பீடுகள் ஆண்டு ஒதுக்கீட்டு முறியில் முக்கியமான இடம் வகிக்கும் அமிசங்கள். சட்டக் கழகத்திலே விமரிசனஞ் செய்யவும் கருத்துத் தெரிவிக்கவும் கழக உறுப்பினர்க்கு - குறிப்பாக, உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்க்கு - இருந்த உரிமை காலப்போக்கிலே வலுப்பட்ட

தாயினும், கழகத்தின் அதிகாரம் கணிசமான அளவுக்கு அதிகரித்ததில்லை. எனினும், 1860 இலே, ஒரு சட்ட முறியைத் தொடங்கும் அதிகாரம் கழகத்துக்கு வழங்கப்பட்டது. ஆயினும், நிதி விடயங்கள் பற்றியும் வருமான விடயங்கள் பற்றியும் சட்ட முறிகளைத் தொடங்கும் அதிகாரம் கழகத்துக்கு வழங்கப்பட வில்லை. ஆதலின், முன்னர்க் கூறிய அதிகாரம் பெரும்பாலும் அர்த்தமற்றதாயிற்று. 1889 இல் இன்னுமொரு சலுகை கழகத்துக்கு வழங்கப்பட்டது. அதன்வழி, அரசியல் விடயங்களிலே இந்நாட்டுத் தலைவர்களுக்கு இருந்த வாய்ப்புப் பெருகிற்று எனலாம். அச்சலுகையின்படி, முறையே கண்டிச் சிங்களர்க்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதிகளாக, உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் இருவர் நியமிக்கப்பட்டனர். இவ்வாருக, உத்தியோக உறுப்பினரின் எண்ணிக்கை 9 ஆக இருக்க, உத்தியோகச் சார் பற்ற உறுப்பினரின் எண்ணிக்கை 8 ஆகக் கூடிற்று. இப்படியான சிறுச்சிறு மாற்றங்கள் செய்யப்பட்ட போதிலும் சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்களிலே உருப்படியான மாற்றம் யாதும் 19 ஆம் நூற்ருண்டில் நிகழவில்லை.

சட்டவாக்கக் கழகத்திலே உத்தியோகச் சார்புடைய ஐரோப்பிய உறுப்பினரும் உத்தியோகச் சார்பற்ற ஐரோப்பிய உறுப்பினரும் பெரும்பான்மையோராக இருந்தமையாலும், அவர்கள் இந்நாட்டில் இருந்த பிரித்தானிய அதிகாரவர்க்கத்தின் விருப்பத்துக்கேற்பவே நடந்துகொண்டமையாலும், ஆளுநர் பெரும்பாலும் தமது இச்சைபோல ஆட்சி செய்வது இயல்வதாயிற்று. இனி, சட்டவாக்கக் கழகத்தின் உறுப்பினர் ஒருவரே அக்கழகத்தின் தலைவராக நியமிக்கப்படவேண்டும் என்று கோல்புரூக் அவர்கள் விதந்துரைத்த போதிலும், ஆளுநரே தலைவராக நியமிக்கப்பட்டார். இனி, ஐரோப்பிய அலுவலாரைக் கொண்ட நிருவாகக் கழகத்திற்கு நிதி விடயங்கள் பற்றிய அதிகாரம் யாதும் இருக்க வில்லை. அதுவும் ஆளுநர்க்கு இசைவாக ஒத்துழைக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாருக, இந்த யாப்பு முறையானது குடியேற்ற நாட்டு ஆட்சிக்கு உகந்தமுறையில் அமைந்திருந்தது.

மேற்கூறிய நிலைமை 19 ஆம் நூற்ருண்டின் இறுதிவரையும் தொடர்ந்து நீடித்தது. ஏறத்தாழ 1840 ஆம் ஆண்டு முதலாக, யாப்புச் சீர்திருத்தம் வேண்டும் என்ற கிளர்ச்சி, காலத்துக்குக் காலம் தலைதூக்கிற்று. இக் கிளர்ச்சியிலே இந்நாட்டுச் சமுதாயங்களின் தலைவர்கள் பங்குபற்றவில்லை; ஐரோப்பியரே முன்னணியில் நின்றனர். 1834 இலே தொடங்கப்பட்ட ''சிலோன் ஒப்சேவர்'' எனும் புதினப் பத்திரிகை இக்கிளர்ச்சிக்கு ஆதரவளித்தது. அப் பத்திரிகையின் சொந்தக்காரரான கிறிஸ்ரோபர் எலியட் என்பார்

இக்கிளர்ச்சியில் மிக்க ஈடுபாடுகொண்டு, கிளர்ச்சியின் குறிக்கோள்களை அடைதற்காக 'இலங்கையின் நண்பர்' எனும் சங்கத்தைத் தாபித்தார். இக்கிளர்ச்சிக்குத் தாராண்மைக் கருத்துக்கள் ஓரளவிற்கு ஊக்கமளித்தபோதிலும், அதற்கு மூலகாரணம் வேருயிருந்தது. கோல்புருக் சீர்திருத்தங்களின் பயனுக உருவாய சூழ்நிலையிலே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை இந்நாட்டில் விரைவாக விருத்தியடைந்தது. இந்த விருத்திக்கு வாய்ப்பாகப் பெருந்தெருக்களையும் போக்குவரத்து வசதிகளையும் அமைத்துக் கொடுப்பதில் அரசாங்கம் மேன்மேலும் கூடிய அளவிலே பணஞ் செலவிடுதல் வேண்டும், அவ்வாறு பணஞ் செலவிடுதற்கு அரசாங்கத்தை மேன்மேலும் தூண்டுதல் வேண்டும் என்ற குறிக்கோளே இக்கிளர்ச்சிக்கு மூலகாரணம் எனலாம்.

இருபதாம் நூற்ருண்டு முதலாக, யாப்புச் சீர்திருத்த இயக்கத்திலே முக்கியமான பல மாற்றங்கள் நிகழ்ந்ததை நாம் காண்கின்ருேம். முன்னம், இந்தச் சீர்திருத்த இயக்கத்தில் ஐரோப்பியரே முற்பட்டு நின்ருராக, இப்போது உண்ணுட்டு மக்களும் சேர்ந்து கொண்டதைக் காணலாம். சீர்திருத்த இயக்கத்தில் முதன் முதலாகப் பங்குகொண்ட இலங்கையரிலே சேர். பொன்னம்பலம் அருணுசலம் அவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். யாப்புச் சீர்திருத்தப் பிரச்சினைகளை ஆராய்தற்கு ஒரு மாநாடு கூட்டல் வேண்டும் என்று அவர் முனைந்து நின்ருர். புதினப் பத்திரிகைச் சொந்தக்காரரான ஜோன் பெர்குசன் என்பவர் அவரோடு ஒத்துழைத்த போதிலும், இலங்கைப் பெருமக்களின் ஆதரவு அவருக்குக் கிடைக்கவில்லை.

இவ்வழி, இச்சீர்திருத்த இயக்கம் குறுகிய அடித்தளத்தையே ஆதாரமாகக் கொண்டிருந்தது; இந்நாட்டு மக்களின் ஆதரவு பெற்ற கிளர்ச்சியாக அது அமையவில்லை. எனவே, இச்சூழ்நிலையில் இச்சீர்திருத்த இயக்கத்திற் போதிய கவனஞ் செலுத்தாது தட்டிக்கழிப்பது, பிரித்தானியக் குடியேற்றநாட்டு அலுவலகத்துக்கு எளிதாயிற்று.

1906 ஆம் ஆண்டு முதலாக, யாப்புச் சீர்திருத்த இயக்கத்திலே ஒரு புதிய ஊக்கத்தைக் காணலாம். இந்த ஊக்கத்தின் பயனுக, பல்வேறு அரசியற் சங்கங்கள் நாட்டிற் பல பாகங்களிலும் தோன்றின. 'இலங்கைத் தேசியச் சங்கம்', 'சிலாபச் சங்கம்', 'யாழ்ப்பாணச் சங்கம்' என்றவாருன சங்கங்கள் ஆங்காங்குத் தோன்றின. 1905 இற்கும் 1910 இற்கும் இடைப்பட்ட காலத்திலே, இத்தகைய சங்கங்கள் யாப்புச் சீர்திருத்தம் வேண்டிப் பல கோரிக்கைகளை விடுக்கலாயின. சட்டவாக்கக் கழகத்திலே உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரின் எண்ணிக்கையைக் கூட்டுதல்; இனவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்தல்; அதற்குப் பதி

லாக ஆள்புலவாரிப் பிரதிநிதித்துவத்தைப் புகுத்தல் ஆகியன அக்கோரிக்கைகளிற் சில. இன்னும், சட்டமுறிகளைத் துவக்கும் அதிகாரம் சட்டவாக்கக் கழகத்துக்கு வழங்கப்படுதல் வேண்டும்; உத்தியோக உறுப்பினர் சுயேச்சையாக வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்; சட்டவாக்கக் கழகத்தின் தலைமைப் பதவி ஆளுநர்க்கன்றி இந்நாட்டுக் குடியேற்றச் செயலாளர்க்கே உரித்தாதல் வேண்டும்; நிருவாகக் கழகத்திலும் உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் சிலர் இடம்பெறுதல் வேண்டும் என்றெல்லாம் அச்சங்கங்கள் கோரிக்கை விடுத்தன.

பிரித்தானிய அரசின் குடியேற்றநாட்டுச் செயலாளர் இக் கோரிக்கைகள் பற்றி இலங்கையின் ஆளுநரின் கருத்தை உசாவினர். அக்காலத்தில் ஆளுநராயிருந்த சேர் ஹென்றி மக்கலம் இச்சீர்திருத்தக் கோரிக்கைகளுக்குக் கடுமையான மறுப்புத் தெரிவித்தார். இக்கோரிக்கைகளை விடுத்த தலைவர்கள் இலங்கை மக்களின் பிரதிநிதிகளாகக் கருதத்தக்கவர் அல்லர் என்றும், சீர்திருத்தங்களுக்கு வேண்டிய பக்குவநிலை இலங்கையில் இன்னும் உருவாகவில்லை என்றும் அவர் எடுத்துரைத்தார். மேல்நாட்டுக் கல்வி கற்றவரும், அவ்வகைக் கல்வியால் உருவாய சில ஆசை பாசங்களைக் கொண்டவரும், நிலக்கிழார் வர்த்தகர் உயர் தொழில் வகிப்போர் ஆகிய இவ்வகுப்பாரைச் சேர்ந்தவருமான சிறுபாலாரிடமிருந்தே இக்கோரிக்கைகள் தோன்றியுள்ளன என்று அவர் விவாதித்தார். இக் கூட்டத்தினர் இந்நாட்டு மக்களிற் பெரும்பாலாரின் பிரதிநிதிகளல்லர் என்று அவர் நம்பினர். எனவே, வாக்குரிமையைப் பரவலாக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சட்டவாக்கக் கழகத்திலே உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரின் எண்ணிக்கையைக் கூட்டவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் எதிர்த்து வாதித்தார். இத்தகைய சீர்திருத்தங்களுக்கு வேண்டிய அரசியல் முதிர்ச்சி நாட்டில் ஏற்படவில்லை என்றும், அவை பிரித்தானியப் பேரரசின் நலனுக்கு உகந்தவையல்ல என்றும் அவர் எடுத்துக்கூறினர். ஆளுநரின் விதந்துரைகளை ஏற்றுக்கொண்ட பிரித்தானிய அரசாங்கம் இக் கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்துவிட்டது. எனினும், 1910 இலே சில மாற்றங்கள் யாப்பிற் புகுத்தப்பட்டன. இச்சீர்திருத்தங்கள் கிரீவ் - மக்கலம் சீர்திருத்தங்கள் எனப் பெயர் பெற்றன. அக்காலத்திலே குடியேற்ற நாட்டு அரசுச் செயலாளராக இருந்தவர் கிரீவ் என்பவர்; இலங்கையின் ஆளுநராக இருந்தவர் மக்கலம். இவ்விருவரின் பெயரையும் இணைத்தே இச்சீர்திருத்தங்கள் இப்பெயர் பெற்றன. அந்தச் சீர்திருத்தங்களின்படி, சட்டவாக்கக் கழகத்திலே உத்தியோக உறுப்பினரின் எண்ணிக்கை 11 ஆகக் கூட்டப்பட்டது. அதே வேளை, உத்தியோகச்சார்பற்ற உறுப்பினரின்

எண்ணிக்கையும் 10 ஆகக் கூட்டப்பட்டது; 10 பேரில், ஆளுநரால் நியமிக்கப்பட்டவர் 6 பேர். இவ்வாறு நியமிக்கப்பட்ட 6 பேரில், மலைநாட்டுச் சிங்களவரின் பிரதிநிதிகள் 2 பேர்; தமிழரின் பிரதிநிதிகள் 2 பேர்; முஸ்லீம்களின் பிரதிநிதியாக் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவர்கள் தவிர, உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரில் 4 பேர், குறுகிய அடிப்படையில் அமைந்த வாக்குரிமைப்படி தெரிவு செய்யப்பட்டனர். அவ்வாறு தேர்தல் மூலந் தெரிவு செய்யப்பட்ட 4 பேரில் ஒருவர், கல்விகற்ற இலங்கையரின் பிரதிநிதியாவர்; எஞ்சிய ஒருவர் பறங்கியரின் பிரதிநிதியாவர். இந்தச் சீர்திருத்தங்களால் உருப்படியான மாறுதல் யாதும் அரசியல் நிலைமையில் ஏற்படவில்லை. அவற்றால் இனவாரிப் பிரதிநிதித்துவம் இன்னும் வலியுறுத்தப்பட்டது; சட்டவாக்கக் கழகத்திற்கு ஆளுநரே உறுப்பினரை நியமிக்கும் முறையும் தொடர்ந்து நிலவிற்று. என்றாலும், கல்வி கற்ற இலங்கையர்க்காக ஒருவரைத் தேர்தல்மூலம் தெரிவு செய்வது, முக்கியமான ஒரு மாற்றம் எனலாம். இனி, இச்சீர்திருத்தங்களால் நிருவாகத் துறைக்கும் சட்டவாக்கத் துறைக்குமிடையே திட்டமான உறவு யாதும் ஏற்பட்டுவிடவில்லை.

இலங்கை நாட்டுத் தலைவர்களுக்கு இச்சீர்திருத்தங்கள் திருத்தியளிக்கவில்லை. ஆனாலும், எத்தகைய சீர்திருத்தங்கள் செய்யத்தக்கன என்பது பற்றியும் அவர்களிடையே கருத்தொற்றுமை காணப்படவில்லை. உதாரணமாக, வாக்குரிமையை இன்னும் பரவலாக்குதற்கு மாறானோரும், நிருவாகக் கழகத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு மாறானோரும் அவர்களிடையே இருந்தனர். எனினும், 1915 இல் மூண்ட சிங்கள - முஸ்லிம் கலகங்களின் விளைவாகவும், அக்காலத்திலே செய்யப்பட்ட இந்திய யாப்புச் சீர்திருத்தங்களின் விளைவாகவும், இலங்கை நாட்டுச் சீர்திருத்த இயக்கத்திலும் கணிசமான மாறுதல் ஏற்பட்டது.

1915 ஆம் வருடத்து இனக் கலவரத்தை அடக்குதற்காக இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய பிரித்தானிய அரசாங்கம் மிக்க கடுமையான அடக்கு முறைகளைக் கையாண்டது. அக்கலவரத்தை அடக்குமுகமாக, பெருந்தொகையான சிங்கள-பௌத்தத் தலைவர்கள் சிறையிடப்பட்டனர். அன்றியும், பொது மக்கள் பலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். குறித்த ஒரு மாவட்டத்திலே முஸ்லீம் மக்களின் சொத்துக்களுக்குச் சேதமிழைக்கப்பட்டால், அப்பிரதேசத்தில் வாழும் சிங்கள - பௌத்த மக்கள் அச்சேதத்திற்காக நட்டஈடு கொடுக்க வேண்டுமென விதிக்கப்பட்டது. பொதுவாக, சிங்கள - பௌத்தத் தலைவர்களுக்கெதிராகக் கடுமையான அடக்குமுறைகள் கையாளப்பட்டன.

முந்திய அத்தியாயத்திலே குறிப்பிட்டவாறு, இந்த அடக்கு முறைகளின் பயனுகப் பிரித்தானியர்க்கெதிராக மக்களின் உணர்ச்சி நாட்டிற் பரவிற்று. பரவவே, தேசிய இயக்கமும் சீர்திருத்தங்கோரிய கிளர்ச்சியும் வலுப்படுதற்கு வாய்ப்பான சூழ்நிலை உருவாகியது. எனினும், சீர்திருத்தக் கிளர்ச்சியின் முன்னணியில் நின்ற 'இலங்கைத் தேசியச் சங்கமும்' சீர்திருத்தக் கிளர்ச்சியாளரும், பொதுமக்களின் ஒத்துழைப்போடு விரிவான அடிப்படையில் அமைந்த ஒரு மக்களியக்கத்தை உருவாக்குதற்கு முயன்றாரில்லை. இவ்வாருக, யாப்புச் சீர்திருத்த இயக்கமானது முன்னைநாளிற் போன்று மிகக் குறுகிய பாதையிலேயே செல்வதாயிற்று.

1915 ஆம் ஆண்டுச் சம்பவங்களின் பயனுக உருவாய நல்வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்திச் சீர்திருத்தவாதிகள் தமது இயக்கத்தை வலுப்படுத்தியிருக்கலாம். ஆனுல், அவர்கள் அவ்வாறு செய்யத் தவறிவிட்டார்கள். அக்காலத்து இந்தியச் சீர்திருந்த இயக்கத்தின் செல்வாக்கே அதற்குக் காரணம் எனலாம். இந்தியாவில் யாப்புச் சீர்திருத்தத்தின் எதிர்காலம்பற்றி அக்காலத்தில் இந்திய நாட்டு அரசுச் செயலாளராக இருந்த மொன்ரேகு என்பார் 1917 ஓகத்து 20 இல் விடுத்த பிரகடனமும், பின்னர் 1918 இல் வெளியிடப்பட்ட மொன்ரேகு - செம்ஸ்போட் அறிக்கையும் இலங்கைச் சீர்திருத்தவாதிகளுக்கு ஊக்கமளிப்பனவாக இருந்தன. இந்திய நிருவாகத்திலே இந்தியர் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும் எனவும், பொறுப்புள்ள ஆட்சியிலே அவர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கவேண்டும் எனவும், காலப்போக்கிலே பிரித்தானியப் பேரரசிலே சுயவாட்சியுடைய ஓர் அரசாக இந்தியா இடம்பெறல் வேண்டும் எனவும், அப்பிரகடனங்கள் கூறின. இத்தகைய நோக்கங்களை ஓரளவுக்கு உள்ளடக்கிய பல சீர்திருத்தங்கள் 1917 இல் இந்தியாவிற் செயற்படுத்தப்பட்டன. அவை மொன்ரேகு - செம்ஸ் போட் சீர்திருத்தங்கள் என அழைக்கப்பட்டன. இலங்கையின் எதிர்காலம் பற்றி இத்தகைய பிரகடனம் யாதும் செய்யப்படாமை, இலங்கை நாட்டுச் சீர்திருத்த வாதிகளின் கவனத்தை ஈர்த்தது. இந்தியாவிலே இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டதற்குக் காரணம், இந்தியத் தேசிய மாசபையின் அயரா உழைப்பே என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். எனவே, அத்தகைய ஒரு தேசியத் தாபனத்தை இங்கும் அமைத்தல் அவசியம் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

இத்தகைய கருத்துப் பின்னணியிலே, இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவையமும் இலங்கைத் தேசியச் சங்கமும் ஊக்கமாக இயங்கத் தொடங்குவதைக் காண்கிறோம். இச்சங்கங்கள் அக்காலத்

தில் ஆளுநராக இருந்த ஜோன் அண்டேசனுக்கு ஒரு மனுவை அனுப்பிவைத்தன. மேலும், யாப்புச் சீர்திருத்தங்கள்பற்றி ஆராய்தற்காக, ஒரு சீர்திருத்த மாநாட்டையும் அவை கூட்டின; அது 1917 திசம்பரிற் கூடிற்று. இவ்வாறாகப் புத்தார்வம் தலைதூக்கிய இச்சூழ்நிலையிலே மிக முக்கியமான ஒரு சம்பவம் நடைபெற்றது; இலங்கைத் தேசிய மாசபை நிறுவப்பட்டமையே அது. இற்றைக் காலங்களில், சீர்திருத்த இயக்கத்தின் முன்னணியில் நின்றது இம்மாசபையேயாம்.

பொதுமக்களாதரவை ஓரளவுக்குப் பெற்றிருந்த தேசிய மாசபையே சீர்திருத்தக் கிளர்ச்சிக்குப் பிரதான கருவியாக விளங்கியபோதிலும், இறுதிக் குறிக்கோள்கள்பற்றியும் அக்குறிக்கோள்களை அடைதற்குக் கையாள வேண்டிய வழிமுறைகள்பற்றியும் கருத்துவேற்றுமைகள் மாசபையிலே தோன்றலாயின. எதிர்காலச் சீர்த்திருத்தங்களின்வழி தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமா என்று தமிழ்த் தலைவர்கள் ஐயங்கொண்டார்கள். இனி, இந்தியாவில் நிலவிய அரசியற் சூழ்நிலையிலிருந்து இந்நிலை வேறுபட்டிருந்தமையால், இந்தியாவிற் போன்று இங்கேயும் பிரித்தானியர்க்கு எதிரான தீவிர இயக்கமொன்று அவசியமாகாது என்றும் சில தலைவர்கள் கருதினர்கள். பிரித்தானியப் பேரரசுக்கு உட்பட்ட, சுயவாட்சி படைத்த ஓர் அரசை உருவாக்குவதே அத்தலைவர்களின் இலக்காக இருந்தது. அந்த இலக்கை அடைதற்கு, யாப்புவழியான முறைகளே தக்கவை என அவர்கள் கருதினர்கள். ஆயினும், இலங்கைத் தேசிய மாசபையில் இடம்பெற்றிருந்த இளைய இலங்கைக் கூட்டவையின் கருத்துகள் வேறுபட்டிருந்தன. ஏ. ஈ. குணசிங்கா என்பவருடைய தலைமையில் இயங்கிய இளைய இலங்கைக் கூட்டவையானது இந்தியத் தேசிய மாசபையின் கருத்துகளும் மகாத்மா காந்தியாரின் கொள்கைகளும் பின்பற்றப்பட வேண்டும் என்றும், பிரித்தானிய ஆட்சிக்கெதிராகத் தீவிரமான ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்திற்று. மேலும், ஒத்துழையாமை போன்ற தீவிர முறைகளை நாமும் கடைப்பிடிக்கவேண்டும் என்றும், பிரித்தானியப் பேரரசினின்றும் விலகிச் சுதந்திரமான தனியரசை உருவாக்கவேண்டும் என்றும் அந்த இளைய தலைமுறையினர் கூறினர்கள்.

இக்கருத்து வேற்றுமைகளையெல்லாம் தீர்த்துவைத்து, பல்வேறு சாரார்க்கும் சம்மதமான ஒரு நெறிமுறையை வகுத்துக் கொள்வது மிக இடர்ப்பாடான ஒரு பணி. ஆயினும், தமிழ்த் தலைவர்கள் தமிழினத்தின் உரிமைகள் பற்றிக் கொண்டிருந்த ஐயப்பாடுகளைப் பெரும்பாலும் அகற்றி, அவர்களுடைய ஒத்துழைப்பையும் சீர்திருத்த இயக்கத்திற்குப் பெற்றுக்கொள்வதில், சேர். பொன்

னம்பலம் அருணுசலம் வெற்றிகண்டார். இனி, யாப்புவழியான முறைகளையே கையாளல் வேண்டும் என்று கோரிநின்ற சாரார், தேசிய மாசபையிலே கூடிய பலம்பெற்று விளங்கினர். அதனுல், இளந்தலைமுறையைச் சேர்ந்த தீவிர வாதிகள் — பிரித்தானிய ஆட்சிக்கெதிராகத் தீவிர முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டுமென்ருேர் — தேசிய மாசபையிலே பலம்பெற முடியவில்லை. எனவே, பூரண உடன்பாடு ஏற்பட்டதில்லை. எனினும், இலங்கைத் தேசிய மாசபையானது யாப்புச் சீர்திருத்த இயக்கத்திலே ஊக்கமாக இறங்கிற்று.

இவ்வாருக, சேர். பொன்னம்பலம் அருணுசலத்தின் தலைமையிலே இலங்கைத் தேசிய மாசபையின் பிரதிநிதிகள் கூடி, 1920 யூன் 23 இலே, குடியேற்ற நாட்டு அரசுச் செயலாளர் அல்பிரெட் மில்னரைச் சந்தித்துச் சீர்திருத்தக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தார்கள். சட்டவாக்கக் கழகத்தின் உறுப்பினர் தொகையை 50 வரை கூட்டுதல் — அவருட் பெரும்பாலார் உத்தியோகச் சார் பற்ற உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அக்கழகத்திற்கு நிதியதிகாரங்களை வழங்குதல்; இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழித்தல்; அதற்குப் பதிலாக, ஆள்புலவாரிப் பிரதிநிதித்துவ முறையைப் புகுத்துதல்; நிருவாகக் கழகத்திற்கு இலங்கையர் மூவரை நியமித்தல்; அவ்வழி, நிருவாகக் கழகத்துக்கும் சட்ட வாக்கக் கழகத்துக்குமிடையே ஓர் இணைப்பை உண்டாக்குதல் - இவையே தேசிய மாசபையின் பிரதிநிதிகள் சமர்ப்பித்த கோரிக்கைகளுட் பிரதானமானவை. முன்னர்ப் போன்று, பிரித்தானிய அரசாங்கமானது அக்காலத்தில் ஆளுநராக இருந்த சேர் வில்லியம் மன்னிங்கு என்பார்க்கு இக்கோரிக்கைகளை அனுப்பி, அவருடைய கருத்தைக் கேட்டது. மக்கலம் போன்று மன்னிங்கும் பிரித்தானியப் பேரரசின் அதிகாரத்தைப் பேணுவதில் ஆர்வங் கொண்டவர். ஆகவே, இக்கோரிக்கைகளை அவர் ஆதரிக்கவில்லை. மேனுட்டுக் கல்வி பயின்ற சிறுபாலாரின் பிரதிநிதியே தேசிய மாசபை என்றும், அது பொது மக்களின் அபிலாட்சைகளைப் பிரதிபலிக்க முடியாது என்றும் அவர் பிரித்தானிய அரசாங்கத்துக்கு அறிக்கை செய்தார். பிரித்து ஆளும் பூட்கையைக் கையாண்டு வந்த மன்னிங்கு துரை, மேலும், இலங்கைத் தேசிய மாசபையானது பெரும்பான்மையும் தாழ்நாட்டுத் தாபனமாகவே கருதத்தக்கது என்றும், மலைநாட்டு மக்களின் அபிலாட்சைகளை அது பிரதிபலிக்காது என்றும் எடுத்துரைத்தார்.

எனினும், 1920 இல், பிரித்தானிய அரசாங்கம் புதியதொரு யாப்பு முறையைச் சமர்ப்பித்தது. அந்த யாப்பில் அடங்கிய சீர்திருத்தங்கள், 'மன்னிங்குச் சீர்திருத்தங்கள்' எனப்பட்டன. இச்சீர்திருத்தங்களின்படி, சட்டவாக்கக் கழகத்தின் உறுப்பினர்

தொகை 37 பேராகக் கூட்டப்பட்டது. அவரில் 14 பேர், உத்தியோக உறுப்பினர்: 23 பேர், உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர். இந்த உத்தியோக உறுப்பினர் 14 பேரும், இலங்கையிற் சேவை செய்த பிரித்தானிய அதிகாரிகள். அவருள் 5 பேர் பதவிவழி உறுப்பினர்; எஞ்சிய 9 பேரும் ஆளுநரால் நியமிக்கப்பட்டவர். இனி, உத்தியோகச் சார்பற்ற 23 உறுப்பினரில், 3 உறுப்பினர் ஆளுநரால் நியமிக்கப்பட்டவர். அவர்கள் பிரித்தானிய முடிக்குரிய சேவையிற் பதவி வகிப்பவராக இருத்தலாகாது. அம்மூவரும் முறையே சிங்களவர், இலங்கைத் தமிழர், பறங்கியர் ஆகிய மூவினத்தோர்க்கும் பிரதிநிதிகளாவர். இனி, மலைநாட்டு மக்களின் பிரதிநிதிகளாக 4 பேர் நியமிக்கப்பட்டனர்; அதாவது சிங்களவருக்கு 2 உறுப்பினர்; முஸ்லிம்களுக்கு ஒருவர்; மலைநாட்டுத் தமிழர்க்கு ஒருவர் என்றவாறு நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறாக, உத்தியோகச் சார்பற்ற 23 உறுப்பினரில், 7 பேர் நியமன உறுப்பினராக இருக்க, எஞ்சிய 16 உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தனர். அந்த 16 பேரும் பின்வரும் முறைப்படி தெரிவு செய்யப்பட்டனர்:- இனவாரிப் பிரதிநிதித்துவ முறைப்படி, ஐரோப்பியரின் பிரதிநிதிகளாக இருவர் இருப்பர்; பறங்கியரின் பிரதிநிதி ஒருவர். இனி, ஐரோப்பிய வர்த்தகமன்றத்தின் சார்பாக ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டார்; இன்னும் ஒருவர் தாழ்நாட்டுப் பெருந் தோட்ட முதலாளிகளின் சங்கத்தின் சார்பாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த இரண்டு தாபனங்களும் விசேட தேர்வகங்களாகக் கொள்ளப்பட்டன. எஞ்சிய 11 பிரதிநிதிகளும் ஆள்புல வாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். அவருள் 9 பேர், சிங்களவரின் பிரதிநிதிகள்; 2 பேர், தமிழ்ப்பிரதேசங்களின் பிரதிநிதிகள்.

மேற்கூறிய மாற்றங்களைப் பார்க்கும்போது, ஏற்கவேயிருந்த யாப்பின் வளர்ச்சியையே மன்னிங்குச் சீர்திருத்தங்கள் குறிக்கின்றன என்பது புலனாகும். உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரின் தொகை 23 ஆகக் கூட்டப்பட்டமையும், இந்த 23 உறுப்பினரில் 16 பேரைத் தேர்தல் மூலம் தெரிவு செய்ய ஏற்பாடு செய்தமையும், முக்கியமான அமிசங்களாகக் கருதத்தக்கன. இனி, தெரிவு செய்யவேண்டிய 16 உறுப்பினரில் 11 பேர் ஆள்புல வாரியாகத் தெரிவு செய்யப்பட்டதை இங்குப் பிரதானமாகக் குறிப்பிடுதல் வேண்டும். அன்றியும், சட்டவாக்கக் கழகத்தில், உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரே பெரும்பான்மையாயினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே, நிருவாகக் கழகத்திற்கு இலங்கையர் மூவர் நியமிக்கப்பட்டதும் ஒரு முன்னேற்றமே.

என்றாலும், இந்தச் சீர்திருத்தங்களை நுணுகிப் பார்த்தால், யாப்பு முறையில் ஏற்பட்ட முன்னேற்றம் குறுகியதே என்பது

புலனுகும். உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரே சட்டவாக்கக் கழகத்திற் பெரும்பாலாராக இருந்தாலும், 14 உத்தியோக உறுப்பினரின் ஒத்துழைப்பும், மற்று இனவாரியாகத் தெரிவு செய்யப்பட்ட 7 உறுப்பினரின் ஒத்துழைப்பும் ஆளுநருக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கலாம். அதாவது, சட்டவாக்கக் கழகத்தின் 37 உறுப்பினரில், 21 உறுப்பினரின் ஒத்துழைப்பு ஆளுநருக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கலாம். ஆகவே, உத்தியோகச் சார்பற்றோரின் பெரும்பான்மையால் சட்டவாக்கக் கழகத்திலே ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்று கருத முடியாது. ஆள்புலவாரிப் பிரதிநிதித்துவம் பரவலாக்கப்பட்டாலும், இனவாரிப் பிரதிநிதித்துவம் வலியுறுத்தப்பட்டதுமல்லாமல் கண்டி நாட்டுக்கும் கொண்டு செல்லப்பட்டது. இனி, நிருவாகக் கழகத்துக்கும் சட்டவாக்கக் கழகத்துக்குமிடையே இணைப்பு யாதும் ஏற்படவில்லை. நிருவாகக் கழத்தின் தலைவராக ஆளுநரே தொடர்ந்து செயற்பட்டார்; அவருடைய அதிகாரங்கள் குறைவின்றிப் பேணப்பட்டன.

இக்காரணங்கள் பற்றி, இலங்கைத் தேசிய மாசபையானது ஆரம்பத்திலிருந்தே இந்த மன்னிங்குச் சீர்திருத்தங்களை எதிர்த்து வந்தது. இச்சீர்திருத்தங்கள் தேசிய மாசபையின் அபிலாட்சைகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன. முக்கியமாக, இச்சீர்திருத்தங்களிலே காணப்பட்ட இரண்டு அமிசங்களைத் தேசிய மாசபை பலமாகக் கண்டித்தது; முதலாவது, இனப் பிளவும் பிரதேசப் பிளவும் ஏற்படுதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டமை; இரண்டாவது, சுயவாட்சிக்கு ஏற்ற முறையில் இந்நாட்டு மக்களுக்குப் பயிற்சியளித்தற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படாமை.

மன்னிங்குச் சீர்திருத்தங்களுக்கு மாருகத் தமது எதிர்ப்பையும் மறுப்பையுந் தெரிவித்தற்கு எவ்வெம்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது பற்றித் தேசிய மாசபையிற் கருத்துவேற்றுமை காணப்பட்டது. இந்தியாவிற் போன்று இங்கும், பிரித்தானிய அரசாங்கத்துக்கெதிராக ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்க வேண்டும் என்று, சேர். பொன்னம்பலம் அருணுசலத்தின் தலைமையில் இயங்கிய கோட்டியார் கூறினர். ஆனுல், பொன்னம்பலம் இராமநாதன், ஜேம்ஸ் பீரிஸ், மாக்கஸ் பெர்னுந்து ஆகியோரின் தலைமையிலே இயங்கிய கோட்டி, அந்நெறியைப் பின்பற்றுதல் எமது மரபுக்கு ஒவ்வாது என்றும், அதனுல் அந்த யோசனையைக் கைவிடுதல் வேண்டும் என்றும் வாதித்தது. இவ்வாறு கருத்து வேற்றுமைகள் இருந்தும், மன்னிங்குச் சீர்திருத்தங்களுக்கமைய நடக்கவிருந்த தேர்தல்களிற் பங்குபற்ருது விலகி நிற்கத் தேசிய மாசபை முடிவுசெய்தது.

இலங்கைத் தேசிய மாசபையின் தீர்மானத்தைப் புறக்கணிக்க முடியாது என்பதை மன்னிங்கு உணர்ந்தார். பிரித்தானிய ஆட்

சிக்கெதிரான மறுப்பியக்கம், இந்தியாவிற் போன்று, இங்கும் பரவி இத்தீவின் நிர்வாகத்தைக் குலைத்துவிடலாம் என்று அவர் எண்ணினர். எனவே, தேசிய மாசபையின் தலைவர்களோடு கலந்துரையாடி, புதிய சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதில் அவர்களுடைய சம்மதத்தையும் பெறுதற்கு முயன்றார். தேசியமாசபையின் தலைவர்களும் ஆளுநரும் 1920 நவம்பர் 29 இற் கூடிப்பேசினர். ஆளுநரின் அதிகாரங்களைக் குறைத்தல் வேண்டும் என்ற கோரிக்கையை அவர் ஏற்க மறுத்துவிட்டார். எனினும், சிறிது காலத்திலே புதிய இந்த யாப்பை மாற்றியமைத்தற்கு உடன்பட்டார். ஆகவே இந்த யாப்புமுறையை ஒரு பரிசோதனையாகக் கருதிச் செயற்படுத்தல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், தேசிய மாசபையின் கடுமையான எதிர்ப்புக்களாகிய ஒரு வாசகத்தையும் யாப்பிலிருந்து அகற்ற அவர் உடன்பட்டார். ஒரு வேட்பாளர் தாம் வாக்காளராகவுள்ள ஒரு தேர்வகத்திலேயே தேர்தலுக்கு நிற்க முடியும் என்பது அவ்வாசகம். இறுதியில், இப்புதிய யாப்புமுறையை ஒரு பரிசோதனையாக ஏற்று ஒத்துழைப்பதற்குத் தேசிய மாசபை உடன்பட்டது.

மன்னிங்கு யாப்புமுறைக்கமைய 1921 இலே நடாத்தப்பட்ட தேர்தல்கள் சீர்திருத்தக் கிளர்ச்சியையும், மற்றும் பொதுவான தேசிய இயக்கத்தையும் பொறுத்தவரை முக்கியமானவை என்று கருதத்தக்கன. அத்தேர்தலின்வழி, சிங்களவர்களுக்கு 13 பிரதிநிதிகள் இருந்தனர்; தமிழர்களுக்கு 3 பேரே இருந்தனர். அதனால் இச்சீர்திருத்தங்கள் தமிழ்மக்களின் பலத்தைக் குறைத்துவிடும் எனத் தமிழ்த் தலைவர்கள் கருதினார்கள். ஆதலின், இனவாரிப் பிரதிநிதித்துவமே தமது நிலையைப் பலப்படுத்த உதவும் என்று கருதிய அத்தலைவர்கள் அதனையே விரும்பினார்கள்.

இத்தகைய சூழ்நிலையில், இலங்கைத் தேசிய மாசபையில் ஒன்றுபட்டு நின்ற சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த்தலைவர்களுக்குமிடையே இதுகாறும் நிலவிய இணக்கப்பாடு குலைவுறும் போலத் தோன்றியது. மேற்கு மாகாணத்திலே தனிப்பட்ட தமிழ்த் தேர்வக மொன்றைப் பெறுதற்கு முயன்ற தமிழ்த் தலைவர்கள் அம்முயற்சிக்குச் சிங்களத் தலைவர் சிலரின் ஆதரவும் கிடைக்குமென நம்பினார்கள். ஆயின், சிங்களத் தலைவர்கள் இந்த யோசனைக்கு ஆதரவு அளிக்கவில்லை: மாறாக, அந்த யோசனையை எதிர்த்தார்கள். இம்முரண்பாடுகளின் இறுதி விளைவாக, தமிழ்த்தலைவர்கள் இலங்கைத் தேசிய மாசபையினின்றும் விலகித் தமக்கெனத் தனிவேறு தாபனத்தை நிறுவிக்கொண்டார்கள்.

சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமிடையே ஒற்றுமையைப் பேணிச் சீர்திருத்த இயக்கத்தைப் பலப்படுத்திப்

பாதுகாத்துவந்த சேர் பொன்னம்பலம் அருணுசலமும் இலங்கைத் தேசிய மாசபையை விட்டு நீங்கினுர். பின்னர் சேர் பொன்னம்பலம் இராமநாதனுடைய தலைமையிலே தமிழர் உரிமைக்காகப் பாடுபடுதற்குத் தோன்றிய இயக்கத்திலே அருணுசலமும் சேர்ந்து கொண்டார். தமிழரின் உரிமைகளுக்காக உழைப்பதற்குத் தமிழ்த்தலைவர் ஒன்றுசேர்ந்து உருவாக்கிய சங்கம் 'தமிழர் மகாசன சபை' எனப்பட்டது.

இவ்வாறு சிங்கள தமிழ்த் தலைவர்களிடையே பிளவு ஏற்பட்டுத் தமிழ்த்தலைவர்கள் பிரிந்து சென்றதினுல், அரசியற் சீர்திருத்தங்களைத் தடங்கற்படுத்த விரும்பிய மன்னிங்கு துரைக்கு நிலைமை வாய்ப்பாகியது. பல்வேறு இனங்களுக்கிடையே பரந்த உடன்பாடு ஏற்பட்டாலன்றி அரசியற் சீர்திருத்தங்கள் செய்வது பற்றித் தீவிரமாகச் சிந்திக்க முடியாது என அவர் வாதித்தார். சீர்திருத்தங்கள் பற்றி அத்தகைய உடன்பாடு ஏற்படுவதிலுள்ள இடர்ப்பாட்டைத் தெளிவாக உணர்ந்திருந்த மன்னிங்குதுரை அந்த இடர்ப்பாட்டைத் தமது வாதத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்தினுர். இனி, சீர்திருத்தங்கள்பற்றி இலங்கைத் தேசிய மாசபையிலேதானும் கருத்தொற்றுமை காணப்படவில்லை. அதுவும் மன்னிங்கு துரைக்கு வாய்ப்பாயிற்று.

1921 ஆம் ஆண்டு முதலாக, ஜேம்ஸ் பீரிஸ் என்பவருடைய தலைமையிலேயே இலங்கைத் தேசிய மாசபையானது யாப்புச் சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகளை வற்புறுத்திவந்தது. அக்கோரிக்கைகளுட் பிரதானமான சில, வருமாறு:— சட்டவாக்கக் கழகத்தின் உறுப்பினர் தொகை 45 ஆகக் கூட்டப்படுதல் வேண்டும்; அவரில் 28 உறுப்பினர் ஆள்புல வாரியாகத் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும். உத்தியோக உறுப்பினரின் தொகை 8 ஆகக் குறைக்கப்படுதல் வேண்டும்; சட்டவாக்கக் கழகத்தின் உறுப்பினர் ஒருவரே அக்கழகத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்; நிருவாகக் கழக உறுப்பினரிற் பாதிப்பேர், சட்டவாக்கக் கழகத்தின் வாக்குகளாலே தெரிவு செய்யப்படுதல் வேண்டும். இனி, ஆள்புல வாரியான பிரதிநிதித்துவம் உறுதியாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதும் முக்கியமான ஒரு கோரிக்கையாயிற்று.

மேற்கூறிய கோரிக்கைகளைச் சிங்களத் தலைவர்கள் வேண்டிநிற்க, சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள், சேர் பொன்னம்பலம் இராமநாதனின் தலைமையிலே ஒன்றுசேர்ந்து வேறு விதமான கோரிக்கைகளை விடுத்தார்கள். சட்டவாக்கக் கழகத்து உறுப்பினரின் தொகை 45 ஆகக் கூட்டப்படுதல் வேண்டும்; அவரில் 19 உறுப்பினர் ஆள்புலவாரியாகத் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்; 11 உறுப்பினர் இனவாரியாகத் தெரிவு செய்யப்

படுதல் வேண்டும்; உத்தியோக உறுப்பினர் தொகை 12 ஆக இருத்தல் வேண்டும்; 3 உறுப்பினர் நியமன உறுப்பினராக இருத்தல் வேண்டும் — இவையே பிரதானமான கோரிக்கைகளாம். இக்கோரிக்கைகளைத் தமிழர் மாத்திரமின்றி முஸ்லிம்கள், பறங்கியர், ஐரோப்பியர் ஆகிய பிற சிறுபான்மையோர்களும் ஆதரித்தனர்.

இவ்வாறு சிங்களத் தலைவர்களுக்கும் சிறுபான்மையினங்களின் தலைவர்களுக்குமிடையே தோன்றிவளர்ந்த கருத்து வேற்றுமைகளை ஆளுநர் மன்னிங்கு தமக்குச் சாதகமாக, மிகச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக்கொண்டார். சிறுபான்மையோரின் பிரதிநிதிகளோடு இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்திய மன்னிங்கு அவர்களுடைய கோரிக்கைகளையே தாம் ஆதரிப்பதாகக் குடியேற்றநாட்டு அலுவலகத்துக்கு 1922 இற் கடிதம் அனுப்பினர். அக்காலத்தளவிலும், இலங்கை நாட்டின் எதிர்கால யாப்புச் சீர்திருத்தங்கள்பற்றிப் பிரித்தானியக் குடியேற்றநாட்டு அலுவலகமானது திட்டமான பூட்கை யாதையும் வகுத்துக்கொள்ளவில்லை. எனினும், மன்னிங்கின் ஆதரவோடு சிறுபான்மையோரின் தலைவர்கள் கோரிய இனவாரிப் பிரதிநிதித்துவ முறையைக் கைக்கொள்வது உசிதமாகாது என்பதே குடியேற்ற நாட்டு அலுவலகத்து அதிகாரிகளின் கருத்தாக இருந்தது. இலங்கைத் தேசிய மாசபையின் கருத்துகளை ஆதரிக்கும் நாட்டம், குடியேற்ற அலுவலகத்து அதிகாரிகளிடையே பொதுவாகக் காணப்பட்டதை மன்னிங்கு உணர்ந்தார். எனவே, தமது கருத்துகளை வற்புறுத்தும் நோக்கத்தோடு, அவர் குடியேற்றநாட்டு அலுவலகத்தின் போக்கை மாற்ற முயன்முர். அந்நோக்கத்தின்பொருட்டு அக்காலத்திற் சட்டத்தரணி நாயகமாயிருந்த ஹென்றி கோலன் என்பவரை அவர் குடியேற்றநாட்டு அலுவலகத்துக்கு அனுப்பிவைத்தார். மன்னிங்கு எதிர்பார்த்தவாறே, குடியேற்றநாட்டு அலுவலகமும் சிறுபான்மையோரின் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கச் சித்தமாயிருந்தது. இந்தப் பின்னணியிலேதான், 1923 ஆம் வருடத்து யாப்பு உருவாக்கப்பட்டது.

அந்த யாப்புமுறைப்படி, சட்டவாக்கக் கழகம் 49 உறுப்பினரைக் கொண்டதாயிற்று. அதில் உத்தியோக உறுப்பினரின் தொகை 12 ஆகக் குறைக்கப்பட்டு, உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரின் தொகை 37 ஆகக் கூட்டப்பட்டது. உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் 37 பேரில், 23 பேரை ஆள்புல வாரியாகவும், 11 பேரை இனவாரியாகவும் தெரிவுசெய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. எஞ்சிய 3 பேரையும் ஆளுநர் நியமனஞ் செய்தார். (கண்டிச் சிங்களவர்க்கென முன்னம் ஒதுக்கப்பட்டிருந்த

ஓர் உறுப்புரிமை இப்போது ஒழிக்கப்பட்டது. ஆனல், இனவாரிப் பிரதிநிதித்துவ முறைப்படி, மேற்கு மாகாணத்திலே ஓர் உறுப்புரிமை தமிழர்க்கு வழங்கப்பட்டது.) இப்போதும் ஆளுநரே கழகத்தின் தலைவராக இருந்தார். ஆனாலும், கழக உறுப்பினரிடையேயிருந்து ஒருவரை உபதலைவராகத் தெரிவு செய்தற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இனி, இப்புதிய யாப்பின்படி, நிருவாகக் கழகத்திலே 5 உத்தியோக உறுப்பினரும், 4 உத்தியோகச் சார்பற்ற உறுப்பினரும் இடம்பெற்றனர்.

இந்த யாப்பிலே குறிப்பிடத்தக்க ஓர் அமிசம் யாதெனில், உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் சட்டவாக்கக் கழகத்திலே தெளிவாகப் பெரும்பான்மையோராக இருந்ததேயாம். இனி, உத்தியோக உறுப்பினர் 12 பேரும் நியமன உறுப்பினர் 3 பேருமாக 15 உறுப்பினரே ஆளுநருக்கு ஆதரவாக இப்போது இருந்தனர். ஆளுநரே சட்டவாக்கக் கழகத்துக்குப் பதவிவழித் தலைவராக இருந்தபோதிலும், அக்கழக உறுப்பினரிடையேயிருந்து ஒருவர் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டமையால், கழகத்தின் விவாதங்களிலே ஆளுநர்க்கு இருந்த செல்வாக்கு ஓரளவிற்குக் குறைக்கப்பட்டது எனலாம். நிருவாகக் கழகத்தில் இடம்பெற்ற உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் நால்வரும் சட்டவாக்கக் கழகத்து உறுப்பினரிடையேயிருந்து தெரிவுசெய்யப்படுமிடத்து, அவர்கள் தேர்தற்றெகுதிகளிலீருந்து விலகி நியமன உறுப்பினராகவே இருப்பர். எனவே, இந்த முறையால் நிருவாகக் கழகத்துக்கும் சட்டவாக்கக் கழகத்துக்குமிடையே ஓர் இணைப்பு உருவாயிற்றென்று சொல்லமுடியாது.

இவ்வாறு சீர்திருத்தியமைக்கப்பட்ட சட்டவாக்கக் கழகத்தின் செல்வாக்கு ஓரளவுக்குக் கூடிற்று என்பது உண்மையே. ஆயினும் ஆளுநர்க்கிருந்த விசேட அதிகாரங்கள், அக்கழகத்திலே பெரு, மாறுதல் ஏற்படுதற்குத் தடையாக இருந்தன. சில விதிப்புகளுக்கு அங்கீகாரமளிக்க மறுப்பதற்கு ஆளுநர் அதிகாரம் பெற்றிருந்தார்; சில விதிப்புகளை முடியின் அங்கீகாரத்துக்காகத் தடுத்துவைக்கும் அதிகாரமும் அவர்க்கு இருந்தது. இனி, உத்தியோக உறுப்பினரால் மட்டுமே ஏற்கப்பட்ட சில விதிப்புகளைத் தாமே சான்றுபடுத்திச் செயற்படுத்தும் அதிகாரமும் அவர்க்கு இருந்தது. அன்றியும், சட்டவாக்கக் கழகத்தின் விவாதங்களை இடைநிறுத்தவும் அக்கழகத்தைக் குலைக்கவும் ஆளுநர்க்கு அதிகாரம் இருந்தது. வரிகள் பற்றியோ நிதி சம்பந்தமான விடயங்கள் பற்றியோ சட்டமியற்றுதற்குச் சட்டவாக்கக் கழகத்திற்கு அதிகாரம் இருக்கவில்லை. அவ்வதிகாரங்கள் இன்னமும் ஆளுநரின் கையிலேயே இருந்தன. இனி, நிருவாகக் கழகத்தைக் கூட்டவும் அக்கழகத்திலே விவாதிப்பதற்காகத் தீர்மானங்களைச்

சமர்ப்பிக்கவும் ஆளுநர்க்கு அதிகாரம் இருந்தமையால், அக்கழகம் ஆளுநரின் ஆலோசனைக் கழகம் போலக் காணப்பட்டது. எனினும், அக்கழகத்திலே உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் சிலர் இடம்பெற்றமை முக்கியமான ஒரு முன்னேற்றமாகக் கருதத்தக்கது.

1923 ஆம் ஆண்டு யாப்பின்படி, ஆள்புல வாரியான பிரதிநிதித்துவமுறை விரிவாக்கப்பட்டது. என்றாலும், வருமானத்தையும் கல்வியறிவையும் தகுதிகளாகக் கொண்டு குறுகிய அடிப்படையிலேயே வாக்குரிமை வழங்கப்பட்டதால், இலங்கை மக்களிற் சிறுபலார்க்கேயுரிய ஒரு சிறப்புரிமைபோல அது காணப்பட்டது. இருபத்தொரு (21) வயதுக்கு மேற்பட்டவராய், சிங்களம் அல்லது தமிழோடு ஆங்கிலமும் பேசத் தெரிந்தவராய், குறித்த அளவு சொத்தையோ வருமானத்தையோ உடையவரான ஆண்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. வாக்குரிமை பெறுதற்கு ஒருவர் பிற சில தகைமைகளோடு, 600 ரூபாவுக்குக் குறையாத ஆண்டு வருமானம் உடையவராக இருத்தல் வேண்டும், அல்லது 1800 ரூபா மொத்தப் பெறுமானமுள்ள சொத்து உடையவராக இருத்தல் வேண்டும்; அல்லது 400 ரூபாவுக்கு மேற்பட்ட ஆண்டு வாடகை செலுத்தும் நகர மனையிற் குடியிருப்பவராக இருத்தல் வேண்டும்; அல்லது 200 ரூபாவுக்கு மேற்பட்ட ஆண்டு வாடகை செலுத்துங் கிராம மனையிற் குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். இனி, 1924 இல் இலங்கையின் குடித்தொகை 44,98,605 ஆக இருந்தது. அதில் 11,80,000 பேரே 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள். இவரில் வாக்குரிமை பெறுதற்கு அவசியமான தகைமை பெற்றோர் 2,04,997 பேரே. அதாவது, அக்காலக் குடித்தொகையில் 4 சதவீதத்தோரே தேர்தலில் வாக்களித்தற்கு உரிமை பெற்றிருந்தனர். இவ்வாற்றால், வாக்குரிமை அக்காலத்தில் மிகவும் குறுகியதாக இருந்தமை புலனாகின்றது. எனினும், 1923 ஆம் ஆண்டு யாப்பின்படி, ஆள்புலவாரிப் பிரதிநிதித்துவம் ஓரளவுக்கு விரிவாக்கப்பட்டமை முக்கியமான ஒரு முன்னேற்றமாகக் கணிக்கத்தக்கது.

ஆயினும், இனவாரிப் பிரதிநிதித்துவம் அதிலே தொடர்ந்து இடம்பெற்றதோடு, அம்முறை உறுதியாக நிலைநாட்டப்பட்டது மல்லாமல், விருத்தியுஞ் செய்யப்பட்டமை, பிற்போக்கான ஓர் அமிசம் என்றே கொள்ளத்தக்கது. சட்டவாக்கக் கழகத்திலே, இனவாரியாகத் தெரிவு செய்யப்பட்ட 12 உறுப்பினர் இடம்பெற்றிருந்தனர். ஆளுநர் மன்னிங்கின் ஒத்துழைப்போடும் சம்மதத்தோடும் செய்யப்பட்ட இந்த இனவாரிமுறையானது பிற்காலத்திலே தேசிய இயக்கத்தின் வளர்ச்சியிலும் யாப்புச் சீர்

திருத்தக் கிளர்ச்சியிலும் கணிசமான செல்வாக்குச் செலுத்துவ தாயிற்று.

இந்த 1923 ஆம் ஆண்டு யாப்பு முறையானது இலங்கைத் தேசிய மாசபைக்குத் திருத்தியளிக்கவில்லை. ஏ. ஈ. குணசிங்கா என்பவரை உள்ளிட்ட தீவிரவாதக் கோட்டி அதனை ஏற்றுக் கொள்ளலாகாது என வற்புறுத்திற்று. ஆயின், இலங்கைத் தேசிய மாசபையில் இடம்பெற்றிருந்த பழைமைவாதக் கோட்டியோ அதற்கு மாருன கருத்தைக் கொண்டிருந்தது. அந்த யாப்பு முறைமையை ஏற்க மறுத்தால், இலங்கையிலே தீவிர வாதக் கருத்துக்கள் பரவுதற்கு வாய்ப்பு உண்டாகும்; சிறுபான் மைச் சமூகத்தோர் தமது எதிர்காலம் பற்றி அச்சங்கொள் வதற்கு ஏது உண்டாகும் என்று அக்கோட்டி கருதிற்று. எனவே, தேசியமாசபையிற் பலம் பெற்றிருந்த அக்கோட்டி அந்த யாப்பை ஏற்கத் தீர்மானித்ததோடு, அவசியமான சீர்திருத்தங்களைப் பெறும் பொருட்டு மாசபையின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு தூதுக் கோட்டியைப் பிரித்தானியக் குடியேற்றநாட்டு அலுவல கத்துக்கு அனுப்பவும் தீர்மானித்தது. அத்தூதுக்கோட்டி பிரித் தனில் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பயனுக, சட்டவாக்கக் கழகத்திலே, உத்தியோகச்சார்பற்ற உறுப்பினர் மேலும் இரு வருக்கு இடமளித்தற்குக் குடியேற்றநாட்டுச் செயலாளர் சம்மதித் தார். அன்றியும், இந்தியத் தமிழருக்குரிய பிரதிநிதிகளை நிய மனஞ் செய்தலின்றி, தேர்தல்மூலந் தெரிவு செய்தற்கும் அவர் உடன்பட்டார். அக்காலத்திலே பிரித்தானியக் குடியேற்ற நாட் டுச் செயலாளராக இருந்த டெவன்ஷயர் இப்புதிய யாப்புமுறை செயற்படுத்தப்பட்டு நாலு அல்லது ஐந்து வருடங்கழிந்த பின் னரே, மேற்கொண்டு புதிய சீர்திருத்தங்கள் செய்வது பற்றிச் சிந்திக்கலாமென எடுத்துக் கூறினுர்.

1923 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாப்புச் சீர்திருத்த இயக்கம் பற்றி இலங்கைத் தலைவர்களிடையே கருத்து வேற்றுமை மிகுத் துக் காணப்பட்டது. ஆளுநர் மன்னிங்கை வரவேற்பதற்காக 1923 யூனிலே தமிழ்த்தலைவர்கள் சேர்ந்து யாழ்ப்பாணத்திலே ஒரு கூட்டம் நடத்தினுர்கள். அக்கூட்டத்திலே பேசிய மன் னிங்கு தமிழரின் கோரிக்கைகளை வழங்குவது சாத்தியமானது என்றும், மேற்கு மாகாணத்திலே தமிழருக்கு ஒரு தொகுதி வேண்டும் என்ற கிளர்ச்சி நியாயமானதே என்றும் கூறினுர். இந்த அறிக்கையாலே தூண்டப்பட்டு, சட்டவாக்கக் கழகத்திலே சமபிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கைக்காகத் தமிழ்த் தலைவர்கள் 1923 ஆம் ஆண்டு முதலாவதாகக் கிளர்ச்சி செய்யத் தலைப்பட்டார்கள். இனி, கண்டிச் சிங்களத் தலைவர்களோ தாழ் நாட்டுச் சிங்கள் மக்கள் அரசியற்றுறையிலே வகித்துவந்த ஆதிக்

கத்துக்கெதிராக 1923 ஆம் ஆண்டு தொடங்கிக் கிளர்ச்சிசெய்ய முற்பட்டார்கள். கண்டி மக்கள் தனிப்பட்ட ஓர் இனமாவர் என்றவாறான கருத்திலே அவர்கள் கூடிய கவனஞ் செலுத்தினூர்கள். 1924 இல் நடந்த தேர்தலில், கண்டியர் மூவரே சட்டவாக்கக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். எனவே, இலங்கைத் தேசிய மாசபையிற் சேர்ந்திருந்த கண்டிச் சிங்களத் தலைவர்கள் — ஏ. ஈ. மொலமுரே, ரி. பீ. கொப்பேக்கடுவா, ஜீ. பீ. இரத்நாயக்கா போன்ருேர் — அம்மாசபையிலிருந்து விலகி 1925 இற் கண்டித் தேசியச் சங்கத்தை நிறுவிக்கொண்டார்கள். தாழ்நாட்டுச் சிங்களவரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதே அச்சங்கத்தின் தலையாய நோக்கம். ஒரு கூட்டாட்சி அமைப்பிலே கண்டி மாகாணத்துக்குச் சுயவாட்சி அளிக்கப்படல்வேண்டும் என்ற கோரிக்கைக்காக அவர்கள் அக்காலந் தொடங்கிக் கிளர்ச்சி செய்து வந்தார்கள்.

1925 ஆம், 1926 ஆம் ஆண்டு வரையில், தாழ்நாட்டுச் சிங்களவரே இலங்கைத் தேசிய மாசபையில் முதன்மை பெற்றிருந்தார்கள். அவர்களிடையும் இரு பிரதான கன்னைகள் இருந்தன. ஏ. ஈ. குணசிங்காவின் தலைமையில் இயங்கிய தீவிரவாதக் கோட்டியானது தேசிய மாசபையிலிருந்த பழைமைவாதத் தலைவர்களை வன்மையாகக் கண்டித்து வந்தது. பழைமைவாதக் கோட்டியோ ஏ. ஈ. குணசிங்காவும் விக்டர் கொரியாவும் போன்றவர்களைப் பொறுப்புணர்ச்சியற்ற தீவிரவாதிகள் என்று கண்டித்ததோடு, குணசிங்கா நடாத்திய வேலைநிறுத்தங்கள் போன்ற செயல்களையும் நிராகரித்தது. எனினும், குணசிங்கா அவர்கள் தலைமையில் உருவாகி இயங்கிய தொழிற்சங்க இயக்கத்தின் செல்வாக்குக் காரணமாகவே, ஏழை விவசாயிகளுக்கு இன்னல் விளைத்த தலைவரியானது 1922 இல் ஒழிக்கப்பட்டது. 1923 இல் வேலை நிறுத்தங்களை வெற்றிகரமாக நடத்திய குணசிங்கா இலங்கைத் தொழிலாளர் ஒன்றியத்தை ஆரம்பித்தார். இந்நாட்டிலே தற்காலத் தொழிற்சங்க இயக்கத்துக்குத் தந்தையெனக் கருதத்தக்கவர் குணசிங்காவே என்பதிற் சந்தேகமில்லை. குணசிங்காவின் தலைமையில் இயங்கிய தாபனத்தின் நோக்கம், பொதுவாக்குரிமை பெற்று, அதன்வழி தொழிலாளரின் பலத்தைத் திரட்டி வேண்டிய சமூக பொருளாதாரச் சீர்திருத்தங்களைப் பெற்றுக் கொள்ளுதலேயாம். இவ்வாருக இலங்கைத் தேசிய மாசபையின் பழைமைவாதத் தலைவர்கள் சென்ற வழியும், குணசிங்காவின் கோட்டி சென்ற வழியும் வெவ்வேருகப் பிரிந்தன. ஆயினும், அரசியற் சீர்திருத்தக் கிளர்ச்சியிலும் இலங்கைத் தேசிய இயக்கத்திலும் இக்கோட்டியார் ஆற்றியதொண்டு போற்றுதற்குரியதே.

யாப்புமுறையிலே செய்யவேண்டிய சீர்திருத்தங்கள்பற்றிக் கருத்துவேற்றுமை கடுமையாகி வந்தபோதிலும், 1925 ஆம் ஆண்டு தொடங்கிப் பல்வேறு தீர்மானங்கள் முன்னிடப்பட்டன. இலங்கைத் தேசிய மாசபையில் முதன்மை பெற்றிருந்த பழைமை வாதக் கோட்டியானது பிரித்தானியப் பேரரசுக்குள்ளே இலங்கைக்கு ஆணிலப் பதம் (டொமினியன் பதம்) அளிக்கவேண்டும் எனக் கோரியது. ஆயின் தீவிரவாதக் கோட்டியோ சுயவாட்சிக் கோரிக்கையை வற்புறுத்திற்று. இனி இலங்கைத் தமிழர், பறங்கியர், ஐரோப்பியர் போன்ற சிறுபான்மையினங்களின் தலைவர்கள் சமப்பிரதிநிதித்துவத்தை அளிக்கவல்ல ஓர் ஆட்சி முறையை வேண்டி நின்றார்கள். மற்று, இத்தீவின் 9 மாகாணங்களையும் அடிப்படையாகக்கொண்டமைந்த கூட்டாட்சிமுறையைக் கோரிநின்ற ஒரு கோட்டியும் உருவாகியிருந்தது. கண்டித் தேசியச் சங்கமோ மூன்று மாகாண அரசாங்கங்களை நிறுவுவதற்கான ஒரு யாப்புமுறை வேண்டும் என்றும், அம்முறையிலே கண்டிப் பிரதேசத்துக்குச் சுயவாட்சி அளிக்கப்படவேண்டும் என்றும் கோரியது.

இவ்வாறாக இலங்கை நாட்டின் எதிர்கால அரசாங்கத்தின் அமைப்புமுறைபற்றி இலங்கைத் தலைவர்களிடையே கருத்தொருமிப்புக் காணப்படாதபோதிலும், 1923 ஆம் ஆண்டு யாப்புமுறையிற் சீர்திருத்தங்கள் வேண்டும் என்பதில் உடன்பாடு காணப்பட்டது. அக்காலத்தில் (1925—27) ஆளுநராயிருந்த ஹியூ கிளிபட் என்பவரும் அந்த யாப்பு முறை வாய்ப்பற்றது என்பதை உணர்ந்தவராகி, அதனைச் சீர்திருத்தியமைத்தல் வேண்டும் என்று பிரித்தானியக் குடியேற்றநாட்டுச் செயலாளருக்கு விதந்துரைத்தார். இந்த அரசியற் பின்னணியிலேதான், டொனமூர் ஆணைக்குழு 1927 இல் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. 1923 ஆம் ஆண்டு யாப்பு முறை செயற்பட்டவாற்றை ஆராய்ந்து, அதிலும் பொருத்தமான ஒரு யாப்பினை நிறுவுவதற்கு வேண்டிய விதந்துரைகளை எடுத்துரைப்பதே அந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதன் நோக்கம்.

டொனமூர்ப் பிரபு அந்த ஆணைக்குழுவின் தலைவராயிருப்ப, சேர் ஜியோபிரி பட்லர், மதியூ நேதன், டிரமண்ட் ஷீல்ஸ் என்போர் மற்றைய உறுப்பினராக நியமிக்கப்பட்டனர். இவருள், டொனமூரும் பட்லரும் பழைமைவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள்; நேதனே ஒரு தாராண்மைவாதி; ஷீல்ஸ் என்பார் பேபியவாதி (அதாவது, சமவுடைமைக் கருத்துக்களைக் கொண்டவர்); அன்றியும் இவர் பிரித்தானியத் தொழிற்கட்சியின் உறுப்பினராகவும் இருந்தார். இலங்கைக்கு வந்த இக்குழு, யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றிச் சங்கங்களும் சமுதாயங்களும் அனுப்பிய

பல்வேறு மனுக்களையும் விஞ்ஞாபனங்களையும் ஆராய்ந்தது; சாட்சியங்களைப் பரிசீலனை செய்தது; இறுதியாக ஓர் அறிக்கையைத் தயாரித்தது. அந்த அறிக்கையிலே அடங்கிய விதந்துரைகள், தாராண்மைக் கருத்துக்களின் செல்வாக்கைத் தெளிவாகப் பிரதிபலிப்பன. இந்த விதந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட புதிய யாப்புமுறை 1931 ஆம் ஆண்டிலே செயற்படுத்தப்பட்டது. இலங்கையிலே யாப்புச் சீர்திருத்தத்தின் வரலாற்றில், இந்த டொனமூர் யாப்புமுறை ஒரு பெருந் திருப்பத்தைக் குறிப்பதாகக் கருதத்தக்கது. இந்த அறிக்கை மூலமாகச் செயற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் இந்நாட்டின் யாப்பு வளர்ச்சியில் மாத்திரமன்றி, பொதுவான தேசிய இயக்கத்திலும் தீர்க்கமான விளைவுகளைக் காலப்போக்கிலே பயந்தன. ஆதலின், டொனமூர் ஆணைக்குழுவின் பிரதான விதந்துரைகள் பற்றி நாம் இப்போது கவனஞ் செலுத்துவோம்.

டொனமூர் யாப்புச் செயற்படுத்தப்பட்ட வரலாறு பற்றியும் அக்கால் எழுந்த பிரச்சினைகள் பற்றியும் பின்னர் ஆராயப்படும். சிறப்பான சில விதந்துரைகளை ஆரம்பத்திலேயே ஆராய்வது பொருத்தமாகும். அக்குழு விதந்துரைத்த பொது வாக்குரிமை முதலிற் கவனிக்கத்தக்கது. 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும், 31 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டுமென ஆணைக்குழு விதந்துரைத்தது. முன்னர்க் குறிப்பிட்டவாறு, இந்நாட்டின் குடித்தொகையில் மிகச் சிறிய தொகையினரே — சொத்து, வருமானம், கல்வி ஆகியன சம்பந்தப்பட்ட உயர்தகைமை படைத்த 4 சதவீதத்தினரே — அக்காலமளவில் வாக்குரிமை பெற்றிருந்தனர். நாட்டின் குடித்தொகையிற் பெரும்பான்மையோராக இருந்த விவசாயத் தொழிலாளர் வகுப்பார்க்கு வாக்குரிமை மறுக்கும் வகையிலே கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தல் நியாயமற்ற பாதகமான செயலேயாம் என்பதை ஆணைக்குழுவினர் உணர்ந்தனர். இலங்கைச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்க்கும் அரசியலிற் பங்குபற்றும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்; அரசியல்பற்றிய அறிவும் அனுபவமும் அவர்களுக்குப் புகட்டப்படவேண்டும் என்பதே அவர்களின் கருத்தாயிற்று. முன்பு இருந்த முறைப்படி இந்நாட்டின் நிருவாக அதிகாரம் அனைத்தும் சிறுபாலான ஒரு பிரிவினர்க்கே வழங்கப்பட்டிருந்ததால், அரசியலிற் பங்குபற்றும் வாய்ப்புப் பெரும்பாலார்க்கு இருக்கவில்லை. ஆதலின், அம்முறை தகாதது என்றும், இந்நாட்டுச் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் மேலும் கடுமையாதற்கு முன்னர், தக்க பரிகாரங்களை நாடிச் செய்தல்வேண்டும் என்றும் டொனமூர் ஆணையாளர்கள் உணர்ந்தார்கள். டொனமூர் ஆணையாளர்கள் இத்தகைய தைரிய

மான முடிவு எடுத்தற்கு, இவைமாத்திரம் காரணமாக இருக்க வில்லே. அக்காலத்திலே பிரித்தனில் நிலவிய தாராண்மைக் கருத் துக்களின் செல்வாக்கும் ஒரு காரணம் என்பது உண்மை. பொது வாக்குரிமை பற்றித் தீவிரமான இம்முடிபெடுத்த இதே ஆண் டிலேதான் (1928 இல்) பெரிய பிரித்தனிலும் பொது வாக்குரிமை செவ்வையாகச் செயற்படுத்தப்பட்டது. அக்காலத்தின் கோலத் தைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, பொதுவாக்குரிமை வழங்கப்படுதல் வேண்டும் என்பதாகிய இம்முடிவு, உண்மையில் ஒரு தைரியமான முடிவே என்பதில் ஐயமில்லே.

பொது வாக்குரிமை வழங்குவதுபற்றி அக்காலத்து ஈழத் தலே வர்கள் யாது கருதினுர்கள் என்பதைச் சற்று நோக்குவது இங்குப் பொருத்தமாகும். இலங்கைத் தேசிய மாசபையும் பற்பல தாபனங்களும் இத்தீர்மானத்தை எதிர்த்தன. டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலேயிற் சாட்சியமளித்த இலங்கைத் தேசிய மாசபையின் பிரதிநிதிகள், நிபந்தனேயற்ற பொதுசன வாக்குரி மையைக் கல்வியறிவில்லாத பாமர மக்களுக்கு வழங்கினுல், அவர்கள் பொறுப்புணர்ச்சியில்லா வகையில் அதனேப் பயன்படுத் தலாம் என்றும், ஆதலின், அத்தகைய வாக்குரிமை அளிப்பதில் ஆபத்து உண்டு என்றும் எடுத்துக்கூறினுர்கள். 50 ரூபாவுக்குக் குறையாத மாத வருமானம் படைத்தவர்க்கே வாக்குரிமை வழங்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்வதால், தகுதியுடையாரே வாக்குரிமை பெறும் வாய்ப்புப் பெறுவர் என்றும் அன்னுர் வற் புறுத்தினுர்கள். பின்னர், 25 வயதுக்கு மேற்பட்டவரும், தக்க சொத்துரிமைத் தகைமையும் கல்வித் தகைமையும் உடையவரு மான பெண்பாலார்க்கு வாக்குரிமை வழங்கப்படுவதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இனி, வாக்குரிமையை வரையறையில்லாது வழங்கினுல், இந்நாடு இதுகாறும் அடைந்த அரசியல் முன்னேற் றம் தடைப்படும் என்றும் அவர்கள் எடுத்துரைத்தார்கள். பொதுவாக்குரிமை பற்றி அவர்களும் மலேநாட்டுத் தலேவர்களும் அச்சங்கொள்வதற்கு இன்னெரு காரணமும் இருந்தது: பொது வாக்குரிமை வழங்கப்பட்டால், இந்தியத் தோட்டத் தொழி லாளரும் அவர்தம் முதலாளிமாரும் ஆதிக்கம்பெற்றுவிடுவார்கள் என்பதே அக்காரணம். இலங்கைத் தேசிய மாசபை மாத்திர மன்றி, சிறுபான்மையினங்களின் தலேவர்களும் பொது வாக் குரிமை வழங்கப்படுவதை எதிர்த்தார்கள். தமிழ் மக்களின் பிரதி நிதியாக விளங்கிய சேர். பொன்னம்பலம் இராமநாதன், பொது வாக்குரிமை வழங்குந் தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தார். பொது வாக்குரிமை வழங்கப்பட்டால், சிங்கள மக்கள் ஆதிக்கம் பெறுவார்கள் என்றும், அதனுல், தமிழ் மக்களின் நலவுரிமைகள் பங்கப்படும் என்றும் தமிழ்த் தலேவர்கள் அஞ்சினுர்கள். முஸ்

லீம்களின் பிரதிநிதியாக விளங்கிய ரீ. பீ. ஜயாவும் அத்தீர்மானத்தை எதிர்த்தார். இவ்வாருக, இலங்கைத் தேசிய மாசபையும், சிறுபான்மையினங்களின் தலைவர்களும் பொது வாக்குரிமைக்கு மாருகவிருந்தனர் என்பது தேற்றம்.

மேற்கூறிய தலைவர்களின் நெறியினின்றும் வேறுபட்ட நெறியில் ஆதியிலிருந்தே ஊன்றி நின்றவர் திரு. ஏ. ஈ. குணசிங்கா அவர்கள். அவர் பொது வாக்குரிமைக்குச் சார்பாக உறுதியாக நின்ருர். டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையிற் சாட்சியமளித்த அக்காலத் தலைவர்களில், பொது வாக்குரிமைக்குச் சார்பாக ஆதரவளித்தவர் அவர் ஒருவரே என்பது மிகைபடு கூற்ருகாது. பொது வாக்குரிமை வழங்குவது பற்றி எழுந்த பிரச்சினைகளிலேயே நாம் இதுகாறும் கனவஞ் செலுத்தினேம். அடுத்து, வாக்குரிமையோடு சம்பந்தப்பட்ட பிறிதொரு தீர்மானம்பற்றி ஆராய்வோம். இனவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்து அதற்குப் பதிலாக ஆள்புலவாரியான பிரதிநிதித்துவத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்பது அந்தத் தீர்மானம். இனவாரிப் பிரதிநிதித்துவம், சுயநலத்துக்கு வித்து; மக்களிடையே சமுசயமும் பகைமையும் வளர்தற்கு ஒரு கருவி; நாட்டிலே தேசிய உணர்ச்சியும் ஒற்றுமையுணர்ச்சியும் உருவாகி வளர்தற்கு ஒரு பெருந்தடை — என்றெல்லாம் டொனமூர் ஆணையாளர்கள் கருதினுர்கள். அரசின் நல்வளர்ச்சியை உடனிருந்து கொல்லும் வியாதி அது என்று அவர்கள் நம்பினுர்கள். ஆகவே, இந்நாட்டின் பல்வேறு சமுதாயங்களிடேயே ஒற்றுமையை வளர்த்துப் பொதுவான ஒரு தேசிய உணர்ச்சியை உருவாக்கி உரம் படுத்துவதற்கும், அரசியற் கட்சிகளை ஆதாரமாகக் கொண்ட ஆட்சி முறை தோன்றி வளர்தற்கும், பொது வாக்குரிமையும் ஆள்புலவாரியான பிரதிநிதித்துவமும் ஒருங்கிணைந்த ஒருமுறையே தக்கதாம் என டொனமூர் ஆணையாளர்கள் முடிபு கொண்டார்கள். அதன்படி, 70,000—80,000 வரையான வாக்காளர்களுக்கு ஒரு தேர்வகம் என்ற அடிப்படையிலே தேர்வகங்களை வரையறுத்துப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் வேண்டும் என்று அவர்கள் விதந்துரைத்தார்கள்.

இனி, இனவாரிப் பிரதிநிதித்துவ முறையோடு சம்பந்தப்பட்ட சிறுபான்மையினங்களின் பிரச்சினைபற்றியும் ஆணையாளர்கள் கவனஞ் செலுத்தினுர்கள். தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், கண்டிச் சிங்களவர், தாழ்நாட்டுச் சிங்களவர் ஆகிய பல்வேறு பிரிவினரிடையே சமூக வேறுபாடுகளும் பண்பாட்டு வேறுபாடுகளும் உண்டே என்பதை ஆணையாளர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் தமது விதந்துரைகளைச் செய்தபோது, இத்தகைய வேறுபாடுகள் உண்டே எனும் உண்மையை மறந்து

விடவில்லை என்றும் எடுத்துக் கூறினர்கள். பெரும்பான்மையினம் ஆட்சியதிகாரத்தை வகிக்குங்கால், அரசாங்க சேவைக்கு நியமனங்கள் செய்யப்படும்போது, சிறுபான்மையினத்தவர்க்கு அநீதி இழைக்கப்படலாம் — இனபேதம் பாராட்டப்படலாம் — என்ற அச்சத்தைப் போக்குதற்காக, சிறப்பான சில அதிகாரங்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவொன்று நிறுவப்படவேண்டுமென டொனமூர் ஆணையாளர்கள் விதித்தார்கள். அந்த ஆணைக்குழு அரசுக் கழகத்தின் செல்வாக்கிற்கு உட்படாது, அரசாங்க சேவையாளரின் நியமனம், பதவியுயர்ச்சி, சம்பளம் முதலிய விடயங்களைப் பொறுப்பேற்று நிருவகிக்கும். இனி, சிறுபான்மை இனத்தவர்கள் தமது கருத்துக்களை வெளியிடுதற்குத் தடையாக இருக்கத்தக்க சட்டமுறிகளுக்கும், பெரும்பான்மை இனத்தவர்க்குச் சிறப்புரிமைகளை வழங்கத்தக்க சட்டமுறிகளுக்கும் ஆளுநர் தமது இசைவை அளித்தலாகாது எனவும் விதிக்கப்பட்டது.

டொனமூர் ஆணைக்குழு விதந்துரைத்த யாப்பு முறையிலே, நிருவாகக் குழுமுறை என்பது குறிப்பிடத்தக்க ஓர் அமிசமாகக் கொள்ளத்தக்கது. அதன்படி, அரசுக் கழகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் யாவரும் 7 குழுக்களாகப் பிரிந்து நிருவாகக் கடமைகளை ஆற்றுவர். இந்த 7 குழுக்களும் முறையே விவசாயம், உண்ணாட்டு அலுவல்கள், உள்ளூர் ஆட்சி, சுகாதாரம், கல்வி, அரசாங்கக் கூட்டுவேலை, போக்குவரத்து ஆகிய துறைகளைத் தனித்தனி நிருவகிக்கும். ஒவ்வொரு குழுவின் தலைவரும் அவ்வக் குழுவின் உறுப்பினர்களால் வாக்குகள்மூலமாகத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் தலைவர்கள் 7 பேரும், அமைச்சர்களாகக் கடமையாற்றுவர். இனி, முக்கியமான ஆட்சித் துறைகளாகிய (1) தற்காப்பும் வெளிநாட்டு அலுவல்களும் (2) நிதியும் (3) சட்ட அலுவல்களும், பிரித்தானிய அதிகாரிகள் மூவரின் (3) கட்டுப்பாட்டில் இயங்கும். அரச அலுவலாளர் எனப்படும் இம்மூவரும் முறையே பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர் என அழைக்கப்பட்டனர்.

இந்த நிருவாகக் குழு முறையானது பிரித்தானியப் பேரரசில் எந்தக் குடியேற்ற நாட்டிலும் அந்நாள் வரை பரீட்சிக்கப்படாத ஒரு புதிய முயற்சி. அது இலண்டன் நகரத்து உள்ளூராட்சியையும், அக்காலத்தில் இயங்கி வந்த நாட்டுக் கூட்டவையின் நிருவாகக் குழு முறையையும் தழுவி அமைக்கப்பட்டது எனலாம். இந்த நிருவாகக் குழு முறையே இலங்கைக்கு அக்காலத்தில் உகந்தது என டொனமூர் ஆணைக்குழு கருதிற்று. அவ்வாறு கருதியதற்கு (1) பிரித்தனில் இயங்கி வருகின்ற பூரணமான

அமைச்சவை முறைக்கு (கபினெற்று முறைக்கு) அவசியமான அரசியற் கட்சிமுறை — கட்டுக்கோப்பாயமைந்த அரசியற் கட்சிகள் — இந்நாட்டில் அப்போது இல்லாமையால், அத்தகைய அமைச்சவை முறையை இங்குப் புகுத்துவது பொருந்தாது என டொனமூர் ஆணைக்குழு கருதியது ஒரு காரணம். (2) அதே வேளையில், இந்நாட்டிலே சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் மேன்மேலும் கடுமையாவதற்கு முன்னமே அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்நாட்டு மக்களின் பிரதிநிதிகளுக்குக் கூடிய வாய்ப்பும் செல்வாக்கும் அளிக்கப்படுதல் வேண்டும் என அக்குழு கருதியது மற்றைக் காரணம். இனி, பிரித்தானிய அமைச்சவை முறையில், அமைச்சவையின் சர்வாதிகாரப் போக்கின் பயனாக, தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரின் சுதந்திரம் மேன்மேலும் சுருங்கிவிட்டது எனக் கருதிய டொனமூர் ஆணைக்குழு, அந்தப் பிரித்தானிய முறையை அப்படியே கண்மூடித்தனமாகப் பின்பற்றவிரும்பாது, அம்முறையில் உள்ள நல்லமிசங்களை இலங்கைச் சமுதாயத்துக்கு ஏற்றவாறு தழுவிக்கொள்ள விரும்பியது.

இனி, சட்டத்துறைக்கும் நிருவாகத்துறைக்குமிடையே வலிய ஓர் இணைப்பை உருவாக்குவதும், இந்த நிருவாகக் குழு முறையை நிறுவியதற்கு மற்றொரு காரணமாகும். முன்னைய மன்னிங்கு யாப்பு முறையிலே சட்டத்துறையும் நிருவாகத் துறையும் தக்க இணைப்பின்றிப் பிரிக்கப்பட்டிருந்தமை, குறிப்பிடத்தக்க ஒரு குறைபாடாகக் கருதப்பட்டது. அக்காலத்தில், பெரும்பான்மையோராக இருந்த உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் பொறுப்புணர்ச்சியின்றி நடந்து கொண்டனர் என ஆளுநர் முறைப்பட்ட சந்தர்ப்பங்கள் பல இருந்தன. இத்தகைய இசைவுபிசகான நிலைமையை நிருவாகக் குழுமுறை சீர்படுத்தி, நிருவாகத்துறையையும் சட்டத்துறையையும் இணைத்து வைக்கும் எனக் கருதினர் டொனமூர் ஆணையாளர். டொனமூர் யாப்பு முறைப்படி, அரசுக் கழகமே சட்டவாக்கமன்றம். அதே அரசுக் கழகத்தின் உறுப்பினரே 7 நிருவாகக் குழுக்களிலும் இடம் பெற்றிருந்தனர்; ஆகவே, மக்களின் பிரதிநிதிகளுக்குச் சட்டத்துறையிலும் பங்குபற்றும் வாய்ப்பு இருந்தது; அவ்வாறே, நிருவாகத்துறையிலும் பங்கு பற்றும் வாய்ப்பு இருந்தது. இவ்வாறாகச் சட்டத்துறையும் நிருவாகத்துறையும் இயைபுபட்டு இயங்குதற்கு வாய்ப்பு இருந்ததுமன்றி, பொது நிருவாகத்திற் பங்கு கொள்ளுதற்கு வேண்டிய வாய்ப்பும் இலங்கை நாட்டு அரசியல்வாதிகளுக்கு அளிக்கப்பட்டது. இப்படி அவர்கள் பெறத்தக்க பயிற்சி — அதாவது ஆட்சிக் கலையிலே அவர்கள் பெறும் பயிற்சி — எதிர்காலத்திலே பொறுப்புடைய சுயவாட்சி கிடைக்கும் போதும் அவர்களுக்குச் சாலவும் பயன்படும் என்பது டொனமூர் ஆணைக்குழுவின் கருத்து.

எஸினும், ஆட்சியதிகாரத்திலும் ஆட்சிப் பொறுப்பிலும், ஒரு பாகமே இலங்கை நாட்டுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. பூரணமான ஆட்சியதிகாரமும் ஆட்சிப் பொறுப்பும் வகிப்பதற்கு வேண்டிய பக்குவத்தை, அவர்கள் இன்னும் எய்தவில்லை என்றே ஆணைக்குழு கருதிற்று. சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்த சில பொறுப்புகள் பிரித்தானிய அரசிடமே தொடர்ந்து இருத்தல் அவசியமென ஆணைக்குழு தீர்மானித்தது; *(1)* நாட்டின் பாது காப்பும் வெளிநாட்டு அலுவல்களும் *(2)* நிதித்துறை *(3)* சட்ட அலுவல்கள் ஆகிய இம்மூன்று துறைகளும் இவ்வாறு பிரித்தானிய அரசின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்திருந்தன. இந்த மூன்று துறைகளுக்கும் பொறுப்பாயிருக்கவேண்டிய பிரித்தானிய அதி காரிகள் மூவரும் ஆளுநர்க்கே பொறுப்புடையவராக இருப்பர். அவர்களைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் அரசுக் கழகத் துக்கு வழங்கப்படவில்லை. இனி, இலங்கை அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கும் உரிமையும் அம்மூவர்க்கும் இருத்தல் வேண்டுமென ஆணைக்குழு எடுத்துரைத்தது. அன்றியும், ஆளு நரின் விசேட அதிகாரங்களும் ஓரளவுக்குத் தொடர்ந்திருத்தல் அவசியமென்றே அந்த ஆணைக்குழு கூறிற்று.

*(1)* அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம், *(2)* அரசுக் கழகத்திலே சட்டமுறிகளைச் சமர்ப்பிக்கும் உரிமை, *(3)* அரசுக் கழகம் ஏற்காது தள்ளிய சட்ட முறியையுமே சட்டமாக்கும் அதிகாரம், *(4)* அவசர காலத்திலே எந்த ஒரு திணைக்களத்தையும் சொந்தக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் அதிகாரம், *(5)* குடியேற்ற நாட்டுச் செயலாளரின் சம்மதத்தோடு அரசாங்க சேவைக்கு உத்தியோகத்தரை நியமிக்கும் அதிகாரம் ஆகிய அதி காரங்கள் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டன. சிறுபான்மையினத் தோரின் நலவுரிமைகளுக்குப் பங்கம் விளைப்பதைத் தடுக்கும் அதிகாரமும், மற்றுப் பெரும்பான்மையினத்தோர்க்குச் சிறப் புரிமைகள் வழங்கப்படுவதைத் தடுக்கும் அதிகாரமும் ஆளுநர்க்கு இருந்தன. இனி, அரசுக் கழகத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமுறியை, பிரித்தானிய முடியரசின் இசைவைப் பெறும் வரையும் 6 மாத காலத்துக்குச் செயற்படாமே தடுத்துவைக்கும் அதிகாரமும், அத்தகைய ஒரு சட்டமுறியை மீண்டும் ஆராய் வதற்காக அரசுக் கழகத்திற்குத் திருப்பியனுப்பும் அதிகாரமும், அத்தகைய சட்டமுறியை 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றி வைக்குமாறு அரசுக் கழகத்தைப் பணிக்கும் அதி காரமும் ஆளுநர்க்கு இருத்தல்வேண்டுமென டொனமூர் ஆணைக் குழு தீர்மானித்தது.

டொனமூர் ஆணைக்குழுவின் பிரதான விதந்துரைகளை மேலே குறிப்பிட்டோம். ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவேண்டிய —

சமர்ப்பித்த—கோரிக்கைகள்பற்றி இந்நாட்டுத் தலைவர்களிடையே கருத்துவேற்றுமைகள் காணப்பட்டவாறே, ஆணைக்குழுவின் விதந்துரைகள்பற்றியும் அவர்களிடையே கருத்துவேற்றுமைகள் காணப்பட்டன. பொதுவாக்குரிமை பற்றியெழுந்த கருத்து வேற்றுமைகள் பற்றி முன்னமே குறிப்பிடப்பட்டது. யாப்புச் சீர்திருத்தங்களின் பொதுத் தன்மை பற்றியும் இலங்கைத் தலைவர்களிடையே கருத்தொற்றுமை காணப்படவில்லை. பொறுப்புள்ள ஆட்சிமுறை இலங்கைக்கு வழங்கப்படுதல் வேண்டும்; அதுவே அடுத்தபடியாக அமைதல் வேண்டும் என்பது இலங்கைத் தேசிய மாசபையின் பொது முடிவாக இருந்தது. ஈ. டபிள்யூ. பெரேரா, டீ. பீ. ஜயதிலகா, பிரான்சிஸ் டீ சொய்சா போன்ற தலைவர்கள் இக்கருத்தையே கொண்டிருந்தனர். ஆனால், ஜேம்ஸ் பீரிஸ், ஈ. ஜே. சமரவிக்கிரம போன்ற தலைவர்களோ இத்தகைய பொறுப்பாட்சிக்கு வேண்டிய பயிற்சி இந்நாட்டு மக்களுக்கு இன்னும் வாய்க்கவில்லை யாதலால், அத்தகைய பயிற்சியை அளிக்கவல்ல இடைக்கால யாப்பு முறையே பொருத்தமாகும் என்று கருதினர். இனி மலைநாட்டுத் தலைவர்களும் சிறுபான்மையினங்களின் தலைவர்களும் சுயவாட்சிக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. முன்னர்க் குறிப்பிட்டவாறு, ஏ. ஈ. குணசிங்காவின் தலைமையில் இயங்கிய கோட்டி சுயவாட்சியைக் கோரிநின்றது. நாட்டில் இத்தகைய பின்னணி நிலவிய காலத்திலேதான், டொனமூர் யாப்பு முறை இலங்கைக்கு வழங்கப்பட்டது. அதில், குறிப்பிடத்தக்க அரசியல் மாற்றங்களை உருவாக்கவல்ல முக்கியமான பல விதந்துரைகள் அடங்கியிருந்தன என்பது உண்மையே; முந்திய யாப்புமுறைகளோடு ஒப்பிடுமிடத்து இந்தப் புதிய யாப்பு முற்போக்குடையதாய்—முன்னேற்றத்தைக் குறிப்பதாய்—விளங்கிற்று என்பதும் உண்மையே. ஆயினும், இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு அந்த யாப்புப் பொதுவாகத் திருத்தியளிக்கவில்லை என்பது தெளிவே. இலங்கையின் சட்ட மன்றத்திலே டொனமூர் யாப்புச் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதற்குச் சார்பாக 19 வாக்குகளும், மாறாக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன. எனவே, அது பெற்ற பெரும்பான்மை வாக்கு இரண்டே(2) தான். இவ்வழி, அந்த யாப்புப் பற்றி எவ்வளவு தூரம் கருத்துவேற்றுமைகள் நிலவின என்பது புலனாகும்.

10 ஆம் அத்தியாயம்

# தேசிய இயக்கத்தின் வளர்ச்சியும் சுதந்திரம் அடைதலும்

1931 ஆம் ஆண்டிலிருந்து டொனமூர் யாப்பு நடைமுறைக்கு வந்தது. அதன்படி, 61 உறுப்பினரைக் கொண்ட அரசுக் கழகம் தாபிக்கப்பட்டது. 61 உறுப்பினரில் 50 உறுப்பினர் பொது வாக்குரிமைப்படி ஆள்புலவாரியான தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்; 8 உறுப்பினர் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளாக ஆளுநரால் நியமிக்கப்பட்ட நியமன உறுப்பினர்; இந்த 58 பிரதிநிதிகளோடு 3 அரச அலுவலாளர், குடியேற்ற நாட்டுச் செயலாளரின் சம்மதத்தோடு, ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்; இவர்கள் முறையே பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர் என அழைக்கப்பட்டனர். அரசுக் கழகத்தின் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குதற்காக, கழக உறுப்பினருள் ஒருவர் பெரும்பான்மை வாக்கு மூலமாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் சபாநாயகர் எனப்பட்டார். 1931 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த யாப்பின்படி சட்டவாக்கக் கழகம் ஒன்று இருந்தது. அந்தச் சட்டவாக்கக் கழகத்திலும் பார்க்க இப்புதிய அரசுக்கழகம் மக்களின் கருத்தைக் கூடிய அளவுக்குப் பிரதிபலிப்பதாக இருந்தது.

நிருவாகக்கடமைகள், முன்னமே குறிப்பிட்ட நிருவாகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. சபாநாயகரும் அரச அலுவலாளர் மூவருந் தவிர, எஞ்சிய 57 உறுப்பினரும் 7 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இந்த 7 குழுக்களும் நிருவாகக் குழுக்கள் எனப்பட்டன. அவையொவ்வொன்றும், ஒவ்வொரு அமைச்சின் நிருவாகக் கடமைகளுக்குப் பொறுப்பாக இருந்தன. அந்த அமைச்சுகள் (1) உண்ணாட்டு அலுவல்கள், (2) விவசாயமும் காணிகளும், (3) உள்ளூர் ஆட்சி, (4) சுகாதாரம், (5) தொழில், கைத்தொழில், வர்த்தகம், (6) கல்வி, (7) போக்குவரத்து, அரசாங்கக் கட்டுவேலைகள் என 7 வகைப்பட்டன. ஒவ்வொரு நிருவாகக்குழுவும் தனது உறுப்பினரில் ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்தது. அத்தலைவரே அமைச்சர் எனப்பட்டார். ஆகவே, 7 நிருவாகக் குழுக்களும் 7 அமைச்சரைத் தெரிவு செய்தன. நிருவாகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிருவாகக் கடமைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள், இந்த அமைச்சர்

களேயாம். இந்த 7 அமைச்சர்களையும் கொண்ட குழுவே அமைச்சர் சபை எனப்பட்டது. அமைச்சர் சபை என்பது ஒரு குழுவாக இருந்தாலும், தற்காலத்திலே அமைச்சவை எனப்படுகின்ற 'கபினெற்றை' ஒத்ததன்று. முன்னர்க் குறிப்பிடப்பட்ட பிரதம செயலாளர், தமது பதவிவழி, அமைச்சர் சபைக்குத் தலைவர் ஆயினர். எனினும், அமைச்சரில் ஒருவரை உபதலைவராக நியமிக்கும் அதிகாரம் அமைச்சர் சபைக்கு இருந்தது. அரசாங்க நிருவாகத்திலே முக்கியமான மூன்று துறைகள் அரச அலுவலாளர் மூவரிடமும் ஒப்படைக்கப்பட்டன. பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும் பிரதம செயலாளரின் பொறுப்பாக இருக்க, நிதித்துறையானது நிதிச் செயலாளரின் பொறுப்பாயிற்று. இனி, சட்ட அலுவல்களும் அரசுக் கழகப் பொதுத் தேர்தல்கள் சம்பந்தமான விடயங்களும் சட்டச் செயலாளரின் பொறுப்பாக அமைந்தன. இந்த மூவேறு துறைகளிலும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பும் இம்மூன்று செயலாளரினதும் பொறுப்பாயிற்று.

பல்வேறு கடமைகளைச் செய்வதில், கணிசமான அளவு பொறுப்பை நிருவாகக் குழுக்கள் பெற்றிருந்தபோதிலும், முன்னம் குறிப்பிட்டவாறு, முக்கியமான துறைகளான பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும், நிதியும், சட்ட நிருவாகமும் இக்குழுக்களின் கட்டுப்பாட்டிலன்றி, ஆங்கில அரச அலுவலாளரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வாறே, ஆளுநரின் அதிகாரங்களும் தொடர்ந்து பேணப்பட்டன. இந்நாட்டின் நல்லாட்சிக்கு அவரே பொறுப்பாக இருந்தார்; இவ்வகையில் அவர் குடியேற்ற நாட்டு அரசுச் செயலாளருக்கு (அதாவது, பிரித்தானியக் குடியேற்றநாட்டு அமைச்சர்க்கு) நேர்ப் பொறுப்பு உடையவராக இருந்தார். அன்றியும், இந்நாட்டு முப்படைகளுக்கும் அவரே படை முதற்றலைவராக விளங்கினர். இன்னும், அமைச்சர்க்கு ஆலோசனை வழங்குதல், அரசுக் கழகத்திலே வேண்டியபோது சட்டங்களை நிறைவேற்றுதல், அரசுக் கழகத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களைச் செயற்படவிடாது தாமதப்படுத்துதல் ஆகிய முக்கியமான அதிகாரங்களும் ஆளுநர்க்கு இருந்தன.

டொனமூர் யாப்பைச் செயற்படுத்துவதிலே இலங்கைநாட்டு அரசியல் வாதிகளுக்கு இருந்த பொறுப்பு, முந்திய காலங்களிலே அவர்களுக்கு இடப்பட்ட பொறுப்பினின்றும் பெரிதும் வேறுபட்டது. இந்த யாப்பு அவர்களுக்கு ஒரு புதிய பரிசோதனையாகக் காணப்பட்டது. தமக்குப் பரிச்சயமில்லாத புதிய ஒரு பணி தமது பொறுப்பாகி விட்டதாகவே—தொடக்ககாலத்திலேனும்—அவர்கள் கருதியிருப்பர். முந்திய யாப்பு முறைகளில், பொறுப்பான பணிகளோ கடமைகளோ அவர்களுக்கு இருந்ததில்லை.

பெரும்பாலும், கிளர்ச்சி செய்தலும் கண்டனஞ் செய்தலுமே அவர்களுடைய பணியாக இருந்தன எனலாம். ஆயின், இப்போதோ, முதன்முறையாக, கணிசமான அளவு பொறுப்பு அவர்கள் வசமானது. அரசாங்கப் பரிபாலனத்திலே சட்டத்துறையிலும் நிருவாகத்துறையிலும் ஊக்கமாகப் பங்கு கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. குறித்த ஓர் அமைச்சுக்குச் சம்பந்தமான விடயங்கள் யாவும் குறித்த ஒரு நிருவாகக் குழுவிலே விவாதிக்கப்பட்டமையால், உறுப்பினர் தமது கருத்தை எடுத்துக்கூறுதற்கு நல் வாய்ப்பு இருந்தது. ஒவ்வொரு நிருவாகக்குழுவும் ஏழு அல்லது எட்டு உறுப்பினரையே கொண்டிருந்தமையால், எந்த ஒரு பிரச்சினையையும் ஆரத்தீர விவாதித்தல் இயல்வதாயிற்று. சட்ட நிருவாகப் பணிகளிலே இத்துணை வெளிப்படையாகப் பங்குபற்றும் வாய்ப்பு, பாராளுமன்றமுறை நிலவும் இற்றை நாளிலேதானும் ஒரு சாதாரண உறுப்பினர்க்கு உளதோ என்பது சந்தேகமே. இனி டொனமூர் ஆணைக்குழு எதிர்பார்த்தவாறு, இந்த அமைப்புமுறையிலே சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளும் தத்தம் கருத்துக்களை வற்புறுத்துவதற்கு நல்வாய்ப்புப் பெற்றனர். நிருவாகக் குழுக்கள் பெரும்பான்மை வாக்குப்படிதான் தத்தம் தீர்மானங்களை நிறைவேற்றின. நிருவாகக் குழுவின் தீர்மானங்களை அமைச்சர் ஏற்காவிடத்தும், தமக்கு ஏற்பிலாத அத்தீர்மானங்களையும் அரசுக் கழகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கடப்பாடு இருந்தது. அமைச்சர்களுக்கு இருந்த பொறுப்பைக் கவனிக்குமிடத்து, இந்த முறைமை அத்துணை தகவானதாக இருக்காவிடினும், சாதாரண உறுப்பினரின் உரிமையை அது பாதுகாப்பதாக இருந்தது.

இந்த நிருவாகக் குழு முறையிலே இன்னொரு நற்பயனும் காணப்பட்டது. பொதுவான நிருவாகப் பணிகளிலும் அரசாங்கத் திணைக்களங்களைப் பரிபாலிப்பதிலும் அமைச்சரேயன்றிச் சாதாரண உறுப்பினரும் அனுபவம் பெறும் வாய்ப்பைப் பெற்றனர். அக்காலம் வரையும் செயற்பட்டு வந்த பழைய யாப்பு முறையிலே, நிருவாகப் பணிகளில் இவ்வாறு பங்கு கொள்ளும் வாய்ப்பு அன்னூர்க்கு இருந்ததில்லை. இவ்வாறு அவர்கள் பெற்ற பாலன அனுபவமும் நிருவாக அனுபவமும், எதிர்காலத்திலே பூரண சுயஆட்சி என்னும் இலக்கை அடைவதற்குப் பெரிதும் உதவின என்பதிற் சந்தேகமில்லை.

புதிய யாப்புமுறையிலே பிறிதொரு நல்லமிசமும் காணப்பட்டது. நிருவாகத்துறைக்கும் சட்டவாக்கத்துறைக்குமிடையே திட்டமான இணைப்புக் காணப்பட்டது. ஒரு பிரதிநிதி அரசுக் கழகத்தின் உறுப்பினர் என்ற வகையிலே சட்டவாக்கப் பணியில் ஈடுபடுவார்; அதே பிரதிநிதி ஒரு நிருவாகக் குழுவின் உறுப்பினர்

என்ற வகையிலே, தொடர்ந்து நிருவாகப் பணியிலும் ஈடுபடுவார். ஆதலின், சட்டங்களை ஆக்குவதிலும் அச்சட்டங்களைச் செயற்படுத்துவதிலும் உறுப்பினர் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ளவேண்டியவராயினர். பொறுப்பற்ற கண்டனஞ் செய்தற்கு அவர்களுக்கு அதிக வாய்ப்பு இருக்கவில்லை. முன்னர், சட்டவாக்கத் துறையும் நிருவாகத்துறையும் தக்க இணைப்பின்றிப் பிரிக்கப்பட்டிருந்தன; அதனாற் சில வில்லங்கங்கள் ஏற்பட்டன. ஆயின், புதிய முறையிலோ இருதுறைகளுக்குமிடையே நேரான இணைப்பு இருந்தமையால், அத்தகைய வில்லங்கங்கள் உண்டாதற்கு இடமிருக்கவில்லை. மேலும், உறுப்பினரிடையே பொறுப்புணர்ச்சியை வளர்ப்பதற்கும் புதிய முறை வழிவகுத்தது.

இனி டொனமூர் யாப்பிலிருந்த சில குறைபாடுகளைப் பார்ப்போம். நிருவாகக் குழுக்களிடையே ஒழுங்கான பரஸ்பர உறவு வளர்தற்கு வழிசெய்யாமை ஒரு குறைபாடு எனலாம். அத்தகைய உறவு வளராமைக்குக் காரணம், அதற்கு அவசியமான கூட்டுப் பொறுப்பு எனும் கோட்பாடு அந்த யாப்பில் இடம் பெறுததேயாம். நிதியலுவல்கள் தவிர்ந்த பிற கருமங்களிலே ஒவ்வோர் அமைச்சரும் தமது பொறுப்பிலுள்ள அமைச்சின் அலுவல்களுக்குத் தாமே நேராகப் பொறுப்புடையராக இருத்தல் வேண்டும் என்பதை டொனமூர் யாப்புத் தெளிவாக வரையறுத்தது. நிருவாகக் குழுவின் எந்த ஒரு பிரேரணையும் அரசுக்கழகத்தால் நிராகரிக்கப்பட்டாலும், அக்காரணத்தால் அமைச்சர் சபை பதவியிலிருந்து விலகல் வேண்டும் என்ற நியதி இருக்கவில்லை. அமைச்சரை அமைச்சர் கண்டிப்பதும் அக்காலத்தில் நிகழ்ந்தது உண்டு. ஓர் அமைச்சரின் பிரேரணையைப் பிற அமைச்சர்கள் எதிர்த்த சந்தர்ப்பங்களும் இருந்தன. உதாரணமாக, பரோன் ஜயதிலக்கா உண்ணுட்டு அலுவல் நிருவாகக்குழுவின் தலைவராக இருந்த காலத்தில், அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது. உண்ணுட்டுப் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருந்த அவர் தமது நிருவாகக் குழுவின் அறிக்கை ஏற்கப்படவேண்டும் என்று ஒரு தீர்மானங்கொண்டு வந்தார். அத்தீர்மானத்துக்கு எதிராக மற்றைய அமைச்சர்கள் வாக்களித்தனர். இவ்வாருக, வெவ்வேறு நிருவாகக் குழுக்களின்கீழ் இயங்கிய திணைக்களங்களுக்கிடையே உருப்படியான உறவு யாதும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. இக்காரணத்தால், திணைக்களங்களுக்கிடையே நிருவாகத் தொடர்புகளில் வில்லங்கமான நிலைமைகள் உருவாகியது உண்டு. டொனமூர் யாப்பிலுள்ள உறுப்புரைகள் சில தக்கவாறு செயற்படுத்தப்பட்டு அனுசரிக்கப்பட்டிருந்தால், இத்தகைய குறைபாடுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். நிருவாகத் துறையில் எழும் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு அரசுக்கழகம்

அடிக்கடி கூடவேண்டுமென்று டொனமூர் ஆணைக்குழு விதந்துரை வழங்கியிருந்த போதிலும், இத்தகைய நிருவாகப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு வேண்டியாங்கு அரசுக் கழகம் அடிக்கடி கூடியதில்லை. இனி, அமைச்சர் சபையின் தலைவராகப் பிரதம செயலாளர் பணியாற்றிய போதிலும், அவர்தம் நிலை ஒரு பிரதம அமைச்சரின் நிலைக்குச் சமமாகாது என்பது டொனமூர் யாப்பி லேயே தெளிவாக்கப்பட்டிருந்தது. ஆகவே, அமைச்சர்களி டையே உடன்பாட்டை ஏற்படுத்துவதும், அவ்வழி, திணைக்களங் களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பதும் அமைச்சர் சபையின் தலைவரான பிரதம செயலாளர்க்கும் இயலாக் காரியங்களாயின. ஆதலின், நிருவாகக் குழுக்களுக்கிடையே தகவான உறவு நில வாமையும், அவ்வழி, திணைக்க்ளங்களுக்கிடையே சுமுகமான தொடர்புகள் வளராமையும் டொனமூர் யாப்பு இயங்கிய காலத் திலே தெளிவான குறைபாடுகளாகக் காணப்பட்டன.

அரசாங்கஞ் செய்யுந் தீர்மானங்களிலே அரசுக் கழகத்தின் உறுப்பினரும் தமது செல்வாக்கைச் செலுத்துதற்கு வாய்ப்பு அளித்தல் வேண்டும்; பாலன விடயங்களிலே பங்கு பற்றுவதனுல் அவர்கள் அரசாட்சியிலே பயிற்சி பெறல்வேண்டும் — என்றெல் லாம் டொனமூர் ஆணையாளர்கள் விரும்பினுர்கள். ஆதலால், நிருவாகக்குழுக்கள் விவாதமேடைகளாக — விவாத அரங்கு களாக — இயங்குதற்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும் என அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தவாறே, இந்த நிருவாகக் குழுக்களின் கூட்டங்களிலே நீண்ட நேரம் விவா தங்கள் நடைபெற்றன. அதனுல், திணைக்களங்கள் பற்றிய முக்கியமான பிரச்சினைகள் மட்டுமன்றி அரசாங்க அலுவலர்களை நியமிப்பது போன்ற அற்ப விடயங்களும் நெடுநேரம் காரசார மாக விவாதிக்கப்பட்டன. இத்தகைய வீண் விவாதங்களால், நிருவாகக் கருமங்கள் தாமதப்பட்டன— டொனமூர் யாப்பு இயங்கிய காலத்தில் வெளிப்பட்ட பிறிதொரு குறைபாடு இது. யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றி ஆளுநர் கல்டிக்கொற் தாம் வரைந்த அறிக்கையிலே இக்குறைபாட்டை எடுத்துக்காட்டினுர். திணைக்களங்களின் அதிபர்களை நியமிக்கும் உரிமை, நிருவாகக் குழுக்களுக்கு வழங்கப்பட்டதும் ஒரு குறைபாடாயிற்று. அமைச் சர்களும் அரசுக் கழக உறுப்பினர்களும் தத்தமக்கு விசுவாசமா யுள்ள அலுவலர்களையே திணைக்களத் தலைவர்களாக நியமிப்ப தற்கு முயன்றுர்கள். அரசாங்க சேவை ஒழுங்காக இயங்குதற்கு இம்முறையானது வேண்டாத் தலையீடாக இருந்தது என்பது பலருடைய கருத்து.

டொனமூர் யாப்பிலே இடம்பெற்றிருந்த சில அமிசங்கள், அதற்குப் பதிலாகப் புதிய ஒரு யாப்பு வேண்டும் என்ற கிளர்ச்சிக்கு ஏதுவாக இருந்தன. நிருவாகக் குழுக்களின் மூலமாக அரச அலுவலாளர் மூவரும் செலுத்தி வந்த அதிகாரங்களும் ஆளுநர் செலுத்திய அதிகாரமும், அவ்வாறு கிளர்ச்சிக்கு ஏதுவாயிருந்த தலையாய அமிசங்கள் எனலாம். மிக முக்கியமான பாலனத்துறைகளாகிய பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும் நீதியும் நிதியும் அரச அலுவலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதை, இந்நாட்டுத் தலைவர்கள் எதிர்த்தார்கள். மேலும், ஆளுநர்க்கும் அமைச்சர்க்கும் ஆலோசனை கூறும் அதிகாரம் அம் மூவர்க்கு வழங்கப்பட்டதையும், அவர்கள் கண்டித்தார்கள். குறிப்பாக, ஆலோசனை வழங்குவதைத் தலைக்கீடாகக்கொண்டு நிதிச் செயலாளர் தமது நடவடிக்கைகளிலே தலையிடுவது வழக்கமாகிவிட்டது என அமைச்சர் சிலர் குறைப்பட்டதைக் காண்கிறோம். அமைச்சர்கள் தத்தம் பொறுப்புகளை நிறைவேற்றுதற்கும் தத்தம் அதிகாரங்களைப் பயன்படுத்துதற்கும் தடையாக இருந்து கொண்டு இந்த அலுவலாளர் மூவரும் பிரித்தானியப் பேரரசின் நலன்களை இந்நாட்டிற் பாதுகாப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள் என்ற கண்டனக் குரல் அக்காலத்தில் எழுந்தது. இனி, அம்மூவரும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்தமையால், அரசாங்க சேவை சம்பந்தமான விடயங்களிலும் அவர்கள் தலையிட்டுத் தொல்லை விளைத்தார்கள் என்ற கருத்தும் நிலவிற்று. அரசாங்க சேவை ஆணைக்குழுவை மாற்றியமைத்தல் வேண்டும் என்ற கோரிக்கை அக்காலத்தில் வலுப்பெற்றிருந்தது.

ஆளுநருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுள், யாப்பின் 22 ஆம் உறுப்புரையின்படிக்கு அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களையே இந்நாட்டு அரசியல்வாதிகள் தீவிரமாக எதிர்த்தனர். அரசாங்க சேவையாளரின் ஊதியங்களும் சேவை நிபந்தனைகளும் பற்றிய எந்த ஒரு பிரேரணையையும், ஆளுநரின் அனுமதியின்றி அரசுக் கழகத்தின் உறுப்பினர் எவரும் கழகத்திலே சமர்ப்பித்தலாகாது. அன்றியும், சான்றுப்படுத்தும் அதிகாரம் எனப்பட்ட ஓர் அதிகாரமும் ஆளுநர்க்கிருந்தது. அரசாங்க சேவையாளரின் ஓய்வுநாட்பயணக் கட்டாணைகள், ஐரோப்பிய அலுவலாளர்க்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் வழங்கப்படும் பயணப்படிகள் ஆகிய செலவீடுகள் பற்றிய பிரேரணைகளுக்கு எதிராக வாக்களித்து அவற்றை அரசுக் கழகம் ஏற்க மறுத்தாலும், ஆளுநர் தமக்கிருந்த விசேட அதிகாரமான சான்றுப்படுத்தும் அதிகாரத்தைப் பிரயோகித்து அப்பிரேரணைகளை அங்கீகரித்தார். இன்னும், வருமான வரித் திருத்தப் பிரமாணங்களைச் செயற்படுத்துதற்கும், 1932 இல் அரசாங்க சேவையாளர்மீது தற்காலிக வரியொன்றை

அறவிடுதற்கான ஒரு பிரேரணையைச் செயற்படுத்துதற்கும், போர்க்காலத் தற்காப்புப் பிரமாணங்களைச் செயற்படுத்துதற்கும் ஆளுநர் இந்தச் சான்றுப்படுத்தும் அதிகாரத்தையே பயன்படுத்தினர். இந்த அதிகாரம் அரசுக் கழகத்தின் அதிகாரத்தைக் குறைப்பதாகும் என்றும், அக்கழகத்தின் மாட்சிக்கு இழுக்கு விளைப்பதாகும் என்றும் இலங்கை அரசியல்வாதிகள் வாதித்தனர்.

டொனமூர் யாப்பிலே காணப்பட்ட — இதுகாறும் குறிப்பிடப்பட்ட — இக்குறைபாடுகள் காலப்போக்கிலே ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப்பட்டன என்பதையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். டொனமூர் யாப்பின்கீழ் நடாத்தப்பட்ட இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர், 1936 முதலாக அரசுக்கழகம் இரண்டாவது கட்டத்தை அடைந்த காலத்தில், இவ்வாறு சில குறைபாடுகள் தீர்க்கப்பட்டமை தெளிவாகக் காணப்பட்டது. 1931 — 1936 வரையான ஐந்தாண்டுக் காலத்திலே இலங்கை அரசியல்வாதிகள் தாம்பெற்ற அனுபவத்தின் பயனாக அரசியற் பயிற்சியிலே தேறிவிட்டனர் என்பது, அந்த இரண்டாவது கட்டத்திலே தெளிவாயிற்று. இந்த இரண்டாவது கட்டத்திலே டொனமூர் யாப்புச் செயற்படுத்தப்பட்ட பாங்கினைப் பார்க்கும் போது, மேற்கூறிய உண்மை புலனாகின்றது. இவ்வாறு நிலைமை சீரடைதற்குப் பிறகாரணிகளும் துணைசெய்தன. 1939 இல் இரண்டாவது உலகப் போர் மூண்டதைத் தொடர்ந்து, அரசுக் கழகத்தின் உறுப்பினர்கள் முற்றும் வேறுபட்ட சூழ்நிலையிலே செயற்படவேண்டியவராயினர். போர் மூண்டதால் உண்டாய அவசர நிலைமையில், விவாதம், கண்டனம், மறுகண்டனம் எனுமிவற்றால் ஏற்படக்கூடிய தாமதத்துக்கு இடமளித்தலாகாது. விரைவாக முடிவுகள் எடுத்துக் காலதாமதமின்றி உடனுக்குடன் அவற்றைச் செயற்படுத்தவேண்டிய அவசியம் அக்கால் இருந்தது. போர்நிலைமையை நிருவகித்தற்காக, போர்க்கழகமொன்று நிறுவப்பட்டது. அதில் ஆளுநர், அமைச்சர் சபையினர், அரச அலுவலாளர் மூவர், தரைப்படை கடற்படை பொலிசு ஆகிய முப்படைகளின் தலைவர் மூவர், குடியியற்காப்பு ஆணையாளர் ஆகியோர் உறுப்பினராக நியமிக்கப்பட்டனர். இத்தகைய நிலைவரத்திலே, அமைச்சர் சபையானது ஒன்றுபட்டுப் பணிபுரிதல் அவசியமாயிற்று.

இன்னும், இரண்டாவது அரசுக் கழகத்திலே (1936 இல்) முற்றாகச் சிங்கள உறுப்பினரைக் கொண்ட அமைச்சர் சபையே நிறுவப்பட்டது. அக்கால அரசியல் நிலைமையிலே இதுவும் முக்கியமான ஓர் அமிசமாயிற்று. இவ்வாறு முழுச் சிங்கள அமைச்சர் சபை நிறுவப்பட்டதுக்குக் காரணம், யாப்புச் சீர்திருத்தம்

பற்றிப் பிரித்தானியக் குடியேற்ற நாட்டு அலுவலகத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு, ஓர் ஐக்கிய முன்னணி அமைந்திருத்தல் வாய்ப்பாயிருக்கும் என்னும் கருத்தேயாம். சிறுபான்மையினங்களுக்கு இடமளிக்காத இந்த முழுச்சிங்கள அமைச்சர் சபையிலே எத்தகைய குறை இருந்தாலும், ஒத்துழைப்பு உணர்ச்சியும் ஒற்றுமை உணர்ச்சியும் அச்சபையிலே வளர்வதற்கு அது வாய்ப்பளித்தது என்பதை இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். அக்காலத்தில், பொறுப்புள்ள அரசாட்சியைத் தரவல்ல ஒரு புதிய யாப்பை அமைச்சர் சபை ஆர்வத்தோடு கோரியது. இன்னும், இப்படிப் பொதுவான ஒரு குறிக்கோளை முன்வைத்தமையால், அமைச்சர்களைக் கடுமையாகக் கண்டிக்கும் வழக்கம் உறுப்பினரிடையே குன்றத் தொடங்கியது. இக்காரணங்களால், இரண்டாவது அரசுக் கழகத்தின் ஆயுட் காலத்திலே, அமைச்சர்கள் கூட்டாகவும் பொறுப்புணர்ச்சியோடும் பணியாற்றப் பயின்று கொண்டார்கள். பாலன விடயங்களிலும் அவர்கள் கணிசமான அளவுக்கு அனுபவம் பெற்றார்கள்.

மேற்கூறிய விளைவுகள் ஏற்படுதற்கு, சேர் அண்ட்ரு கல்டிக்கொற் என்ற ஆளுநரின் செயல்களும் ஓரளவுக்கு ஏதுவாயிருந்தன. ஒதுக்க அதிகாரங்கள் எனப்பட்ட விசேட அதிகாரங்கள் பல அவர்க்கு இருந்தபோதிலும், அவர் மெத்தவும் நிதானத்தோடு தான் அவற்றைப் பிரயோகித்தார். எனவே, மேற்கூறப்பட்ட போக்குகள் விருத்தியடைதற்கு அவர் பங்கம் விளைத்திலர் எனலாம்.

டொனமூர் யாப்பின் வெற்றியையும் தோல்வியையும் மதிப்பிட வேண்டுமானால், அக்காலத்திலே பொது மக்களின் நலன்கருதிச் செய்யப்பட்ட ஆக்கப் பணிகளை நாம் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். நெடுங்காலப் பயனுள்ள பல சட்ட விதிப்புகள் அரசுக் கழகத்தினால் அக்காலத்தில் நிறைவேற்றப்பட்டன. அவற்றுட் பிரதானமாகக் குறிப்பிடத்தக்கது, 1945 ஆம் வருடத்து இலவசக் கல்வி விதிப்பேயாம். குறிப்பிட்ட ஒரு சிறிய வர்க்கத்தாருக்கே கிடைத்துவந்த கல்வி வாய்ப்புகளைப் பெரும்பான்மையானோருக்கும் பரவச் செய்த மாட்சி அதற்கு உண்டு. இவ்வாறு கல்வித்துறையில் மட்டுமன்றி, சமூக சேவைத்துறையிலும் தொழிலாளர் நலத்துறையிலும் முக்கியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் 1935 இல் நிறைவேற்றப்பட்டது. வறியோர் சகாயக் கட்டளைச் சட்டம் 1939 இல் நிறைவேறியது. அன்றியும், சமூக சேவைகள் பற்றி ஆராய்ந்து விதந்துரை கூறி அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டும், 1944 இல் ஓர் ஆணைக்குழு நிறுவப்பட்டது. இனி, விவசாயமும் காணிகளும்பற்றி முக்கியமான சட்டங்கள் நிறை

வேற்றப்பட்டதுமன்றி, கல்ஓயாத் திட்டம் போன்ற குடியேற்றத் திட்டங்களும் அக்காலத்தில் உருவெடுத்தன.

மேற்கூறிய உண்மைகள் யாவற்றையும் ஒருங்குவைத்து ஆராயும்போது, ஓர் உண்மை புலனுகும். டொனமூர் யாப்பைச் செயற்படுத்துவதிலே பிரச்சினைகள் சில தோன்றியிருக்கலாம். அதற்கு மாருகக் கண்டனங்கள் பல எழுந்திருக்கலாம். ஆயினும், பயன்மிக்க ஒரு பரிசோதனையாக அஃது அமைந்தது என்பதில் ஐயமில்லை. டொனமூர் ஆணையாளர் எதிர்பார்த்த எல்லாம் கைகூடின என்ருல், அது மிகைபடு கூற்ருகும்; அவ்வாறே, அவர்கள் எதிர்பார்த்த எல்லாம் ஏமாற்றத்தில் முடிந்தன என்ருல், அதுவும் மிகைபடு கூற்றேயாகும்.

டொனமூர் யாப்பிலே சீர்திருத்தங்களைக் கோரிய கிளர்ச்சியில் முன்னின்றவர்கள், இலங்கைத் தேசிய மாசபையின் தலைவர்களே யாவர். அக்கிளர்ச்சியிலே மூன்று கட்டங்களைக் காணலாம். முதலாவது கட்டத்தில், திரு. ஈ. டபிள்யூ. பெரேரா என்ற தலைவர் இச்சீர்திருத்தம்பற்றிச் சில யோசனைகளை அரசுக் கழகத்திலே சமர்ப்பித்தார். அவற்றுள் முக்கியமானவை வருமாறு:— (1) அரச அலுவலாளர் என்ற மூன்று பதவிகளையும் ஒழித்தல், (2) ஆளுநரின் அதிகாரங்களைக் குறைத்தல், (3) நிருவாகக் குழுக்களுக்குப் பதிலாக அமைச்சவைமுறை, (4) நிதிப்பாலனத்தை அரசுக் கழகத்திடம் ஒப்படைத்தல், (5) அரசாங்கசேவை ஆணைக்குழுவை மாற்றியமைத்தல் ஆதியன. 1933 ஏப்பிரல் மாதத்திற் பெரும்பாலும் இதே யோசனைகள் இரண்டாவது கட்டத்தில், அமைச்சர் சபையாற் சமர்ப்பிக்கப்பட்டன. பின்னர் மூன்ருவது கட்டத்தில், 1937 மாச்சு மாதத்திற் பெரும்பான்மையும் இதே யோசனைகளை முழுச் சிங்கள அமைச்சும் சமர்ப்பித்தது.

இலங்கைத் தேசிய மாசபையைச் சேர்ந்த தாழ்நாட்டு அரசியல் வாதிகளே இச்சீர்திருத்தக் கோரிக்கைகளை ஆதரித்தனர். ஆனுல், கண்டிச் சிங்களத் தலைவர்களின் ஆதரவு அவற்றுக்கு இருக்கவில்லை. சிறுபான்மை இனத்தவராகிய தமிழர், முஸ்லிம்கள், ஐரோப்பியர் ஆகியோரின் தலைவர்கள் இக்கோரிக்கைகளை எதிர்த்தனர். அக்காலத்திலே ஆளுநராயிருந்த எட்வேட் ஸ்ரப்ஸ் என்பார் இச்சீர்திருத்தக் கோரிக்கைகள்பற்றிப் பிரித்தானியக் குடியேற்றநாட்டுச் செயலாளருக்கு ஓர் அறிக்கை அனுப்பினுர். அமைச்சர்களின் கோரிக்கைகள் அடங்கிய விஞ்ஞாபனம் பற்றி (1933) அவர் அனுப்பிய இந்த அறிக்கையிலே, இச்சீர்திருத்தக் கோரிக்கைகள் பற்றி இலங்கை நாட்டுத் தலைவர்களிடையே கருத்தொற்றுமை காணப்படவில்லை என்றும், அக்கோரிக்கைகள் சிறுபான்மை இனங்களின் நலன்களுக்கு விரோதமானவை என்றும், இக்காரணங்கள்பற்றி, அக்கோரிக்கைகள் மறுக்கப்பட

வேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார். அன்றியும், பூரணமான பொறுப்புள்ள ஆட்சிக்கு வேண்டிய தகுதி இந்நாட்டில் இன்னும் உருவாகவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். தமிழ்ப் பிரதிநிதிகளும் முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒன்றுபட்டு, சீர்திருத்தம்பற்றி 1935 யூனில் ஒரு விஞ்ஞாபனத்தைச் சமர்ப்பித்தார்கள். அது ஆளுநரின் கருத்துக்கு ஆதரவு அளிப்பதாய் இருந்தது. அதன்படி, இனவாரிப் பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக ஆள்புலவாரிப் பிரதிநிதித்துவத்தைப் புகுத்தியமையால் பெரும்பான்மைச் சிங்கள இனம் மேலாதிக்கம் பெற்றுவிட்டது என்றும் ஆளுநரின் அதிகாரங்களையும் அரச அலுவலாளரின் அதிகாரங்களையும் அகற்றவேண்டும் என்ற கோரிக்கை உண்மையிற் பெரும்பான்மை இனத்தின் ஆதிக்கத்தை வலியுறுத்தவே எழுந்தது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே, சிறுபான்மையினங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட அமைச்சவை முறையை நிறுவவேண்டும் எனவும், மற்று, பெரும்பான்மையினத்துக்கும் சிறுபான்மையினங்களுக்கும் சமமான பிரதிநிதிகளை அளிக்கவல்ல சமநிலைப் பிரதிநிதித்துவ முறை நிறுவப்படவேண்டும் எனவும் சிறுபான்மையினங்களின் தலைவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். இத்தகைய அரசியற் பின்னணியிலே சர்வ சிங்கள அமைச்சர் சபை 1937 இற் கேட்டுக் கொண்ட சீர்திருத்தக் கோரிக்கைகளைப் பிரித்தானியக் குடியேற்ற அலுவலகமும் இத்தீவின் ஆளுநரும் நிராகரித்துவிடுதல் எளிதாயிற்று.

இனி, 1931 இல் வழங்கப்பட்ட அரைவாசிப் பொறுப்பாட்சி முறையை முழுவாசிப் பொறுப்பாட்சி முறையாக மாற்றுதற்குப் பிரித்தானிய அரசாங்கம் தயங்கியதற்குப் பிற காரணங்களும் இருந்தன. பிரித்தானியப் பேரரசிலே யமேக்கா, கயனு, மோல்ற்ரு ஆகிய நாடுகளில் அக்கால் நிலவிய நிலைவரமும் அத்தயக்கத்திற்கு ஒரு காரணம் எனலாம். 1935—36 வரையான காலத்திலே மோல்ற்ரு தீவிற்கு அரைவாசிப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தீர்த்தற்கரிய பலபிரச்சினைகள் அந்நாட்டிலே தோன்றின. எனவே, முழுப்பொறுப்பாட்சி இலங்கைக்கு வழங்கப்பட்டால், அத்தகைய யாப்புப் பிரச்சினைகள் இங்கும் தோன்றலாம் என்று பிரித்தானியக் குடியேற்றநாட்டு அலுவலகம் கருதிற்று. எனினும், இலங்கைக்கு முழுப்பொறுப்பாட்சி வழங்குவதுபற்றிப் பிரித்தானிய அரசின் மனப்பாங்கை மாற்றவல்ல ஒரு காரணி அக்காலத்திலே உருவாகித் தோன்றிற்று. இரண்டாவது உலகப்போர் மூண்டதைத் தொடர்ந்து உருவான நிலைவரமே அது. அப்போரில் இறுதி வெற்றி காண்பதற்குக் குடியேற்ற நாடுகளின் ஒத்துழைப்புப் பிரித்தனுக்கு இன்றியமையாததாயிற்று. ஆதலின், குடியேற்றநாடுகள் வேண்டி நின்ற யாப்புச் சீர்திருத்தக்

கோரிக்கைகள்பற்றித் தாம் கொண்ட விடாப்பிடியான பூட்கையைத் தளர்த்த வேண்டிய அவசியம் பிரித்தானிய ஆட்சியாளர்க்கு ஏற்பட்டது. டொனமூர் ஆட்சி முறை தோல்வியடைந்துவிட்டதென்றும், புதிய சீர்திருத்தங்கள்பற்றி ஆராய்வதற்கு ஓர் ஆணைக்குழுவை அனுப்புதல் நலமென்றும் ஆளுநர் எட்வேட் ஸ்ரப்ஸ் என்பார் குடியேற்றநாட்டுக்கு அலுவலகத்துக்கு அனுப்பிய அறிக்கை,இம்மனமாற்றத்தைக் குறித்த முதல் அறிகுறியாக அமைந்தது எனலாம். ஸ்ரப்ஸ் துரைக்குப் பின்னர் ஆளுநராகப் பதவியேற்ற சேர் அண்ட்ரு கல்டிக்கொற் அவர்கள் இத்தகைய ஆணைக்குழுவை அனுப்புதல் அவசியமாகாது என்றும், தாமே இங்குள்ள நிலைமையை ஆராய்ந்து தமது முடிபுகளைச் சமர்ப்பிக்கலாம் என்றும் அறிக்கை அனுப்பினர். அக்காலத்திலே பிரித்தானியக் குடியேற்ற நாட்டுச் செயலாளராக இருந்த ஓம்ஸ்பிகோர், கல்டிகொற்றின் யோசனையை ஆதரித்தார். ஆளுநரின் அதிகாரங்கள், அமைச்சர்களை நியமிக்கும் முறை, அமைச்சர்களுக்கும் அரசுக் கழகத்துக்குமிடையே நிலவவேண்டிய உறவுமுறை, வாக்குரிமை, சிறுபான்மையினங்களின் பிரதிநிதித்துவமுறை ஆகிய விடயங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்யுமாறு கல்டிக்கொற் பணிக்கப்பட்டார்.

யாப்புச் சீர்திருத்தங்கள்பற்றிப் பல்வேறு தாபனங்களும் தலைவர்களும் கொண்டிருந்த கருத்துகளை ஆறுமாத காலமாக ஆராய்ந்தறிந்தார் ஆளுநர் கல்டிக்கொற். அம்முயற்சியின் பயனுக ஓர் உண்மை புலனுயது. இந்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் கொண்ட கருத்துகளும் யோசனைகளும் பல்வேறுபட்டவை என்பதே அது. வாக்குரிமையை வரையறைப்படுத்தல், மேற்சபையொன்றைத் தாபித்தல், 50 இற்கு 50 என்ற அடிப்படையிலே சிங்களவர்களுக்கும் சிறுபான்மையோர்க்கும் பிரதிநிதித்துவம் அளித்தல் ஆகிய யோசனைகளைச் சில அரசியற் கோட்டிகள் எடுத்துரைத்தன.

ஆளுநர் கல்டிக்கொற் இத்தகைய பல்வேறு கருத்துகளையெல்லாம் ஆராய்ந்தபின்னர், அக்காலத்திலே பிரித்தானியக் குடியேற்ற நாட்டுச் செயலாளராயிருந்த மல்கம் மக்டொனல்ட் என்பார்க்குத் தமது அறிக்கையை 1938 யூனிலே சமர்ப்பித்தார். ஆளுநர் கல்டிக்கொற் தாராண்மைக் கருத்துகளைக் கொண்டவர். அவர் எடுத்துக்கூறிய சீர்திருத்த யோசனைகள் இந்நாட்டுக்குப் பூரணமான பொறுப்பாட்சி அளிப்பதில் முதற்படியாக அமைந்தன எனலாம்.

பூரணமான பொறுப்பாட்சி எனும் குறிக்கோளை அடைவதில் முதல் அடி எடுத்து வைக்கக் கல்டிக்கொற் சித்தமாயிருந்தார் என்பது அவருடைய யோசனைகளிலிருந்து புலனுகியது. அரசுக் கழகத்தின் தலைவரைத் தெரிவு செய்வது அக்கழகமாயிருப்ப,

அவரை ஆளுநரே நியமித்தல் வேண்டும். இவ்வாறு நியமிக்கும் போது, நியமிக்கப்படுபவர் அரசுக் கழகத்திலே பெரும்பான்மையான உறுப்பினரின் ஆதரவைப் பெற்றவரா என்பதை ஆளுநர் உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும். இந்த முதல் அமைச்சரின் விருப்பத்துக்கமையத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரைக் கொண்ட அமைச்சுச் சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வோர் அமைச்சுக்கும் உரிய விடயங்களைக் குறிப்பிட்டு அவ்வவற்றுக்குரிய கடமைகளை வரையறுத்தல், முதல் அமைச்சரின் பொறுப்பாகும். நிருவாகத்துறையையும் சட்டவாக்கத்துறையையும் ஒன்ருக இணைத்தல், பல பிரச்சினைகளுக்கு இடமளித்தது என்பதை உணர்ந்த கல்டிக்கொற் அவையிரண்டும் மீண்டும் பிரிக்கப்படுதல் வேண்டும் என்று கருதினர். அவ்வழி, அமைச்சர் சபை நிருவாகக் கிளையாக இயங்க, அரசுக் கழகம் சட்டவாக்கக் கிளையாக இயங்குதல் வேண்டும் என்பதே அவருடைய யோசனையாயிற்று. இனி, அரச அலுவலாளர் மூவரும் அமைச்சர் சபையில் இடம்பெறலாகாது எனவும், அவர்தம் அதிகாரங்களுட் பெரும்பாலானவை இந்நாட்டு அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் எனவும் அவர் யோசனை கூறினர். ஆயின், இப்பதவிகளை ஒழித்துவிடுதல் அவருடைய கருத்தன்று. வெளிநாட்டு உறவுகள், தரைப்படை, கடற்படை, பாதுகாப்பு, அரசாங்க சேவை எனுமிவை போன்ற முக்கியமான விடயங்கள் இந்த அலுவலாளரிடமே தொடர்ந்து இருத்தல் வேண்டுமென அவர் கருதினர். அரசாங்கத்துக்குப் பிரதம செயலாளராயும் ஆளுநர்க்கு ஆலோசகராயும் பிரதம செயலாளர் செயற்படலாம் எனவும், மற்று, சட்டச்செயலாளரும் நிதிச் செயலாளரும் தத்தம் துறைகளிலே முக்கியமான சில கடமைகளை வகிக்கலாம் எனவும் ஆளுநர் கருதினர்.

ஆளுநர் கல்டிக்கொற்றின் சீர்திருத்த யோசனைகள் தவிர, பிற யோசனைகளும் அக்கால் எடுத்துரைக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று, 1931 இலே கொண்டு வரப்பட்ட பொது வாக்குரிமை குறைக்கப்படுதல் வேண்டும் என்பதாம். சில சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் இந்த யோசனையைத் தெரிவித்தார்கள். தமிழ்த்தலைவர் இதனை ஆதரித்ததற்குக் காரணம், பொது வாக்குரிமையானது சிங்கள ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் போக்குடையது என்பதேயாம். சில சிங்களத் தலைவர்கள் அதனை ஆதரித்ததற்குக் காரணம், அரசியல் மாற்றங்களை அவர்கள் விரும்பாமையேயாம். எனினும், வாக்குரிமையை இவ்வாறு வரையறைப்படுத்தல் விவேகமாகாது என எடுத்துக்காட்டிய கல்டிக்கொற், சிறுபான்மையோரின் உரிமைகளை யாப்புமுறைப்படி பாதுகாக்கமுடியும் என எடுத்துக்கூறினர். இவ்வாறு பாதுகாப்ப

தற்கு ஒரு யோசனையாக, 50 இற்கு 50 எனும் தமது பிரதிநிதித்துவ முறையினைத் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் வெளியிட்டார். அரசுக் கழகத்தின் பிரதிநிதிகளிலும், அமைச்சர் சபையிலும், அரசாங்க சேவையின் எல்லாப் பதவிகளிலும் 50 சதவீதம் சிறுபான்மையோர்க்கு ஒதுக்கப்படுதல் வேண்டும் என்பதே இம்முறையின் தாற்பரியம். மேலும், சிங்களப் பிரதிநிதிகளின் வாக்குகளை மாத்திரங்கொண்டே யாப்புமுறையை மாற்றுவதைத் தடுப்பதற்கும் அவர் வழிவகை கூறினர். எனினும், இந்நாட்டுக் குடித்தொகையில் 1/3 பங்கினராயிருந்த சிறுபான்மை இனத்தவர்க்கு அரசுக் கழகத்திலும் அரசாங்க சேவையிலும் 50 சதவீதம் வழங்குவது தவறு எனக்கருதிய கல்டிக்கொற் இந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டார். என்றாலும், தமிழ் மக்களும் கண்டி மக்களும் கூடிய பிரதிநிதிகளைப் பெறக்கூடியவகையிலே தேர்வகங்களை எல்லை நிருணய ஆணைக்குழுமூலம் மாற்றியமைக்க வேண்டும் என அவர் யோசனை கூறினர். சிங்கள ஆதிக்கத்திலே, அரசாங்க சேவையிற் சிறுபான்மையோர்க்கிருந்த பதவிகள் பெரும்பாலும் பறிக்கப்படலாம் என்ற அச்சம் அக்கால் நிலவிற்று. இதற்குப் பரிகாரமாக, அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் நிறுவப்படல்வேண்டும் எனக் கல்டிக்கொற் எடுத்துக் கூறினர். இந்த ஆணைக்குழுக்கள் இரண்டும் முறையே பிரதம செயலாளரின் பொறுப்பிலும், நீதிச் செயலாளரின் பொறுப்பிலும் இயங்கலாமென அவர் யோசனை தெரிவித்தார். அரசாங்க சேவைக்கும் நீதிச்சேவைக்குமுரிய பதவி நியமனங்களும் சேவை நிபந்தனைகளும், இனவேற்றுமைகளுக்கு இடமளிக்காது, இந்த இரண்டு ஆணைக்குழுக்களாலும் நிருவகிக்கப்படுதல் வேண்டும் எனக் கல்டிக்கொற் கூறினர்.

சிங்களத் தலைவர்களுக்கோ சிறுபான்மை இனத்தவர்க்கோ இந்த யோசனைகள் திருத்தியளித்ததாகத் தெரியவில்லை. ஆளுநரின் அதிகாரங்கள் தொடர்ந்து பேணப்படுவதுபற்றியும் அரச அலுவலாளர் மூவர்க்கும் தொடர்ந்து இடமளிப்பதுபற்றியும் அமைச்சர் சபை கண்டனந் தெரிவித்தது. 50 இற்கு 50 எனும் அடிப்படையிலே சமத்துவம் வழங்கப்படாமை, சிறுபான்மையோர்க்கு அதிருத்தியளிப்பதாயிற்று. சிறுபான்மையோர்க்குரிய தேர்வகங்களைச் சற்றே கூட்டுவதால், அன்னாரின் நலவுரிமைகள் பாதுகாக்கப்படப் போவதில்லை எனச் சிறுபான்மை இனத்தவர் கருதினர். கண்டி விவசாய மக்களுக்குக் கூடிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்ற யோசனையும் கண்டிக்கப்பட்டது. கண்டி மக்களுக்கு அவ்வாறு பிரதிநிதித்துவம் வழங்குவதாயின், வறண்ட வலய மக்களுக்கும் அத்தகைய பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும் எனவும், இப்பிரதேசங்களிலே சிறுச் சிறு உத்தியோகத்தர்களும்,

இத்தேர்வகங்களை நிருவகிப்பதால் ஆதிக்கம் பெற்ற அதிகாரிகளாக இயங்குவதற்கு இம்முறை வழிவகுக்கலாம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கிடையிலே, இரண்டாவது உலகப் போர் மூண்டமையால், இந்த யாப்புச் சீர்திருத்த யோசனைகளையெல்லாம் பிற்போடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, கல்டிக்கொற்றின் யோசனைகளைக் கவனமாக ஆராய்வதற்கு அக்கால் வாய்ப்பு இல்லாது போயிற்று. எனினும், இந்த யோசனைகள் இந்நாட்டுத் தலைவர்களுக்கு ஊக்கமளிப்பனவாய் இருந்தன என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற காலத்தில், இந்நாட்டு அரசியல் வாதிகளின் ஆதரவும், அமைச்சர் சபையின் ஒத்துழைப்பும் பிரித்தானிய அரசாங்கத்துக்கு அவசியமாயின. கிழக்குலகிற் பிரித்தானியப் பேரரசைப் பேணுவதிலே இலங்கை நாடு முக்கிய இடம் வகித்தது. சிங்கப்பூர் யப்பானியர் வசப்பட்டபின், தென்கிழக்கு ஆசியப்படைத் தலைவர் லூயி மவுன்ற் பற்றன் பிரபு தமது தலைமைப் பீடத்தை இலங்கைக்கு மாற்றினார். சேர். ஜியோபிரி லெயிற்றன் இலங்கைத் தரைப்படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டு இலங்கைக்கு வந்தார். முன்பு குறிப்பிட்ட போர்க் கழகத்தை அவரே நிறுவினார். இந்நாட்டு அரசியற்றலைவர்களின் பூரணமான ஒத்துழைப்புப் பிரித்தானிய அரசாங்கத்துக்குக்கிடைத்தது. போர் நெருக்கடிக்காலத்தில் இருசாரார்க்குமிடையே நல்லுறவும் நல்லெண்ணமும் வளர்ந்தன. அமைச்சர்சபைக்குப் போர்க்கழகத்திலே இடமளித்தமையும், இலங்கையர் ஒருவரை (ஓ.ஈ. குணத்திலகாவை) குடியியற்காப்பு ஆணையாளராக நியமித்தமையும் இந்த நல்லுறவுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தன. இலங்கைத் தலைவர்களின் ஒத்துழைப்புப் போர்முயற்சிக்குப் பூரணமாக வழங்கப்பட்டமையால், போர் முடிவுற்ற பின்னர், பூரண பொறுப்பாட்சிமுறை இலங்கைக்கு வழங்கப்படுமென அத்தலைவர்கள் நம்பினார்கள். போர்க்காலத்திலே இவ்வாறு வளர்ந்த நல்லுறவானது பிற்காலத்திலே யாப்புச் சீர்திருத்த இயக்கத்திலே பெருஞ்செல்வாக்குச் செலுத்திற்று என்பதை இங்குக் குறிப்பிடுதல் வேண்டும்.

போர்க்காலத்திலே இலங்கைச் சமசமாஜக் கட்சியின் பூட்கை பற்றி இங்குக் குறிப்பிடுதல் அவசியம். அமைச்சர் சபையும் பெரும்பான்மை இன்த்தின் தலைவர்களும் பிரித்தானியப் போர் முயற்சிக்கு ஆதரவு அளித்தாராக, சமசமாஜக் கட்சியோ அதற்கு நேர்மாறாக நின்று, ஒத்துழைக்கும் பூட்கையை நிராகரித்தது. அக்கட்சி போர் முயற்சியை எதிர்த்ததுமன்றி, இந்தியத் தேசிய மாசபையின் இடதுசாரிகளைப் பின்பற்றி, பூரண சுயவாட்சியைக்

கோரிநின்றது. பிற தலைவர்கள் போன்று அக்கட்சித் தலைவர்கள் 'டொமினியன்' எனப்படும் ஆணிலப்பதத்தை விரும்பவில்லை. இவ்வாருகப் போர்க்காலம், சமசமாஜக் கட்சிக்குப் பெருஞ் சோதனை காலமாயிற்று. அதன் தலைவர்கள் பாதுகாப்புப் பிரமாணங்களின்படி 1940 யூனிலே சிறை வைக்கப்பட்டார்கள்.

இக்காலமளவிலே இலங்கைத் தேசிய மாசபையிலும் பல மாறுதல்கள் நடந்தேறிவிட்டன. பிற்றைக் கால யாப்புச் சீர்திருத்த இயக்கத்திலே இம்மாறுதல்கள் கணிசமான செல்வாக்குச் செலுத்தினவாதலின், அம்மாற்றங்களை நாம் ஊன்றிக் கவனித்தல் வேண்டும். இம்மாற்றங்களுள் முக்கியமானதொன்று, எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயகாவின் தலைமையிலே 1937 இற் சிங்கள மகாசபை நிறுவப்பட்டமையாகும்.

சிங்கள மக்களின் தொல்பழைய பண்பாட்டு விழைவுகளை—சிறப்பாக, மொழியும் மதமுஞ் சம்பந்தமான விழைவுளை — ஆதாரசுருதியாகக் கொண்டு சிங்கள இனத்தை ஒற்றுமைப்படுத்துவதே சிங்கள மகா சபையின் தலையாய குறிக்கோளாயிற்று. மேலும், பெரும்பான்மை இனமான சிங்கள மக்களிடையே நிலவிய சாதி பேதங்களையும், கண்டி என்றும் கரைநாடு என்றும் வழங்கி வந்த வேற்றுமைகளையும் துடைத்துச் சிங்கள மக்களை ஒன்று படுத்தவேண்டும் என்றும், அவ்வாறே சிறுபான்மையினங்களும் இத்தகைய பேதங்களை மறந்து ஒன்றுபடுதல் வேண்டும் என்றும், இறுதியில், இருசாராரும் ஐக்கியப்பட்டுத் தனியொரு தேசிய இனமாகத் தலையெடுத்தல் வேண்டும் என்றும் சிங்கள மகா சபை கருதிற்று. 1940 ஆம் ஆண்டு முதலாக இத்தாபனம் இலங்கைத் தேசிய மாசபையில் ஒரு கோட்டியாக உள்ளிருந்து கொண்டே பழைய தலைவர்களின் போக்கை அவ்வப்போது கடுமையாகக் கண்டித்து வந்தது. இதே காலத்தில், இளந் தலைமுறையினரைக் கொண்ட பிறிதொரு கோட்டி தேசிய மாசபையிலே தோன்றி, முதுபெருந்தலைவர்களைக் கண்டித்ததோடு தேசிய, மாசபையானது கொழும்பு நகருக்கும் சிற்சில பெருமனிதர்க்குமுரிய ஒரு தாபனமாக இருக்கக்கூடாது என்றும் நாட்டுப்புற மக்களையும் உள்ளடக்கியதாய் அதன் குரல் எங்கும் ஒலிக்கவேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தது. டட்லி சேனநாயக்கா, ஜே. ஆர். ஜயவர்த்தன போன்றவர்களைத் தலைவராகக் கொண்ட இக்கோட்டி கொழும்பு நகருக்கு வெளியேயும் பொதுக் கூட்டங்களை நடாத்தியது. அன்றியும், இலங்கைத் தேசிய மாசபைக்குத் தெளிவான அரசியற் பூட்கையையும் பொருளாதார சமூகப் பூட்கையையும் வகுத்துக் கொடுக்க முற்பட்டது. அன்னாரின் அயரா முயற்சியின் பயனாக, பூரண சுதந்திரமே மாசபையின் குறிக்கோளாக அமைதல் வேண்டும் எனவும், மற்று,

அக்காலம் வரையும் அதன் குறிக்கோளாக வருடாந்த மகா நாடுகளிலே வலியுறுத்தப்பட்டுவந்த 'டொமினியன்' எனும் ஆணிலப்பதம் போதாது எனவும் தேசிய மாசபை முடிவு செய்தது.

இதற்கிடையில், பிரித்தானியரின் அதிகார ஆட்சியைத் தீவிர மாகத் தாக்கி வந்த இளைஞரைக் கொண்ட மாக்சிய வாதக் கோட்டியொன்று இலங்கைநாட்டு அரசியல் வானிலே தோன் றிற்று. பெரும்பான்மையும் இந்நாட்டு மத்திய வகுப்பைச் சேர்ந்த இந்த இளைஞர் பிரித்தானிய அமெரிக்கப் பல்கலைக் கழ கங்களிலே கல்விபயின்று, மாக்சிய அரசியற் கொள்கைகளிலே தேர்ந்து, பிரித்தானியப் பேரரசைச் சேர்ந்த பல்வேறு குடியேற்ற நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்ற அறிவாளிகளோடு நெருங்கிய தொடர்பு பூண்டவர். அந்த அறிவாளிகளைப் போலவே இவர்களும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைத் தீவிர மாக எதிர்ப்பவர்கள். இவர்கள் இலங்கைக்கு மீண்டபின், தொழிலாளர் பலத்தைத் திரட்டிக் கட்டுக்கோப்பான தொழி லாளர் தாபனத்தை அமைத்து, பிரித்தானியப் பேரரசினின்றும் இலங்கைக்குச் சுதந்திரமளித்தல் வேண்டும் என்று உறுதிபூண் டார்கள். சூரிய மலர் (சூரியகாந்திப் பூ) இயக்கம் மூலமாகவும் தீவிரமான தொழிலாளர் இயக்கங்கள் மூலமாகவும் 1923 ஆம் ஆண்டளவில் மக்களிடையே பிரபலமாகிவிட்ட இக்கோட்டியார் 1925 அளவில் இலங்கைச் சமசமாஜக் கட்சியைத் தாபித்தனர். தீவிர கொள்கைகளைத் தழுவிய இந்த இளம் அறிவாளிகளிலே பிலிப் குணவர்தன, மருத்துவ கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்கா, கலாநிதி என். எம். பெரேரா ஆகியோர் முன்னணியில் நின் றனர்.

இளைஞரான இந்த மாக்சிய அறிவாளிகளுக்கு அரசியற் களரி யாக அமைந்த சமசமாஜக் கட்சியிலே 1940 இல் முக்கியமான ஒரு மாறுதல் ஏற்பட்டது. ஹிற்லருடைய ஆட்சியிலிருந்த நாற்சி சேர்மானிக்கெதிராகச் சோவியற்று ருஷியாவும் பெரிய பிரித்தனும் நட்புறவு செய்து கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து, இந்நாட்டுச் சமூகவுடைமைவாதிகளிடையே தீவிரமான கருத்து முரண்பாடு உண்டாயிற்று. பிரித்தானியப் பேரரசிடத்தும் அக் கால் நடைபெற்றுக்கொண்டிருந்த உலகப் போர் பற்றியும் சமூக வுடைமைவாதிகள் எத்தகைய பூட்கையைக் கடைப்பிடிக்கவேண் டும் என்பது பற்றியுமே அம்முரண்பாடு ஏற்பட்டது. சமூக வுடைமைக் குடியரசாகிய சோவியற்று ஐக்கியநாடு போரிலே ஈடுபட்டுவிட்டதால், அந்நாட்டின் சார்பாக அப்போர் முயற்சிக்கு ஆதரவளிப்பதே தக்கது என்றும், அதனுற் பெரிய பிரித்தனிடத்து நல்லெண்ணத்தோடு நடந்து கொள்வதே தக்கது என்றும் ஒரு கோட்டியார் மருத்துவ கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்காவின்

தலைமையில் வாதிட்டனர். அன்னார் சமசமாஜக் கட்சியிலிருந்து விலகிப் பொதுவுடைமைக் கட்சியை நிறுவிக்கொண்டனர். இச் சூழ்நிலையிலே, பொதுவுடைமைக் கட்சியார் இலங்கைத் தேசிய மாசபையிற் சேர்ந்து கொண்டனர். அந்த மாசபை அப்போது பிரித்தானியப் பேரரசோடு நல்லுறவு பூண்டதாய், பூரண சுதந்திரத்தை வேண்டி நின்றது என்பதைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். இச்சம்பவங்களால் இலங்கைத் தேசிய மாசபையின் தலைமைப்பீடத்திலே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது எனலாம். அம்மாசபையிலே ஆதிக்கம் பெற்றிருந்த தலைவர் டீ. எஸ். சேனநாயக்கா போர்க்காலத்திலே பிரித்தானிய அதிகாரிகளோடு நெருங்கி ஒத்துழைத்தவர். ஆணிலப் பதம் வேண்டுமென்ற கோரிக்கையை அக்காலம்வரை வற்புறுத்தி வந்த தேசிய மாசபை அக்கோரிக்கையைக் கைவிட்டதனாலும், பொதுவுடைமைக் கட்சிக்கு மாசபையிலே இடமளித்தமையாலும் அவர் தேசிய மாசபையிலிருந்து விலகினார். போர்க்காலத்திலே அவசரகாலநிலைமையை நிருவகித்து வந்த பிரித்தானிய அதிகாரிகளோடு நெருங்கி ஒத்துழைத்த அதே வேளையில், அவர் யாப்புச் சீர்திருத்த இயக்கத்தைத் தன்னந்தனியனாய்க் கொண்டுநடத்தினார்.

போர்க்காலச் சூழ்நிலையிலேதானும், இலங்கை நாட்டுத் தலைவர்கள் யாப்புச் சீர்திருத்தம் வேண்டித் தொடர்ந்து கிளர்ச்சி செய்தார்கள். யாப்புச் சீர்திருத்தம்பற்றித் திட்டமான ஒரு முடிவை அவர்கள் பிரித்தானிய அரசிடமிருந்து பெறுதற்கு ஆவற்பட்டார்கள். இனி, போர்க்காலத்திலே பிரித்தானியர்க்கு அளிக்கப்பட்ட ஒத்துழைப்பினாலும் இலங்கையின் இராணுவ முக்கியத்துவத்தினாலும் உந்தப்பட்ட பிரித்தானியக் குடியேற்றநாட்டு அலுவலகமும் யாதுமொரு வாக்குறுதியை அளித்தல் தக்கதே எனக் கருதிற்று. 1941 இல் விடுக்கப்பட்ட பிரபலமான பிரகடனத்துக்கு அதுவே பின்னணியாக இருந்தது. அந்தப் பிரகடனம் பிற்காலத்திலே செய்யப்பட்ட சீர்திருத்தங்களுக்கு ஒரு முன்னோடியாக இருந்தது. இலங்கைக்கு யாப்புச் சீர்திருத்தங்கள் அவசியந்தான் என்பதைக் குடியேற்ற நாட்டு அலுவலகம் அப்பிரகடனத்தின் வாயிலாகத் திட்டமாய் ஒப்புக்கொண்டது. எனினும், இலங்கைத் தலைவர்களிடையே கருத்தொருமிப்புக் காணப்படாமையால், நாட்டு நிலைவரத்தை உள்ளபடி ஆராய்ந்தறிவதற்கு ஒரு மாநாடோ ஆணைக்குழுவோ அவசியமாகலாம் என்று கருதப்பட்டபோதும், போர் முடிந்தவுடன் யாப்புச் சீர்திருத்தம் பற்றித் தீவிரமாக ஆராயப்படும் என்று அப்பிரகடனம் தெளிவாகக் கூறிற்று.

இப்பிரகடனம்பற்றி அமைச்சர் சபை திருத்தியடையவில்லை. 1942 மாச்சிலே, அரசுக் கழகமானது ஒரு யோசனையைத் தெரி

வித்தது. 1942 இலே இந்தியாவில் அரசியல் நிலைமையை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஸ்ராபோட் கிரிப்ஸ் தூதுக்குழுவிடம் இலங்கை நாட்டு யாப்புச் சீர்திருத்தப் பிரச்சினையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதே அந்த யோசனை. பிரித்தானியக் குடியேற்ற நாட்டுச் செயலாளரோ இந்த யோசனையை நிராகரித்துவிட்டு, 1943 ஆம் ஆண்டுப் பிரகடனத்தை வெளியிட்டார்.

உண்ணாட்டு அலுவல்களிலே பூரணமான பொறுப்பாட்சியை இலங்கையர்க்கு வழங்குதற்கு இப்பிரகடனம் இசைந்ததாயினும், பாதுகாப்பும் வெளிநாட்டு வியாபாரமும் கடற்படையும் சம்பந்தமான விடயங்கள் தொடர்ந்து பிரித்தானிய அரசிடமே சில காலம் இருத்தல் வேண்டும் எனவும் அது எடுத்துக்கூறிற்று. அன்றியும், யாப்புச் சீர்திருத்தங்கள்பற்றி அமைச்சர் சபை தயாரிக்கும் எந்தத் திட்டத்திற்கும் அரசுக் கழகத்தில் 75 சதவீதமான உறுப்பினரின் ஒப்புதல் வேண்டும் எனவும் அப்பிரகடனம் ஒரு நிபந்தனையை விதித்தது.

1944 ஆம் ஆண்டளவிலே அமைச்சர் சபையானது ஒரு சீர்திருத்த வரைபைத் தயாரித்துவிட்டது. அந்த வரைபின்படி, ஏறத்தாழ நூற்றுவரைக்கொண்ட அரசுக்கழகம் தாபிக்கப்படல் வேண்டும். ஒரு தேர்வக எல்லைஆணைக்குழுவின் விதந்துரைகளின்படி வகுக்கப்பட்ட ஆள்புலவாரியான தேர்வகங்களிலிருந்து அரசக் கழகத்திற்குப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர். இனவாரிப்பிரதிநிதித்துவம் நிராகரிக்கப்படல் வேண்டும். இவ்வாருக, 1931 ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி ஏறத்தாழ 75 தேர்வகங்களுக்கு இடமுண்டெனஎடுத்துக் கூறப்பட்டது. 75,000 பேரைக் கொண்ட குடித்தொகை, அல்லது 1,000 சதுரமைலைக் கொண்ட பிரதேசத்துக்கு ஓர் உறுப்பினர் என்ற விகிதப்படி தேர்வகங்கள் வகுக்கப்படலாம் என யோசனை தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு குடித்தொகையையும் பரப்பளவையும் இணைத்துத் தேர்வகங்களை வகுப்பதால், சிறுபான்மையினங்களுக்கும் தக்க பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் எனக் கூறப்பட்டது. பரப்பளவின்படி, வட மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் அக்காலம் வரையிருந்த 7 தேர்வகங்களுக்குப் பதிலாக 16 தேர்வகங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு எனக் குறிப்பிடப்பட்டது. அவ்வாறே, வட மத்திய மாகாணத்துக்கும் அக்கால் இருந்த ஒரு தேர்வகத்துக்குப் பதிலாக 5 தேர்வகங்கள் கிடைக்கும் எனவும் குறிப்பிடப்பட்டது. மேலும், இலங்கைமக்களில் எந்த ஒரு பிரிவினர்க்கேனும் பிரதிநிதித்துவம் கிடைக்காவிடத்து, அன்னூர்க்குப் பிரதிநிதிகளாக அறுவர்க்கு மேற்படாத உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் ஆளுநர்க்கு இருத்தல் வேண்டும் எனவும் யோசனை

கூறப்பட்டது. தனியொரு மன்றத்தைக் கொண்ட சட்டக்களரியையே 1944 ஆம் வருடத்து அமைச்சரின் வரைபு குறிப்பிட்டது. மேற்சபை பற்றிப் பின்னர் தீர்மானிக்கலாம் என்ற யோசனையும் தெரிவிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டு முதலாக இயங்கிவந்த நிருவாகக் குழு முறைக்குப் பதிலாக அமைச்சவை முறை நிறுவப்படல் வேண்டும் எனவும் அமைச்சரின் வரைபு கூறிற்று.

இனி, அரசுக் கழகத்தின் உறுப்பினர் ஒருவரே பிரதம அமைச்சராக ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படவேண்டும் எனவும், மற்றைய அமைச்சரெல்லாரும் பிரதம அமைச்சரின் விருப்பத்துக்கமைய ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படவேண்டும் எனவும் அவ்வரைபு குறிப்பிட்டது. இந்த வரைபின்படி, முன்னம் விதிக்கப்பட்டிருந்த தகைமைகள் தளர்த்தப்படுதல் வேண்டும் எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆங்கிலத்திற் பேசும் ஆற்றலும் எழுதும் ஆற்றலும் இருத்தல் அவசியம் என்ற நிபந்தனை அகற்றப்படுதல் வேண்டும் என அவ்வரைபு எடுத்துரைத்தது.

இனி, எந்த ஒரு மதத்திற்கோ இனத்துக்கோ சிறப்புரிமைகளை வழங்குமியல்புடைய அல்லது தீங்கு விளைக்குமியல்புடைய சட்டங்களை இயற்றுதல், அரசுக் கழகத்தின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாதல் வேண்டும் எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டது. அன்றியும், யாப்பினில் மாற்றமோ திருத்தமோ செய்தற்கு அரசுக் கழகத்தின் உறுப்பினரில் 2/3 பாகமான பெரும்பான்மையோரின் வாக்கு அவசியம் எனவும் விதிக்கப்பட்டது.

தற்காப்பும் வெளிநாட்டு அலுவல்களும்; வங்கித்தொழிலும் செலாவணியும்; பிற ஆணிலங்களோடு வியாபாரம்; கடற்படை விவகாரங்கள்; இலங்கையில் வதியாத பிற நாட்டவரின் சொத்துக்கள்—எனுமிவைபற்றிய விசேட அதிகாரங்கள் ஆளுநர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படத்தக்கன என அமைச்சரின் வரைபு கூறிற்று. இனி, குறிப்பிட்ட ஒரு மதத்தினர்க்கோ இனத்தவர்க்கோ சிறப்புரிமையளிக்கின்ற அல்லது ஊறுவிளைக்கின்ற சட்டங்களை இயற்ற அரசுக் கழகம் முயற்சி செய்யுமிடத்து, அதனைத் தடுத்தற்கு ஆளுநர் நாயகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ஆளுநர்க்கு வழங்கவேண்டிய இவ்வதிகாரங்கள் காரணமாக, அரசுக்கழகத்தின் அதிகாரங்கள் மேலும் கட்டுப்படுத்தப்படும் என்பது தெளிவு.

அமைச்சர்களின் வரைபிற்கண்ட மேற்கூறிய அமிசங்களைப் பார்க்கும்போது, சிறுபான்மையினங்களின் சம்மதத்தைப் பெறத்தக்கவகையிலே தமது யோசனைகள் அமையவேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்பதும், அவ்வழி, பிரித்தானிய அரசின் இசைவைப் பெறுவதிலே இடர்ப்பாடுகள் உண்டாவதைத் தடுக்க விரும்பினார்கள் என்பதும் தெளிவாகின்றன.

1943 ஆம் ஆண்டுப் பிரகடனப்படி, அரசுக் கழகத்தின் உறுப்பினரில் 75 சதவீதத்துக்குக் குறையாதோரின் ஒப்புதலை அமைச்சர் சபையின் வரைபு பெறுதல் வேண்டும். இத்தகைய பெரும்பான்மையுறுப்பினரின் ஒப்புதலைப் பெறுதற்கு, சிறுபான்மையினங்களின் ஆதரவு அவசியம் என்பதை அமைச்சர்கள் உணர்ந்திருந்தார்கள். பிரித்தானியக் குடியேற்ற நாட்டு அலுவலகத்தின் எதிர்ப்பைத் தூண்டி விடுமளவிற்கு ஆளுநரின் அதிகாரங்களைக் குறைத்தலும், சிறுபான்மையினங்களுக்கு அதிருத்தியளிக்கத்தக்க யோசனைகளைச் சேர்த்துக்கொள்ளலும் புத்தியாகாது என அவர்கள் கருதினுர்கள். ஆளுநர்க்கென்று ஒதுக்கப்பட்ட விசேட அதிகாரங்களிலே அமைச்சர்களின் இந்த மனப்பான்மையைக் காணலாம்.

உண்ணுட்டு அலுவல்களிற் பூரணமான பொறுப்பாட்சியளிக்கும் ஒரு யாப்பு முறையிலே சிறுபான்மையினங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பிறிதொரு முயற்சியாக, அரசாங்கசேவை ஆணைக்குழுவொன்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவொன்றும் நிறுவப்படவேண்டுமென அமைச்சர் சபை யோசனை கூறிற்று. இந்த இரண்டு ஆணைக்குழுவிற்கும் ஆளுநர்நாயகமே உறுப்பினரை நியமிப்பார். மேலும், எல்லை நிருணய ஆணைக்குழு சுதந்திரமான ஒரு குழுவாக இயங்கவேண்டும் என்பதோடு, அதன் தலைவராகப் பிரதம நீதிபதியோ உச்ச நீதி மன்றத்து நீதிபதியொருவரோ நியமிக்கப்படுதல் வேண்டும் என்றும், அரசுக் கழகத்தின் உறுப்பினரல்லாத பிறரே ஆணைக்குழுவின் மற்றைய இரு உறுப்பினராக இருக்கத் தக்கவர் என்றும் அமைச்சர் சபை ஆலோசனை கூறிற்று. மேலும், அமைச்சரின் வரைபுப்படி, இந்த உறுப்பினர் யாவரும் ஆளுநராலேயே நியமிக்கப்படுவர்.

மேற்கூறிய பிரேரணைகளே அமைச்சர்மாரின் வரைபிலே இடம் பெற்றிருந்தன. 1944 ஆம் வருடத்து இந்த வரைபு இந்நாட்டின் யாப்பு வளர்ச்சியிலே முக்கியமான ஒரு கட்டத்தைக் குறிக்கின்றது எனலாம். சோல்பெரியின் சீர்திருத்த யோசனைகளும், அவற்றைத் தொடர்ந்து செயற்படுத்தப்பட்ட யாப்பும் அமைச்சரின் வரைபையே ஆதாரமாகக் கொண்டவை. அன்றியும், 1972 இற் சுதந்திரமான யாப்பு நிருணய மன்றத்தால் வரையப்பட்ட யாப்பிலேயும், இந்த வரைபின் அமிசங்கள் சிலவற்றைக் காணலாம்.

அமைச்சர் சபை தயாரித்த இந்த யாப்பு வரைபு ஆளுநர் மூலமாகப் பிரித்தானியக் குடியேற்ற நாட்டுச் செயலாளர் ஒலிவர் ஸ்ரான்லிக்கு 1944 பெப்பிரவரியில் அனுப்பப்பட்டது. போர் முடியும் வரை காத்திருக்காது, இந்த யாப்பு வரைபை ஆராய்தற்காக ஓர் ஆணைக்குழுவை அனுப்பிவைக்குமாறு அமைச்சர் சபை

கேட்டுக்கொண்டது. பழைமைக் கட்சியைச் சேர்ந்த குடியேற்ற நாட்டுச் செயலாளர் ஒலிவர் ஸ்ரான்லி அவர்கள் இந்த வேண்டு கோளுக்கு உத்தரமாக, பிரித்தானியப் பாராளுமன்றத்திலே 1944 யூலேயில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், அமைச்சர்களின் வரைபைமட்டுமன்றி, சிறுபான்மையினங்களின் கருத்துக்களேயும் ஆராய்ந்தறிதற்காக ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படுமெனப் பிரகடனஞ் செய்தார். 1943 மேயில் அமைச்சர்களின் வரைபுபற்றிக் குறிப்பிட்டுக் குடியேற்ற நாட்டுச் செயலாளர் விடுத்த பிரகடனத்திலே, சிறுபான்மையினங்களின் கருத்துகளும் ஆராயப்படும் என்ற நிபந்தனே இடம்பெறவில்லே. ஆதலின், பிரித்தானியப் பாராளுமன்றத்திலே பின்னர்க்குடியேற்ற நாட்டுச் செயலாளர் விடுத்த பிரகடனமானது முன்பு 1943 மேயில் விடுக்கப்பட்ட பிரகடனத்துக்கு முரணுனது என்று அமைச்சர் சபை சுட்டிக்காட்டியதோடு, தமது யாப்பு வரைபையும் திருப்பிப் பெற்றுக்கொண்டது. ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமென 1944 திசம்பரில் அறிவிக்கப்பட்டபோது, அந்த ஆணைக்குழுவை புறக்கணித்தல் வேண்டுமென அமைச்சர் சபை ஒருமனதாகத் தீர்மானித்தது.

இந்த ஆணைக்குழு 1944 திசம்பரில் நியமிக்கப்பட்டு, இலங்கை வந்தடைந்தது. சோல்பெரிப் பிரபுவைத் தலேவராகக் கொண்ட இக்குழுவிற் சேர் பிரடெரிக் றீஸ் என்பாரும், எப். ஜே. பரோஸ் என்பாரும் மற்றைய உறுப்பினராக இருந்தனர்.

இந்த ஆணைக்குழுவைப் புறக்கணித்தல் வேண்டுமென அமைச்சர் சபை ஒருமனதாகத் தீர்மானித்த போதிலும், அது இலங்கைக்கு வந்து தன் பணியைத் தொடங்கிய போது, செல்வாக்கு மிக்க தலேவர் பலர் அதற்கு ஆதரவளித்தனர். அக்காலமளவிலே சேர். டீ. பி. ஜயதிலக இந்தியாவுக்கு உயர் ஆணேயாளராக அனுப்பப்பட்டபின், அவர் வகித்த பதவிகளுக்கு டீ. எஸ். சேனுநாயக்கா நியமிக்கப்பட்டார். அவ்வழி, அரசுக்கழகத்தின் தலேவராகவும் அமைச்சர் சபையின் உபதலேவராகவும் அப்போது சேனுநாயகாவே பணியாற்றினுர். பிரதான அமைச்சராகிவிட்ட டீ. எஸ். சேனுநாயகாவும், குடியியற் காப்பு ஆணேயாளராக விளங்கிய ஒலிவர் குணத்திலகாவும் சேர் ஜியோபிரி லெயிற்றன் முதலிய பிரித்தானிய அதிகாரிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் ஆணைக்குழுவிற்கு ஆதரவு அளித்தமையாலே, அதனேப் புறக்கணிக்கும் இயக்கம் வலியிழந்து போய்விட்டது. அன்றியும், ஆணைக்குழு மிகச் சுருங்கிய காலத்திலே தனது பணியையும் முடித்துக் கொண்டது. சோல்பெரி அறிக்கை 1945 செத்தெம்பரில் வெளியிடப்பட்டது. சோல்பெரி அறிக்கை விதந்துரைத்த யாப்பு முறை, அமைச்சர்

களின் வரைவைப் பெரும்பாலும் ஒத்திருந்தமையால், அரசுக் கழகம் அந்த யாப்புமுறையினைத் தெளிவான பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொண்டது. கழகத்தில் 51 உறுப்பினர் அதற்குச் சாதகமாகவும், 3 உறுப்பினர் மாறாகவும் வாக்களித்தனர். சோல்பெரியின் விதந்துரைகள் அரசுக்கழகத்திலே 2/3 பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்படவே, பிரித்தானியக் குடியேற்ற நாட்டு அலுவலகத்துச் சட்ட நிபுணர்கள் சோல்பெரியின் விதந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய யாப்பினை வரைந்தளித்தார்கள். பிரித்தானிய அரசும் 1946 மே 15 ஆம் தேதியளவில் அப்புதிய யாப்பிற்குத் தனது இசைவை அளித்தது.

சோல்பெரி ஆணைக்குழுவின் விதந்துரைகளை ஆராயுமுன்னர், அவ்விதந்துரைகளுக்கு அடிப்படையாயிருந்த காரணிகளை நாம் ஊன்றிக் கவனித்தல் வேண்டும். டொனமூர் யாப்பிற்கு மாறாயெழுந்த கண்டனங்கள்; அமைச்சர் சபையின் யாப்பு வரைவு; இலங்கைத் தமிழ்த்தலைவர்களின் தலைமையிலே சிறுபான்மைப் பிரதிநிதிகள் வற்புறுத்திய கருத்துகள்; கண்டித்தேசியச் சங்கம் சமர்ப்பித்த கருத்துகள் — ஆகியன எல்லாம் சோல்பரி ஆணைக் குழுவால் ஆராயப்பட்டன. இவ்வாறு பல்வேறு கோட்டிகள் வற்புறுத்திய கருத்துகளையெல்லாம் ஆணைக்குழு தக்கவாறு கவனித்து ஆராய்ந்தது எனும் உண்மை அக்குழு விடுத்த அறிக்கைகளிலிருந்து புலனாகிறது. இலங்கைத் தமிழரின் செல்வாக்கை ஒடுக்குதற்குச் சிங்களமக்கள் ஒற்றுமைப்படுதல் வேண்டும் என்றவாறாகச் சில சிங்கள உறுப்பினர் அரசுக் கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் சாற்றிய கூற்றுக்கள் விவேகமற்றவை என ஆணைக் குழு கருதியது. இனி, தாழ்நாட்டுச் சிங்களவர்க்கும் இலங்கைத் தமிழர்க்கும் வழங்கப்படவிருக்கும் ஆட்சிமுறையிலிருந்து வேறான தனிப்பட்ட ஓர் ஆட்சிமுறையை வேண்டிநின்றனர் கண்டிச் சிங்களத் தலைவர்கள். ஆயின், ஆணைக்குழுவினரோ நவீன கருத்துகள் பரவிவரும் இக்காலத்திலே, உள்ளபடியான நிலைவரத்தைக் கண்டித் தலைவர்கள் உணர்ந்து நடக்க வேண்டும் என்றும், இறந்த காலத்தை இறுகப்பற்றிக் கொண்டு நிற்றலாகாது என்றும், எதிர்காலத்திலே சீரும் சிறப்பும் எய்தத்தக்க நெறியிலே அவர்கள் செல்லல் வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினார்கள். கண்டித் தலைவர்களின் கோரிக்கைகள் யாவை எனப் பார்ப்போம். கூட்டாட்சி முறை; 1815 ஆம் ஆண்டுக் கண்டி உடன்படிக்கைக்கு அமைய, கண்டி மக்களின் சமயம், சட்டமரபு, தொல்கால வழமைகள் ஆகியவற்றைப் பேணும் வகையிலே கண்டி நாட்டுக்கு விசேட வகையான ஆட்சிமுறை; கண்டி நாட்டிலிருந்து பெறப்படும் வரிகள் கண்டி நாட்டின் அபிவிருத்

திக்கே முற்றுகப் பயன்படுத்தப்படுதல் எனுமிவையே கண்டித் தலைவர்களின் கோரிக்கைகள். இக்கோரிக்கைகளை ஆணைக்குழு நிராகரித்துவிட்டது. இனி, தமிழ்ச்சங்கங்களின் தலைவர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு உத்தரமாக ஆணைக்குழு தனது கருத்தைத் தெளிவாக வெளியிட்டது. பெரும்பான்மையினத்தைச் செயற் கைமுறைகளாற் சிறுபான்மையினமாகத் தாழ்த்த முயலுதல் நியாயமாகாது என்றும், அது பயனற்ற செயல் என்றும் ஆணைக் குழு சுட்டிக்காட்டிற்று.

அகில இலங்கைத் தமிழ் மாசபையின் கோரிக்கை யாதென இனிக் கவனிப்போம். டொனமூர் யாப்பின்படி நிறுவப்பட்ட ஆள்புலவாரியான பிரதிநிதித்துவமானது பெரும்பான்மையினத் தின் சருவாதிகாரத்துக்கே வழிகோலும் என்றும், அதனுல், 'பல் வேறு இனங்களிடையே சமநிலைப் பிரதிநிதித்துவம் நிலவவேண் டும் என்றும் மாசபை வற்புறுத்திற்று. இலங்கை நாட்டை 100 தேர்வகங்களாகப் பிரித்து, அவற்றில் 50 தேர்வகங்கள் சிங்கள மக்களுக்கும், 25 தேர்வகங்கள் தமிழர்களுக்கும், எஞ்சிய 25 தேர்வகங்கள் மற்றைய சிறுபான்மையினங்களுக்கும் ஒதுக்கப் படல் வேண்டுமென அகில இலங்கைத் தமிழர் மாசபை கோரி நின்றது. மேலும், அமைச்சர் சபையிலே எந்தவோர் இனத்துக் கும் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பிரதிநிதித்துவம் அளிக்கப்பட லாகாது என்றும் தமிழர் மாசபை வற்புறுத்தியது. ஆயின் ஆணைக்குழுவோ இத்தகைய கோரிக்கைகள் உறுதியற்ற ஆட்சிக்கே இட்டுச் செல்லும் என்றும், இனவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துவதாய் அமையும் என்றும், சட்ட நிர்ப்பந்தத்துக்கு இணங்க அமைச்சர் சபையை அமைத்தால் அச்சபையில் ஒத் துழைப்பு அரிதாகிவிடும் என்றும் சுட்டிக்காட்டியது. இக் கார ணங்கள் பற்றித் தமிழ் மாசபையின் கோரிக்கைகளை ஆணைக்குழு நிராகரித்தது.

இனி, அமைச்சர் சபையின் வரைபிலே ஆணிலப்பதம் இலங் கைக்கு அளிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை இருந்த போதிலும், அக்கோரிக்கை அக்காலக் கட்டத்திலே சாத்தியமா காது என்று ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது. இலங்கை நாடு இந்து சமுத்திரத்திலே கேந்திரமான ஒரு நிலையினை வகிப்பதால், பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும் பற்றி விசேட கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்; அன்றியும், அத்தகைய முக்கியமான விடயங்களைப் பொறுப்பேற்பதற்குத் தக்க பயிற்சியும் தேர்ச்சியும் இந்நாட்டுத் தலைவர்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்—என்றெல் லாம் ஆணைக்குழு எடுத்துக் கூறிற்று. எனவே, பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும் பற்றிய அதிகாரங்கள் தொடர்ந்து பிரித்தானிய அரசிடமே விடப்பட்டன. இக்காரணங்கள் பற்றி,

ஆணிலப்பதம் வழங்குதல் அக்கட்டத்திலே வாய்ப்பாகாது என்றும், ஆணிலப்பதத்துக்கு இட்டுச் செல்லும் முதற்படியாகப் புதிய யாப்பு அமையும் என்றும் ஆணைக்குழு கூறியது.

இரு மன்றங்களைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறையே இலங்கையில் நிறுவப்படுதல் வேண்டுமெனச் சோல்பெரி அறிக்கை விதந்துரைத்தது. பிரதிநிதிகளின் சபையானது ஆள் புலவாரியாகத் தெரிவுசெய்யப்பட்ட 95 உறுப்பினரையும், ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 உறுப்பினரையும் கொண்டதாய் அமையும். மேற்சபையானது பிரதிநிதிகள் சபையால் தெரிவுசெய்யப்பட்ட 15 உறுப்பினரையும், ஆளுநரால் நியமிக்கப்பட்ட 15 உறுப்பினரையும் கொண்டதாய் அமையும். பிரதிநிதிகள் சபை அவசரப்பட்டும் தக்க ஆய்வின்றியும் சட்டமுறிகளை நிறைவேற்றுமிடத்து, அத்தகைய சட்ட முறிகளை ஆறுதலாகவும் நிதானமாகவும் ஆராய்ந்து விவாதிப்பதற்கு இத்தகைய மேற் சபை உதவுமெனச் சோல்பெரி ஆணைக்குழுவினர் கருதினர். அன்றியும், சிறுபான்மையினங்களின் நலவுரிமைகளுக்கு ஊறுவிளைக்கக்கூடிய சட்டமுறிகளைத் தடுக்கவல்ல ஒரு கருவியாகவும் மேற்சபை ஓரளவுக்குப் பயன்படலாம் என்றும் அவர்கள் கருதினர்கள். மேலும், ஆளுநர்க்கும் பிரதிநிதிகள் சபைக்கு மிடையே யாதும் முரண்பாடு தோன்றுமே தடுத்தற்கும் மேற்சபை உதவலாம். மேற்சபையிலே நடக்கும் அறிவு சான்ற விவாதங்கள் பொதுமக்களுக்கு அரசியல் ஞானத்தைப் புகட்ட உதவலாம் — என்றெல்லாம் ஆணைக்குழுவினர் கருதினர்கள். அரசியற் பூசல்களிலே தீவிரமாகப் பங்குபற்றத் தயங்குபவரும் இனவாதக் கன்னைகளினின்றும் ஒதுங்கி நிற்பவருமான முதிர்ந்த அறிவாளிகளே மேற்சபைக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென விதந்துரைக்கப்பட்டது.

நிதியோடு சம்பந்தப்படாத விடயங்கள் பற்றிச் சட்டமுறிகளைத் துவக்கி வைத்தற்கு மேற்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டது. இனி, நிதியோடு சம்பந்தப்பட்ட முறிகளையும் ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்குச் சுணக்கி வைக்கவும் அச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டது. மேற்சபை உறுப்பினர் தம்முள் ஒருவரை மேற்சபைத் தலைவராகத் தெரிவுசெய்வர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் தலைவர் பிரித்தானியப் பிரபுக்கள் சபையின் தலைவரோடு ஒருங்கு வைத்தெண்ணத்தக்க தகைமை உடையவராவர்.

தேர்வகங்களின் எல்லை நிருணயம்பற்றிச் சோல்பரி ஆணைக்குழுவின் பிரதான விதந்துரை யாதெனில், இனவாரிப் பிரதிநிதித்துவத்தை மறுத்து, ஆள்புலவாரியான பிரதிநிதித்துவத்துக்கு முதன்மை அளித்தமையே. எனினும், சில மாகாணங்களிலே சிறுபான்மையினத்தோர் பெரும்பான்மை இனத்தவ

ரோடு இடைமிடைந்து காணப்படுமிடத்து, அச்சிறுபான்மை இனத்தவர்க்கும் நியாயமான பிரதிநிதித்துவம் வழங்குதற்காக ஆணைக்குழுவானது பல - உறுப்பினர் தேர்தற்றெகுதிகளையும் உருவாக்கலாமென விதந்துரைத்தது. இனி, அமைச்சரின் வரைபிலே கண்டவாறு, குடித்தொகையும் பரப்பளவுமே தேர்வகங்களை வரையறுப்பதிற் பிரதான காரணிகளாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென ஆணைக்குழு கருதிற்று. ஒவ்வொரு குடிமதிப்புக்குப் பின்னரும், ஓராண்டு காலத்துள் நாட்டினைத் தேர்வகங்களாகப் பிரிக்கும்பொருட்டு, அரசியலில் ஈடுபடாத மூவரைக் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்படுதல் வேண்டும். இத்தகைய முறைப்படி நடக்கும் தேர்தலிலேயும் சிற்றளவினவான சிறுபான்மையினங்கள் சிலவற்றுக்கு — உதாரணமாக, ஐரோப்பியர், பறங்கியர், மலாயர் போன்ற இனங்களுக்கு — தம்மினப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிட்டாமற் போகலாம். ஆதலின், பிரதிநிதிகள் சபைக்கு 6 உறுப்பினரை ஆளுநர் நியமிக்கும்போது, இத்தகைய சிற்றளவினவான சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளுக்கும் ஆங்கு இடமளிக்கலாம்.

பிரித்தானிய அமைச்சவையைத் தழுவிய அமைச்சவைமுறையையும் (கபினெற்று முறையையும்) சோல்பெரி ஆணைக்குழு விதந்துரைத்தது. நிருவாக அதிகாரம் அமைச்சவைக்கும், சட்டவாக்க அதிகாரம் பிரதிநிதிகள் சபைக்கும் ஒப்புவிக்கப்பட்டன. அமைச்சர்கள் தத்தம் அமைச்சுகளுக்குப் பொறுப்புடையராய் இருக்க, அமைச்சவை கூட்டுப்பொறுப்பு எனுங் கோட்பாட்டுக்கமைய இயங்குவதாகும். மேலும், அமைச்சவை பிரதிநிதிகள் சபைக்குப் பொறுப்புடையதாகும். டொனமூர் யாப்புமுறையிலே அரச அலுவலாளர் மூவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் முறையே நிதியமைச்சரிடமும் நீதியமைச்சரிடமும் உண்ணுட்டு அலுவல் அமைச்சரிடமும் ஒப்படைக்கப்படவேண்டுமென ஆணைக்குழு விதந்துரைத்தது. பிரதிநிதிகள் சபையிலே பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் பிரதம அமைச்சராக ஆளுநரால் நியமிக்கப்படுவர்; மற்றைய அமைச்சர்கள் யாவரும் பிரதம அமைச்சரின் விதந்துரையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கவேண்டிய விடயங்களைப் பிரதம அமைச்சரே தீர்மானிப்பார். அமைச்சரின் வரைபு குறிப்பிட்டவாறு அமைச்சரின் எண்ணிக்கையை 10 ஆக வரையறைசெய்தல் அமைவாகாது எனக் கூறிய ஆணைக்குழு, அவ்வெண்ணிக்கை காலத்தின் தேவைகளுக்கேற்ப வேறுபடலாம் என எடுத்துரைத்தது. பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்படவேண்டுமென அமைச்சரின் வரைபு குறிப்பிட்ட கோரிக்கையையும் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது. ஆனால், அன்னுரை பாராளுமன்றச்

செயலாளர் எனக் குறிப்பிடுவதே நலமென ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது. ஒவ்வோர் அமைச்சுக்கும் ஒவ்வொரு செயலாளரை நியமிக்கவேண்டுமென அமைச்சரின் வரைபு எடுத்துக் கூறிற்று. அந்த யோசனையையும் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டது. அமைச்சவையை அமைக்கும்போது, குறைந்தபட்சம் இரண்டு அமைச்சர்களும் இரண்டு பாராளுமன்றச் செயலாளர்களும் மேற்சபையிலிருந்து நியமிக்கப்படல்வேண்டுமென ஆணைக்குழு விதந்துரைத்தது. சிறுபான்மை இனங்களின் நலவுரிமைகளைப் பாது காப்பதற்கு இந்த ஏற்பாடு உதவும் என ஆணைக்குழு நம்பியிருக்கலாம். இனி, மாட்சிமை தங்கிய மன்னரின் இசைவைப் பெறுதற்காக ஆளுநர் ஒதுக்கிவைக்கத்தக்க சிலவகைச் சட்டமுறிகள் பற்றியும் சோல்பெரி அறிக்கை தெளிவாக வரையறுத்துக் கூறிற்று. பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும்; பொதுநலவாயநாடுகளோடு வர்த்தக உடன்படிக்கைகள்; குடிவரவைத் தடுத்தலும் மட்டுப்படுத்தலும்; சுங்கத்தீர்வை விதித்தல்; இலங்கையில் வதியாத பிரித்தானியர்க்கு இலங்கைநாட்டிலுள்ள சொத்துக்கள், பொதுநலவாய நாடுகளோடு போக்குவரத்துத் தொடர்பும் வியாபாரத் தொடர்பும்; யாதுமொரு தேசிய இனத்துக்கு எதிரான நடவடிக்கைகள்; ஆளுநரின் ஏற்பாடுகளுக்கு முரணான நடவடிக்கைகள் — ஆகிய இவையெல்லாம் ஒதுக்கிய விடயங்களாகக் கணிக்கப்பட்டன. இந்த ஒதுக்கிய விடயங்கள் சம்பந்தமாகப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றுஞ் சட்டவாக்கங்களைத் தடுத்துவைத்தற்கு ஆளுநர் அதிகாரம் பெற்றிருந்தார். இத்தகைய சட்டவாக்கங்கள்பற்றி, பிரித்தானிய அரச மதியுரைஞர்களின் அல்லது சட்டத் தரணி நாயகத்தின் ஆலோசனையை ஆளுநர் நாடிப்பெறுதல் வேண்டும். பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கும் பிரித்தானிய மன்னர்க்குமிடையேயுள்ள தொடர்புகளை நெறிப்படுத்தும் மரபுகளைத் தழுவியே இலங்கை ஆளுநரும் இங்கு நடந்துகொள்ளல் வேண்டுமென விதந்துரை கூறப்பட்டது. இவ்வாறு, ஆளுநரே பாராளுமன்றத்தைக் கட்டழைப்பர்; ஒத்திவைப்பர்; குலைப்பர். அன்றியும் பிரதம அமைச்சரின் ஆலோசனைப்படி அவரே அமைச்சர்களை நியமிப்பர் அல்லது விலக்குவர்.

இனி, பிரித்தானிய அரசின் அதிகாரங்களையும் சோல்பெரி அறிக்கை தெளிவாக வரையறுத்துக் கூறிற்று. வெளிநாட்டு அலுவல்களும் பாதுகாப்பும்பற்றிய அதிகாரங்களும் அவைபற்றிய சட்டங்களை யாக்கும் அதிகாரமும் பிரித்தானிய முடிக்குரிய அதிகாரங்களாக வரையறுக்கப்பட்டன. மேலும், குறித்த ஒரு மதத்துக்கோ இனத்துக்கோ சிறப்புரிமையளிக்கின்ற அல்லது தீங்கு விளைக்கின்ற சட்டங்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றுமே தடுக்குமுகமாகச் சட்டங்கள் இயற்றப்படுதல் வேண்டும்

எனவும் சோல்பெரி அறிக்கை எடுத்துக் கூறிற்று. ஆணைக்குழு விதந்துரைத்த இத்தகைய யாப்புச் சட்டங்களைப் பாராளுமன்றத்திலே குறைந்தபட்சம் 2/3 ஆன பெரும்பான்மை வாக்குகளால் மாத்திரமே மாற்றவோ திருத்தியமைக்கவோ முடியும் எனவும் ஆணைக்குழு வற்புறுத்தியது.

அமைச்சரின் வரைபிற் குறிப்பிட்டவாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவொன்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவொன்றும் நிறுவப்படவேண்டுமென ஆணைக்குழு விதந்துரைத்தது. பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் உறுப்பினராக இடம் பெருதோரிடையிருந்தே, ஆளுநர் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உறுப்பினரை நியமிப்பர். நீதிச்சேவை ஆணைக்குழுவானது பிரதம நீதிபதியையும் உச்ச நீதிமன்றத்து நீதிபதிகளுள் இருவரையும் கொண்டதாய் அமையும். அவர்களையும் ஆளுநரே நியமிப்பார். சிறுபான்மை இனங்களின் அச்சத்தையும் சமுசயத்தையும் போக்குதற்பொருட்டு, அரசாங்க சேவைக்கும் நீதிச்சேவைக்கும் நியமனங்கள் செய்வதிலும், அச்சேவைகளிலே இடமாற்றஞ் செய்வதிலும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பேணுவதிலும் எவ்வித இனபேதமோ அரசியற் பேதமோ பாராட்டலாகாது என வற்புறுத்திய ஆணைக்குழு, சட்டபூர்வமாக இம்முறைமை ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் எனவும் அழுத்திக் கூறிற்று.

சோல்பெரி ஆணையாளர்கள் தமது பணியை முடிவுறுத்திய பின்னர், இங்கிலாந்துக்கு மீண்டார்கள். அவர்களுடைய அறிக்கையின் உள்ளடக்கத்தை நேராய் அறிதற்காக இங்கிலாந்துக்குச் செல்ல டீ. எஸ். சேனநாயக்கா ஒருப்பட்டார். அதற்கிணங்க, பிரித்தானியக் குடியேற்ற நாட்டுச் செயலாளர் ஒலிவர் ஸ்ரான்லி அவரை இலண்டனுக்கு வருமாறு அழைப்புவிடுத்தார். அந்த அழைப்புக்கிணங்க, சேனநாயக்கா அவர்கள் இங்கிலாந்துக்குச் சென்ருர். இதற்கிடையில், அக்கால் நடைபெற்ற பொதுத் தேர்தலிற் பழைமைக் கட்சியைத் தோற்கடித்துத் தொழிற்கட்சியே ஆட்சியதிகாரம் பெற்றிருந்தது.

இங்கிலாந்திலே அப்போது அச்சிலிருந்த சோல்பெரி அறிக்கையின் பிரதியைப் பார்வையிடும் வாய்ப்பு சேனநாயக்காவுக்குக் கிடைத்தது. அமைச்சர்களின் வரைபையே பெரும்பாலும் தழுவியதாகச் சோல்பெரி யாப்புமுறை அமைந்திருந்தபோதிலும், சேனநாயக்கா எதிர்பார்த்த ஆணிலப்பதம் அதனுல் வழங்கப்படவில்லை. எனினும், ஆணிலப் பதத்துக்கு இட்டுச்செல்லும் ஒருபடியாக இப்புதிய யாப்பைச் சிறிது காலம் பரீட்சித்துப் பார்த்தல் நலமாகுமென்று குடியேற்ற நாட்டுச் செயலாளர் சேனநாயக்காவுக்குத் தெருட்டினர். இலங்கையின் அரசியற் பிரச்சினையிலன்றி, இந்தியா, பர்மா, பலஸ்தீன் ஆகிய நாடுகளில்

எழுந்த சிக்கலான அரசியற் பிரச்சினைகளிலேயே கூடிய கவனஞ் செலுத்தல் வேண்டுமென்பது, அக்கால் ஆட்சிக்கு வந்த தொழிற் கட்சியின் கருத்தாயிருந்தது.

இலங்கைக்குத் திரும்பிய சேனநாயக்கா அவர்கள், சோல்பெரி யாப்பின்படி இலங்கைக்கு ஆணிலப்பதம் வழங்கப்படாவிட்டாலும், புதிய யாப்பைச் சிறிதுகாலம் வெற்றிகரமாகச் செயற்படுத்திய பின்னர், ஆணிலப்பதம் பெறுதல் சாத்தியமாகுமென மற்றைய தலைவர்களுக்கு அறிவுறுத்தினர். 1945 நவம்பரிலே சேனநாயக்கா கொண்டுவந்த தீர்மானம் — அதாவது சோல்பெரி யாப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் — அரசுக் கழகத்திலே பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்துக்குச் சார்பாக 51 வாக்குகளும், மாறாக 3 வாக்குகளும் கிடைத்தன.

புதிய யாப்புமுறைப்படி, 1947 ஓகத்திலே பொதுத் தேர்தல் நடைபெற்றது. இப்பொதுத் தேர்தலில், டீ. எஸ். சேனநாயக்காவின் தலைமையிற் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையான தானங்களைக் கைப்பற்றியது. பிரதிநிதிகள் சபையில் மொத்தமாகவுள்ள 95 தானங்களில் 42 தானங்களை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது. இவ்வாறாக, 14 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சவை நிறுவப்பட்டு, 1947 செத்தெம்பர் தொடக்கம் சோல்பெரி யாப்பு முறை இயங்கலாயிற்று.

எனினும், சோல்பெரி யாப்புமுறை மிகச் சுருங்கிய காலத்துக்கே — அதாவது 1947 செத்தெம்பர் தொடங்கி 1948 பெப்பிரவரி வரைக்குமே — செயற்பட்டது. இலங்கைத் தலைவர்கள் எதிர்நோக்கிய ஆணிலப்பதம் 1948 பெப்ரவரியில் இலங்கைக்கு வழங்கப்பட்டது. சோல்பெரி யாப்புமுறையிலிருந்து ஆணிலப்பதத்துக்கு அடியெடுத்து வைத்தமை, இத்துணை விரைவாகச் சாத்தியப்பட்டதற்குப் பல காரணிகளைக் கூறலாம். அக்காலத்தளவிலே, பெரும்பான்மையினத்துக்கும் சிறுபான்மையினங்களுக்குமிடையே கணிசமான அளவுக்கு ஒற்றுமை காணப்பட்டமை, முதற்காரணி எனலாம். அக்காலத்திலே யாப்புச் சீர்திருத்த இயக்கத்தை முன்னின்று நடாத்திய டீ. எஸ் சேனநாயக்கா அவர்கள் 1946 ஆம் ஆண்டளவில் ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கியிருந்தார். இலங்கைத் தேசிய மாசபை, சிங்கள மகா சபை, இலங்கை முஸ்லிம் கூட்டவை முதலாய தாபனங்களின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலே உறுப்பினராக இடம் பெற்றார்கள். சில தமிழ்த் தலைவர்களும் அதில் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். இவ்வாறாக. பெரும்பான்மை இனத்தின் ஆதரவு மட்டுமன்றி, சிறுபான்மைக் கோட்டிகளின் ஆதரவும் அதற்குக் கிடைத்தது. 1947 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்குப் பின்

னர், பாராளுமன்றத்திலே இடம்பெற்ற சுயாதீன உறுப்பினரும், மற்று, சில சிறுபான்மையினங்களின் பிரதிநிதிகளாக ஆளுநரால் நியமிக்கப்பட்ட உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்கு ஆதரவளித்தனர். இவ்வாற்ருல், ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சிறுபான்மையினங்களின் ஆதரவும் இருந்தமை புலனுயிற்று. மேலும், 14 அமைச்சுப் பதவிகளில், சிங்கள மகாசபைக்கு 4 பதவிகளும், தமிழர்க்கு 2 பதவிகளும், இலங்கைத் தொழிற் கட்சிக்கு ஒரு பதவியும், இலங்கை முஸ்லிம் கூட்டவைக்கு ஒரு பதவியும் வழங்கப்பட்டமை ஐக்கிய தேசியக் கட்சி வாயிலாக வளர்ச்சியடைந்த தேசிய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாயிற்று. பூரண சுய ஆட்சிக்கு எந்த நிபந்தனையைப் பிரித்தானிய அரசாங்கம் வற்புறுத்தியதோ அந்த நிபந்தனை இவ்வாறு பூர்த்திசெய்யப்பட்டது. மேற்கொண்டு யாப்புச் சீர்திருத்தங்கள் செய்வது பற்றிப் பிரித்தானிய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதில் இலங்கைத் தலைவர்களின் கை இவ்வாறு வலுப்பெற்று ஓங்கி நின்றது.

இனி, அக்காலத்திலே பிரித்தனில் நடந்தேறிய அரசியல் மாற்றங்களும், ஆணிலப் பதம் எய்துவதை விரைவு படுத்திய இரண்டாவது காரணியாகக் கொள்ளத்தக்கவை. இரண்டாவது உலகப் போர் முடிவுற்ற பின்னர் நடந்த பொதுத் தேர்தலில், பழைமைக் கட்சி தோல்வியடைய, தொழிற்கட்சியானது சீ. ஆர். அட்லி என்பாரின் தலைமையில் ஆட்சி பெற்றது. தொழிற்கட்சியானது பிரித்தானியக் குடியேற்றங்கள் பற்றிப் பொதுவாகத் தாராளமான பூட்கையைக் கடைப்பிடித்தது. அன்றியும், அக்கட்சியின் ஆட்சியிலே குடியேற்ற நாட்டுச் செயலாளராகப் பதவியேற்ற ஜோர்ஜ் ஹோல் என்பார் குடியேற்ற நாடுகளுக்குப் பூரணப் பொறுப்பாட்சி வழங்கப்படவேண்டும் என்ற கருத்தைப் பொதுவாக ஆதரிப்பவராக இருந்தார்.

இனி, அக்காலத்திலே இலங்கையில் ஆளுநர்-நாயகமாயிருந்த சேர் ஹென்றி மொங்க்-மேசன் மூர் என்பவரும் இலங்கைக்கு ஆணிலப்பதம் வழங்கப்படுவதை ஆதரித்தார். ஆணிலப்பதத்தை விரைவாக அடைதற்கு உதவிய மூன்ருவது காரணி இதுவெனலாம். இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சுதந்திரமளிப்பதற்காகப் பிரித்தானிய அரசாங்கம் வாக்களித்துவிட்டு, அவ்வாறே சுதந்திரம் வேண்டி நின்ற இலங்கை மக்களின் கோரிக்கையைப் புறக்கணிக்கவியலாது என்பதே மூரின் கருத்தாயிற்று.

இவ்வாருக, ஆணிலப்பதம் வேண்டும் என்ற கோரிக்கை கைகூடுவதற்குப் பல்வேறு காரணிகள் ஆதரவாயிருந்தன. இலங்கைத் தீவின் பெரும்பான்மையினத்துக்கும் சிறுபான்மையினங்களுக்குமிடையே நிலவிய ஒற்றுமையைப் பிரதிபலிக்குஞ் சமுக

மான அரசியற் சூழ்நிலை; குடியேற்ற நாடுகளிடத்துத் தாராள மான மனப்பாங்கைக் கொண்டிருந்த தொழிற்கட்சியின் அரசியல் வெற்றி; அக்கால ஆளுநர்நாயகம் இந்நாட்டுத் தலைவர்களுக்கு அளித்த ஆதரவு — ஆகிய இவையெல்லாம் தலையாய காரணி களாயிருந்தன.

இதற்கிடையிலே, டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள், ஆணிலப் பதம் வழங்குவதுபற்றி நினைவூட்டும் முகமாகக் கடிதமொன்றை, ஆளுநர்-நாயகத்தின் மூலமாகக் குடியேற்ற நாட்டுச் செயலாள ருக்கு அனுப்பினர். அக்காலத்திலே ஆளுநர்-நாயகமாயிருந்த சேர் ஹென்றி மொங்க்-மேசன் மூர் அவர்கள் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்குத் தாம் அனுப்பிய கடிதத்தில், ஆணிலப்பதம் வேண்டி நின்ற இலங்கைத் தலைவர்களின் கோரிக்கையைத் தாமும் ஆதரிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

குடியேற்ற நாட்டுச் செயலாளர் 1947 யூனிலே பிரித்தானியப் பாராளுமன்றத்தில் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அதில், பிரித்தானிய அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராக இருப்பதாகவும், இலங்கைக்கு ஆணிலப்பதம் வழங்கச் சித்தமாய் இருப்பதாகவும் உறுதியளித்தார். எனினும், ஆணிலப்பதம் வழங்கப்படுமுன், இருநாடுகளுக்குமிடையே சில உடன்படிக் கைகள் ஒப்பேறுதல் வேண்டுமென்றும் அவர் கூறினர்.

பிற்பாடு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பயனாக, 1947 திசம்பரிலே பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும் அரசாங்க சேவைகளும்பற்றி மூன்று உடன்படிக்கைகள் ஒப்பேற்றப்பட்டன. பிரித்தானிய அரசாங்கத்தின் சார்பாக ஆளுநர்நாயகம் மூரும், இலங்கையின் சார்பாக டீ. எஸ். சேனநாயக்காவும் உடன்படிக் கைகளிற் கையொப்பமிட்டனர். பாதுகாப்பு உடன்படிக்கையின் படி, போர்முயற்சிகளிலே பிரித்தனேடு ஒத்துழைக்கவும், பிரித் தானிய கடற்படைக்கும் ஆகாயப்படைக்கும் பிறபோர்முயற்சி களுக்குந் தளமாக இலங்கைநாட்டைப் பயன்படுத்த அனுமதித் தற்கும் டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் இலங்கையின் சார் பாக இணங்கினர். வெளிநாட்டு அலுவல்கள் சம்பந்தமான உடன்படிக்கையின்படி, பிரித்தானியப் பொதுநலவாயத்திலே ஒரு சுதந்திரநாடாக இலங்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசாங்க சேவைகள் பற்றிய உடன்படிக்கையின்படி, பிரித்தானிய சிவில் சேவையாளரின் உரிமைகளையும் பிற பிரித்தானிய அலுவலாளரின் உரிமைகளையும் பேணுவதற்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித் தது. இலங்கையோடு சில தொடர்புகளைத் தொடர்ந்து பேணு தற்கும், அத்தொடர்புகளின்வாயிலாகப் பெறத்தக்க நன்மைகளை உறுதிப்படுத்துதற்கும் பிரித்தன் செய்த முயற்சியே இவ்வுடன் படிக்கைகளாம் என்பது தெளிவு. இலங்கையிலே இந்த

உடன்படிக்கைகளுக்கு மாறுக, மாக்சியக் கோட்டியார் குறிப்பாக எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும், இலங்கைக்கும் பிரித்தனுக்குமிடையே கைச்சாத்தான இந்த உடன்படிக்கைகளுக்கு இசைவு நாடிய தீர்மானம் இலங்கைக் கீழ்ச்சபையிலே பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. 20 வாக்குகள் அதற்குச் சார்பாகவும் ஒரு வாக்கு மாறுகவும் சென்றன.

மேற்கூறிய உடன்படிக்கைகள் மூன்றும் கைச்சாத்தாகிய பின்னர், இலங்கைக்குச் சுயவாட்சி வழங்குவதற்கான இலங்கைச் சுதந்திரச் சட்டமுறி வரையப்பட்டது. அது 1947 நவம்பர் 26 ஆம் தேதியன்று பிரித்தானியப் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டது. 1948 பெப்பிரவரி 4 ஆம் தேதியிலிருந்து இலங்கைச் சுதந்திரக் கட்டளையானது செயற்படலாயிற்று.

இந்தச் சுதந்திரமான யாப்புமுறை, 1946 ஆம் வருடத்து யாப்பிலிருந்த குறைபாடுகளை நீக்கிற்று. இவ்வாறுக, சோல்பெரி யாப்பின்படி பிரித்தானிய முடிக்கிருந்த விசேட அதிகாரங்கள் — பாதுகாப்பும் வெளிநாட்டு அலுவல்களும் பற்றிய சட்டங்களை இயற்றும் அதிகாரமும், இலங்கையின் யாப்புமுறையிலே திருத்தங்கள் செய்யும் அதிகாரமும் — 1948 முதலாக அகற்றப்பட்டன. மேலும், இலங்கையின் அரசாட்சிக்குப் பிரித்தானிய அரசாங்கம் எவ்வாற்ருலும் பொறுப்பாகாது எனும் விதந்துரையும், இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தாலன்றிப் பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கு இலங்கையின் பொருட்டுச் சட்டமியற்றும் அதிகாரம் இருத்தலாகாது எனும் விதந்துரையும் 1948 பெப்பிரவரி 4 ஆம் தேதி தொடக்கம் செயற்படுத்தப்பட்டன. பூரணமான பொறுப்பாட்சி பெற்ற நாடாக இலங்கையானது பிரித்தானியப் பொதுநலவாயத்திலே இடம்பெற்றது. எந்த நாட்டோடும் பொருத்தனைகள் செய்யும் உரிமையும், எந்த நாட்டுக்கும் பிரதிநிதிகளை நியமிக்கும் உரிமையும், எந்தச் சருவதேச தாபனத்திலும் உறுப்புரிமை வகிக்கும் உரிமையும் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

ஏறத்தாழ ஐம்பதாண்டுக்காலமாக யாப்புச் சீர்திருத்தங்கள் வேண்டி இந்நாட்டுத் தலைவர்கள் செய்த அரசியற் கிளர்ச்சியானது, இவ்வாறு இலங்கை சுயவாட்சி பெற்றதோடு தனது குறிக்கோளை எய்திற்று.

11 ஆம் அத்தியாயம்

# கைத்தொழிற் புரட்சி

**பிரித்தானியா, பிரான்சு, சேர்மனி ஆகிய நாடுகளில் ஏற்பட்ட கைத்தொழிற்புரட்சி (18 ஆம் நூற்றுண்டின் நடுக்கூற்றிலிருந்து 19 ஆம் நூற்றுண்டு முடியும் வரை).**

விஞ்ஞான அறிவையும் தொழினுட்ப அறிவையும் அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிற் புரட்சியானது நவீன உலகை உருவாக்குவதிலே பங்குகொண்ட காரணிகளுள் முதலிடம் வகிக்கின்றது. சீனு, இந்தியா, கிரேக்கம் ஆகிய நாடுகளின் ஆதி நாகரிகங்களிலே கணிசமான அளவுக்கு விஞ்ஞான அறிவும் தொழினுட்ப அறிவும் காணப்பட்டன. நீர்ப்பாசனம் - நீர் வழங்கல் ஆகிய துறையில் ஆதிகால இலங்கையர் ஈட்டியிருந்த திறனும் தேர்ச்சியும் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். மேலும், இலங்கை போன்ற சிறு தீவில் வளர்ச்சியுற்ற நாகரிகத்தின் சில அமிசங்கள் தொழினுட்ப வளர்ச்சி சார்ந்தனவாகக் காணப்படுகின்றன என்ற எமது கருத்தை இவ்வுதாரணம் நிறுவுகின்றது. இந் நாகரிகங்களின் மரபுரிமையாக அமைந்த விஞ்ஞான தொழினுட்ப அறிவின் சிறப்பைக் குறைத்து மதிப்பிடலாகாது. ஆயினும், புரட்சி என்று கருதக்கூடிய அளவுக்குப் பெருமாற்றம் யாதும் அதனுல் ஏற்பட்டுவிடவில்லை. ஏனெனில், அத்தகைய மாற்றத்திற்குச் சாதகமான பலவகைக் காரணிகளின் சேர்க்கை, இந்நாடுகளின் சமூக பொருளாதார அமைப்பிற் காணப்படவில்லை. இப்பின்னணியில், 18 ஆம் நூற்றுண்டின் நடுக்கூற்றளவிலே ஐரோப்பாவில் விஞ்ஞான - தொழினுட்பத் துறையில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. 18 ஆம் நூற்றுண்டுவரை இத்துறைகளில் ஐரோப்பியருக்கிருந்த அறிவு சீனர், இந்தியர் போன்ற கீழைத் தேசத்தவர்களுக்கு இருந்த அறிவினை ஒத்திருந்தது. ஆயின் 18 ஆம் நூற்றுண்டின் நடுக் கூற்றிலிருந்து ஐரோப்பா இத்துறையில் முன்னேறிச் செல்வதை அவதானிக்கலாம். இக்காலந் தொட்டு, ஐரோப்பாவிலே நிகழ்ந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் பயனுக, கைத்தொழிலின் ஆக்க முறைகளிற் பெருமாற்றங்கள் உண்டாயின. இதன் பயனுகக் கைத்தொழில் விரைவாக வளர்ச்சியடைந்ததோடு ஆக்கவேகமும் பன்மடங்காகியது. கைத்தொழிற் புரட்சி என்று அழைக்கப்படும் அளவிற்கு இம்மாற்றம் தனிச்சிறப்புப் பெற்று

விளங்கியது. இம்மாற்றம், கைத்தொழிலில் ஆக்க வேகத்தைக் கூட்டியதுடன், வேறும் பல விளைவுகளைப் பயந்தது. மக்களின் வாழ்க்கைமுறைகளுமே அதனாற் பெரிதும் மாறுதலடைந்தன. இனி, கைத்தொழிற் புரட்சி ஐரோப்பாவிலேயே உருவாய போதிலும், அதன் செல்வாக்கினை ஐரோப்பாவின் எல்லைகளுக்கப் பாலும் உணரக்கூடியதாக இருந்தது. இச்செல்வாக்கு இன்னும் உலகின் ஏனைய நாடுகளுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது. எனவே, கைத்தொழிற் புரட்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் வழி வகுத்த காரணங்களை விரிவாக ஆராய்தல் சாலப்பொருந்தும். இவ்வத்தியாயத்திலே கைத்தொழிற் புரட்சி முதலில் உருவாகிய நாடாகிய இங்கிலாந்தும், அது பரவிய பிரதான நாடுகளாகிய பிரான்சும் சேர்மனியும் விரிவாக ஆராயப்படும். இவ்வாறு ஆராய்வதன் வாயிலாக, கைத்தொழிற் புரட்சியால் உண்டான பெரும் மாறுதலை நாம் ஓரளவுக்கு விளங்கிக் கொள்ளலாம்.

### பிரித்தானியா

**1760** ஆம் ஆண்டு தொடக்கம் **1830** ஆம் ஆண்டுவரை, பிரித்தானிய கைத்தொழிலில் பல மாற்றங்கள் நடைபெற்றன. இம்மாற்றங்கள் கைத்தொழிற் புரட்சி என்று அழைக்கப்படும் அளவிற்கு வலுப்பெற்று விளங்கின. ஒரு நாட்டின் தேசிய வருமானத்திற் பெரும்பகுதி கைத்தொழில் விளைவுகளிலிருந்து பெறப்படுமாயின், அல்லது அந்நாட்டின் குடித்தொகையிற் பெரும் பகுதியினர் கைத்தொழிலையே நம்பி வாழ்வார்களாயின், அதனைக் கைத்தொழில் மயமான நாடெனக் கூறலாம். இவ்வகையில் உலகிலே கைத்தொழில் மயமான முதலாவது நாடு பிரித்தானியா வாகும். பிரித்தானியா கைத்தொழில் மயமாவதற்கு வழி வகுத்த காரணிகளை நாம் இங்கு ஆராய்வோம்.

எந்தவொரு நாடும் கைத்தொழிற் பெருக்கம் அடைவதற்கு அவசியமாயுள்ள அடிப்படைக் காரணிகளுள் போதிய மூலதனப் பெருக்கமும் ஒன்றாகும். 18 ஆம் நூற்றாண்டளவில் இதற்கேற்ற முதலாளித்துவ வர்க்கத்தினர் பிரித்தானியாவில் இருந்தனர். 16 ஆம் நூற்றாண்டளவிலிருந்து பிரித்தானியாவின் வெளிநாட்டு வியாபாரம் விரைவாக விருத்தியடைந்தது. இவ்விருத்தியின் பயனாகவும் சிறுகைத்தொழிற்றுறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் பயனாகவும் 18 ஆம் நூற்றாண்டளவிற் பிரித்தானியாவிலே பணச் சந்தை நடைமுறைக்கு வரத்தொடங்கியது. இக்காரணம் பற்றி வர்த்தக வங்கிகள் போன்ற நிதி நிறுவங்கள் கைத்தொழில் விருத்திக்காகப் பிரித்தானியாவில் நிறுவப்பட்டன. சமுதாயத்தின் சேமிப்புகள் இவ்வங்கிகளில் வைப்பிலிடப்பட்டன; கைத்தொழின் முயற்சிகளுக்கு வேண்டிய முதலீட்டு வசதிகளும் கடன் வசதிகளும் ஒழுங்குசெய்து கொடுக்கப்பட்டன. எனவே, கைத்தொழி

லுக்கு வேண்டிய மூலதனம் பகிர்ந்தளிக்கப்பட்டது. கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்த அடிப்படைக் காரணி வெளிநாட்டு வியாபார விருத்தியாகும். 17 ஆம் 18 ஆம் நூற்றுண்டுகளில் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களிலே பிரித்தானியப் பேரரசு வளர்ச்சியுறத் தொடங்கியதும், அப்பேரரசில் அடங்கிய நாடுகளுடன் வியாபாரமும் விருத்தியடைந்தது. பிரித்தானியாவிலிருந்த தொழிற்பிரிப்பும் தொழினுட்பக் கண்டுபிடிப்பும் பரவுதற்கு இது உறுதுணையாக இருந்தது. பிரித்தானியப் பண்டங்களுக்கு ஐரோப்பாவிலே பாரம்பரிய சந்தை இருந்தபோதிலும், உலகின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட வெளிநாட்டுச் சந்தைகளின் விருத்தி கைத்தொழிற் புரட்சியை ஊக்குவிப்பதிற் கூடிய அளவுக்குப் பங்கு வகித்துள்ளதாகத் தோன்றுகின்றது. கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்த அடிப்படைக் காரணிகளிலே தொழினுட்பக் கண்டுபிடிப்பும் ஒன்ருகும் எனச் சில சந்தர்ப்பங்களிற் கருதப்படுகின்றது. ஆயின், விரிவடையும் கைத்தொழில்கள் உற்பத்திசெய்யும் பண்டங்கள் அனைத்தும் விற்பனையாவதற்கு வேண்டிய பெரும் சந்தை இல்லாதவிடத்து, விற்பனை யெதுவும் நடைபெற்றிருக்கவியலாது; தொழிற்சாலைகளும் விரிவடையமுடியாது. எனவே, கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்த அடிப்படைக் காரணி என்றவகையிலே, தொழினுட்பக் கண்டுபிடிப்பிலும் பார்க்க வெளிநாட்டுச் சந்தைகளின் வளர்ச்சியையே கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொள்ளல் வேண்டும். 1688 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசியற் புரட்சியின் பின் பிரித்தானியாவில் நிலவிய அமைதிநிலையும் அந்நாட்டின் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவியாகவிருந்த மற்றெரு காரணியாகும். மேலும், இக்காலப்பகுதியில் பிரித்தானியாவில் அரசியல் ஆதிக்கம் செலுத்திய நிலச் சொந்தக்காரர்களான உயர்குடிமக்கள் வாணிப முயற்சிகளையும் கைத்தொழில் முயற்சிகளையும் ஆதரிப்போராக இருந்தனர். விழுமியோர் குடும்பங்களின் இளைய தலைமுறையினர் வாணிபத்திலும் தொழின்முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தமையும், தொழின்முயற்சியாளர் உயர்குடிமக்களுடன் விவாகத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டமையும் இதற்கான காரணங்களாகும்.

மேலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிற் போலல்லாது மானியச் சமூக பொருளாதார முறையின் பல முக்கியமான சிறப்பியல்புகள் பிரித்தனிலே மறைந்தொழிந்து போய்விட்டன. எனவே, கைத்தொழிற் புரட்சிக்குப் பாதகமான தடைகள் பெரும்பாலும் வலியற்றுப்போய் விட்டன. தொழும்புமுறை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கவில்லை. இனி பிரான்சிலும் சேர்மனியிலும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டிருந்த வாரியப்பூட்கைகள்

கைத்தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருக்க, பிரித்தனில் அத்தகைய தடைகள் இருக்கவில்லை.

கைத்தொழில் — வர்த்தக அமைப்பையும் நிருவாகத்தையும் கவனித்துவந்த குழுமமுறை கைத்தொழில் வர்த்தக அபிவிருத்திக்குப் பங்கம் விளைத்தது. ஆயின் பிரித்தானியாவிலோ இக்குழுமமுறை அக்காலத்திலே அழிந்தொழிந்துபோகும் ஒரு நிறுவகமாக இருந்தது. எனவே வியாபாரமும் கைத்தொழிலும் அபிவிருத்தியடைவதற்கு உகந்த சுதந்திரமான சூழ்நிலை அங்கு நிலவியது. இக்கால கட்டத்திலேதான் பிரித்தானிய விவசாயமும் நவீனமயமாகத் தொடங்கியது. இதன் பயனுகப் பிரித்தானிய விவசாயம் முதலாளித்துவக் கோட்பாடுகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டது கிராமப் பகுதிகளில் ஏற்பட்ட நிலப்பற்ருக்குறை காரணமாகவும் பொருளாதாரத் தாக்கம் காரணமாகவும், கிராமக் குடித்தொகையிற் கணிசமான அளவினர் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புப் பெறும் நம்பிக்கையுடன் கைத்தொழிற் பிரதேசங்களுக்குச் சென்றனர். எனவே, கைத்தொழிற் புரட்சியின் விளைவாகத் தோன்றிய பெரும் தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு வேண்டிய தொழிலாளர்களைப் பெறுவதில் எவ்வித இடர்ப்பாடும் இருக்கவில்லை. இதுவும் கைத்தொழிற் புரட்சிக்கு உதவியாக இருந்தது.

புவியியற் காரணிகளும் பிரித்தானியக் கைத்தொழிற் புரட்சிக்குச் சாதகமாக இருந்தன என்பதையும் இங்குக் குறிப்பிடல் வேண்டும். பிரித்தானிய தீவுகள் அத்திலாந்திக் சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளன. பிரித்தானியாவின் கடல் வலி வளர்ச்சியடைவதற்கு இது முக்கிய காரணமாகும். வெளிநாட்டு வியாபாரத்தை இலாபகரமாக நடாத்தப் பிரித்தானியாவின் கடல்வலி வழிவகுத்தது. இனி, கைத்தொழிற் பெருக்கத்துக்கு அத்தியாவசியமான இரும்பும் நிலக்கரியும் போன்ற மூலப்பொருள்கள் பிரித்தானியாவில் ஏராளமாகக் கிடைத்தன. எனவே 18 ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்து 19 ஆம் நூற்ருண்டின் நடுக்கூற்றுவரையும் பிரித்தானியக் கைத்தொழில் துரிதமாக வளர்ச்சியடைந்தது. நவீன தொழினுட்பக் கண்டுபிடிப்புக்களின் பயனுக, உற்பத்தி முறைகளிற் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் சவுளிக் கைத் தொழிலிலேயே முதன்முதற் காணப்பட்டன. பிரித்தானியாவின் பாரம்பரிய உற்பத்திப் பொருள் கம்பளித்துணி; ஆயின் இக்கால கட்டத்தில் வெளிநாட்டுச் சந்தையிலே பருத்தித் துணிவகைகளுக்குக் கூடிய மதிப்பு இருந்தது. எனவே பிரித்தானியா பருத்தித் துணிவகைகளை உற்பத்தி செய்வதிற் கவனம் செலுத்தியது. அயன மண்டல நாடுகளிலே — குறிப்பாக, இந்தியா, எகிப்து, சூடான், முதலிய நாடுகளில் — உயர்தரப் பருத்திப் பஞ்சு உற்பத்திசெய்யப்பட்டது. அதே

சமயம், இந்நாடுகளிற் பருத்தித் துணிவகைகள் பெரிதும் தேவைப்பட்டன. இந்நாடுகளிலே — குறிப்பாக இந்தியாவிலே— பிரித்தானியப் பேரரசின் ஆதிக்கம் பரவத் தொடங்கியது. உயர் தரத் துணிவகைகளை உற்பத்தி செய்யும் நாடென்ற வகையில் இந்தியாவின் புகழ் ஆதிகாலந்தொட்டே உலகிற் பல பாகங்களிலும் பரவியிருந்தது. ஆயின், பிரித்தானிய பேரரசின் கீழ் ஏற்பட்ட தீங்கான பாதிப்பின் விளைவாக, செழித்தோங்கிய இக்கைத்தொழில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. இச்சூழ் நிலையில் குடியேற்ற நாடுகளில் உற்பத்திசெய்யப்பட்ட பருத்திப் பஞ்சைப் பிரித்தானியா பெற்று, திரும்பவும் அந்நாடுகளுக்கே அதனைப் பூர்த்திசெய்த துணி வகையாக இலாபத்துடன் விற்கத் தொடங்கியது.

எனவே, மூலப்பொருளை மலிவாக வாங்கி அதனை வெளிநாட்டுச் சந்தையிலே துணிவகையாக இலாபம் வைத்துப் பிரித்தானியா விற்றமையால், அந்நாட்டின் சவுளிக்கைத்தொழில் துரித வளர்ச்சியடைந்தது. சந்தையிலே தேவை அதிகமாக இருந்ததால், உற்பத்தி வேகத்தை அதிகரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. சவுளிக்கைத்தொழிலிலே புதிய தொழினுட்பக் கண்டுபிடிப்புக்கள் புகுவதற்கு அது வழிவகுத்தது. இப்புதிய கண்டுபிடிப்புகள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுதல் பயனுடைத்து. இவற்றுள், 1733 ஆம் ஆண்டில் ஜோன் கேய் என்பவர் கண்டுபிடித்த 'பறக்கும் நாடா' என்பதை முதலிற் குறிப்பிடலாம். ஐந்து வருடத்தின்பின், 1738 இல் லூயீபோல் என்பவர் கூலியாளின் உதவியின்றி நூல்நூற்கவல்ல சிறுபொறித்தொகுதியினைக் கண்டு பிடித்தார். 1767 இல் ஜேம்ஸ் காகிறீவ்ஸ் என்பவர் நூற்கும் ஜென்னி என்னும் நூற்புக் கருவியைக் கண்டு பிடித்தார். மிக நுண்மையான நூல் நூற்பதற்கு இது பயன்படுத்தப்பட்டது. 1769 இல் ஆக்றையிற் என்பவர் கண்டுபிடித்த நீர்ச் சட்டகம் எனும்பொறி நீள் தரப் பருத்தி நூலை உற்பத்தி செய்வதற்கு வழிவகுத்தது. சவுளி உற்பத்தியானது குடிசைக் கைத்தொழிலாக நடைபெறும் இடங்களில் இப்பொறியினை உபயோகிக்க இயலாது. எனவே இப்பொறியினைப் பயன்படுத்துவதற்கு விசேட கட்டடங்களை அமைக்கவேண்டியிருந்தது. இந்த அடிப்படையில், நீர்ச்சட்டகமானது நூற்கும் ஜென்னியிலும் கூடிய முக்கியத்துவம் உடையதாயிற்று. சவுளிக் கைத்தொழில் குடிசைக் கைத்தொழில் நிலையிலிருந்து தொழிற்சாலைகளுக்கு மாற்றப்படுவதற்கான முதல் கட்டம் இதுவாகும். 1776 ஆம் ஆண்டளவில் சாமுவேல் குறெம்டன் என்பவர் நீர்ச்சட்டகத்தையும் நூற்கும் ஜென்னியையும் இணைத்து 'மியூல்' என்ற பொறியினைக் கண்டு பிடித்தார். இப்பொறியின் உதவியுடன் ஓர் இருத்தல் பஞ்சைக்

கொண்டு ஏறத்தாழ 350 நூற்கண்ணிகளை உற்பத்தி செய்ய முடிந்தது. 1785 ஆம் ஆண்டில் எட்மன் காட்றயிற் என்பவர் விசைத் தறியினைக் கண்டுபிடித்தார். உவிற்னி என்பவர் பஞ்சு மணையை 1793 இற் கண்டு பிடித்தார். இப்பொறியைக் கொண்டு ஒரு தொழிலாளி ஏறத்தாழ 1300 இருத்தல் பஞ்சை ஒரு நாளிற் சிக்கெடுக்கலாம். இப்பொறிகளை இயக்குவதற்கு நீராவியைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஜேம்ஸ் வாட் நீராவிப் பொறியினை 1769 இற் கண்டு பிடித்தார். 1820 ஆம் ஆண்டளவில் சவுளிக் கைத்தொழிலில் நீராவி வலுவே பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. எனவே, குடிசைக் கைத்தொழிலாக நடைபெற்று வந்த நெசவுத்தொழில் இக்காலப் பகுதியில் தொழிற்சாலைகளுக்கு மாற்றப்பட்டுப் பெரும்படி உற்பத்தியாக மாறிற்று. இப்பெருமாற்றங்களுக்கு, மேலே குறிப்பிட்ட கண்டு பிடிப்புகளே காரணமாகும்.

இப்பொறிகளை இயக்கும் வலுவாக நீராவி பயன்படுத்தப்பட்டதும், அவற்றை உலோகங்களாற் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் பயனாக உலோகக் கைத்தொழிலிலும் புரட்சி ஏற்பட்டது. சவுளிக் கைத்தொழிலுக்கு வேண்டிய எந்திரக் கருவிகளுக்கான தேவை அதிகரித்ததும், உலோகக் கைத்தொழில் சில பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியதாயிற்று. இரும்பை உருக்குவதற்கு நம்பகமான எரிபொருளைக் கண்டுபிடித்தல் அவசியமாயிற்று. அக்காலம் வரையும் இரும்பை உருக்குவதற்கு விறகுக் கட்டைகளே பயன்படுத்தப்பட்டுவந்தன. ஆயின், இக் காலப்பகுதியில் விறகுக்கட்டைக்கு அருந்தல் ஏற்பட்டதால், அதற்கு மாற்றீடான ஓர் எரிபொருளைக் கண்டுபிடிக்கவேண்டியதாயிற்று. இதன் பயனாக, இரும்பை உருக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்தத் தொடங்கினர். நிலக்கரியிலே கந்தகமும் கலந்திருந்தமையால், கந்தகத்தை நிலக்கரியிலிருந்து அகற்றுதல் அவசியமாயிற்று. 1768 ஆம் ஆண்டில் யோன் றேபக் என்பவர் நிலக்கரியிலிருந்து கந்தகத்தை பிரித்தெடுப்பதற்கு ஒரு முறையினைக் கண்டுபிடித்தார். 1784 ஆம் ஆண்டில் கென்றி கோட் என்பவர் இரும்பின் தரத்தை உயர்த்துவதற்கு ஒருமுறையைக் கண்டுபிடித்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, கைத்தொழிற் புரட்சியின் முன்னர் குழுமமுறையை அடிப்படையாகக்கொண்டே உற்பத்தி நடைபெற்றுவந்தது. குழுமமுறையின் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையப் பண்டங்கள் குடும்ப மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டன. ஆயின் கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர், இந்த உற்பத்திமுறையானது தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்ட கனரகப் பொறியணிகளின் உதவியுடன், பெரும்படி உற்பத்தி

யாக மாற்றப்பட்டது. இப்புதிய முறையிலே பண்டத்தின் பல பகுதிகளும் தனிவேறு உருப்படிகளாக ஆக்கப்பட்டு, இறுதியில், பூர்த்தியான பொருளாக இணைத்துருவாக்கப்பட்டன. பெரும்பாலும் குடும்பமே முன்னம் உற்பத்தியலகாக இருந்தது. கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் குடும்பமின்றித் தொழிற்சாலையே உற்பத்தியலகாயிற்று. இவ்வாருக, உற்பத்தியின் அடிப்படையிலும் அதன் தன்மையிலும் அதிமுக்கியமான மாற்றம் ஏற்பட்டது என்பதனை நாம் மனத்திற் கொள்ளவேண்டும்.

பரும்படியாக்க முறையிலே, உற்பத்திக்காரணி என்ற வகையில் மூலதனத்தின் முக்கியத்துவம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. முன்பிருந்த முறையிலே குறித்தவொரு கைப்பணியைப் பயின்ற தொழிலாளி, கைப்பணிச் சொந்தக்காரன் என்ற நிலைக்கு வரக்கூடியதாய் இருந்தது. ஆயின் புதிய உற்பத்திமுறையிலோ தொழிலாளிக்கு அத்தகைய வாய்ப்புக்கள் இருக்கவில்லை. உண்மையில், உற்பத்திக் காரணி என்ற வகையில் மூலதனத்திற்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட பின்னர், தொழிற்சாலைச் சொந்தக்காரராற் கூலிக்கமர்த்தப்பட்ட வேலையாள் என்ற நிலைக்குத் தொழிலாளி இழிந்து விட்டான். மேலும், உற்பத்தியும் வியாபாரமும் துரிதமாக வளர்ச்சியுற்றதால் தொழின்முயற்சிகளை ஆரம்பிப்பதற்குத் தனியார் செல்வம் மட்டுமே போதுமானதாக இருக்கவில்லை. பரும்படியாக்கத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான பெரும் முதலீடுகளைப் பெறுவதற்கு, கூட்டுத்தொக்குக் கம்பனிகள் உருவாக்கப்பட்டன. இக்கம்பனிகளின் பங்குகளை விற்பதன் வாயிலாகத் தேவையான மூலதனம் பெறப்பட்டது. 1960 ஆம் ஆண்டிற்கு முன்னர் இத்தகைய கம்பனிகளின் எண்ணிக்கை மிகக்குறைவாயிருந்தது. ஆயின், இக்கம்பனிகளின் எண்ணிக்கை 1844 இல் 994 ஆகவும், 1914 இல் 58,000 ஆகவும் அதிகரித்துவிட்டது.

இரும்புக் கைத்தொழிலின் அபிவிருத்தியுடன், உருக்குக் கைத்தொழிலும் விரைவாக வளர்ச்சியடைந்தது. 1742 இல் பெஞ்சமின் ஹன்ஸ்மன் என்பவர் இரும்பிலிருந்து காபனை அகற்றுவதன் வாயிலாக உருக்கினைப் பெறக்கூடிய ஒரு முறையினைக் கண்டறிந்தார். ஆயின், பெசமர் என்பவர் கண்டறிந்த செயல்முறையினை மேற்கொண்டு 1855 ஆம் ஆண்டின் பின்னரே உயர்தர உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது. இதன் பின்னர் பொறியணிகள் மட்டுமன்றித் தண்டவாளங்களும் தீராந்திகளுமே உருக்கினுல் ஆக்கப்பட்டன. உலோகத்தை உபயோகிப்பதில் ஏற்பட்ட இத்தகைய அபிவிருத்தியின் பயனுக, தொழினுட்பத்துறையிலும் பொறியியல்துறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. எனவே, பொறியணிகளை உற்பத்தி செய்தல், கட்

டடங் கட்டல், பெருந்தெரு அமைத்தல், கப்பல் கட்டல் ஆகியன விரைவாக அபிவிருத்தியடைந்தன.

சவுளிக் கைத்தொழிலில் ஆரம்பித்த கைத்தொழிற் புரட்சி ஏனைய துறைகளுக்கும் பரவியது. பிரித்தானிய சமுதாயம், பொருளாதார சமூகத்துறைகளில் மட்டுமன்றி அரசியற்றுறையிலும் மாற்றமடைதற்கு இது வழிவகுத்தது. கைத்தொழில் புரட்சிக்கு முன்பு, பிரித்தானியப் பொருளாதாரம் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆயின், 19 ஆம் நூற்றுண்டின் முடிவில், பிரித்தானியப் பொருளாதாரம் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டதாக மாறிவிட்டது. மேலும் பிரித்தானியக் குடித்தொகையிற் பெரும் பகுதியினர் கைத்தொழிலில் வேலைவாய்ப்புப் பெறும்பொருட்டு நகரப் பகுதிகளை நாடத்தொடங்கினர். கைத்தொழிற் புரட்சி தொடங்கிய காலத்திலே, குடித்தொகையில் 71.7 சதவீதத்தினர் கிராமப் பகுதிகளில் வாழ்ந்தனர். 1871 ஆம் ஆண்டில் இது 28.3 சதவீதமாகக் குறைந்தது. கைத்தொழிற் புரட்சி நடைபெறுதற்கு முன்னர் சிற்றளவினவாயிருந்த பட்டணங்கள் குடியடர்த்தி மிக்க பெரும் நகரங்களாக மாறின. மூலப் பொருள்கள் கிடைக்கும் வாய்ப்பு, இயக்க வலுவசதி, பரும்படியாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதி ஆகியனவே கைத்தொழில்கள் அமையத்தக்க முக்கிய காரணிகளுட் சிலவாகும். பிரித்தானியாவிலும் இக்காரணிகளின் செல்வாக்கினைக் காணமுடிகின்றது. இதன் பயனுகக் குடித்தொகைப் பரம்பலின் அமைப்பிலும் மாற்றம் உண்டானது. கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர் பிரித்தானியாவின் செல்வமும் குடித்தொகையும் தென் கிழக்குப் பகுதியிற் செறிந்து காணப்பட்டன. ஆயின், கைத்தொழிற் புரட்சியின் விளைவாகக் கைத்தொழில்கள் அமைந்திருந்த மத்திய மாகாணங்களையும் வட மாகாணங்களையும் நோக்கி மக்கள் குடிபெயர்ந்தனர்.

எனவே, பிரித்தானியப் பொருளாதாரம் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதாரமாயிற்று. அக்காலம் முதலாக, அந்நாட்டின் செல்வச் செழிப்பு வெளிநாட்டு வியாபாரத்திலே தங்கியிருந்தது. அக்காலக் கட்டத்திற்கு முன்னர் பிரித்தானிய மக்களுக்கு தேவையான சகல உணவு வகைகளும் பெரும்பாலும் உண்ணுட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. ஆயின் 19 ஆம் நூற்றுண்டின் முடிவில், பிரித்தானியாவுக்குத் தேவையான உணவுவகைகளில் 40 சதவீதத்திற்குக் குறைவான தொகையே உண்ணுட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. உணவுத் தேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய பணத்தை, பரும்படியாக்க விளைவுகளை விற்பனை செய்தே சம்பாதிக்கவேண்

டியதாயிற்று. எனவே, வெளிநாட்டு வியாபாரமும் பிரித்தானியப் பொருளாதாரத்தின் சீவநாடியாயிற்று.

பிரித்தானியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களின் பயனுக பிரித்தானியப் பேரரசின் கொள்கைகளிலும் மாறுதல் ஏற்பட்டது. கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர், பிரித்தானியர் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி அந்நாடுகளின் பொருளாதார வளங்களைத் தன்னயப்படுத்தினர். ஆயின், கைத்தொழிற் புரட்சிக்குப் பின்பு தோன்றிய புதிய சூழ்நிலைகளிலே போட்டி வியாபாரத்தாலும் வெளிநாடுகளில் மூலதனத்தை முதலீடு செய்வதாலும் கிடைக்கத்தக்க நயங்களைப் பிரித்தானியர் உணர்ந்து கொண்டார்கள். 1850 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு வியாபாரத்திலே தமது ஆதிக்கத்தைத் தாபிப்பதோடு, ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களில் முதலீட்டுக்கான வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொள்வதே பிரித்தானியரின் நோக்கமாக இருந்தது.

பிரான்சு

பிரித்தானியாவில் நடைபெற்ற கைத்தொழிற் புரட்சியின் இயல்பு, விருத்தி, விளைவு என்பன பற்றி இதுகாறும் சுருக்கமாக ஆராய்ந்தோம். பொருளாதார சமூக அரசியற்றுறைகளிலே ஆழ்ந்தகன்ற மாற்றங்களை ஏற்படுத்திய கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள் பிரித்தானியத் தீவுகளில் மட்டுமே உண்டாயின என்று நாம் கருதலாகாது. கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு, ஐரோப்பாவிலுள்ள ஏனைய நாடுகளுக்கும் விரைவாகப் பரவத் தொடங்கியது. எனினும், ஒவ்வொரு நாட்டின் மூலப் பொருள்வள நிலைமைகளுக்கும் ஏற்ப, கைத்தொழிற்பெருக்கத்தின் இயல்பும் வேகமும் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தன. ஐரோப்பிய நாடுகளுட் கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கிற்கு உட்பட்ட முதலாவது நாடு பிரான்சாகும். ஆயின் சேர்மனியில், 19 ஆம் நூற்றுண்டின் பிற்பாதியிலே—அந்நாடு அரசியல் ஐக்கியம் பூண்ட பின்னரே—கைத்தொழில் விரைவாக மாறுதல் அடையத் தொடங்கிற்று. ருஷியாவில் ஒற்ருேபர்ப் புரட்சி தொடங்கிய பின்னரே—அதாவது, 1917 ஆம் ஆண்டளவிலேயே-புரட்சிகரமான மாற்றமெதுவுங் காணப்பட்டது. ஸ்பெயின், போத்துக்கல் போன்ற நாடுகளிலே கைத்தொழிற்புரட்சியின் செல்வாக்கு மந்தகதியிலேதான் பரவியது. இன்றும் அந்நாடுகளைக் கைத்தொழின்மயமானவை என்று கருதவியலாது. எனவே ஒவ்வொரு நாட்டின் அரசியல் பொருளாதார சமூக நிலைமைகளுக்கேற்ப, கைத்தொழில் வளர்ச்சியின் வேகம் நாட்டுக்கு நாடு வேறுபட்டது. முன்பு குறிப்பிட்டவாறு, பிரித்தானியாவிற்

கைத்தொழில் வளர்ச்சிக்குச் சாதகமாயிருந்த அரசியல் ஐக்கியம், சந்தைகள், மூலதனம், மூலப்பொருள் வசதி, இயக்கவலுவசதி போன்ற காரணிகள் மேற்குறிப்பிட்ட ஐரோப்பிய நாடுகளில் உடனடியாக வாய்க்கவில்லை. ஆகவே, அந்நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சி இயல்பாகவே தாமதப்பட்டது. கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கிற்கு உட்பட்ட நாடுகளிலும் மத்தியகால உற்பத்திமுறைகள் உடனடியாக மறைந்துவிட்டன என்று கூறுதல் தவறாகும். ஐரோப்பிய நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சி பிரித்தானியாவில் நடைபெற்ற கைத்தொழிற் புரட்சியின் நேரடி விளைவாகும் என்று கூறுதலும் தவறாகும். பிரித்தானியாவிலே கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட கால கட்டத்தில், மேலே குறிப்பிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் விஞ்ஞான-தொழினுட்ப முன்னேற்றம் சிற்றளவிலோ பேரளவிலோ காணப்பட்டது. ஏனைய காரணிகளைப் போன்று இதுவும் ஐரோப்பாவின் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஒத்தாசையாக இருந்திருக்கலாம் என்பதை மனதிற் கொள்ளவேண்டும். ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றினதும் கைத்தொழில் வளர்ச்சியை இங்கு ஆராய்வது எமது நோக்கமன்று. ஆயின், ஐரோப்பாவிலே காணப்பட்ட பொதுவான நிலைமைகளை ஆராய்வதற்கு வசதியாக, ஐரோப்பாவிலுள்ள இரு முக்கிய நாடுகளான பிரான்சினையும் சேர்மனியையும் பற்றி இங்கு ஆராய்வோம்.

பிரான்சின் வரலாற்றிலே திருப்பமுனையாக அமைந்த பிரான்சியப் புரட்சி (1789) நடைபெற்ற காலத்தில், பிரான்சு பெரும்பாலும் ஒரு விவசாய நாடாகவே இருந்தது. ஆயினும், அங்குக் கைத்தொழில் விருத்தியும் ஓரளவுக்குக் காணப்பட்டது. ஏனைய ஐரோப்பிய நாடுகளிற் பொதுவாகக் காணப்பட்ட மத்திய காலச் சிறப்பியல்புகள் சில, பிரான்சின் கைத்தொழில் அபிவிருத்திக்கும் இடையூறாக இருந்தனபோலத் தெரிகின்றது. பிரான்சின் கைத்தொழிலும் குழுமுறையிலேதான் இயங்கிவந்தது. ஒவ்வொரு கைப்பணியாளரும் குழுமத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அக்குழுமத்தின் விதிகளுக்கு அமையவே உற்பத்தி முறை அமைந்திருந்தது. கண்டிப்பான இவ்விதிகள் கைப்பணியாளரின் தனிப்பட்ட ஊக்கத்தைக் கெடுத்ததுடன், புதுமுறைகளைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்கான ஆர்வத்தையும் குன்றச் செய்தன. நாட்டின் வாரியமுறையும் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு மற்றுமொரு தடையாக இருந்தது. பிரான்சிலே ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்குப் பண்டங்களை எடுத்துச் செல்லும்போது சுங்கத்தீர்வைகள் அறவிடப்படுவது வழக்கம். இவ்வழக்கம் வியாபார விருத்திக்கும் வர்த்தக வளர்ச்சிக்கும் இடையூறாயிருந்தது. பரப்பளவிலும் குடித்தொகையிலும்

பிரான்சு பிரித்தானியாவிலும் பெரியது. ஆயினும் மேற்கூறிய வசதியீனங்களால், உண்ணாட்டுச் சந்தை குறுகியதாயிற்று. இனி, இக்காலகட்டத்திலே பிரித்தானியாவுக்கு வெளிநாட்டுச் சந்தைகள் இருந்தவாறு பிரான்சிற்கு இருக்கவில்லை.

மேலே குறிப்பிட்ட காரணிகளுடன் வேறும் பல முக்கிய காரணிகளும் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பாதகமாய் இருந்தன. கைத்தொழிலுக்குத் தேவையான மூலதனத்தைப் பெறுவதில் இடர்ப்பாடு இருந்தது. மேலே குறிப்பிட்ட உள்ளூர் வரிமுறையும் அரசாங்கம் மேற்கொண்ட பளுமிக்க வருமான நடவடிக்கைகளும் வியாபார அபிவிருத்திக்குத் தடையாக இருந்தன. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அரசாங்கத்தின் நிதி நிலைமையும் திருத்திகரமானதாக இருக்கவில்லை. 14ஆம் லூயியின் போர்களும் ஏழாண்டுப் போரும் நிதிநிலைமையைப் பாதித்தவாறே, அமெரிக்கச் சுதந்திரப் போரிற் பிரான்சு தலையிட்டமையும் நாட்டின் நிதி நிலைமையைப் பாதித்தது. தனிப்பட்டவர்களிடமிருந்து கடன்பட்ட பணத்தைத் திருப்பிக் கொடுக்கவியலாத அளவுக்குப் பிரான்சின் நிதிநிலைமை மோசமாக இருந்தது. எனவே கைத்தொழிற் பெருக்கத்துக்குத் தேவையான மூலதனத்தைப் பெறுவது வில்லங்கமாயிற்று.

பிரித்தானியாவில் இருந்தவாறு, பிரான்சில் மூலப் பொருள்களும் தாராளமாக இருக்கவில்லை. அக்காலத்திலே கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அளவிலே பிரான்சில் நிலக்கரி கிடைக்கவில்லை. அங்குக் கிடைத்த நிலக்கரியும் தரங்குறைந்ததாகவே இருந்தது. பிரான்சின் கைத்தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், நிலக்கரித் தட்டுப்பாடு தீராப் பிரச்சினையாக இருந்து வந்தது.

இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தவிடத்தும், 1789 ஆம் ஆண்டளவிலே கைத்தொழில் முன்னேற்றத்திற்கான சில அறிகுறிகள் பிரான்சிற் காணப்பட்டன. குறிப்பாக, புதிய தொழினுட்பங்கள் பயன்படுத்தப்பட்ட சவுளிக் கைத்தொழிலில் இப்போக்குகளை முதலிற் காணமுடிந்தது. இது தொடர்பாக கம்பளி, இலினன், பட்டு முதலியவற்றாலான துணிவகைகள் பிரான்சிலே பரும்படியாக உற்பத்தி செய்யப்பட்டதைக் குறிப்பிடவேண்டும். அரசாங்க உதவி, இங்கிலாந்தின் கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு, மத்தியதரைக் கடற்பிரதேச வியாபாரத்திலே பிரான்சு வகித்த முக்கிய இடம் ஆகியன இந்த அபிவிருத்திக்கு உதவியாகவிருந்த காரணிகளாகும். ஆயின், குழும முறையையும் குடிசைக் கைத்தொழிலையும் அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய உற்பத்திமுறைகள் தகர்ந்துபோகும் அளவிற்குப் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை. மேலும், பிரான்சிற்கும் இங்கிலாந்

திற்குமிடையே 1786 ஆம் ஆண்டில் ஒப்பேறிய ஈடன் உடன்படிக்கை, பிரான்சின் கைத்தொழில் அபிவிருத்தியைப் பெரிதும் பாதித்தது. ஏனெனில் இவ்வுடன்படிக்கையின்படி, பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் குறைந்த தீர்வையுடன் பிரான்சில் இறக்குமதி செய்யப்பட்டன. பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்டுக் குறைந்த விலைக்கு விற்கப்பட்ட பெருந்தொகையான தொழிற்சாலைப் பண்டங்கள் ஆண்டுதோறும் பிரெஞ்சுச் சந்தையை வந்தடைந்தன. இப்பண்டங்களுடன் பிரான்சின் பண்டங்கள் போட்டியிடவியலாத காரணத்தால், பிரான்சின் கைத்தொழில் இக்கட்டான நிலைமையினை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இச்சூழ்நிலையில், நெப்போலியன் மத்திய வங்கியை நிறுவியதுடன், கைத்தொழிலிற் புதிய தொழினுட்பங்களையும் ஊக்குவித்ததுடன் புதிய கண்டுபிடிப்புக்களுக்குப் பரிசில்களும் வழங்கினான். இவை நெப்போலியன் மேற்கொண்ட சில முக்கிய நடவடிக்கைகளாகும். அரசியலிலும் பொருளாதாரத்திலும் பிரான்சிற்கு எதிரியாகவிருந்த பிரித்தானியாவின் வலியை அழிப்பதற்கும், பிரித்தானியாவின் வியாபார அபிவிருத்தியைக் கட்டுப்படுத்துவதற்கும் பல பிரமாணங்களை அவன் விதித்தான். இவையெல்லாம் ஒருங்கே நெப்போலியன் கண்ட முறை எனப்படும். 1806 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த இக்கொள்கைக்கு அமைய, பிரான்சின் ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகளையும் பிரான்சிற்கு விசுவாசமாயிருந்த நாடுகளையும் பிரித்தானியப் பண்டங்களை வாங்கவேண்டாமென நெப்போலியன் வேண்டிக்கொண்டான். பிரித்தானியக் கப்பல்கள் பிரான்சின் துறைமுகங்களுக்கு வர அனுமதிக்கப்படவில்லை. பிரான்சிற் பிரித்தானியப் பண்டங்களை உபயோகித்தலாகாதெனவும் தடை விதிக்கப்பட்டது. இவ்வாறுக்ப் பிரித்தானியப் பண்டங்களுக்கிருந்த தேவை பிரான்சின் உற்பத்திப் பொருள்களைச் சாருமென நெப்போலியன் எதிர்பார்த்தான். எனவே பிரான்சின் உற்பத்திப் பொருள்களுக்கு இவ்வாறு தேவையினை உருவாக்குவதன் வாயிலாக, நெப்போலியன் பிரான்சின் கைத்தொழிலில் ஓரளவு அபிவிருத்தி உண்டாதற்கு வழிவகுத்தான். சவுளிக் கைத்தொழிலுடன் தொடர்புடைய இரசாயனக் கைத்தொழில்களிலும் உப்பு, சவர்க்காரம், இலினன் ஆகிய கைத்தொழில்களிலும் கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டது. எனவே, 1806 ஆம் ஆண்டளவில் புரட்சிக்கு முன்பிருந்த உற்பத்தி மட்டங்களைப் பிரான்சு ஓரளவுக்கு எய்தமுடிந்தது. 1787 இல் உற்பத்தி செய்யப்பட்ட பிரெஞ்சுப் பண்டங்களின் பெறுமதி ஏறத்தாழ 1,100 மில்லியன் பிராங்காயிற்று. ஆயின் வெளிநாடுகளின் போட்டியாலும், பிரெஞ்சுப் புரட்சியின் பயனாகவும், 1789 ஆம் ஆண்டளவில்,

அது 550 மில்லியனுகக் குறைந்தது. ஆயினும், 1803 இல் அது 773 மில்லியனுகவும், 1806 இல் 933 மில்லியனுகவும் அதிகரித்தது.

ஆயின், இந்த உற்பத்தி மட்டத்தினைத் தொடர்ந்து பேண இயலாது போயிற்று. பிரான்சுக்கெதிராகக் கிளர்ந்த ஸ்பானியக் கலகம் தொடக்கம் நெப்போலியனின் ருஷியப் படையெடுப்புத் தோல்வியடைந்த காலம் வரையும் நடைபெற்ற பல போர்களே இவ்வீழ்ச்சிக்குக் காரணமாயின. நாடெங்கிலும் வேலையின்மையும் வக்கறவும் பரவியதைத் தொடர்ந்து பிரெஞ்சு மக்கள் நெப்போலியனில் வைத்திருந்த நம்பிக்கை குறையத் தொடங்கியது. எனவே, 1815 ஆம் ஆண்டுக்குப் பின், கைத்தொழிலில் விரைவான வீழ்ச்சி ஏற்பட்டது. நெப்போலியனின் வரிவிதிப்பு முறையும் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பாதகமாயிற்று. நெப்போலியன் தனது போர்களுக்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்காக வரிவீதங்களை உயர்த்தியதால் பரும்படியாக்கம் செய்யப்பட்ட பண்டங்களுக்கான சந்தை குறுகியது. 1815 இலே பிரான்சின் உற்பத்தி மட்டம், 1790 இல் இருந்த மட்டத்திற்குக் குறைந்தது. 1806 இற் பிரான்சில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி 933 மில்லியன் பிராங்காக இருந்தது, 1814 இல் அது 545 மில்லியன் பிராங்காகக் குறைந்தது. 1806 ஆம் ஆண்டு தொடக்கம் கைத்தொழில் அபிவிருத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி, 1815 இலே தீர்வைகள் குறைக்கப்பட்ட பின்னர் மேலும் துரிதப்பட்டது. இதன்பயனுக, நெப்போலியன் நிறுவிய சில தொழிற்சாலைகளையுமே மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையில், பிரான்சின் கைத்தொழில் அதிபர்கள் தமது கைத்தொழில்களைக் காப்பாற்றுமாறு அரசாங்கத்திடம் முறையிட்டனர். அவர்களது கோரிக்கைக்கு அமைய, உண்ணுட்டுக் கைத்தொழிலைப் பாதுகாத்தற்பொருட்டு அரசாங்கம் கூடுதலான தீர்வைகளை விதித்தது. உதாரணமாக, இரும்பு உருக்குப் பொருள்களுக்கு 120 சதவீத இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டது. இக்காலகட்டத்திலிருந்து 1830 வரையும் பிரான்சின் கைத்தொழில் அமைப்பில் கணிசமான மாற்றங்கள் காணப்பட்டன. காப்புத் தரிப்புகளின் பயனுகவும் உயர்ந்த தீர்வைகளின் பயனுகவும் பிரான்சின் கைத்தொழில் வெளிநாட்டு மூலதனத்தைக் கவரக்கூடிய வகையிலே, உற்பத்திப் பொருள்களின் விலைகள் உயர்மட்டத்தில் இருந்தன. இக்காலப்பகுதியில், சில கைத்தொழில்களிலே இயக்கவிசையாக நீராவி பயன்படுத்தப்பட்டது. பிரித்தானியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் யாக்கப்பட்ட நவீன தொழினுட்பங்கள் பிரான்சிலும் இக்காலத்திற் பயன்படுத்தப்பட்டன. இத்தொழினுட்பமுறைகளும்

அரசாங்க ஆதரவும் ஒருங்கிணைந்து, கைத்தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. எனினும், அடிப்படைப் பாரக் கைத்தொழில்களிலே மெய்ப்படியான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. நிலக்கரித் தட்டுப்பாடே இதற்கு முக்கிய காரணமாயிருந்தது. நிலக்கரி செலவுமிக்க மூலப்பொருளாக இருந்ததுமன்றி போதுமான நிலக்கரியை இறக்குமதி செய்யவும் முடியவில்லை. இரும்புக் கைத்தொழிலிலும் இதே பிரச்சினை தோன்றியது. மூலப்பொருள்களுக்கு உயர்ந்த தீர்வைகள் விதிக்கப்பட்டிருந்தமையால், மூலப்பொருள்களுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியதாயிற்று. அதேசமயம், கைத்தொழிலுக்குத் தேவையான பொறியணிகளை இறக்குமதி செய்வதிலும் பெரும் செலவு ஏற்பட்டது. அக்காலத்திலே கணிசமான அளவுக்கு வெளிநாட்டு மூலதனம் பிரான்சில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது போதுமானதாய் இருக்கவில்லை. அக்காலத்திலே முதலாளித்துவ வகுப்பு என்பதொன்று பிரான்சில் இருக்கவில்லை. நாட்டின் பொருளாதாரத்திற் சிறு நிலக்கிழாரே முக்கிய பங்கு வகித்தனர். பிரான்சின் குடித்தொகை கூடுதலாக இருந்தமையால், அந்நாட்டின் தலைவீத வருமானம் மிகக்குறைவாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில், மூலதனத்தட்டுப்பாடு, கைத்தொழில் அபிவிருத்திக்கு இடையூறாக இருந்தது.

இத்தடைகள் இருந்தவிடத்தும், 1840—49 வரையான காலத்தில், பிரெஞ்சுக் கைத்தொழிலில் ஓரளவு அபிவிருத்தி காணப்பட்டது. அக்காலத்திற் புகையிரதப் பாதைகள் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டமையால், கைத்தொழில் அபிவிருத்திக்கு அவை பெரும் உதவியாக இருந்தன. புகையிரத சேவை வழங்கிய போக்குவரத்து வசதிகளின் பயனாக, கைத்தொழில் சில மாவட்டங்களிற் செறிந்து காணப்பட்டது; இவ்வாறு கைத்தொழில் மாவட்டங்கள் பல உருவாயின. இதன் விளைவுகளை இரும்புத்தாதுக் கைத்தொழிலிலும் நிலக்கரித் தொழிலிலும் சுரங்கக் கைத்தொழிலிலும் பெரும்பாலும் கண்டுகொள்ளலாம். போக்குவரத்து வசதிகள் மட்டுமல்லாது, இக்காலப் பகுதியில் நிறுவப்பட்ட கூட்டுத் தொக்குக் கம்பனிகளும் கைத்தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்த மற்றொரு காரணியாயின. இந்தவகையில், தொழின்முயற்சிகளுக்குத் தேவையான மூலதனத்தைத் திரட்ட முடிந்தது. அக்காலத்திலேயே கொடுகடன் வழங்கும் தனியார் வங்கிகளும் நிறுவப்பட்டன. இக்காரணிகளின் பயனாக நிலக்கரியையும் இரும்பையும் உற்பத்தி செய்கின்ற அடிப்படைக் கைத்தொழில்கள் விரைவாக விருத்தியடைந்தன. இந்த அடிப்படைக் கைத்தொழில்களே பொதுவான கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமானவை என்பது குறிப்பிடத்தக்கது. பின்வருந் தொகை

விவரங்கள் இதற்குச் சான்ருகும். 1829 இல் நிலக்கரி உற்பத்தி 500,000 தொன்னுக இருந்தது; 1847 இல் அது 5,150,000 தொன்னுக அதிகரித்தது. 1833 இல் இரும்பு உற்பத்தி 740,000 தொன்னுக இருந்தது. 1847 இல் அது 1,640,000 தொன்னுக அதிகரித்தது. எனவே சில அடிப்படைக் கைத்தொழில்கள் அபிவிருத்தி அடைந்தவிடத்தும், பிரான்சின் கைத்தொழிற் புரட்சி ஆரம்ப நிலைகளுக்கப்பாற் செல்லவில்லை எனலாம்.

பிரான்சின் கைத்தொழில் அபிவிருத்தியிலே மிக முக்கியமான காலப்பகுதி 1850 இற்கும் 1870 இற்கும் இடைப்பட்ட இருபதாண்டுக் காலமாகும். மூன்ரும் நெப்போலியனின் ஆதரவிலே கைத்தொழில் விரைவாக விருத்தியடைந்தது. புகையிரதப் போக்குவரத்து தெளிவானதொரு திட்டத்திற்கமைய விருத்தி செய்யப்பட்டது. பிரெஞ்சு வங்கிகள் பிரித்தானிய வங்கிமுறை வகுத்த மரபுவழியான திட்டத்தினைத் தொடர்ந்து பின்பற்ருது, கைத்தொழில்-விவசாய முயற்சிகளுக்கெனத் தமது வாடிக்கையாளருக்குச் சாதகமான கொடுகடன் வசதிகளை வழங்கின. கட்டில்லா வியாபாரத்தின் நயங்களை உணர்ந்த மூன்ரும் நெப்போலியன், பிரித்தானியாவுடன் கொப்டன் உடன்படிக்கையை (1861) செய்து கொண்டதுடன், பெல்சியம், ஸ்பெயின் ஆகிய நாடுகளுடனும் ஏனைய நாடுகளுடனும் அத்தகைய உடன்படிக்கைகளைச் செய்துகொண்டான். இவ்வுடன்படிக்கைகளும் பிரெஞ்சுக் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவின. பழைய வாணிபச் சட்டங்கள் ஒழிக்கப்பட்டன. இலிகாவ், மார்செயில்ஸ் போன்ற துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதேசமயம், வர்த்தகத்தேவைகளுக்கென வரையறுத்த பொறுப்புடைய கம்பனிகளை நிறுவுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இவற்றின் பயனுக, 1850 ஆம் ஆண்டு தொடங்கி இருபதாண்டுக் காலத்திலே, பிரான்சின் நிலக்கரி உற்பத்தி மூன்று மடங்கானது; இரும்பு உற்பத்தியும், பருத்திப் பஞ்சு உற்பத்தியும் இருமடங்காயின; கம்பளித்துணி உற்பத்தி ஆறு மடங்காய் அதிகரித்தது. இக்கைத்தொழில் அபிவிருத்தியின் விளைவாக, உலகச்சந்தையிலே பிரித்தானிய உற்பத்தியாளருடன் பிரெஞ்சு உற்பத்தியாளர் வர்த்தகத்துறையிலே போட்டியிடுதல் சாத்தியமாயிற்று.

அடுத்த இருபது ஆண்டுக்காலத்தில் (1870—1890), இக்கைத்தொழில் அபிவிருத்தி வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. இவ்வீழ்ச்சிக்கு ஒரு காரணம் பிரஷியப் போரில் (1870—71) பிரான்சு தோல்வியடைந்தமையாகும். இப்போரின் பயனுக, கனிப்பொருள்கள் வளமாகக் காணப்படும் அல்சேஸ்-லொறெயின் பிரதேசத்தைப் பிரான்சு இழந்தது. மேலும், பருத்திக் கைத்

தொழில் செழித்தோங்கியிருந்த இப்பிரதேசத்தை இழந்தமையால், இக்கைத்தொழிலும் வீழ்ச்சியடைந்தது. இப்போரின் விளைவாகப் பிரான்சு தனது குடித்தொகையில் ஏறத்தாழ 100,000 மக்களை இழந்தது; இது போரின் மற்றொரு விளைவாயிற்று. எனவே, பிரான்சு வளம் மிக்க ஒரு கைத்தொழிற் பிரதேசத்தை இழந்ததுமல்லாமல் தேர்ச்சிமிக்க 100,000 தொழிலாளர்களையும் இழந்துவிட்டது. பிரான்சு சேர்மனிக்கு 500 மில்லியன் பிராங்குகளை இழப்பீடாகச் செலுத்தவேண்டியும் இருந்தது. 1870—1879 வரையான காலத்தில் ஏற்பட்ட பெருமந்தமும் பிரான்சின் கைத்தொழில் வீழ்ச்சிக்கு மற்றொரு காரணமாயிற்று.

இந்நிலைமைகள் 1890 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து காணப்பட்டன. ஆயின் 1890 ஆம் ஆண்டிலிருந்து பிரான்சு இந்நிலைமையிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள முடிந்தது. பிரெஞ்சுப் பண்டங்களின் விலைகள் அதிகரித்தமை, உலக வியாபார அபிவிருத்தி, நாட்டில் நடைமுறையிலிருந்த தரிப்புக் கொள்கை என்பன கைத்தொழில் அபிவிருத்திக்கு வழிவகுத்த குறிப்பிடத்தக்க காரணிகளிற் சிலவாகும். பெருமந்தத்துக்குப் பின் காப்புத் தரிப்புகளை விதிக்கும் வர்த்தகக் கொள்கையை ஏனைய நாடுகளும் பின்பற்றின. ஆயின் பிரான்சில் விதிக்கப்பட்ட வரிகள் வேறெந்தவொரு நாட்டில் விதிக்கப்பட்ட வரிகளைக் காட்டிலும் உயர்வாக இருந்தன. இக்கால கட்டத்தில் பிரான்சின் பருத்திப் பஞ்சு, இரும்பு, உருக்கு ஆகியவற்றை உற்பத்தி செய்வதிற் பெரு முன்னேற்றம் காணப்பட்டது. 1910 ஆம் ஆண்டளவில், பிரான்சு பரும்படியுற்பத்திப் பொருள்களிலே தன்னிறைவு பெற்றதுமன்றி, போகப் பொருள் உற்பத்தியிலும் முதலிடம் வகிப்பதாயிற்று. இவ்வாறு, இருபதாவது நூற்றாண்டின் தொடக்கமளவிலே பிரான்சு கைத்தொழில் நாடாக மாறியது என்று கூறலாம்.

### சேர்மனி

கைத்தொழிற் பெருக்கமடைந்த மற்றோர் ஐரோப்பிய நாடு சேர்மனி. இந்நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியை நாம் இனி ஆராய்வோம். பிரித்தானியாவையும் பிரான்சையும் போலல்லாது, சேர்மானியைப் பிஸ்மாக் ஐக்கியப்படுத்தியதைத் தொடர்ந்து 1871 ஆம் ஆண்டிலேதான் சேர்மனி ஒரு தேசிய அரசாக நிறுவப்பட்டது. அவ்வாண்டுக்குமுன்பு, பல்வேறு பரப்பளவுடைய பெருந்தொகையான சுதந்திர இராச்சியங்களையும், அரைகுறைச் சுதந்திரமுள்ள இராச்சியங்களையும் கொண்டதாய்ச் சேர்மனி பிரிவுபட்டிருந்தது. மேலும், 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சேர்மனியின் பொருளாதார நிலை, பிரித்தானியா பிரான்சு ஆகிய நாடுகளின் பொருளாதார நிலையினும் தாழ்வுற்றிருந்தது. அக்காலப்பகுதியிலே நாட்டின் சமூக, பொரு

ளாதார அமைப்பானது மானியமுறையின்பாற்பட்டதாக இருந்தது. மரபுவழியான தொழும்பு முறை போன்ற மானிய அமைப்புகள் தொடர்ந்து நடைமுறையில் இருந்தன. அங்குக் காணப்பட்ட நிலைமைகள் கைத்தொழில் அபிவிருத்திக்கு உகந்தனவாக அமையவில்லை. அப்போது மானிய விதிகளுக்குப் பெரிதும் கட்டுப்பட்ட குடிசைக் கைத்தொழில்களாகவே சேர்மனியிற் கைத்தொழில்கள் இயங்கி வந்தன. கைப்பணியாளர் தமது கைப்பணிகள் தொடர்பாகச் சுதந்திரமாய்ச் செயற்படவோ அல்லது புதிய உற்பத்தி முறைகளைப் பரீட்சித்துப் பார்க்கவோ இயலாத நிலையிருந்தது. சேர்மானிய அரசுகள் ஏற்றுக்கொண்ட வணிக வியற்[1] கருத்துகளும் கைத்தொழில் வளர்ச்சிக்கு இடையூறுக இருந்தன. கைத்தொழில் அபிவிருத்திக்கு இன்றியமையாத போக்குவரத்து வசதிகளும் ஆரம்ப நிலையிலேதான் இருந்தன. மேலும் சேர்மனியின் குடித்தொகைப் பெருக்கம் பொருளாதார வளர்ச்சியிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தது.

கைத்தொழில் விருத்திக்குத் தடையாக இருந்த காரணிகள் பலவற்றுள்ளும் நாட்டில் நிலவிய பாதகமான அரசியல் நிலைமையே பெருந்தீங்கு விளைப்பதாயிருந்தது. 17 ஆம் நூற்றாண்டு தொடக்கம், சேர்மானிய அரசுகள் தொடர்ச்சியாகப் போரில் ஈடுபட்டிருந்தன. இப்போர்களுள் முப்பதாண்டுப் போரினை (1618—1648) இங்குச் சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். சில சேர்மானிய அரசுகளில்—உதாரணமாகப் பிரஷியாவிலே—முப்பதாண்டுப் போரின் பின்பு தனியார் முயற்சிக்கு அரசாங்க ஆதரவு கிடைத்தது. இத்தகைய ஆதரவு கைத்தொழில் விருத்திக்குச் சாதகமாக இருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியளவில், கைத்தொழிலில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டது. எனினும், பிரெஞ்சுப் புரட்சிப் போர்களிலும் நெப்போலியனின் போர்களிலும் சேர்மனி ஈடுபட்டதன் பயனாக, இச்சிறிய அபிவிருத்தியும் தடைப்பட்டுவிட்டது. இப்போர்களிலே பெருந்தொகையான பணத்தையும் ஆட்பலத்தையும் சேர்மானிய அரசுகள் பயன்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. இச்சூழ்நிலையில், நாட்டிலே நிலவிய உறுதியற்ற அரசியல் நிலைமைகளும் பொருளாதார அபிவிருத்திக்கு உதவவில்லை. மேலும், பிரான்சிற்குப் பெருமளவு இழப்பீடுகளைச் செலுத்துமாறு சேர்மனி பல சந்தர்ப்பங்களில் நிர்ப்பந்திக்கப்பட்டது. அத்துடன், பிரெஞ்சுத் தானை

1. வணிகவியல் என்பது 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியத் தொழில் முயற்சியாளரும் அரசியல் அறிஞர்களும் ஏற்றுக்கொண்ட ஒரு பொருளாதாரத் தத்துவம். உள்ளூர்ப் பொருளாதாரமானது தேசியப் பொருளாதாரமாகவும், மானிய முறையானது வணிக முதலாளித்துவமாகவும், சாதாரண வியாபாரமானது சிக்கலான சர்வதேச வியாபாரமாகவும் மாற்றமடைந்த காலமே இத்தத்துவம் நிலைபெறுவதற்குப் பின்னணியாயிற்று.

களின் தாக்குதல்களுக்கும் நாச வேலைகளுக்கும் சேர்மனி ஆளாகியது.

முன்னேற்ற குறிக்கோளின் முதல் நடவடிக்கையாகப் பிரஷியாவின் கல்விமுறை சீர்திருத்தியமைக்கப்பட்டது. ஒரு பல்கலைக் கழகமும் தாபிக்கப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தி இவற்றால் ஊக்கம் பெற்றது. இரண்டாவதாக, கைத்தொழிலுக்கு முட்டுக்கட்டையாக இருந்த தொழும்பு முறை சட்டத்தால் ஒழிக்கப்பட்டு, சுயாதீனமான தொழிலாளரை வேலைக்கமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்ருவதாக, வணிகத்திற்கான சுங்கத்தீர்வைகள் ஒழிக்கப்பட்டதுடன் வெளிநாட்டுத் தரிப்புகள் குறைக்கப்பட்டன. இவ்வாறு, வெளிநாட்டு வியாபாரப் பூட்கை ஆரம்பத்திலேயே கட்டுப்பாடற்ற முறையில் நிறுவப்பட்டது. நான்காவதாக, புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கக் கூடிய முறையில், குழும விதிகளும் பிரமாணங்களும் திருத்தி அமைக்கப்பட்டன. உள்ளூராட்சி விதிகளும் பிரமாணங்களும் புதுப்பிக்கப்பட்டன. இச்சீர்திருத்தங்கள் கைத்தொழில் அபிவிருத்திக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கியபோதிலும், 1830 ஆம் ஆண்டிற்கு முன்னர் பிரஷியாவிலே கைத்தொழிற் புரட்சி நடந்ததாக நாம் கூறவியலாது.

எனினும், 1834 இல் பிரஷியா கடைப்பிடித்த பூட்கையானது சேர்மானிய அரசுகளின் வர்த்தக முன்னேற்றத்திற்கும் கைத்தொழில் முன்னேற்றத்திற்கும் பெருமளவில் உதவியது. 1818 இலே பொதுத் தரிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட சொல்பரைன் ஒன்றியம் நிறுவப்பட்டமை இந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட அதிமுக்கிய நடவடிக்கையாகும். இவ்வாறு, பிரஷிய ஆள்புலங்கள் எங்கணும் பொதுச் சுங்கத்தீர்வை முறையினை நடைமுறைப்படுத்தவும், ஆள்புலங்களுக்கிடையிலான சகல உள்ளூர்ச் சுங்கவரிகளையும் அகற்றவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பரும்படியாக்கஞ் செய்யப்பட்ட பொருள்களுக்கு நியாயமான வரிவிதிப்பதெனவும், மூலப் பொருள்களின் மீதான வரிகளை நீக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. எனினும், வியாபாரத்திற்குப் பயன்பட்ட பிரதான பெருந்தெருக்கள் பிரஷிய ஆள்புலத்திற்கூடாகச் சென்றதால், சிறிய சேர்மானிய அரசுகள், பிரஷியாவுக்குப் பண்டங்களைக் கொண்டு செல்வதற்குக் கடுந் தீர்வை செலுத்த வேண்டியது அவசியமாயிற்று. இக்காரணத்தை முன்னிட்டு, சிறிய சேர்மானிய அரசுகள் சொல்பரைன் ஒன்றியத்தை ஆதரிக்கவில்லை. ஆயின், இறுதியில் ஒஸ்திரியா தவிர்ந்த ஏனைய சேர்மானிய அரசுகள் அனைத்தும் அந்த ஒன்றியத்திலே சேர்ந்து கொண்டன. இந் நடவடிக்கைகளின் பயனுக, அரசியல் அடிப்படையிலே சுதந்திர

மாகவிருந்த சேர்மானிய அரசுகள், பொருளாதாரத்துறையில் ஐக்கியப்பட்டுக் காணப்பட்டன. சேர்மனியின் எதிர்காலக் கைத் தொழில் முன்னேற்றத்திற்கு இது பெருமளவில் உதவியது என் பதை மனத்திற்கொள்ள வேண்டும்.

ஏற்கவே குறிப்பிட்டவாறு, சொல்பரைன் ஒன்றியத்தில் அங் கம் வகித்த நாடுகளிடமிருந்து எவ்வித சுங்கத் தீர்வைகளும் அற விடப்படவில்லை. அங்கத்துவம் வகிக்காத அரசுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பரும்படியுற்பத்திப் பொருள்களுக்கும், வியாபாரப் பண்டங்களுக்கும், சொல்பரைன் ஒன்றியத்தில் அங் கத்துவம் வகித்த சகல அரசுகளின் இணக்கத்துடனும், வரிகள் அறவிடப்பட்டன. இந்த வரிவிதிப்புப் பூட்கையின் பயனாக, சந்தை விரிவடைந்ததுடன், அரசுகள் ஒவ்வொன்றுக்கும் சிறப் பாயமைந்த கைத்தொழில்களும் விருத்தியடைந்தன. இக்கால கட்டத்திலே சேர்மனியின் கைத்தொழில் அபிவிருத்திக்கு உத வியாகவிருந்த மற்றுமொரு குறிப்பிடத்தக்க காரணி, புகையிர தப் பாதைகள் அமைக்கப்பட்டமையாகும். 1835 இல் பிரஷியா வில் ஆரம்பிக்கப்பட்ட புகையிரத சேவை ஏனைய சேர்மானிய அரசுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. உள்ளூர்க் கைத்தொழில்கள் சிறவுபாடு அடைதற்கும், தொழிற்பிரிப்பு ஏற்படுதற்கும், பரும் படியுற்பத்தி வளர்ச்சியடைதற்கும் இது உதவியாக இருந்தது. 1850 ஆம் ஆண்டளவிலே சேர்மனியிற் கைத்தொழில் அபி விருத்திக்கு வழிவகுத்த ஏனைய காரணிகளும் உள. அவையாவன: புதிய கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டமையும் சேர்மன் கைத்தொழிலிற் பிரித்தானிய மூலதனம் முதலீடு செய் யப்பட்டமையுமாகும்.

1850 — 1870 வரையான காலப்பகுதி, சேர்மன் கைத் தொழிலின் முக்கிய காலகட்டமாகும். இக்காலப்பகுதியிலேயே சேர்மனியிற் கைதொழிற் புரட்சி உருவாகியது என்று கொள்ள வேண்டும். அக்கால அடிப்படைத் தொழில்கள் பெருமளவில் அபிவிருத்தியடைந்தன. இந்த அபிவிருத்தி பொதுவாகக் கைத் தொழில் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைந்தது. இவ் வாறு, 1860 ஆம் ஆண்டளவில், இரும்பு, நிலக்கரி ஆகியவற்றின் உற்பத்தியில் பிரித்தானியாவுக்கு அடுத்த இடத்தைச் சேர்மனி வகித்தது. 19 ஆம் நூற்றுண்டின் நடுக்கூற்று வரையும் சேர்மனி யிற் பயன்படுத்தப்பட்ட பொறியணிகள் பிரித்தானியாவிலிருந் தும் பெல்சியத்திலிருந்துமே இறக்குமதி செய்யப்பட்டன. ஆயின், 1850 ஆம் ஆண்டு தொடக்கம், சேர்மனிக்குத் தேவைப் பட்ட பொறியணிகளிற் பெரும்பகுதி உண்ணுட்டிலேயே உற் பத்தி செய்யப்பட்டது.

1871 இற் பிஸ்மாக்கின் தலைமையிற் சேர்மனி அரசியல் ஐக்கிய மடைந்தது. மேலும், பிரான்சிய-பிரஷியப் போர் முடிவடைந்த பின்னர், 200 மில்லியன் பவுணுக்குச் சமமான போர் இழப் பீடும், கனிப்பொருள் வளமிக்க அல்சேஸ்-லொறெயின் மாகாணங் களும் சேர்மனிக்குக் கிடைத்தன. 1870 இல் சேர்மனியின் இரும்பு உற்பத்தியும் நிலக்கரி உற்பத்தியும் 10,30,000 தொன் ஞயிற்று. ஆயின் பிரித்தானியாவின் உற்பத்தி 6,000,000 தொன் ஞயிருந்தது. 1890 இற் சேர்மனியின் உற்பத்தி 4,000,000 தொன் ஞக அதிகரிக்க, பிரித்தானியாவின் உற்பத்தி 8,000,000 தொன் ஞக அதிகரித்தது. எனவே, சேர்மனியின் உற்பத்தி வீதம் பிரித் தானியாவின் உற்பத்தி வீதத்திலும் பார்க்கக் கூடுதலாக இருந்தது. 1900 இல் இரும்பு-உருக்கு உற்பத்தியினைப் பொறுத்தமட்டில், பிரித்தானியாவையும் பிரான்சினையும் சேர்மனி மிஞ்சிச் சென்றது. 1914 இற் சேர்மனியின் கைத்தொழில் அபிவிருத்தியானது ஐக் கிய அமெரிக்க நாட்டின் உற்பத்தியுடன் ஒப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்திருந்தது.

1860 இலே சேர்மன் குடித்தொகையில் ஏறத்தாழ 60 சதவீத மானோரின் வாழ்க்கை விவசாயத்திலேயே தங்கியிருந்தது. 1914 இல் இத்தொகை 40 சதவீதமாகக் குறைந்தது. மற்றொருசார், கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தோரின் தொகை அதிகரித்தது. 19 ஆம் நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகளிலும் சேர்மனி யில் ஏற்பட்ட கைத்தொழில் முன்னேற்றத்தை விளங்கிக்கொள்வ தற்கு, சேர்மனியின் உற்பத்தி வீதத்தினை கவனத்திற் கொள்ள வேண்டும். 1871 இல் 29,400,000 தொன்ஞக விருந்த சேர்மனி யின் நிலக்கரி உற்பத்தி, 1913 இல் 191,500,000 தொன்ஞக அதிகரித்தது. பழுப்பு நிலக்கரி உற்பத்தியிலும் இதே மாதிரி யான முன்னேற்றம் காணப்பட்டது. 1871 இல் 8,500,000 தொன்ஞக இருந்த பழுப்பு நிலக்கரி உற்பத்தி, 1913 இல் 87,500,000 தொன்ஞக அதிகரித்தது. மின்சார உபகரணங்களை யும், இரசாயனப் பொருள்களையும் உற்பத்தி செய்வதிலே சேர் மனி முக்கிய இடம் வகித்தது. 1913 இல் உலகச் சாயத் தேவைகளில் 80 சதவீதம் சேர்மனியில் உற்பத்தி செய்யப்பட் டது. 1871 இல் சேர்மனி அல்சேஸ்-லொறெயின் மாகாணங்களை இணைத்துக் கொண்ட பின், பொற்ருசு உற்பத்தியிலே சேர்மனி முக்கிய இடத்தை வகிக்கலாயிற்று. 1871 இல் 8,375,000 தொன்ஞகவிருந்த பொற்ருசு உற்பத்தி, 1913 இல் 9,600,000 தொன்ஞக அதிகரித்தது. இவ்வாருக, 1880 ஆம் ஆண்டளவில் உலக வியாபாரத்திலும் வணிகத்திலும் சேர்மனி நான்காவது இடத்தை வகித்தது. சேர்மன் புள்ளி விவரங்களின்படி, 1872 தொடக்கம் 1900 வரை சேர்மனி ஏற்றுமதிகளின் பெறுமதி

சாலவும் பெருக்கமடைந்தது. 1872 இற் சேர்மன் ஏற்றுமதிகளின் பெறுமதி 2,492,000,000 பவுணுக இருந்தது; 1900 இல் அது 10,092,000,000 பவுணுக அதிகரித்தது.

மேலே குறிப்பிட்ட காரணிகளுடன், சேர்மனியின் வங்கிமுறை சீர்திருத்தப்பட்டமையும் கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்த ஒரு முக்கிய காரணியாகும். முன்பு குறிப்பிட்டவாறு, சேர்மன் வங்கிகள், பிரித்தானிய வங்கிகள் கடைப்பிடித்த மரபினைத் தொடர்ந்தும் பின்பற்ருது, கைத்தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய நெடுந்தவணைக் கடன் வசதிகளை வழங்கும் நிறுவகங்களாயின. 1850 இனைத் தொடர்ந்த காலப்பகுதியிலே, கைத்தொழில் அபிவிருத்தியை அடிப்படை நோக்கமாகக்கொண்ட நான்கு வங்கிகள் நிறுவப்பட்டன. இவ்வழி, இந்த நிதி நிறுவகங்களுக்கும் தொழின் முயற்சிகளுக்கும் இடையிலே இருந்த நெருங்கிய தொடர்பு, கைத்தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது. இச்சூழ்நிலைகளிலே தனியுரிமைத் தொழில் நிறுவகங்கள் சேர்மனியில் வளர்ச்சியடைந்தன. இந்நிறுவகங்கள் மிகை உற்பத்தியையும் விலைத்தளம்பல்களையும் தவிர்த்துக் கொண்டதுடன், உறுதியான விலை மட்டத்தையும் பேண வல்லனவாக இருந்தன. இதன் பயனுக, ஐரோப்பிய நாடுகளுக்குப் பெரும் தொல்லையாக விருந்த மிகை உற்பத்தி, விலைக்குறைப்புகள் போன்ற பிரச்சினைகள் சேர்மனியிலே தோன்றவில்லை.

கைத்தொழிற் புரட்சியின் விளைவுகளைப் பொறுத்தமட்டில், சேர்மனியிற் காணப்பட்ட நிலைமை பிரித்தானியாவிலும் பிரான்சிலும் காணப்பட்ட நிலைமைகளைப் பெரும்பாலும் ஒத்திருந்தது. முதலாளித்துவ வகுப்பினர்க்கும் பாட்டாளி வர்க்கத்தினருக்கும் இடையிலான வேறுபாடுகள் அதிகரித்தமையை முதலிற் கவனிக்க வேண்டும். ஒருசார், உற்பத்திச் சாதனங்களுக்குச் சொந்தக்காரரான முதலாளித்துவ வகுப்பினரும், மற்ருெரு சார் தமது உழைப்பை மட்டுமே உடைமையாகக்கொண்ட தொழிலாளர்களும் காணப்பட்டனர். இத்தொழிலாளர் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளருக்குத் தமது உழைப்பை விற்று வாழ்க்கை நடாத்தினர். இத்தகைய மக்கட்டொகுதிகள் கைத்தொழிற் புரட்சிக்கு முன்பும் காணப்பட்டன. ஆயின், கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் இவர்களே சமுதாயத்திற் பெரும்பகுதியினராக இருந்தனர் என்று கூறுவதிலே தவறில்லை. சாதாரண விவசாயிகளும் கூலியாட்களும் கைப்பணியாளரும் தமது வாழ்க்கையை நடாத்தும்பொருட்டு, சம்பள உழைப்பாளராக மாறியதை அவதானிக்கமுடியும். கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் தோன்றிய பெருந் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்

பட்ட தொழிலாளரிடையே வர்க்க உணர்வு படிப்படியாக வேரூன்றத் தொடங்கியமை ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

கைத்தொழிற் சொந்தக்காரர் தமது முதலீட்டிலிருந்து உச்ச இலாபம் பெறும் நோக்குடன், தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டத் தலைப்பட்டனர். குறைந்த சம்பளத்தைப் பெறுவதற்குத் தொழிலாளர் நீண்ட நேரம் வேலை செய்யவேண்டியது அவசியமாயிற்று. மேலும், பெருந்தொகையான பெண்களும் பிள்ளைகளும் தொழிற்சாலைகளிற் கூலிகளாக வேலைக்கமர்த்தப் பட்டு, மிகவும் குறைந்த சம்பளமே அன்னார்க்கு வழங்கப்பட்டது.

மனத்திற்கு வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் தொழிற் சாலைகளிற் காணப்பட்டன. உடல் நலக் கோட்பாடுகளுக்கும் சுகாதாரக் கோட்பாடுகளுக்கும் எவ்வித கவனமும் செலுத்தப்பட வில்லை. காப்புறுதித் திட்டம் எதுவும் இருக்கவில்லை. விபத்துக்கள் ஏற்படுமிடத்து தொழிலாளருக்கு எவ்வித நட்டவீடும் வழங் கப்படவில்லை. எவ்வித ஒய்வூதியமோ சகாய நிதியோ இல்லாத விடத்து, அவர்கள் முதுமைக்காலங்களிலே அல்லற்பட்டனர் என்று கூறவேண்டியதில்லை. கைத்தொழிற் பிரதேசங்களில் வேலை வாய்ப்புத் தேடிச் சென்ற பெருந்தொகையான தொழி லாளருக்கு ஏற்ற வீட்டு வசதியும் சுகாதார வசதிகளும் வழங்கப் படவில்லை. இச்சூழ்நிலைகளில் அவர்களது குடும்பவாழ்வும் துயர் மிகுந்து காணப்பட்டது. அக்காலச் சிந்தனையாளரும் சமூகச் சீர்திருத்தவாதிகளும் இப்பிரச்சினைகளுக்குப் பலவகையான தீர்வு களை எடுத்துக் கூறினர். இவர்கள் தெரிவித்த சீர்திருத்தங் களிலே குறிப்பிடத்தக்க அமிசம், தொழிலாளர் வர்க்கம் தனக் கெனக் கட்டுக்கோப்பான ஒரு தாபனத்தை நிறுவவேண்டும் என்பதாம். இதே இயக்கத்தை ஆரம்பித்தோரிற் பேடினட் இலசால் என்பவர் (1825—64) முதன்மையானவர். இவர் 1862 இற் சேர்மன் தொழிலாளர் கூட்டவையத்தை நிறுவினர். தொழிலாளரின் அதிருப்தியை தணிக்கும் ஆரம்ப நடவடிக்கை யாகப் பொது வாக்குரிமை வழங்கவேண்டும் என்பது அவர் களுடைய கோரிக்கைகளில் ஒன்ருயிற்று, அதன்பின் அரசாங்க ஆதரவுடனே கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படவேண்டுமென அவர்கள் கோரினர். இக்கோரிக்கை குறிப்பிடத்தக்க விளை வெதனையும் பயக்கவில்லை. ஆயின், பாட்டாளி வர்க்கத் தினரின் தீவிர பிரச்சினைகளுக்கு அரசியன் முறைகளிலே தீர்வு காணவேண்டும் என்பதை அவர்கள் விளங்கிக்கொள்ள அஃது உதவியாகவிருந்தது. மக்களிடையே அரசியல் உணர்வு விருத்தி யடைவதற்கும் அஃது உதவியாகவிருந்தது. இவ்வாறு, தொழி லாளர் வர்க்கத்தின் புத்தெழுச்சிக்கான அத்திவாரம் வடசேர் மனியில் உருவாகியது. இதற்கிடையில், வில்லம் லீப் நெக்ற்,

ஒகஸ்து பெபெல் என்பவர்களின் தலைமையிலே தென்சேர்மனியிற் பிறிதொரு தொழிலாளர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மாக்சியத் தத்துவத்திற்கமைய ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம், 1869 இலே தீர்க்கமான போராட்டத்தினைத் தொடங்கியது. 1871இற் சேர்மனி ஐக்கியப்பட்டதன் பின், இலசாலின் தொழிலாளர் இயக்கத்தினைத் தென் சேர்மனியில் உருவான புதிய இயக்கத்துடன் இணைக்கும் நோக்குடன், பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில் (1875), இவ்விரு தொழிலாளர் இயக்கங்களும் இணைந்த சமவுடைமைத் தொழிற்கட்சி தோன்றியது. இத்தாபனமே பின்னர் சேர்மன் சமவுடைமைக் குடியாட்சிக் கட்சியாக உருவெடுத்தது.

1871 இற் சேர்மனியை ஐக்கியப்படுத்திய பிஸ்மாக், தொழிலாளர் சங்கங்களின் வலு அதிகரிப்பதை உணர்ந்து, 1878 இல் அடக்குமுறைப் பூட்கையைப் பின்பற்றத் தொடங்கினுர். அக்காலத்திலே சேர்மன் சமவுடைமை இயக்கத்தின் அங்கத்தவர் தொகை ஏறத்தாழ 500,000 ஆக இருந்தது. அடக்குமுறைச் சட்டங்கள் சமவுடைமை இயக்கத்தை நலிவடையச் செய்த போதிலும், 1890 இல் சமவுடைமைக் குடியாட்சிக் கட்சிக்கு 1,500,000 வாக்குகள் கிடைத்தன. சமவுடைமை இயக்கத்தைச் சட்டங்களால் மட்டும் அடக்கிவிட முடியாது என்பதை உணர்ந்த பிஸ்மாக், பல சமூக நலச் சட்டங்களை ஆக்கினுர். சேர்மனியின் பேரரசன் 1881 இல், தனது அரசு தொழிலாளர் வகுப்பினரின் நலத்திலும் பாட்டாளி வர்க்கத்தினரின் மேம்பாட்டிலும் அக்கறைகொண்டுள்ளது என்றும், சமூக நலத்திற்குச் சாதகமான கொள்கையைப் பின்பற்றும் என்றும் பிரகடனம் செய்து, பூட்கை அறிக்கையொன்றினை வெளியிட்டான். இதற்கமைய, 1883 இலே தொழிலாளருக்கான உடல்நலக் காப்புறுதித் திட்டமும். 1889 இல் ஒய்வூதியத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டன. 1914 இல் இத்திட்டங்களாற் பயனடைந்த தொழிலாளரின் தொகை ஏறத்தாழ 20 மில்லியனுயிற்று. எனினும், சேர்மன் சமவுடைமைக் குடியாட்சிக் கட்சியானது மக்களிடையே செல்வாக்குப் பெறுவதை நிறுத்தத்கூடிய அளவிற்கு இச்சட்டங்களும் திட்டங்களும் போதிய வலுப்பெற்றிருந்தன என்று கூறவியலாது. முதலாம் உலகப்போர் தொடங்கியபோது, இக்கட்சிக்கு 4 மில்லியன் வாக்குகள் கிடைத்ததுடன், சேர்மனியில் வலுமிக்க ஓர் அரசியற் கட்சியாகவும் அது விளங்கியது.

12 ஆம் அத்தியாயம்

# 16 ஆம் நூற்றுண்டு தொடங்கி 19 ஆம் நூற்றுண்டு வரையும் ஐரோப்பாவில் விவசாய அபிவிருத்தி

16 ஆம் நூற்றுண்டுக்கும் 19 ஆம் நூற்றுண்டுக்கும் இடைப் பட்ட காலத்தில் ஐரோப்பிய விவசாயத்தின் நிலமானிய அமைப்புமுறையானது குலைவடைந்தது. அவ்வாறு குலைவடை யவே, ஐரோப்பிய விவசாயம் ஒரு முதலாளித்துவ முயற்சியாக மாறுதலடைந்தது. அக்காலப் பகுதியில் ஐரேயாப்பிய விவசாயத் தில் உண்டாய முக்கியமான மாற்றம் இதுவேயாம். ஆயின், இம்மாற்றம் ஐரோப்பிய நாடுகள் யாவற்றிலும் ஒரே காலத்தில் நிகழவில்லை; ஒரே மாதிரியாகவும் நிகழவில்லை. உதாரணமாக, 18 ஆம் நூற்றுண்டின் இறுதியளவில், பிரித்தனிலே விவசாய மானது ஒரு முதலாளித்துவ முயற்சியாக ஏற்கவே மாறிவிட்டது. ஆயின், பிரான்சிலும் சேர்மனியிலும், பிற்பட்ட காலமாகிய 19 ஆம் நூற்றுண்டிலேதான் இம்மாறுதல் நடைபெற்றது. இனி ருஷியாவிலோ, 20 ஆம் நூற்றுண்டிலேதான் — 1917 ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின்னர்தான் — நிலமானியமுறை தகர்ந்து நவீனமான ஒரு முறை உருவாகியது.

மத்திய காலத்தின் பின்னரைக் கூற்றில், ஐரோப்பாவிலே விவ சாயமானது தளர்ச்சியடையும் போக்குடையதாக இருந்தது. அப் போக்கு 1550 ஆம் ஆண்டு வரையும் தொடர்ந்து காணப்பட்டது. ஆனாலும், அதற்குப் பின்னர் விவசாயத்திலே அபிவிருத்தியும் விரிவாக்கமும் காணப்பட்டன. இந்த அபிவிருத்திக்குக் காரணங் கள் பல. மத்தியகால முடிவிலே பொன் உற்பத்தியும் வெள்ளி உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தபோதிலும், 16 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில், விலைமிக்க அவ்வுலோகங்கள் மீண்டும் அதிகரித்த அளவில் உற்பத்தி செய்யப்படலாயின. புதிய கண்டமாகிய அமெரிக்காவைக் கண்டுபிடித்ததன் பயனுக, தென் அமெரிக்கச் சுரங்கங்களிலிருந்து பெருந்தொகையான பொன்னும் வெள்ளியும் ஐரோப்பாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாறு, பொன் னும் வெள்ளியும் ஐரோப்பாவிலே கூடிய அளவிற் புழங்கலாயின. அதனுல், ஐரோப்பாவிற் பணப் புழக்கம் பெருகியது. பணப் புழக்கம் பெருகவே, பொருள்களின் விலைகள் உயர்ந்தன. விவ சாயப் பொருள்களின் விலைகளும் ஒருங்கே உயர்ந்தன. இனி, அக்காலத்திற் சனத்தொகையும் ஐரோப்பாவிற் பெருகிவிட்டது.

உணவின் விலையும் பிற விவசாயப் பொருள்களின் விலைகளும் உயர்வதற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. இஸி ஐரோப்பா விலே 16 ஆம் நூற்றுண்டில் வியாபாரமும் வர்த்தகமும் அபி விருத்தியடைந்தன. அதனுற் போக்குவரத்து முறைகளும் அபி விருத்தியடைந்தன. போக்கு வரத்துக்கும் பொருள்களை ஏற்றிய னுப்புதற்கும் குதிரைகள் பெரும்பாலும் பயன்பட்ட காலம் அது. அதனுல், குதிரைகளுக்கு வேண்டிய தீன்களும் மேன்மேலும் கூடிய அளவிலே தேவைப்பட்டன. விவசாயம் அபிவிருத்தியடைவதற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. விவசாயப் பொருள்களின் விலை கள் உயர்வதற்கு—அவ்வழி, விவசாயம் வளர்ச்சியடைவதற்கும் — பிற சில காரணங்களும் இருந்தன. 16 ஆம் நூற்றுண்டிலே ஐரோப்பிய நாடுகள் மேற்கேயும் கிழக்கேயும் ஆய்வுப்பயணங்களை மேற்கொண்டு புதிய பேரரசுகளைத் தாபித்து வர்த்தகத்தைப் பெருக்கியதும் அத்தகைய ஒரு காரணமாகும்.

ஆனுல், மேற்கூறிய மாறுதல்கள் எல்லா ஐரோப்பிய நாடுகளை யும் ஒரே மாதிரிப் பாதித்தன என்றே அல்லது ஒரே காலத்திற் பாதித்தன என்றே கருதலாகாது. உதாரணமாக, சுவீடன் நாட்டில், 16 ஆம் நூற்றுண்டின் முன்னரைக் கூற்றில், வெளி நாட்டு வியாபாரம் இன்னும் அபிவிருத்தியடையாத நிலையிலே தான் இருந்தது. அதனுல், அந்நாடு பெருந்தொகையான பொருள்களை இறக்குமதி செய்யவேண்டியதாயிற்று; ஆயின், அதன் ஏற்றுமதிகளோ மிகக் குறைவாகவே இருந்தன. ஆயினும், 17 ஆம் நூற்றுண்டின் பின்னரைக்கூற்றில், ஒரு பெரும் மாறுதல் அந்நாட்டில் நிகழ்ந்தது. அக்காலத்தில், நெதலாந்து நாட்டு ஆள்வினைஞரின் உதவியோடு, இரும்புஞ் செம்பும் அகழ்ந்தெடுப் பதாகிய சுரங்கத்தொழில் சுவீடன் நாட்டிலே அபிவிருத்தியடைந் தது. அதனுல், இரும்பையும் செம்பையும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் ஆரம்பிக்கப்பட்டு விருத்தியடைந்தது. இவ் வாறுகத் தேசியச் செல்வம் பெருகிற்று. விலைகளும் உயர்ந்தன. இவற்றின் பயனுக விவசாய விளைவுகளின் விலைகள் உயரவே, விவசாயம் பெரிதும் வளர்ச்சியடைந்தது.

16 ஆம் நூற்றுண்டின் நடுக் கூற்றில் ஆரம்பித்த விவசாய வளர்ச்சியைப் பின்வருமாறு சுருக்கிக்கூறலாம். ஐரோப்பாவில், பயிரிடப்பட்ட நிலப்பரப்பு பின்வருமாறு விரிவடைந்தது. சேற்று நிலங்கள் மீட்கப்பட்டு விளைநிலங்களாக மாற்றப்பட்டன. கடல் மட்டத்திலும் தாழ்ந்த நிலப் பரப்புகளிலிருந்தும் கடல் நீரை அப்புறப்படுத்தி, அந்நீர் மீண்டும் புகாமே தடுப்பதற்காக 'டைக்' எனப்படும் கடலணைகள் கட்டப்பட்டன. இவ்வாறு பயிர் செய் யப்பட்ட நிலங்கள் 'பொல்டர்' நிலங்கள் எனப்பட்டன. இத் தகைய விளைநிலங்கள் பிரதானமாக நெதலாந்திலேயே காணப்

பட்டன. இனி, வளமாக்கிகளைக் கூடிய அளவிற் பயன்படுத்தி, புல்நிலங்களும் தரிசுகளும் பயிர்செய் நிலங்களாக மாற்றப்பட்டன. இவ்வாருக, 1550 இற்கும் 1660 இற்கும் இடைப்பட்ட காலத்தில், ஐரோப்பாவில் விவசாயம் பெரிதும் அபிவிருத்தியடைந்தது. 16 ஆம், 17 ஆம், 18 ஆம் நூற்ருண்டுகளில் ஐரோப்பிய விவசாயத்தின் வளர்ச்சியை ஆராயும்போது, இங்கிலாந்திலேயே மிக முக்கியமான மாறுதல்களைக் காண்கிருேம். ஆகவே, அக்காலத்தில், இங்கிலாந்திலே விவசாயத்திலே ஏற்பட்ட மாறுதல்களை நாம் விளங்கிக்கொள்ளுதல் அவசியம்.

## பிரித்தனில் விவசாயம்

பிரித்தனில் 16 ஆம் நூற்ருண்டு தொடங்கி விவசாயம் பெரிதும் அபிவிருத்தியடைந்தது. விவசாய அபிவிருத்திக்கு ஊக்கமளித்த சில பொதுக் காரணிகளை முன்பு நாம் ஆராய்ந்தோம். அக்காரணிகள் பிரித்தனிலும் விவசாய அபிவிருத்திக்கு ஊக்கமளித்தன. அவற்றேடு, பிரித்தனிலேயே சிறப்பாகக் காணப்பட்ட வேறு சில காரணிகளும் அங்கும் செல்வாக்குச் செலுத்தின. அக்காலப்பகுதியிலே பிரித்தனில் இலண்டனிலும் பிற பல நகரங்களிலும் குடித்தொகை அதிகரித்தது. 1640 இல் இலண்டனின் குடித்தொகை ஏறத்தாழ 60,000 ஆக இருந்தது; ஆயின் 1750 இல் அது 300,000 ஆகப் பெருகிவிட்டது. இவ்வாறு குடித்தொகை பெருகவே, விவசாய விளைவை மேன்மேலும் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இங்கிலாந்தின் நாட்டுப்புறங்களிலிருந்தும் ஸ்கொத்லாந்திலிருந்தும் வேல்சிலிருந்தும் வந்த விவசாய விளைவே இந்த அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்தது. இவ்வாறு நகரங்களிலே குடித்தொகை பெருகியமையும், அதனல் விவசாய விளைவுகளுக்கு ஏற்பட்ட அதிகரித்த தேவையும், விவசாய வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தன. இனி, ஏறத்தாழ 1500 ஆம் ஆண்டு முதலாகக் கம்பளிக் கைத்தொழிலும் அபிவிருத்தியடைந்தது. இக்கைத்தொழிலுக்குக் கம்பளி மயிர் கூடுதலாகத் தேவைப்பட்டதனல், செம்மறி வளர்ப்பும் ஊக்கம் பெற்று விருத்தியடைந்தது. செம்மறி வளர்ப்பு இங்கிலாந்திலே விவசாய வளர்ச்சியில் முக்கிய இடம்வகித்தது. பிரித்தனில் மட்டுமன்றி, ஐரோப்பாவின் பிற பாகங்களிலும் பொதுவாகக் குடித்தொகை பெருகியமையால் பிரித்தனிலே தானிய உற்பத்தி விருத்தியடைந்தது. அக்காலப்பகுதியில், பிரித்தனும் ஐரோப்பிய தானியச் சந்தையிலே முக்கிய இடம்பெறலாயிற்று.

இச்சூழ்நிலையில், பிரித்தானியச் சமூக அமைப்பிலும் விவசாய அமைப்பிலும் ஏற்பட்ட மாற்றங்களை நாம் ஆராய்தல் வேண்டும். இந்த விவசாய அபிவிருத்தியிலே முன்னேடிகளாக விளங்கியவர்கள் யாவர் என்று பார்த்தால், மூவேறு தொகுதியினர் முன்

ஞேடிகளாக விளங்கியதைக் காணலாம். உயர் வகுப்பைச் சேர்ந்த பெரும் நிலக்கிழார்கள் (அதாவது 200 — 600 ஏக்கர் வரையான நிலபுலங்களை உடையவர்கள்); மாகாணங்களில் வாழ்ந்த கனவான்கள்; பெருஞ்செல்வம் படைத்த கமக்காரர் ஆகியோரே இந்த விவசாய வளர்ச்சியாற் பெரும்பயன் பெற்றூர் கள். இவ்வழி, நிலவார முறையிலும் நிலத்தைப் பயிரிடும் முறையிலும் பெரும்மாறுதல் ஏற்பட்டது. பழைய வாரமுறைப்படி, பரக்கச் சிதறிக்கிடந்த காணித்துண்டுகளைக் காலத்துக்குக் காலம் விவசாயிகள் தம்மிடையே பரிமாறிப்பயிர்செய்வது தான் வழக்கமாக இருந்தது. ஒவ்வோராண்டும் இடைவிடாமற் பயிர்செய்தால் மண் வளம் குன்றிவிடும் என்ற காரணம்பற்றி, சில காணித்துண்டுகளைப் பயிர் செய்தலின்றித் தரிசு நிலமாகவிட்டுவிடுவது அப்போது வழக்கமாயிருந்தது. கிராமத்தை அடுத்திருந்த மேய்ச்சல் நிலங்களும் காடுகளும் தரிசுகளும் கிராம மக்களின் பொது உபயோகத்திற்காக விடப்பட்டன. ஆயின், 16 ஆம் நூற்றுண்டில் உண்டான கைத்தொழில் வளர்ச்சியின் பயனுக, இச்சிறுச்சிறு காணித் துண்டுகள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டுந் பரப்பளவுள்ள பெருந்தோட்டங்களாக மாற்றப்பட்டன. மேலும், முன்னைய முறைப்படி கிராம மக்களுக்குப் பொதுவாயிருந்த மேய்ச்சல் நிலங்களையும் காடுகளையும் பணம்படைத்த விவசாயிகள் அடைப்புகளாக்கி தத்தம் தோட்டங்களோடு சேர்த்துக்கொண்டனர். இவ்வாறு பெரும் பெரும் பண்ணைகள் உருவாயின. இந்த இயக்கம் அடைப்பு இயக்கம் எனப்பட்டது. இவ்வாறு காணிகளை அடைப்பதற்கு முன்னர், அக்காணிகளிற் பாத்தியங் கொண்டாடிய சிறு விவசாயிகளின் சம்மதம் பெறப்பட்டதும் உண்டு. ஆயினும், செல்வாக்குமிக்க கனவான்கள் பெரும்பாலும் கிராம மக்களின் பாத்தியங்களைப் புறக்கணித்து, பாராளுமன்றத்தின் அல்லது பிற அரசாங்க நிறுவகங்களின் ஆதரவோடுதான் இந்தக் காணிகளை அடைப்புகளாக மாற்றினர்கள்.

விளைநிலத்தில் ஏறத்தாழ அரைவாசிதான், 16 ஆம் 17 ஆம் நூற்றுண்டுகளில், இந்த அடைப்பு இயக்கத்துக்கு உட்பட்டது. அடைப்பியக்கத்தோடு பிற சில காரணிகளும் விவசாய வளர்ச்சிக்கு உதவியாக இருந்தன. சேற்று நிலங்களும் விளைநிலங்களாக அக்காலத்தில் மாற்றப்பட்டன. 18 ஆம் நூற்றுண்டின் நடுக்கூற்றளவில், ஏறத்தாழ 750,000 ஏக்கர் நிலம் இப்படிக் கமநிலமாக மாற்றப்பட்டது எனக் கணிப்பிடுவர்.

என்றுலும், பழைய வாரமுறையின் அமிசங்கள் சில தொடர்ந்து இருந்தமையாலும், பழைய பரம்பரையில் ஊறிய மனப்பாங்குகள் மக்களிடையே காணப்பட்டமையாலும், விவசாயமானது நவீனத்தன்மைபெற்று முதலாளித்துவக் கோட்பாடு

களுக்கமைய வளர்ச்சியடைவது இன்னமும் ஓரளவுக்குத் தடைப் பட்டது எனலாம். எனினும், பிரித்தனிலே விவசாயத்தை நவீன மயமாக்கவேண்டும் என்ற கருத்து 18 ஆம் நூற்றுண்டு தொடங்கிப் பரக்கக் காணப்பட்டது.

அக்காலத்திலே, பல பரிசோதனைகளைச் செய்து புதிய திட்டங்களை வகுத்து விவசாயத்தை நவீனமயமாக்குதற்கு வழிவகை செய்தோர் பலர் இருந்தனர். அன்னுருள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர் ஜெத்ரோ ரல் என்பார் (1674—1741). பிரான்சு நாட்டிலே முந்திரிகை பயிரிடப்படும் முறையை ஆதாரமாகக் கொண்டு சில பரிசோதனைகளைச் செய்தார் அவர். மிகைபட நிலத்தை உழுது மண்ணைப் பெரிதும் இளகச் செய்வதால் நல்விளைவு பெறலாம் என்பதை அவர் காட்டினுர். அன்றியும், கையால் வீசி விதைப்பதற்குப் பதிலாக, விதைகளை ஒவ்வொன்ருக மண்ணிலே தாழ்ப்பதாலும் கூடிய விளைவு பெறலாம் என அவர் காட்டினுர். இன்னும், நிலத்தைச் செவ்வையாக உழுவதற்கு ஏற்றவகையிலே திறமிக்க கலப்பைக் கொழுக்களையும் அவர் செய்ய முயன்ருர். அக்காலத்தில் விவசாய வளர்ச்சியின் பொருட்டுப் பரிசோதனைகள் செய்த முன்னேடிகளிலே சாள்ஸ் ரவுன் ஷெண்ட் (1674—1738) என்பவரும் முக்கியமானவர். சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கை மூலமாக நிலத்தை ஆண்டு முழுவதும் எல்லாக் கால நிலைகளிலும் எவ்வாறு பயிரிடலாம் என்பதையும், வளமற்ற மணற்பாங்கான மண்ணை எவ்வாறு வளம்படுத்தலாம் என்பதையும் அவர் பரிசோதனைகள் வாயிலாகக் காட்டினுர். விளைநிலத்தைக் காலத்துக்குக் காலம் தரிசாகவிடாது, கோதுமை, தேணிப்பு, வாற்கோதுமை, திரிபருணை போன்ற வேவ்வேறு பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுவதால், மனிதனுக்கும் வீட்டு விலங்குகளுக்கும் வேண்டிய உணவைக் கூடிய அளவில் ஒரே நிலத்திலிருந்தே பெறலாம் என்பதை அவர் காட்டினுர்.

இவ்வாறு, மனிதனுக்கு வேண்டிய உணவையும் விலங்குகளுக்கு வேண்டிய தீனையும் அதிகரித்த அளவிற் பெறுதற்கு ரல் என்பாரும் ரவுன் ஷெண்டும் வழிவகை காட்டினர். மனைவிலங்குகளை விருத்தி செய்தற்கும் அக்காலத்திலே பரிசோதனைகள் செய்யப் பட்டன. 1769 — 1790 வரையான காலத்திலே, புதிய வீதிகள் திறக்கப்பட்டன; புதிய கால்வாய்கள் வெட்டப்பட்டன; பழையன புதுப்பிக்கப்பட்டன. கைத்தொழிற் புரட்சியின் பயனுக, நகர்ப் பிரதேசங்களிலே குடித்தொகை அடர்த்தியாகக் காணப் பட்டது. இக்காரணங்களால், இறைச்சியும் பாலும் போன்ற உணவுப் பொருள்களின் விலைகள் ஏறின; விலங்குத் தீனும் கூடிய அளவிலே தேவைப்பட்டது. இத்தகைய சூழ்நிலையிலே பேக்வெல் என்பவர் மனைவிலங்குகளை விருத்திசெய்வதுபற்றிப் பரி

சோதனைகள் செய்தார். போக்குவரத்துக்குப் பயன்படுகின்ற இழுவை விலங்குகளையும், இறைச்சி, பால் என்பவற்றுக்காக வளர்க்கப்படும் பிற விலங்குகளையும் சிறந்த முறையிலே எவ்வாறு விருத்தி செய்யலாம் என்று அவர் ஆராய்ந்தார். விலங்கின் உபயோகத்துக்கேற்ப நல்லின விலங்குகளைத் தெரிவுசெய்து, அவ்விலங்குகளைக் கொண்டே இன விருத்தி செய்யும் முறையை அவர் கண்டு பிடித்தார். இவ்வாறு அவர், அதிகரித்த அளவிலே பாலும் இறைச்சியும் தரவல்ல சிறப்பினமான மாடுகளையும், கம்பளியுரோமந் தரவல்ல சிறப்பினமான செம்மறிகளையும் விருத்தி செய்வதில் வெற்றிபெற்றார்.

இப்பரிசோதனைகளையும் அவற்றின் பெறுபேறுகளையும் அக்காலத்துக் கமக்காரர் உடனும் ஏற்றுக்கொள்ளத் தயங்கினர்கள். எனினும், இப்புதிய முறைகளை நடைமுறையிற் கையாண்ட ஆதர் யங் (1741 — 1820) என்பாரும் மூன்றும் ஜோஜ் மன்னரும் அவற்றைப் பற்றிப் பிரசாரஞ் செய்து ஊக்கமளித்தமையால், விவசாயத்தை நவீனமயமாக்குதற்கு நாடெங்கணும் ஓர் இயக்கம் பரவி வலுப்பெற்றது. இதன் பொருட்டுப் பல்வேறு தாபனங்கள் நிறுவப்பட்டன; பருவஇதழ்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. இவ்வாருக, விவசாயத்துறையிலே பெரும் மாறுதல் ஏற்படுதற்கு உவந்த ஒரு சூழ்நிலை உருவாகியது.

மேலும், பொருளாதாரத்திலே உண்டாய மாற்றங்கள் விவசாயம் அபிவிருத்தியடைதற்கும் தூண்டுகோலாக அமைந்தன. விவசாய விளைபொருள்களின் மதிப்பு உயர்ந்து அவற்றின் விலைகள் அதிகரித்தமை, இவற்றுள் ஒரு காரணமாயிற்று. 1700 — 1760 வரையான காலத்திலே பிரித்தனின் குடித்தொகையானது 25 சதவீதத்தால் உயர்ந்தது. அடுத்த நாற்பது ஆண்டுக் காலத்தில் அது மேலும் 30 சதவீதத்தால் உயர்ந்தது. இந்தக் குடித்தொகைப் பெருக்கத்திற்கு, கூடிய அளவில் உணவு தேவைப்பட்டது. இனி, கைத்தொழிற் புரட்சி காரணமாக, இங்கிலாந்திலே, விவசாயத்தில் ஈடுபடாதோரின் தொகையும் அதிகரித்தது. இக்காரணங்கள் தவிர, 1760—1800 வரையான காலத்தில் இங்கிலாந்திலே பயிர்விளைவு மிகவும் குறைந்து விட்டது என்பதையும் கருத்திற் கொள்ளல் வேண்டும். அன்றியும், 1793 முதல் 1875 வரையும் பெரிய பிரித்தன் பிரெஞ்சுப் புரட்சிப் போர்களிலும் நெப்போலியப் போர்களிலும் ஈடுபட்டிருந்தது. அதனுல், ஐரோப்பாவிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தல் இயலாக் காரியமாயிற்று. ஆதலின், உணவுவிலை இங்கிலாந்திலே விடம் போல ஏறத்தலைப்பட்டது. உணவுப் பொருள்களைப் பொறுத்த வரை இங்கிலாந்து தன்னிறைவு பெறுதல் அவசியமாயிற்று. பிரித்தானிய விவசாயம் நவீன மயமாதற்கும் அடைப்பு இயக்கம் மேன்மேலும் பரவுதற்கும் இவை பெரிதும் ஏதுக்களாக இருந்தன.

தேவை அதிகரிப்பு, போர்க்கால இடர்ப்பாடுகள், நவீனமய மாக்குதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பரிசோதனைகள் — ஆகிய இக்காரணிகளின் பயனுக, பழைய விவசாயமுறையில் எஞ்சி யிருந்த அமிசங்களும் முற்றுகத் துடைத்தொழிக்கப்பட்டன அதனுல் விவசாயமுறை விரைவில் முதலாளித்துவ முயற்சியாக மாறுதலடை ந்தது. 19 ஆம் நூற்றுண்டின் நடுக் கூற்றளவிலே திறந்த வயல் முறையும் நிலத்தைப் பொது உரிமையாகப் பயன்படுத்துதற்கு விவசாயிகளுக்கிருந்த உரிமையும் வழக்கிறந்து போயின. மீண் டும், செல்வம் படைத்த நிலக்கிழார்கள் காணித் துண்டுகளை ஒன்றிணைத்தும் பொதுமேய்ச்சல் நிலங்களை அடைத்தும் பெரும் பெரும் தோட்டங்களை உருவாக்கத் தொடங்கினர். இதுவே அடைப்பு இயக்கத்தின் இரண்டாவது கட்டம் எனப்படும். ஒரு பெரும் பண்ணையை நிறுவுதல் அவசியமானபோது, முன்னங்கூறியவாறு, நிலக்கிழான்மார் பாராளுமன்றத்தின் ஆதரவை நாடி விண்ணப் பித்துக்கொண்டனர். அக்காலப் பாராளுமன்றம் பெரும்பாலும் முதலாளிகளின் பிரதிநிதிகளையும் நிலச் சொந்தக்காரரின் பிரதி நிதிகளையுமே கொண்டிருந்ததால், அடைப்பிடுதற்கு வேண்டிய அனுமதியைப் பெறுதல் ஒருபோதும் கடினமாக இருக்கவில்லை.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இப்பெருமாறுதலின் விளைவுகளைச் சுருக்கமாகவேனும் ஆராய்தல் நலம். அக்காலம் வரைக்கும் பயிரிடப்படாதிருந்த பெருவாரியான நிலம், அடைப்பு இயக்கத் துக்குப் பின்னர், நல்ல விளைநிலமாக மாற்றப்பட்டது. மேலும், முதலாளித்துவ ஆள்வினைஞராக விளங்கிய கமக்காரர் தத்தம் நிலங்களிலே அறுவடையைப் பெருக்குதற்கு இயன்றவரையும் முயன்றுர்கள். இவ்வாறு, விவசாய விளைபொருள்கள் வாயிலா கப் பெறும் வருமானம் மேன்மேலும் அதிகரித்தது. இரண்டாவ தாக, நடுத்தரப் பருமனுள்ள கமங்களும் பெருந்தரப் பருமனுள்ள கமங்களும் நாடெங்கணும் தொகையிற் பெருகவே, சிறுகமங் களின் தொகை எங்கும் குறையலாயிற்று. இவ்வாருக, பெரும் பெருந் தேட்டங்களையுடைய முதலாளித்துவக் கமக்காரரின் முயற்சியாகவே விவசாயம் இங்கிலாந்தில் வளரத்தலைப்பட்டது. அடைப்பு இயக்கம் பரவுதற்குமுன், சிற்றளவிற் கமஞ்செய்த சிறு கமக்காரர் பொது மேய்ச்சல் நிலங்களைப் பயன்படுத்தி ஆடு மாடுகளை வளர்த்து, மேலதிக வருமானம் சிறிதுபெற்று வந்தார் கள். இம்மேய்ச்சல் நிலங்கள் அடைக்கப்பட்ட பின், இந்த மேலதிக வருமானம் சிறு கமக்காரருக்குக் கிடையாது போகவே, அவர்கள் மேலும் வறுமைப்பட்டார்கள். எனவே, அடைப்பு இயக்கமானது கிராமப் பொருளாதாரத்துக்கு ஒரு பேரிடியாக இருந்தது எனலாம். இவ்வாறு வறுமை கூர்ந்த கிராமவாசிகள் தனவந்தரான பண்ணையாரின் கீழே கூலிக்குவேலை செய்தார்கள்;

அல்லது நகரங்களுக்குக் குடிபெயர்ந்து அங்கே கைத்தொழில் ஆலைகளில் வேலைசெய்து வேதனம் பெற்றார்கள். இவ்வாறு விவசாயப் புரட்சியின் விளைவாக வேலைவாய்ப்பை இழந்த விவசாயிகள், கைத்தொழிற் புரட்சியின் விளைவாகத் தோன்றிய பெரும் பெருந்தொழிற்சாலைகளிலே குறைந்த கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களாக மாறினார்கள்.

இத்தகைய பெருமாற்றங்கள் இங்கிலாந்திலே கைத்தொழிற் புரட்சியைத் தொடர்ந்து நிகழ்ந்த போதிலும், பிரான்சு, சேர்மனி, ருஷியா ஆகிய ஐரோப்பிய நாடுகளில் அதே காலத்தில் இத்தகைய மாற்றங்கள் நிகழவில்லை என்பதை முன்னமே குறிப்பிட்டோம். பிரான்சு நாட்டிலே, பிரெஞ்சுப் புரட்சிக்கு (1789) முன்னமே நவீனமான கருத்துகளும் முதலாளித்துவ மனப்பாங்கும் விவசாயத் துறையிலே காணப்பட்டாலும், முதலாளித்துவ முறை பரவுதற்கு அங்கே சூழ்நிலை தகவாக இருக்கவில்லை. பிரான்சிலே நிலத்திற் பெரும்பாகம் மன்னனுக்கும் உயர்குடி மக்களுக்கும் திருச்சபைக்கும் சொந்தமாக இருந்தது. அங்கு, அரசனுக்கோ உயர்குடி மக்களுக்கோ திருச்சபைக்கோ சொந்தமான நிறுவகங்களிலே தொழும்பராகவும் வாரக்குடிகளாகவுமே பிரெஞ்சு விவசாயிகள் பெரும்பாலோர் தொண்டு செய்தனர். இனி, விவசாயத்தை நவீனமயமாக்குதற்கு வேண்டிய மூலதனம் பிரெஞ்சு நிலக்கிழார்களிடம் இருக்கவில்லை. அன்றியும், நிலவாரமுறை போன்ற பரம்பரையான உரிமைகளை ஒழிப்பதற்கும் முடியாட்சி விரும்பவில்லை. ஆதலின், 19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரைக்கும் பிரான்சிலே விவசாயம் நவீனத்தன்மை பெற்றதில்லை. ஆயினும், பிரெஞ்சுப் புரட்சி மூண்டதோடு, நிலமானியக்கட்டுப்பாடுகளும் நிலமானிய வரிகளும் அறவே ஒழிக்கப்பட்டன. அதனால், சிற்றளவிற் கமஞ்செய்யும் சிறு கமக்காரரைக் கொண்ட ஒரு நாடாகப் பிரான்சு மாறுதலடைந்தது. சேர்மனியிலும் 18 ஆம் நூற்றாண்டிலே விவசாயத்துறையில் நவீனமயமாகும் போக்குக் காணப்பட்டது. ஆயினும், பழைய நிலமானிய மரபுகளைக் களைதல் எளிதாக இருக்கவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெப்போலியன் நிலமானிய முறையினை மேற்கு சேர்மனியில் ஒழித்துவிட்டான். ஆயினும், சேர்மன் நாட்டின் எஞ்சிய பகுதிகளில் 1848 வரைக்கும் அத்தகைய மாறுதல் நிகழவில்லை.

# அருஞ்சொல் அகராதி

**அ**

| | | |
|---|---|---|
| அமைச்சர் சபை | = | Board of Ministers |
| அமைச்சவை | = | Cabinet |
| அரசுக் கழகம் | = | State Council |
| அரைவாசி | = | Semi |

**ஆ**

| | | |
|---|---|---|
| ஆணிலப் பதம் | = | Dominion Status |
| ஆணிலம் | = | Dominion |
| ஆள்வாரிப் பிரதிநிதித்துவம் | = | Territorial Representation |
| ஆள்வினைஞர் | = | Entrepreneur |
| ஆளுநர் | = | Governor |
| ஆளுநர் நாயகம் | = | Governor General |

**இ**

| | | |
|---|---|---|
| இடைநிறுத்தல் | = | Suspension |
| இராசதானி | = | Presidency (of Madras) |
| இருமைப்பாடு | = | Duality |
| இனவாரிப் பிரதிநிதித்துவம் | = | Communal Representation |
| இழப்பீடு | = | Indemnity |

**உ**

| | | |
|---|---|---|
| உறுப்புரை | = | Articles (of a Constitution) |

**எ**

| | | |
|---|---|---|
| எல்லை நிருணய ஆணைக்குழு | = | Delimitation Commission |

**ஒ**

| | | |
|---|---|---|
| ஒன்றியம் | = | Union |

**ஓ**

| | | |
|---|---|---|
| ஓய்வூதியம் | = | Pension |

**க**

| | | |
|---|---|---|
| கட்டழைப்பு | = | Summoning |
| கட்டாணை | = | Warrant |
| கழகம் | = | Council |
| காப்புத் தரிப்பு | = | Protective Tariff |
| குடியியல் | = | Civil |
| குழுமம் | = | Guild |
| கூட்டவையம் | = | League |

**ச**

| | | |
|---|---|---|
| சட்டமுறி | = | Bill |
| சட்டவாக்கக் கழகம் | = | Legislative Council |
| சட்டவாக்கத் துறை | = | The Legislature |
| சவுளி | = | Textiles |
| சாசனம் | = | (Buddhist) Sasana |
| சாதகக் கதைகள் | = | (Buddhist) Jataka Stories |
| சான்றுப்படுத்தல் | = | Certification |
| சொல்வரைன் | = | Zollverein |

த

| | | |
|---|---|---|
| தன்னயப்படுத்தல் | = | Exploitation |
| தரிப்பு | = | Tariff |
| தலைக்கீடு | = | Pretext (Excuse) |
| தளம்பல் | = | Fluctuation |
| தாராண்மை | = | Liberalism |
| திரிபருணை | = | Clover |
| தேர்வகம் | = | Electorate |
| தொக்கு | = | Stock |
| தொழும்புமுறை | = | Serfdom |

ந

| | | |
|---|---|---|
| நடுவம் | = | Plant (Industrial) |
| நாட்டுக் கூட்டவை | = | League of Nations |
| நிகாயம் | = | (Buddhist) Nikaya |
| நிருவாகக் கழகம் | = | Executive Council |
| நிருவாகத்துறை | = | The Executive |
| நீதித்துறை | = | The Judiciary |
| நீர்ச் சட்டகம் | = | Water Frame |
| நுண்ணறிவாளர் | = | Intellectuals |
| நூற்கும் ஜென்னி | = | Spinning Jenny |

ப

| | | |
|---|---|---|
| பதம் | = | Status |
| பதவி வழி | = | Ex-Officio |
| பறக்கும் நாடா | = | Flying Shuttle |
| பிரமஞான சங்கம் | = | Theosophical Society |
| பிரிவேணை | = | (Buddhist) Pirivena |
| பூட்கை | = | Policy |
| பொதுநலவாயம் | = | Commonwealth |
| பொறியணி | = | Machinery |
| பொறுப்பு ஆட்சி | = | Responsible Government |

ம

| | | |
|---|---|---|
| மாசபை | = | Congress |
| மிசன் | = | Mission |

ய

| | | |
|---|---|---|
| யாப்பு | = | Constitution |

வ

| | | |
|---|---|---|
| வக்கறவு | = | Bankruptcy |
| விதிப்பு | = | Act (Law) |
| வரைபு | = | Draft |
| வாரிய முறை | = | Fiscal System |
| விதந்துரை | = | Recommendation |
| விழுமியோர் | = | Nobles |
| வேட்பாளர் | = | Candidate |

ඉතිහාසය - 2 වන කොටස (දෙමළ)